# அன்பே ஆருயிரே



இந்துமதி

உள்ளே...

அன்பே ஆருயிரே... 5

நெஞ்சின் நெருப்பு 120

# அன்பே ஆருயிரே...

சென்னை

## 1

கொட்டக் கொட்ட இருட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள் தாமினி. தூக்கம் வராமல் தவித்தாள். உடம்பிலுள்ள அத்தனை செல்களும் திடீரென்று அதிகம் வேலை செய்வதை உணர்ந்தாள். மனசு பரபரப்பதை கேட்டாள்.

'போ... எழுந்து போய் நித்யாவுக்கு டெலிபோன் பண்ணு...'

மெதுவாக எழுந்து வெல்வெட் தரையில் நடக்கிற மாதிரி நடந்து போய் அப்பாவும் அம்மாவும் தூங்கி விட்டார்களா என்று பார்த்தாள். அப்பாவின் குறட்டை சத்தம் கதவருகிலேயே கேட்டது. விழித்துக் கொண்டிருக்கும் போதுதான் அப்பா உறுமுகிறார் என்றால் தூங்கும்போதுகூட உறுமுகிறாரே... இந்த சத்தத்தில் அம்மாவால் எப்படி தூங்க முடிகிறது...?

''ப்சு...ரயில்வே லைன் பக்கத்தில் வாழ்ந்து பழக்கப் பட்டவங்களுக்கு ரயில் சத்தம் கேட்கலேன்னால் தூக்கம் வராது. அந்த மாதிரித்தான் அம்மாவும் ஆகிப் போயிருக் கிறாள். அப்பாவின் குறட்டை சத்தமில்லேன்னால் அம்மாவால் தூங்க முடியாது.''

'சீ! என்ன இது...? அப்பாவோட குறட்டை சத்தத்தை ஆராய்ச்சி பண்ணவா நடுராத்திரியில் எழுந்து வந்திருக்கோம்...?'

அவர்களின் படுக்கையறை வாசலை விட்டு நழுவி முன் அறைக்கு வந்தாள். சுதாகரின் அறைக் கதவு மூடப்பட் டிருப்பதைப் பார்த்தாள்.

"தூங்கறானா... இல்லை, இன்னும் படிச்சுக்கிட்டிருக்கானா...?"

இறு தரைக்கும் கதவுக்கும் நடுவிலிருந்த நூலிழை இடைவெளியில் டியூப்லைட் வெளிச்சம் தெரிகிறதா என்று பார்த்தாள். இருட்டாக இருந்தது. வெள்ளையாய் கோடு விழவில்லை. சுதாகர் தூங்கி விட்டிருப்பான். +1 படிப்பவனுக்கு பதினொன்றரை மணிக்கு மேல் படிப்பதற்கு ஒன்றும் இருக்காது. பத்து மணி வரை படிப்பதே அதிகம். பத்து மணி வரை கூட சுதாகர் எனிட்பிளைட்டன் படிப்பான். ஆர்ச்சி படிப்பான். ஜெக்கட் ஜோன்ஸ் படித்துக் கொண்டிருக்கிற போதே தானாக வாய்விட்டு பெரிதாக சிரித்துக் கொள்வான். அவனது அந்த ரசிப்புத் தன்மையில் இவள் உதட்டிலும் புன்னகை மலரும். 'சுதா இன்னமும் குழந்தையாகவே இருக்கிறான்' என்று தோன்றும். சொன்னால் "நீ மட்டும் என்னவாம்...?" என்று சண்டைக்கு வருவான்.

"பதினேழு வயசாறது...பர்ஸ்ட் இயர் படிக்கிற... இப்போ கூட பாண்டி விளையாடச் சொன்னால் விளையாடுவ..."

"பாண்டி விளையாடினால் தப்பா...?"

"காமிக்ஸ் படிக்கிறப்போ வாய்விட்டு சிரிக்கிறது தப்பா...?"

"தனக்குத் தானே சிரிச்சுக்கிட்டா எல்லாரும் ஒரு மாதிரி பார்ப்பாங்க. கீழ்ப்பாக்கம் கேஸ்ன்னு நினைச்சுப்பாங்க."

"நீ மட்டும் என்னவாம்...? சில சமயம் காலேஜ் புஸ்தகத்தைக் கையில வச்சுக்கிட்டு எங்கேயோ பார்த்து சிரிக்கற...? அதை யாரும் கீழ்ப்பாக்கம் கேஸ்ன்னு நினைக்க மாட்டாங்களா...?"

அதற்கு மேல் ஏதாவது பேசினால் விஷயம் அம்மா காதை எட்டும். இந்த வயதில் ஒரு பெண் தனக்குத்தானே



சிரிக்கிறாள் என்றால் என்ன அர்த்தம் என்று அம்மா யோசிக்க ஆரம்பிப்பாள். பாம்பின் கால் பாம்பறியும் என்கிற மாதிரி கண்டு பிடித்து விடுவாள். 'எங்கப்பா குதிருக்குள் இல்லை' என்றாற் போல் விஷயம் வெளியில் வந்து விடும். அப்புறம் அப்பா காதிற்குப் போய்... அவர் ருத்ரதாண்டவம் ஆடி, ஒரு முறை முறைத்தால் போதும். சப்த நாடிகளும் ஒடுங்கிப் போகும். அதனால் சுதாவிடம் அதற்கு மேல் பேச்சு கொடுக்கக் கூடாது. வெள்ளைக்கொடி காட்டி விடுவதுதான் நல்லது.

சட்டென்று அடங்கிப் போவாள் அவள்.

"ஐயோ...நீ எவ்வளவு வேணும்னாலும் சிரி. நான் வேணாம்னு சொல்லலை. இப்போ ஆளை விடு."

மெதுவாகக் கழன்று அந்தப் பேச்சை விட்டு நழுவி விடுவாள்.

"அதெல்லாம் கிடக்கட்டும். இப்போது அவன் தூங்குகிறானா. இல்லை முழிச்சுக்கிட்டிருக்கானா...?"

ஓசைபடாமல் நடந்து போய் அவனது அறைக் கதவைத் திறந்து பார்த்தாள். ஹாலின் ஸீரோ வாட் வெளிச்சத்தில் இரு கால்களுக்கிடையில் தலையணை அழுத்திக் கொண்டு அவன் தூங்குவது தெரிந்தது. 'தாங்க் காட்!'

கதவு மூடிக்கொண்டு வந்தாள். இதயம் இன்னும் வேகமாக இயங்கத் தொடங்கியது. நைலான் வயர் பின்னிய மர சோபாவில் உட்கார்ந்து கொண்டாள். பக்கத்து பழைய ஸ்டூலில் இருந்த டெலிபோன் ரிஸீவரை எடுத்தாள்.

'தாங்க்யு மிஸ்டர் கிரஹாம்பெல். தாங்க்யு ஸோ மச். நீங்க மட்டும் இந்த டெலிபோனைக் கண்டு பிடிக்கலேன்னால் என்னவாகி இருக்கும்...?"

"என்னவாகி இருக்கும்...? இந்த மாதிரி திருட்டுத்தனமாக நித்யாகூடப் பேச முடியாமல் போயிருக்கும். ஐ லவ் யு சொல்ல முடியாமல் போயிருக்கும். செல்லமாய், கொஞ்ச முடியாமல் போயிருக்கும்...

தன்னிச்சையாய் கை விரல்கள் நித்யாவின் எண்களைச் சுழற்றியதில் அவனது கம்பீரமான ஆண்மை ததும்பும் குரல் கேட்டது.

"ஹலோ...!"

"நான்தான்!" —அவள் குரல் ஒட்டு மொத்தமாகக் குழைந்து தானாகக் குழந்தை வடிவம் பெற்றது.

அவன் முகமும் பளிச்சிட்டது. திடீரென்று பெற்ற சுறுசுறுப்பில் கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். வேண்டுமென்றே அவளைச் சீண்டத் துவங்கினான்.

"நான்தான்னா யாரு?"

"நான்தான்னா நான்தான்."

"ஓஹோ...நேற்று வரை நான்தான்னா நீங்கதான்னு சொல்வியே...அது இப்போ மாறிடுச்சா...?"

"இல்லை. மாறலை. உங்களைப் பொருத்தவரை எதுவும் எப்போதும் மாறாது. எல்லாம் அப்படியேதான் இருக்கும். நான் சாகிறவரை இருக்கும்."

"அப்போ சொல்லு."

"என்ன சொல்லணும்?"

"வழக்கமா என்ன சொல்வே?"

"ஐ லவ் யு"

"அது மட்டும்தானா...?"

"ஐ அடோர் யு."

"அப்புறம்?"

"ஐ அட்மயர் யு."

"அதுக்கும் அப்புறம்!"

"ஐ ஆனர் யு."

"ம்... மேல...?"

ஐ ஒர்ஷிப் யு. ஐ நீட் யு. ஐ கெனாட் பி வித் அவுட் யு. ஐ வில் டை வித் யு. போதுமா...?"



"தாங்க்யு டியர்." அவன் குரலும் குழைந்து நெகிழ்ந்தது.

"வெறும் தாங்க்ஸ் மட்டும்தானா...?"

"இன்னும் என்ன வேணும்?"

"வழக்கமாகத் தர்றது...?"

"கேட்டு வாங்கிக்கிறது. நான் கேட்டு வாங்கிக்கலை...?"

"தினமும் கேட்டா தர்றீங்க?"

"இன்னிக்குக் கேட்டாத்தான் கிடைக்கும்."

"ஏன், இன்னிக்கு என்ன விசேஷம்?"

"இப்போ மணி என்ன பாரு...?"

"பன்னிரெண்டு பத்து."

"நான் பிறந்து பத்து நிமிஷமாச்சு."

"ஐய்யோ...உங்களை விஷ் பண்ணணும். முதல்ல விஷ் பண்றது நானாகத்தான் இருக்கணும்னு ஓடிவந்து போன் பண்ணிட்டு அதை மறந்துட்டேன் பாருங்க. மெனி மோர் ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே வித்யா... மெனி மெனி மெனி மோர் ஹாப்பி ரிடர்ன்ஸ்."

"ம்ஹூம். அது போறாது."

"பின்னே—இன்னும் என்ன வேணும்?"

"உனக்கே தெரியும்."

"ச்சு..."

"அது முன் நெற்றிக்கு."

"ச்சு..."

"இது ஒரு கன்னத்துக்கு."

"ச்சு..."

"இது இன்னொரு கன்னத்துக்கு."

"ச்சு..."

''இது உதட்டுக்கு.''

''இதுக்கு மேல கிடையாது.''

''ஏன்?''

''கல்யாணத்துக்கு அப்புறம்தான்.''

''ப்ளீஸ், ப்ளீஸ். ஒண்ணே ஒண்ணும்மா....''

''எங்கைக்கு?''

''உனக்கே தெரியும்.''

''சீ....உங்களுக்கு வெட்கமாக இல்லை?''

''இல்லையே...''

''எனக்கு இருக்கே...''

''நேர்லதான் வெட்கப்படற. தரமாட்டேன்ற. போன்ல தர்றதுக்கு என்னவாம்...?''

''போன்லயும் தரமாட்டேன்.''

''தர மாட்ட....?''

''மாட்டேன்,''

''நிஜமா....?''

''நிஜம்மா...''

''இந்தப் பிறந்த நாளுக்கு எனக்கு நீ இதைத் தர லேன்னா எந்தப் பிறந்த நாளுக்கும் வேணாம் போ...''

''சீ! என்ன நித்யா இது...? எதுக்காக இப்படியெல் லாம் பேசறீங்க. நான் அழுதுடுவேன்.''

''அப்படின்னால் கொடு.''

''இந்தாங்க. ப்ச்சு...ப்ச்சு..ப்ச்சு...ச்சு....போறுமா..?''

''எங்கெல்லாம் கொடுத்த...?''

''உங்களுக்கு எங்கெல்லாம் வேணுமோ அங்கெல் லாம்.''

''தாங்க்யு டார்லிங், ஐ லவ் யு.''

''அவ்வளவுதானா...?''



''மீதியெல்லாம் நாளைக்குக் காலேஜ் விட்டப்புறம் என்ன...?''

''எங்கே போறோம்...?''

''நாளைக்கு சொல்றேன்.''

''வீட்டுக்கு வர லேட் ஆகுமா...?''

''ஆகும்.''

''எவ்வளவு நேரமாகும்?''

''ஏழரை எட்டாகலாம்.''

''ஐயோ...அப்பா கொன்னு போட்டுவார்.''

''காலேஜ்ல கல்சுரல்ஸ் இருக்கு. டிபேட் இருக்குன்னு சொல்லு.''

''வந்து பார்த்தாரானால்...?''

''எங்க காலேஜ்ல இல்ல...பிரஸிடென்ஸி, எத்திராஜ்னு ஏதாவது ஒரு காலேஜ் பேரைச் சொல்லு.''

''பயமா இருக்கு நித்யா...''

''நம்ம காதலுக்கு முதல் எதிரி உங்க அப்பா இல்லை.''

''பின்னே....?''

''உன் பயம்.''

டக்கென்று சிரித்தாள் அவள்.

''என்ன மினி, சொல்லிட்டு வரியா?''

''சரி.''

''இப்போ குட்நைட் சொல்லலாமா?''

''சொல்லணுமா?''

''வேணாம். அப்படியே பேசிட்டே போய் காலைல ஆறு மணிக்கு குட் மார்னிங் சொல்லவும் நான் தயார். என்னை எது கேட்கவும் யாருமில்லை, தனியா அனாதையா வளர்ந்து நானே படிச்சு, சரவணன் தயவுல, அவனுடைய அம்மா, அப்பாவுடைய தயவாலும் படிச்சு இப்போ

உனக்கே புரோபராக இருக்கேன். தன்னந்தனியாக ரூம் எடுத்துத் தங்கி, ஹெல்லை கண்றாவி சாப்பாடு சாப்பிட்டுட்டிருக்கேன். இன் எ வே நான் அவிழ்த்துவிட்ட கழுதை—''

''லுக் எ மினி. இந்த பிறந்த நாள்லேருந்து உண்மையை ஒப்புக்க ஆரம்பிச்சிருக்கீங்க போல இருக்கு—?''

''எந்த உண்மை—?''

''கழுதைன்ற உண்மை...''

வாய் விட்டுச் சிரித்தான் அவன்.

''போதும் மினி. உங்க வீட்ல யாராவது எழுந்திடப் போறாங்க. நாளைய பொழுதை நாம் இரண்டு பேரும் சந்தோஷமாகக் கழிக்கணும் மினி. அதுக்குத் தடையாக எந்த சங்கடமும் வந்திடக் கூடாது.''

''சரி நித்தி.''

''என்ன சொல்லணும்?''

''ஐ லவ் யு. ஐ அடோர் யு. ஐ அட்மையர் யு. ஐ ஆனர் யு. ஐ ஒர்ஷிப் யு. ஐ நீட் யு. ஐ காண்ட் பி வித் அவுட் யு. ஐ வில் டை வித் யு...''

அவள் செவியில் முத்தமிட்டான், ''குட் நைட் ஸ்வீட் ஹார்ட்'' சொன்னான். ''போய் தூங்கு மினி. நாளைக்கு பளிச்சுனு பிரெஷ்ஷா வரணும். என்ன...?''

''சரி...''

ஆனால் அவன் தூங்கவில்லை. அவனால் தூங்க முடியவில்லை. தன் அறைக்கு வந்தான். மேஜை விளக்கைப் போட்டுக்கொண்டு டிராயரைத் திறந்து புத்தகங்களுக்கு அடியில் மறைத்து வைத்திருந்த டயரியை எடுத்தான். ஏப்ரல் மூன்றாம் தேதியைப் புரட்டி எழுதினான்,



நித்யா—

மை டியர் நித்யாதான்—

மை மோஸ்ட் பிலவட், சார்மிங், ஹான்ட்ஸம், டல், அட்ராக்டிவ், ஹானஸ்ட், விக்லியர், இன்டெலிஜென்ட் நித்தி—

முதல் பார்வையில் என்ன நடக்கிறது என்பதை அறியும் முன்பே என் இதயத்தைத் திருடிக் கொண்டு போய் விட்டாயே...

அது எப்படி...?<br>
நான் என்பதே மறந்து<br>
நீ என்பதே நானாகி—<br>
நானே நீயாக—<br>
நீயே நானாக—<br>
என்னைப் புரிந்து கொண்டு<br>
உன்னைப் புரிய வைத்து—<br>
நித்யா—

நான் சந்தித்த முதல் ஆண் நீதான். நான் சந்திக்க ஆசைப்படுகிற கடைசி ஆணும் கூட.

நித்தி—<br>
எனக்கு உன் சிரிப்பு பிடிக்கிறது.<br>
உன் பேச்சு பிடிக்கிறது.<br>
கம்பீரமான ஆண்மை பிடிக்கிறது.<br>
உயரம் பிடிக்கிறது.<br>
ரோஜா நிற உதடுகள் பிடிக்கிறது.<br>
உன் குரல்—<br>
ரோமம் அடர்ந்த உன் மார்பு—<br>
உன்— உன்— உன்—<br>
எல்லாமே பிடிக்கிறது.

உன்னால் நான் எப்படி எரிகிறேன் தெரியுமா?

அணையேன். இந்த அக்னியை, என்னை, என் உடம்பை...

அணையேன் நித்யா....

என் வீட்டில் எல்லோரும் இன்னும் என்னைக் குழந்தை என்கிறார்கள்.

ஆனால் நான் உன்னால் பெண்ணாகி, என் பெண்மையை உணர்ந்து....

நித்தி...என் நித்யா...

நாளைக்கு உனக்குப் பிறந்த நாள் பரிசாக, என்ன வேண்டும்?

என்னைத் தரட்டுமா?

என்னையே தரட்டுமா?

நான் தந்தால் நீ எடுத்துக் கொள்வாயா...?

ம்ஹூம். மாட்டாய். எல்லாம் பேச்சோடு சரி. அதுவும் டெலிபோனில் பேசுவாயே தவிர நேரில்...

உன்னிடம் எனக்குப் பிடித்த இன்னொரு விஷயம்—

உன் கண்ணியம்.

'மினி. ப்ளீஸ் பிஹேவ் யுவர் ஸெல்ஃப்'.

சரி. இன்றைய இந்த டயரியின் பக்கத்தை இதோடு முடிக்கிறேன். தூக்கம் வர்ற மாதிரி இருக்கு.

For a change—

எப்போதும் இங்கிலீஷில் சொல்வதை இப்போது தமிழில் சொல்லப் போகிறேன்.

'என்ன...கேட்கிறாயா...? ப்ளீஸ் கேளும்மா...ஒரே ஒரு நிமிஷம். கேட்டுவிட்டுத் தூங்கப்போ...சரியா...?'

நான் உன்னைக் காதலிக்கிறேன்.

நான் உன்னை நேசிக்கிறேன்.

நான் உன்னை ஆராதிக்கிறேன்.

நான் உன்னைத் துதிக்கிறேன்.



நான் உன்னை பிரமிப்போடு பார்க்கிறேன்.

நான் உன்னை கௌரவிக்கிறேன்.

எனக்கு நீ வேண்டும்.

நீ இன்றி நானில்லை.

போதுமா...?

பிறகு—

(இது பின் குறிப்பு)

நாளை உன் பிறந்தநாளை நாம் மட்டும் கொண்டாடலாம் நித்யா.

நாம் இரண்டே பேர் மட்டும்.

வால் மாதிரி சரவணனைக் கூட கூட்டிண்டு வர வேண்டாம். எனக்கு அவனைப் பிடிக்கலை. கொஞ்சம் கூடப் பிடிக்கலை. நான் உங்க அன்பிற்கு அடிமையாகக் கிடப்பது தெரிந்தும், மூர்க்கமாக நேசிப்பது புரிந்தும் என்னைக் கண்கள் பளபளக்கப் பார்க்கிறான். பார்வையில் ஐ லவ் யு சொல்கிறான். புல்ஷிட்!

அவன் உங்களுக்கு உயிர் சிநேகிதனாக இருக்கலாம். நீங்க கர்ணன். அவன் துரியோதனன்னு நினைச்சுக்கலாம். அவன் வீட்டுல நீங்க வளர்ந்திருக்கலாம். அவன் உதவியில் படிச்சிருக்கலாம். அந்த நன்றி விசுவாசம் எல்லாம் உங்க கூடவே இருக்கட்டும். என் பக்கம் வரவேண்டாம்.

இது சரவணனுக்கு—

சரவணா...

நான் உன்னை வெறுக்கிறேன்.

மனசார நெஞ்சார வெறுக்கிறேன்.

உன் கார், பணம், வீடு எதாலும் என்னை வாங்க முடியாது.

தெரிகிறதா...? இனிமேலாவது என்கிட்ட வராமல் இரு. பார்வையால் என்னை வருடாதே.

என்னை விட்டு விலகித்தூரப் போ.

சரி நித்தி—

Once again many more happy returns dear—

ரொம்ப ரொம்பத் தூக்கம் வர்றது. நான் தூங்கப் போறேன். சரியா...? குட் நைட்.

தாமினி நித்யாதரன்
தாமினி நித்யாதரன்
தாமினி நித்யாதரன்.

டைரியை மூடி மீண்டும் மேசை டிராயரின் புத்தகங்களுக்கு அடியில் மறைத்து வைத்து விட்டுப் படுக்கப் போனாள் அவள்...

## 2

மறுநாள் காலையில் சீக்கிரமே எழுந்து, குளித்து நித்யாதரனுக்கு மிகவும் பிடித்த கருப்பு நிற சல்வார் கம்மீஸ் போட்டுக் கொண்டாள். கருப்பும், வெள்ளையுமாக இரண்டே சல்வார் கம்மீஸ்தான் அவளிடம் உண்டு. அதை வாங்க அப்பாவிடம் கெஞ்சிய கெஞ்சல் ஞாபகத்திற்கு வந்தது.

'சல்வாரும் வேணாம். கம்மீசும் வேணாம். நம்ம குடும்பத்தில் யாரும் அதெல்லாம் போட்டுண்டதில்லை.'

''இல்லப்பா—புடவையை விட இது வசதிப்பா. புடவையாவது இடுப்பெல்லாம் தெரியும். சல்வார் கம்மீஸ்ல அது கூட தெரியாதுப்பா. கழுத்திலிருந்து கால் வரை சுத்தமா மறைக்கும்ப்பா...'

'வேணாம். வேணாம். என்ன மறைச்சாலும் வேணாம், அழகா பாவாடை தாவணி கட்டிக்கிட்டுப் போ...'



'ஐயோ...பாவாடை தாவணி யார் கட்டுவாங்க? அவுட் ஆஃப் பேஷன்ப்பா. ஸ்கூல் ஸ்டூடண்ட்ஸ் கூட கட்றதில்லை. ஒரு காலேஜ் ஸ்டூடண்ட் கிட்ட போய் பாவாடை தாவணி போட்டுக்கச் சொல்றீங்களே...கிராமத்துல கூட இப்போ சல்வார்கம்மீஸ் போட ஆரம்பிச்சுட்டாங்க.''

நான்கு நாட்கள் கெஞ்சி, விழியோரம் நீர் துளிர்க்கக் கேட்டு, அம்மாவும் சிபாரிசு செய்ததன் பேரில் கிடைத்த சல்வார்கம்மீஸ். இன்னும் இரண்டு வாங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். 'இன்று நித்யாவின் பிறந்த நாள். கருப்பு உடையா போட்டுக்கொள்ள வேண்டும்?' என்று தோன்றிற்று. கூடவே,

'இந்த கருப்பு கலர் சல்வார்கம்மீஸ் உனக்கு ரொம்ப அழகா இருக்கு மினி. உன் தந்த நிறத்தை இன்னும் பளீர்னு எடுத்துக் காட்டுது. இதையே தினமும் போட்டுண்டு வாயேன்...' அவன் சொல்வது நினைவிற்கு வர அதிலேயே போக முடிவு செய்தாள். முகத்திற்கு பவுடர் பூசி, அழகாய் ஸ்டிக்கர் பொட்டு ஒட்டி, நீளமான தலைமுடியைத் தளரப் பின்னி, (அரை முதுகிற்கு வெட்டி எல்லோரையும் போல் குதிரை வாலாகத் தொங்கவிட ஆசைதான். ஆனால் அப்பா கொன்று போட்டு விடுவார்.) காதருகில் ஒரு பெரிய சிவப்பு ரோஜா செருகி, (சிவப்பு ரோஜா காதலின் சின்னம் மினி) இரண்டே நோட்டுப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியில் வரவும் அம்மா குரல் கொடுக்கவும் சரியாக இருந்தது.

''மினி—''

''ஏம்மா கத்தற...இதோ வந்துண்டே இருக்கேனே...?''

அவளைத் திரும்பிப் பார்க்காமல் அடுப்படி வேலையில் கவனமாக இருந்த அம்மா பேசினாள்.

''காலைல எழுந்து ஒரு அரைமணி நேரம் சமையலறைக்கு வந்து எனக்கு ஒத்தாசை செய்யக் கூடாதா...? தினமும் நான் தனியாகத்தானே அல்லாடறேன். ஒரு

நாளைப் போல் உங்கப்பா ஏழரை மணிக்கெல்லாம் தட்டு போடச் சொல்லி சாப்பிட உட்கார்ந்திடறார். கைக்கு வேற உங்க மூணு பேருக்கும் டிபன் கட்டித் தரணும். ஏழரை மணிக்குள் சாப்பாடு, டிபன் எல்லாம் ரெடியாகணும்னால் எப்படி முடியும்? என் ஒருத்தியாலேயே எல்லாம் செய்ய முடியறதா என்ன...?''

''இன்னிக்கு டெஸ்ட் இருக்கும்மா, படிச்சுண்டிருந்தேன்.''

''என்னிக்கு உனக்கு டெஸ்ட் இல்லை...? காலேஜ்ல சேர்ந்த நாளா இதையே தான் சொல்ற...''

''அடானமஸ் காலேஜ்ல சேர்ந்தால் அப்படித்தாம்மா, ஸ்கூல்ல படிக்கிற மாதிரியே தினமும், டெஸ்ட், இன்டர்னல்ஸ்னு உயிரை எடுப்பாங்க...''

''என்ன காலேஜோ போ...ஸ்கூல் போனப்போ மட்டும் நிறைய உதவி செய்த பாரு...'' என்று திரும்பிய அம்மா அவளைக் கண்ணகலப் பார்த்தாள்.

செழுமையான உடலும், மினுமினுவென்ற நிறமும், நல்ல உயரமும், கிள்ளிடத் தோன்றுகிற கன்னங்களும், குழந்தைத்தனம் மாறாத முகமும், துறுதுறுவென்று அலைகிற கண்களுமாக நின்றிருந்த மகளின் அழகை ஒரு வினாடி கண் கொட்டாமல் பார்த்தாள். 'இந்த அழகுக்கு ஏதாவது பெரிய இடமாக வரணும். நல்ல வசதியானவனாக அமையணும். என்னை மாதிரி பதினைந்து தேதிக்கே ஒரு ரூபாய்க்கும் ரெண்டு ரூபாய்க்கும் தடவக் கூடாது...'

''என்னம்மா அப்படிப் பார்க்கற...?''

''குஷ்பு மாதிரி எவ்வளவு நல்லா இருக்கேன்னு பார்க்கறேன்.''

''அவ்வளவு குண்டாம்மா நான்...?''

''குண்டுக்குச் சொல்லலைடீ...முக லட்சணத்துக்குச் சொன்னேன். வசீரத்துக்குச் சொன்னேன்.''



''அடட...! இன்னிக்கு என்ன...ஒரேயடியா வர்ணிக்கிற... ஆமாம், அப்பா சாப்பிட்டுப் போயிட்டாரா...?''

''அவர் போய் ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆறது.''

''சுதாகர்...?''

''அவனும் போயிட்டான். நீ உட்காரு. சாப்பாடு போடறேன்.''

உட்கார்ந்து சாப்பிட்டதாகப் பெயர் பண்ணினாள், அம்மா நீட்டிய டிபன் டப்பாவை வாங்கி தோள் பையில் திணித்துக் கொண்டாள்.

''போயிட்டு வரேம்மா...''

''பஸ்ஸுக்குக் காசு இருக்காடி...?''

''இருக்கும்மா.''

''சாயந்திரம் சீக்கிரம் வந்திடுவியா...?''

''இல்லேம்மா...லேட்டாகும்.''

''ஏண்டி....?''

''இன்னிக்கு ஸைகப்ஸ் மீட்டிங் இருக்கும்மா...''

''அது என்ன கப்போ...என்ன மீட்டிங்கோ...? ஒரு நாளைப் போல் இப்படி லேட்டா வந்தியானால் உங்கப்பா திட்டுவார்டி...''

''அப்பா வர்றதுக்குள் வந்துடறேம்மா...''

''என்னிக்காவது உங்கப்பா தலைவலி, கால்வலின்னு முதலாளி கிட்ட சொல்லிட்டு சீக்கிரம் கடை விட்டு வீட்டுக்கு வரப் போறார். அன்னிக்கு நீ லேட்டா வரப் போற...அப்போ இருக்கு உனக்கு...''

''அப்பாவாவது எட்டு மணிக்கு முன்னால் வீட்டுக்கு வர்றதாவது...கடையைத் தான் தாங்கற நினைப்பும்மா அவருக்கு. அவருடைய அனுபவத்துக்குப் பேசாமல் அவரே ஒரு கடை ஆரம்பிச்சிருக்கலாம்.''

''எல்லாத்துக்கும் அதிர்ஷ்டம் வேணாமா? சரி. நீ எப்போ வருவேன்னு சொல்லு...?''

''ஏழரை மணிக்கெல்லாம் வந்துடுவேன்மா...''

''வந்துடு...அதுக்கு மேல் நேரமாக்காதே. அப்புறம் உங்கப்பா என் மேல் பாய்வார். 'பொண்ணை வளர்க்கிற லட்சணமா இது'ன்னு கத்துவார்...''என்னை மாட்டி விட்டுடாதே...''

''இல்லைம்மா...வந்திடுவேன். கவலைப்படாதே...''

படியிறங்கி, வெளிவாசல் கதவு திறந்து தெருவில் நடந்த போது அனேகமாக எல்லார் பார்வையும் தன் மீது பதிவதை உணர்ந்தாள். காரில் போகிறவர்கள்கூட திரும்பிப் பார்த்துக்கொண்டு போவது தெரிந்தது. எல்லாம் கண்ணிற் பட்டதே தவிர கவனம் முழுதும் நித்யாவிடம் இருந்தது. நினைவு நித்யாவிடம் சென்றது.

'இன்று என்ன டிரஸ் போட்டுக் கொண்டிருப்பார் அவர்...? புதுசு ஏதாவது வாங்கிக் கொண்டிருப்பாரா...? ம்ஹூம். எங்கே வாங்கி இருக்கப் போகிறார்....? கஞ்சம், கஞ்சம். ஒரு டிரஸ் வாங்க மாட்டார்...? இந்தா மினி உனக்கு என்று ஒரு புடவை... ஒரு வாட்ச் அல்லது பேனா... ஊஹூம். பிறந்த நாள் என்றால் அழகாய் கிரீட்டிங் கார்டு வாங்கிக் கொண்டு வருவார்.

'பிரித்துப் பார் மினி. உள்ளே எத்தனை அழகான வரிகள்....' என்பார்.

அதே போல் கவிதை வரிகளாக ஓடும்.

யு ஆர் எ 'மினி' பார்
யு ஆர் எ 'மினி' தியேட்டர்
யு ஆர் எ 'மினி' ரெஸ்டாரெண்ட்
யு ஆர் எ 'மினி' காட்

நீ என்றும் நித்தியமான மினி
பிகாஸ்—
யு ஆர் நித்யாஸ் மினி.



நடமாடும் கவிதை வரிகளுக்கு
என் காதல் தேவதைக்கு
இந்த பக்தனின் மனம் நிறைந்த
பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

வித் லவ்,
நித்யா

''எப்படி இருக்கு?''...அவன் குரலில் அளவு கடந்த எதிர்பார்ப்பு தொனிக்கும்.

''உங்களை மாதிரியே அழகாக இருக்கு!'' அவளும் ஏமாற்றாத பதில் சொல்வாள். பின்னர் சிறிது நேரம் கழித்து மற்ற பேச்சுக்களுக்கெல்லாம் பின்பு கேட்பாள்.

''ஏன் நித்தி... பிறந்த நாளுக்கு டிரஸ் ஏதாவது வாங்கினால் என்ன...?''

''எதுக்கு...? சரவணன் எப்படியும் ஒரு நல்ல டிரஸ் பிரஸண்ட் பண்ணுவான்.''

''ஆரம்பிச்சாச்சா சரவண புராணத்தை...? வாரியார் கந்த புராணம் சொல்றார். நீங்க சரவண புராணம் சொல்லுங்க...''

''உனக்கு ஏன் அவன் பெயரைக் கேட்டாலே அத்தனை கோபம் வருது?''

''எனக்கு அவனைப் பிடிக்கலை.''

''ஏன் பிடிக்கலை...''

''ஏனோ பிடிக்கலை...''

''நான் காரணம் சொல்லட்டுமா...?''

''சொல்லுங்க...''

''பொறாமை.''

''யாருக்கு?''

''உனக்கு.''

''யார் மீது...?''

''சரவணன் மீது.''

''எதுக்கு?''

''என் அன்பைக் கொஞ்சம் பங்கு போட்டுக்கறான் இல்ல...அதுக்கு.''

''சரி. அப்படித்தான் வச்சுக்கோங்க. இப்போ நம்ம விஷயத்துக்கு வருவோம்.''

''என்ன விஷயம்?''

''புது டிரஸ் வாங்கற விஷயம்.''

''ஒன்றும் வேணாம்.''

''ஏன்...?''

''கைல பணமில்லை.''

''பணமில்லாமல் இல்லை. மனசு இல்லைன்னு சொல்லுங்க.''

''ஏய் மடம். அப்படி இல்லை. நான் பணம் சேர்க்கிறேன்.'

''எதுக்கு?''

''நாளைக்கே நமக்கு கல்யாணம்னு வச்சுக்க. எத்தனை செலவு இல்லை? எல்லாம் நான்தானே செய்யணும்? எனக்கு செய்ய யார் இருக்காங்க? உன்னை மாதிரி அப்பாவா, அம்மாவா, கூடப் பிறந்தவனா, இல்லை, சொந்தக்காரங்களா...?''

அதை நினைத்துக் கொண்டு உருகினாள் அவள்.

'சீ! பாவம் நித்யா...' மனசுக்குள் முணுமுணுத்துக் கொண்டபோது சரேலென்று சிவப்பு நிற மாருதி ஒன்று



அவளை உராய்ந்த மாதிரி வந்து நின்றது. ஒரு வினாடி பயந்து தடுமாறி விலகியவள் 'அயோக்ய ராஸ்கல்!' என்பதை உதடுகள் பிரியாமல் சொல்லி கோபத்தோடு திரும்பிப் பார்த்தாள்.

சரவணன்!

டிரைவிங் ஸீட்டிலிருந்து இறங்கி புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே அருகில் வந்தான்.

''ஹாய் மினி.'' என்றான். குரலில் எல்லையற்ற சந்தோஷம் தொனித்தது. அவள் பேசாமல் இருந்தாள்.

''என்ன மினி பதில் ஹாய்கூட சொல்லமாட்டாயா?''

அதற்கும் பேசாமல் இருந்தாள்.

''சரி, குட்மார்னிங்காவது சொல்லுவாயா?''

''................''

''லெக்சரர்களுக்கு குட் மார்னிங் சொல்றது ஸ்டுடண்ட்ஸோட வழக்கம் மினி. மானர்ஸ்.''

பட். நீங்க என் லெக்சரர் இல்லை.''

''ஆனால் உங்க காலேஜ் லெக்சரர்தானே...?''

''காலேஜில் இருக்கிற அத்தனை லெக்சரர்களையும், புரொபசர்களையும் தேடிப் போய் குட்மார்னிங் சொல்லிட்டிருக்க முடியுமா?''

''வேணாம், நீ சொல்ற மாதிரி தேடிப் போய் சொல்ல முடியாதுதான். ஆனால் தேடி வந்து சொல்றவங்களுக்கு சொல்லலாம் இல்ல...?''

அதற்கும் அவளிடமிருந்து பதில் வரவில்லை.

''என்ன மினி பேசாமல் இருக்க...? இதே நித்யாவானால் அவனுடைய கிளாஸ் இல்லாமல் போனால்கூட ஸ்டாப் ரூம் வரை தேடிகிட்டு வர்ர இல்ல...? குட் மார்னிங்கும், குட் ஆஃப்டர்நூனும் சொல்லிட்டுப் போற இல்ல...?''

"அவர் என் லெக்சரர்."

"அது மட்டும்தான் காரணமா?"

"சார்...நீங்க என்ன நினைச்சுக்கிட்டு இப்படியெல்லாம் பேசறீங்க...?"

"உன்னை நினைச்சுக்கிட்டு மினி. உன்னையே நினைச்சுக்கிட்டு. உன்னை மட்டுமே நினைச்சுக்கிட்டு..."

"ப்ளீஸ் ஸ்டாப் டாக்கிங் லைக் திஸ்..."

"ஏன் மினி..."

"என் பேர் மினி இல்லை. தாமினி."

"நித்யா மினின்னுதானே கூப்பிடறான்."

"அவர் கூப்பிட்டால்...?"

"நானும் கூப்பிடறேன்."

"அவரும் நீங்களும் ஒண்ணாயிட முடியுமா...?"

"ஒண்ணாகத்தான் நாங்க பழகறோம்."

"நீங்க பழகினால் எல்லாரும் அப்படிப் பழக முடியுமா?"

"ஏன் முடியாது மினி?"

"இது என்ன கேள்வி?"

"எதிர் கேள்வி கேட்காத மினி. பதில் சொல்லு. எனக்குத் தேவை உன் பதில். எனக்கு இன்னிக்கு என் கேள்விகளுக்கெல்லாம் பதில் தெரிஞ்சாகணும். இதற்கு மேலும் என்னால் இப்படி அவஸ்தை பட முடியாது. கிட்டத்தட்ட ஒரு வருஷமா நான் இந்த அவஸ்தை படறேன். முதல் முதலாகக் காலேஜ் அட்மிஷனுக்காக நீ வந்தபோது உன்னை பிரின்ஸ்பால் ரூமல பார்த்தேனே... அன்னிக்கு ஆரம்பிச்சது இந்த நெருப்பு. 'ஐயோ... எத்தனை அழகாக இருக்கான்னு' சின்னப் பொறி விழுந்தது. உன்னைப் பார்க்கிற போதெல்லாம் விசிறி விசிறி நானே அதை எரிய விட்டேன். இப்போ அந்த



நெருப்பு என்னையே சுட்டெரிச்சு கருக்கி சாம்பலாக்கிடும் போல இருக்கு—"

அவன் தன்னை மறந்து உணர்ச்சி பூர்வமாக, உருக்கமாக சொல்லிக் கொண்டு போனான். பஸ் ஸ்டாப்பில் நிற்பவர்கள், போகிறவர்கள், வருகிறவர்கள் எல்லாம் தங்களை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டு போவதைப் பார்த்த தாமினி சங்கடப்பட்டாள். 'என்ன இவன் தெருவில் நிற்கவைத்து இப்படியெல்லாம் பேசுகிறானே_' என்று கஷ்டப்பட்டாள்.

எப்படியாவது அவன் பேசுவதை நிறுத்த வேண்டும் என்கிற எண்ணத்தில் இடையில் குறுக்கிட்டு சட்டென்று சொன்னாள்,

"உஷ்...! இது தெரு சார். எல்லோரும் நம்மையே பார்க்கிறாங்க பாருங்க."

வேகம் தணிந்து சடாரென்று அடங்கினான் அவன். தன்னிலை உணர்ந்து சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். பின்னர் குரலைத் தழைத்து மெதுவாகச் சொன்னான்.

"ஐயம் ஸாரி. ஏதோ ஒரு வேகத்துல பேசிட்டேன். என் நிலை, இருக்கிற இடம் எல்லாமே மறந்து போச்சு. காலேஜுக்குத்தானே மினி போற...?"

"ஆமாம்."

"கார்ல ஏறிக்கோ...ஒண்ணாகவே போயிடலாம்."

"ஐயோ...வேணாம்."

"நீ எதுக்கு பயப்படறேன்னு எனக்குத் தெரியும். யார் கண்ணுலயும் படாமல் உன்னை தினமும் நீ இறங்கற பஸ் ஸ்டாப்புல இறக்கி விட்டுடறேன்."

"எதுக்கு உங்களுக்கு அனாவசிய கஷ்டம்...?"

"இதுல கஷ்டம் என்ன இருக்கு மினி? உனக்காக. உன் சந்தோஷத்துக்காக எதுவும் செய்யத் தயாராக இருக்கிறவனைப் பார்த்தா அப்படிச் சொல்ற...?"

அதற்கு மேல் அங்கு பேசிக் கொண்டு நிற்கப் பிரியப் படாமல், வேறு வழியின்றி அவனது காரில் ஏறிக் கொண்டாள். தேசிங்கு ராஜனைப் போல் சந்தோஷப் பட்ட சரவணன் தன் ஸீட்டில் உட்கார்ந்து காரை கிளப்பிக் கொண்டே சொன்னான்.

''தாங்க்யு வேரி மச் மினி.''

''எதுக்கு?''

''என் கூட கார்ல வந்ததுக்கு.''

''நான்தானே அதற்கு தாங்க்ஸ் சொல்லணும்...?''

''நமக்குள் யார் சொன்னால் என்ன மினி? எல்லாம் ஒண்ணுதானே...?''

தலையில் அடித்துக் கொள்ளத் தோன்றியது அவளுக்கு. ஆனால் பேசாமல் வெளியில் வேடிக்கை பார்க்கிற மாதிரி வந்தாள். தன்னைப் பார்க்காமல் வெளியில் பார்க்கிறாளே என்று சங்கடப்பட்ட அவன் மீண்டும் பேச்சு கொடுத்தான்.

''என்ன மினி பேசாமல் வர...?''

''என்ன பேசணும்...?''

''நான் கேட்டதுக்கு என்ன பதில்?''

''என்ன கேட்டீங்க?''

''என்ன மினி இது...? விடிய விடிய ராமாயணம் கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பான்னு சொல்ற...?''

அவள் மௌனமாகவே இருந்தாள்.

''என்ன மினி...?''

''என்ன சொல்லச் சொல்றீங்க?''

''டோண்ட் லுக் லைக் எ சைல்ட். யு நோ வாட் ஐயம் ஆஸ்க்கிங்...ஈஸ் இட் நாட்....?''

''ஐ நோ. பட், என் பதில் என்னவாக இருக்கும்னு நினைக்கிறீங்க?''



''சொல்லட்டுமா?''

''ம்...''

''நிஜமாகவே சொல்லிடட்டுமா?''

''சொல்லுங்க.''

''ஐ லவ் யு மினி.''

''பட் ஐ டோண்ட்.''

ஓங்கி கன்னத்தில் அறைந்த மாதிரி வந்த அந்த பதிலில் ஆடிப் போனான் அவன். முகம் சரேலென்று ஒளியிழந்தது. உடல் வலிமை முழுதும் காணாமற் போய்விட்டாற்போல் துவண்டு போனான். நெஞ்சின் ஓர் ஓரமாக ஊசி குத்துகிற வலி ஏற்பட்டது. தன் வார்த்தைகளில் தனக்கே நம்பிக்கை இல்லாதவனாகக் குரல் நடுங்கக் கேட்டான்.

''வி...விளையாடாதே மினி ப்ளீஸ்...நான் ரொம்ப உடைஞ்சுப் போயிடுவேன்.''

''நான் விளையாடலை சார். நீங்க மனசு உடைஞ்சுப் போயிடுவீங்கன்னு தெரிஞ்சிருந்தாலும் உண்மையைத்தான் சொல்லணும். இந்த விஷயத்துல பொய் சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. அதனால்தான் உண்மையைச் சொல்றேன்.''

''எ...என்ன உண்மை மினி?''

''நான் உங்களைக் காதலிக்கலை. என்னால் வேறு யாரையும் காதலிக்க முடியாதுன்ற உண்மை.''

''வேறு யாரையும்னால் என்ன அர்த்தம் மினி...''

''ஐயம் ஆல்ரெடி இன் லவ் வித் ஸம்படின்னு அர்த்தம்.''

''யார் அந்த அதிர்ஷ்டசாலியான ஸம்படின்னு நான் தெரிஞ்சுக்கலாமா மினி...?''

''ஷ்யூர். நீங்க நிச்சயமா தெரிஞ்சுக்கணும் சார். ஆனால் இது வரை நீங்க அதை ஊகிக்கலையா....? கொஞ்சம்கூட உங்களால் கெஸ் பண்ண முடியலையா?''

ஒரு வினாடி தயங்கி யோசித்து பார்வையை அவன் முகத்தில் படரவிட்டான் அவன். மிக மெல்லிய குரலில் உதடுகள் நடுங்கக் கேட்டான்.

''யு மீன்...நித்யா...?''

''எஸ். யு ஆர் ரைட்.'' சொன்ன போதே முகம் மலர்ந்தான் அவன். அந்த முகத்தின் மலர்ச்சியையும், கண்களின் பளபளப்பையும், துள்ளிக் கொண்டு ஓடிவந்த சந்தோஷத்தையும் பார்த்த அவன் கீழ் உதட்டைக் கடித்து தன்னை அடக்கிக் கொள்ள முயன்றான். ஆனாலும் அடி வயிற்றிலிருந்து ஆழமான பெருமூச்சு ஒன்று வெளிப் பட்டது.

''இந்த நித்யா இருக்கானே...அவன் ஒரு லக்கி பாஸ்டர்ட் மினி. நான் புஸ்தகம் வாங்குவேன். அவன் படிச்சு பாஸாவான். புதுசா ஷர்ட் வாங்கிட்டு வருவேன். என்னைவிட அவனுக்கு நல்லா இருக்கும். ஓட்டலுக்குக் கூட்டிட்டுப் போவேன். அவன் ஆர்டர் பண்ணின அத்தனையும் கிடைக்கும். இப்போ... இப்போ... நான் காதலிச்சேன். அவன் கல்யாணம் பண்ணிக்கப் போறான்.''

''டு யு ஃபீல் ஸாரி பார் இட்...?''

''நோ...நோ... ஒய் ஷுட் ஐ...? என்ன பேசற மினி...? நானும் அவனும் அஞ்சாம் கிளாஸ்லேருந்து ஒண்ணாப் படிச்சோம். இதோ இந்த நிமிஷம் வரை இணைபிரியாத சிநேகிதர்களாக இருக்கோம். அவனைப் பார்த்தா நான் பொறாமைப்படுவேன்...? அவனுடைய சந்தோஷத்தில் எனக்கு வருத்தம் ஏற்பட முடியுமா...? ஏமாற்றமான்னு கேளு... அஃப்கோர்ஸ் எஸ்! அதை வருத்தம்னு சொல்லாத மினி. என்னால் தாங்கிக்க முடியாது.''

''ஐயம் ஸாரி சார். தப்பாகக் கேட்டுட்டேன்.''

''தட்ஸ் ஆல் ரைட். நீ இறங்க வேண்டிய பஸ் ஸ்டாப் வந்துடுத்து இறங்கிக்க. இன்னிக்கு நித்யாவோட பர்த்டே இல்ல. சாயந்திரம் மீட் பண்ணலாம்.''



அவள் கீழே இறங்கி வேறு என்ன சொல்லலாம் என்பது புரியாமல் வெறுமனே தாங்க்ஸ் மட்டும் சொன்னாள்.

''மென்ஷன் நாட் ப்ளீஸ்'' என்று புன்சிரிப்பாகச் சிரித்து காரைக் கிளப்பினான் அவன்.

## 3

வழக்கமாக ஆறு, ஆறரை மணிக்கெல்லாம் எழுந்து விடுகிற நித்யாதரன் அன்று ஏழரை மணி வரை தூங்கிப் போனான். அறை பையன் வந்து கதவு தட்டி ''சாரே... சாயா சாரே...'' என்று குரல் கொடுத்த பின்னரே எழுந்து கதவு திறந்தான். அறைக்குள் நுழைந்து டீ டம்ளரை வைத்த பையன் ஆச்சர்யமாக அவனைப் பார்த்தான்.

''எந்தா சாரே.... இன்னிக்கு ஈநேரம் உறங்கிப் போயி...?''

''ஈ நேரமுமில்லை. கொக நேரமும் இல்லை. ஏற்கெனவே நேரமாயிடுச்சு. நான் கிளம்பணும். நீ இடத்தை காலி பண்ணு.'' என்று பையனை அனுப்பிவிட்டு டீ குடித்து, அவசரமாகக் குளித்து, உடை மாற்றி நேராக சரவணனின் வீட்டிற்குப் போனான். அவனது அம்மா அப்பாவை நிற்கவைத்து ஒவ்வொரு வருடமும் வணங்குகிற மாதிரி வணங்கினான்.

''இதப் பாரு நித்யா. அடுத்த வருஷம் இந்த மாதிரி தனியா வந்து கும்பிட்ட, நாங்க ஆசீர்வதிக்க மாட்டோம். ஜோடியா வந்தால்தான் நிற்போம்.'' என்று மிரட்டலாகச் சொன்னாள் சரவணனின் அம்மா.

''அடுத்த வருஷம் அனேகமா ஜோடியாத்தாம்மா வருவேன்'' என்று புன்னகையோடு கண் சிமிட்டினான் நித்யாதரன்.

''அப்படியா...! ரொம்ப சந்தோஷம்ப்பா. நீ சொல்றதைப் பார்த்தால் பொண்ணெல்லாம் பார்த்துட்ட மாதிரி தெரியுது...?'' விடாமல் கேட்டாள் அந்த அம்மாள்.

''பார்த்து வச்சிருக்கேம்மா... ரொம்ப அழகான பொண்ணு...''

''பொண்ணு பார்த்தாச்சுன்னு சொல்ற. கல்யாணம் கூட இப்படித்தான் எங்கிட்ட சொல்லாமல் செய்துப் பியா....?''

''ஐயயோ...என்னம்மா நீங்க...? நீங்க இல்லாமல் என் வாழ்க்கையில் எது நடந்திருக்கு? நீங்க இல்லேன்னால் எனக்கு ஏதும்மா வாழ்க்கை...? பொண்ணு பார்த்தேன்னால் சும்மா பார்த்திருக்கேன். சம்பிரதாயமா நீங்க, அப்பா, சரவணன் எல்லாருமா வந்து பார்க்கணும், பேசணும். கல்யாணம் நிச்சயம் பண்ணணும். முன்ன நின்னு நடத்தி வைக்கணும். உங்களை விட்டால் எனக்கு யாரும்மா இருக்காங்க....?''

அவனது உருக்கமான பேச்சில் அந்த அம்மாவும் கண் கலங்கி நிற்க சரவணனின் அப்பா பேசத் தொடங்கினார்.

''இதப் பாரு சிவகாமி. பொறந்த நாளும் அதுவுமா அவன் மனசை சங்கடப்படுத்தற...? பொண்ணு இதுன்னு நீ காட்டிடு நித்யா.... மற்ற எல்லாத்தையும் நாங்க முடிச்சு வைக்கிறோம். என்ன....?''

''தாங்க்ஸ்ப்பா... ரொம்ப தாங்க்ஸ்.''

''இப்படி தாங்க்ஸ சொல்விட்டு ஓடிடலாம்னு பார்க்காதே. அதே மாதிரி அழகான பொண்ணா சரவணனுக்கும் பாரு. ரெண்டு கல்யாணத்தையும் ஒண்ணாவே நடத்திட லாம்...''

''சரிப்பா...''

''சரிப்பான்னு தலையாட்டிட்டு பேசாமல் இருந்த.... எனக்கென்ன உன் கல்யாணம்தான் டிலே ஆகும். நீதான் காத்துண்டிருக்கணும்.''



''இல்லப்பா... சரவணனுக்கு இதைவிட அழகான பொண்ணாகப் பார்க்கலாம். அவனுக்கென்னப்பா...? ராஜா மாதிரி இருக்கான். அரண்மனை மாதிரி வீடு இருக்கு. தேர் மாதிரி நாலு கார் நிக்குது. கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர ஆட்கள் காத்துகிட்டிருக்காங்க. எல்லாத்துக்கும் மேலே நீங்க ரெண்டு பேரும் இருக்கீங்க. என்ன குறை சொல்லுங்க...? நீ, நான்னு போட்டி போட்டுகிட்டு பொண்ணு தர முன் வர மாட்டாங்களா....?''

''நீ சொல்ற எல்லாம் சரி. வாஸ்தவம்தான். கல்யாணம்ன்றது தானாக அமையணும்ப்பா. தேடிட்டுப் போகக் கூடாது. ரெண்டு பேர் மனசுக்கும் திருப்தியா இருக்கணும். ஒத்துப் போகணும். ஓரளவாவது ஒரே ரசனை ஏற்படணும். எல்லாத்துக்கும் மேல் அதுவாக நிகழணும்ப்பா. உனக்கு அமைந்த மாதிரி அமையணும்....''

''ஐயோ... அப்பா... நான் சும்மா பொண்ணைப் பார்த்து வச்சிருக்கேன்றதைத் தவிர வேறு ஒண்ணும் அமையலை. நீங்க பார்க்கணும். அவங்க வீட்ல சம்மதிக்கணும்னு இன்னும் எத்தனை இல்லை—?''

''எல்லாம் நல்லபடியா நடக்கும். ஆமாம் பொண்ணு என்ன ஜாதி.... நம்ம ஜாதியா இல்லை...''

வாய் திறந்ததும் கோபப்பட்டார் பெரியவர்.

''மனுஷ ஜாதி. கேட்கிறா பாரு கேள்வி... என்ன ஜாதியாம்...போடி அப்பால. எந்த காலத்துல என்ன கேள்வி கேட்கிறா பாரு...இந்த மாதிரித்தான் அமைஞ்சுடக் கூடாதுன்னு சொன்னேன் நித்யா...''

''இன்னும் ரெண்டு மூணு வருஷம் போகட்டும். பேரப் புள்ளைங்களையெல்லாம் சுற்றி நிற்க வச்சுகிட்டு நம்ம அமைப்பைப் பற்றி பேசுங்க...'' என்று முகத்தைத் தோளில் இடித்துக் கொண்டாள் அந்த அம்மாள்.

அதைப் பார்த்து சிரித்த நித்யா "எங்கேம்மா சரவணன். டென்னிஸ் விளையாடப் போயிட்டானா?" என்று கேட்டான்.

"ஹூம். அவன் எங்கே இப்போ டென்னிஸ் விளையாடறான்... மேல படுத்துத் தூங்கிட்டிருக்கான் போய் எழுப்பு..."

மணி பார்த்தான் நித்யா. எட்டே கால் ஆகி இருந்தது. வழக்கமாக சரவணன் எட்டரை மணிக்கு மேல்தான் எழுந்திருப்பான். ஆகையால் அப்போது எழுப்பப் பிரியப் படாதவனாகச் சொன்னான். "வேணாம்மா. நான் காலேஜ்ல பார்த்துக்கறேன். வந்துட்டுப் போனேன்னு மட்டும் சொல்லுங்க போதும்."

"இருப்பா. டிபன் சாப்பிட்டுப் போ..."

"இல்லைம்மா. நேரா கோவிலுக்குப் போகலாம்னு இருக்கேன்...."

"அப்போ பகல் சாப்பாட்டுக்கு வா..."

"சாப்பாட்டுக்குன்னு அவ்வளவு தூரத்துலேர்ந்து வர முடியுமாம்மா?"

"சரி. ராத்திரி..."

"ராத்திரி சரவணனும், நானும் வெளில போவோம். ஒவ்வொரு வருஷமும் அவன் எனக்கு ஒரு பைவ் ஸ்டார் ஓட்டல்ல டின்னர் தருவான். ஓ.சி. டின்னர் ஏன் விடணும் சொல்லுங்க...?"

"ஓ.சி என்னப்பா ஓ.சி....இந்த வீட்ல உனக்கு சொந்த மில்லையா...? அவனுக்கு எத்தனை உரிமை இருக்கோ அதே உரிமை உனக்கும் இருக்கு. இங்கேயே இருப்பா. எங்க கூடவே இருன்னால் நீதான் எலி வளை மாதிரி ஒரு ரூம் பார்த்துண்டு தனியாகப் போயிட்ட. நீ அப்படிப் போனாலும் நாங்க இன்னும் எங்களுக்கு ரெண்டு பிள்ளைங் கன்னுதான் நினைச்சுட்டிருக்கோம்."



மீண்டும் அந்த அம்மாள் கண்கலங்க பெரியவர் மீண்டும் அதட்டினார்.

"அதாம்ப்பா...இந்தப் பொம்பளைங்ககிட்ட வாயைத் திறக்கக் கூடாதுன்னு சொல்றாங்க. கொஞ்சம்கூட ஸென்ஸ் ஆஃப் ஹியூமரே இருக்காது. நாம் விளையாட்டா சந்தோஷமா சொல்றதையெல்லாம் இந்த மாதிரி ஸீரியஸ்ஸா எடுத்துக்குவாங்க. நீ புறப்படுப்பா... அடுத்து ஏதாவது ஆரம்பிக்கிறதுக்குள் கிளம்பிடு."

சிரித்துக் கொண்டே கிளம்பினான் அவன். அவர்கள் இருவரும் வாசல் வரை வந்து வழியனுப்பினார்கள். தன் ஸ்கூட்டரில் ஏறி புல்தரை கடந்து கேட்டைத் தாண்டி வெளியில் போகிற வரை நின்று பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

அங்கிருந்து நேராக மந்தைவெளி போனான். மசூதித் தெருவிலுள்ள ஆஞ்சனேயர் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்தான். பின்னர் லஸ் கோடிக்கு வந்து மருந்துக்கடை ஒன்றிலிருந்து தாமினியின் தொலைபேசி எண்களைச் சுழற்றினான். மறுபக்கத்திலிருந்து தாமினியின் அம்மா குரல் கேட்டதும் சட்டென்று ரிஸீவரை வைத்து விட்டு, காசு கொடுத்தபின் மறுபடியும் ஸ்கூட்டரை உதைத்தான்.

கல்லூரி மர நிழலில் ஸ்கூட்டரை நிறுத்தி விட்டு உள்ளே போய் சரவணனைத் தேடினான். அவனுடைய டிபார்ட்மெண்ட்டின் ஸ்டாஃப் ரூமில் அவன் இல்லாததால் ஒரு வேளை தன்னைத் தேடி தன்னுடைய கட்டிடத்திற்குப் போயிருக்கலாம் என்று தன் ஸ்டாஃப் அறையிலும் வந்து பார்த்தான், அங்கேயும் சரவணனைக் காணவில்லை. தாமினியாவது வந்திருக்கிறாளா பார்க்கலாம் என்று வராந்தாவிற்கு வந்தபோது தமிழ்த் துறையின் பேராசிரியர் சோமு அவனைத் தேடிக்கொண்டு வந்தார்.

''வணக்கம் நித்யாதரன். உன்னைத் தான் தேடிக் கிட்டு வரேன்.'' என்று மாக குலுக்கினார்.

''வாங்க சார்... உங்க எழுத்தெல்லாம் எப்படி இருக்கு...? இப்போ எந்தப் பத்திரிகையில் எழுதறீங்க?'' என்று இயல்பாகக் கேட்டான் நித்யா.

''பத்திரிகை, எழுத்து எல்லாம் இருக்கட்டும் நித்யா. இப்போ உன்னால் எனக்கு ஒரு மிக முக்கியமான உதவி தேவைப்படுது. மாட்டேன்னு சொல்லாமல் நீ செய்யணும்.''

''என்னால் முடிந்த எதையும் நான் உங்களுக்கு செய்வேன்னு உங்களுக்கே தெரியும். சொல்லுங்க சார்... என்ன செய்யணும்?''

''இன்னிக்கு சாயந்திரம் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்துல ஒரு பட்டிமன்றத்துக்கு ஏற்பாடு செய்திருக்கேன். நம் கல்லூரி சார்பில் நான்தான் பட்டி மன்றத்துல பேசறதாக ஏற்பாடு. பெரிய விழாவாகவே நடத்தறாங்க. நம் கல்லூரியும், பிரஸிடென்ஸி கல்லூரியும்தான் கலந்துக்கறாங்க. நம் கல்லூரி தமிழ்த்துறை மாணவர்கள் எல்லாரும் வராங்க. சாலமன் பாப்பையா தான் நடுவர்''—

''எக்ஸலண்ட் சார். உங்களுக்கென்ன...நீங்க பிச்சு உதறிடுவீங்க....''

''இல்ல நித்யா. என்னால் போக முடியாது. எனக்கு பதிலா நீ போய்ப் பேசணும்னு கேட்டுக்கத்தான் வந்தேன்.''

''என்ன சார்...விளையாடறீங்களா...? உங்க இடத்துல என்னால் பேச முடியுமா?''

''முடியும்ன்ற நம்பிக்கையில்தானே வந்திருக்கேன். உன் பேச்சை நான் கேட்டதில்லையா...? எத்தனை மேடையில் பேசி இருக்க...தமிழ்த்துறையில் இருக்கிற



எங்களையெல்லாம் விட நீ நல்லாப் பேசற...உன்னால் தான் இன்னிக்கு நம் கல்லூரிக்குப் பரிசு தட்டிக்கிட்டு வர முடியும்...''

''இல்ல சார். அதுக்கு பதிலா நீங்க ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்துக்குப் போய் பேசுங்க. அதுக்கு இடைஞ்சலா வந்த உங்க வேலையை நான் செய்து முடிக்கிறேன்.''

''அது முடியாதுன்னுதானே உன்னை ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் போகச் சொல்றேன்.''

''ஏன் சார் முடியாது?''

''இன்னிக்கு சாயந்திரம் என் மகளைப் பொண்ணு பார்க்க வராங்க. பெண்ணினுடைய தகப்பன்னு நான் தான் இருக்கணும். நீ இருக்க முடியாது...''

'அது சரிதான்' என்று தோன்ற பேசாமல் இருந்தான் நித்யாதரன்.

''என்ன நித்யா பேசாமல் இருக்க...?''

''இல்ல சார்...வந்து...''

''வந்துமில்ல...போயுமில்ல...நீதான் போய் பேசற... மாட்டேன்னு சொல்லிட்டால் எனக்கு வேற வழி இல்லை. நிகழ்ச்சியை ஒத்திப்போடவும் முடியாது....''

''அவன் மீண்டும் தயங்கி யோசிக்க, அவர் கெஞ்சத் தொடங்கினார்.

''தயவு செய்து எனக்காகப் போய் பேசுப்பா. பிரின்ஸ்பால் கூட நல்ல சாய்ஸ்னு சொல்லிட் டாருப்பா...''

''சரி சார், போய் பேசறேன். தலைப்பு என்னன்னு சொல்லுங்க...?''

''சமூகத்துல விதவைப் பெண்களுக்கு இருக்கிற அனு தாபமும், மறு திருமணத்திற்கு முன் வருதலும், விவாகரத்

தான பெண்களுக்கு இல்லை. விவாகரத்தான பெண்களுக்கு மறு வாழ்வு கொடுக்க இன்றைய இளைஞர்கள் முன் வரணும். விவாகரத்தான பெண்ணின் மீதுதான் முழுத்தவறும் இருக்கும் என்கிற மனோபாவம் மாறணும்னு நீ பேசணும், எதிர் கட்சியில் குமரகுருபரன் வாதாடுவார்...''

''ரொம்ப நல்ல டாபிக் சார். நான் பேசறேன்.''

''ரொம்ப நன்றிப்பா. ஐந்தரை மணிக்கெல்லாம் ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் போயிடு.''

''சரி சார்.''

அன்று மாலை தாமினியை சந்திப்பதும், சரவணனோடு விருந்துக்குப் போவதும் இயலாது என்பதை உணர்ந்தவன் வகுப்புகள் ஆரம்பித்து விட்டதால் வகுப்பறைக்குப் போனான். தாமினிக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்கிற காரணத்தால் வகுப்பில் அன்றைய மாலை நிகழ்ச்சி பற்றி பொதுவாகச் சொன்னான்.

''சார்...நாங்க வரோம் சார். உங்க பேச்சைக் கேட்கணும் சார். அதுவும் டாபிக் ரொம்ப நல்ல டாபிக் சார்...'' என்று மாணவிகளுடன் மாணவர்களும் சேர்ந்து குரல் கொடுத்தனர்.

''ஓ.கே... ஓ.கே.... யாரெல்லாம் வரப்போறீங்க...?''

''உயர்ந்த கைகளில் தாமினியின் தந்தக்கை தனியாகத் தெரிந்ததில் மகிழ்ச்சியடைந்தான். 'நேற்றிரவு அவளிடம் காலேஜ்ல கல்சுரல். இல்லைன்னால் டிபேட் இருக்குன்னு சொல்லிட்டு வா...' என்றது இந்த அளவுக்கு உண்மையாகும் என்று நினைக்கவில்லை.

பகலில் ஸ்டாஃப் ரூமிற்கு வந்து தாமினி தனியாக அவனைப் பார்த்தபோது சொன்னான்.

''ஸாரி மினி. திடீர்னு இந்த புரோக்கிராம் வந்துடுத்து. புரொபசர் சோமு கூப்பிட்டு கேட்டுக்கிட்டார்...''



''அதனால் என்ன நித்யா...? உங்க பேச்சைக் கேட்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. அதுவுமில்லாமல் சாயந்திரம் முழுசும் ரெண்டு பேரும் ஒரே இடத்துல இருக்கப் போறோம். ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கப் போறோம்...பட்டிமன்றம் முடிஞ்சப்புறம் பேச சந்தர்ப்பம் கிடைச்சாலும் கிடைக்கும். அது போறாதா...?''

''தாங்க்யு மினி. நீ என்னோட ரொம்ப அழகா ஒத்துப் போற. என்னைப் புரிஞ்சுக்கற...நான் அதிர்ஷ்டசாலிதான் மினி.''

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போதே சரவணன் வந்தான். தாமினியின் பக்கம் கூடத் திரும்பாமல் நேராக நித்யாவைப் பார்த்தான்.

''மெனி மோர் ஹாப்பி ரிடர்ன்ஸ்டா நித்தி. காலைல வீட்டுக்கு வந்திருந்தியா... அம்மா சொன்னாங்க.''

''ஆமாண்டா. நீ தூங்கிட்டிருந்த. எழுப்ப வேணாம்னு வந்திட்டேன்.''

''எழுப்பி இருக்கலாம்டா. ரெண்டு பேரும் ஒண்ணா காலேஜுக்கு வந்திருந்தால், சில ஏமாற்றங்களை என்னால் தவிர்த்திருக்க முடியும்.''

''என்னடா சொல்ற...?''

''ஒண்ணுமில்ல, ராத்திரி டின்னருக்குப் போறோம, இல்ல...?''

''அது முடியாது போல இருக்குடா...'' என்று ஆரம்பித்து பட்டிமன்றத்தில் பங்கெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டதை விவரித்தான்.

''ஓ...வெரிகுட். அதனால் என்னடா...? நானும் உன் கூட ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் வரேன். மீட்டிங் முடிஞ்சு ரெண்டு பேரும் நேரா டின்னருக்குப் போகலாம்...''

"அப்படிகூட பண்ணலாம். தாமினியும் வரேன்னு சொல்றாங்க. மீட்டிங் சீக்கிரம் முடிஞ்சுடுத்துனால் அவங்களையும் டின்னருக்குக் கூட்டிட்டுப்..."

"இல்லை...டின்னருக்கெல்லாம் என்னால் வர முடியாது. வீட்ல திட்டுவாங்க. மீட்டிங்கிற்கு மட்டும் வரேன்," என்று மறுத்தாள் தாமினி.

"அப்போ நாம் போகலாம் நித்தி."

"சரி. இப்போ தனியாக உட்கார்ந்து என்ன பேசணும்ன்றதை யோசிக்கணும். கொஞ்சம் குறிப்பு எழுதிக்கணும்; நான் லைப்ரரிக்குப் போறேன். அங்கேதான் அமைதியா இருக்கும்."

"ஓகேடா...அப்போ சாயந்திரம் காலேஜ் முடிஞ்சு பார்க்கலாம்."

சொல்லி விட்டு தாமினி நிற்பதை சிறிதும் பொருட்படுத்தாமல் திரும்பிப் போனான் சரவணன். அவனது அலட்சியமும், சரேலென்று திரும்பியதும், வேகமாக நடந்த விதமும் கோபத்தைப் புலப்படுத்துவதாகப் பட்டது தாமினிக்கு. 'நல்லா கோவிச்சுக்க. நீ கோவிச்சுக்கிட்டால் எனக்கு என்ன...? உன் கோபம் என்னை என்ன செய்யும்...?' என்று நினைத்துக் கொண்டே நித்யாவின் பக்கம் திரும்பினாள்.

"ஆல் தி பெஸ்ட் நித்தி. ரொம்ப நல்லாப் பேசணும். நீங்க போய் உங்க பேச்சைத் தயார் பண்ணுங்க. நான் ஜிமாசுக்குப் போறேன்..."

சொல்லி விட்டு வகுப்பிற்குத் திரும்பிய போது மனதிற்குள் இன்னதென்று சொல்ல இயலாத பாரமாக ஏதோ அழுத்தத் தொடங்கிற்று...

# 4

பட்டிமன்றத்திற்கு எப்போதுமே கூட்டம் வரும். சாதாரணச் சொற்பொழிவிற்கு இருக்கின்ற கூட்டத்தை விட அதிகம் இருக்கும். விறுவிறுப்பும், காரசாரமும், சிரிப்பும், கிண்டலுமாக அமர்க்களப்படும். அதுவும் அன்றைய பட்டிமன்றத்திற்கு கல்லூரி மாணவ மாணவியர் நிறைய பேர் வந்திருந்தனர். ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் நிறைந்திருந்தது. முதல் வரிசையில் சரவணனும், மூன்றாவது வரிசையில் தாமினியும் அமர்ந்திருந்தனர். மேடையில் சாலமன் பாப்பைய்யா நடுவிலும் அவருக்கு ஒரு பக்கம் தமிழ்ப் பேராசிரியர்களில் ஒருவரான குமரகுருபரனும், விஷுவல் கம்யூனிகேஷன் துறைப் பேராசிரியரான நித்யாதரனும் உட்கார்ந்திருந்தார்கள். சாலமன் பாப்பைய்யா பட்டிமன்றத்தைத் துவக்கி வைத்து, பேராசிரியர்கள் இருவரையும் அறிமுகப்படுத்திய பின்னர் முதலில் குமரகுருபரனைப் பேச அழைத்தார்.

குமரகுருபரன் அருவியாகப் பொங்கும் தமிழில் விவாகரத்து செய்துகொண்ட மங்கையர்களுக்கு மறுமணம் தேவை இல்லை என வாதாடினார். முதல் திருமணத்தில் பட்ட சூடும், கசப்பான அனுபவங்களும் அவர்களுக்குள் காயத்தின் வடுக்களாகத் தங்கி போயிருக்கும். மயிலிறகால் வருடினால்கூட வலி எடுக்கக்கூடிய மிக மென்மையான விஷயம் இது. உள்ளுக்குள் புரையோடிய புண்ணின் வேதனை. வெளியில் தெரியாத வலி, மரத்தின் வேர் மாதிரி ஆழ ஓடியிருக்கும். 'ஒன்ஸ் பிட்டன் ட்வைஸ் ஷை' என ஆங்கிலத்தில் சொல்வார்கள். முதல் திருமணங்களே சரியாக அமையாத இந்த நாட்டில், முதல் திருமணத்திற்கே வழியின்றி பெண்கள் தடுமாறிக் கொண்டிருக்கிற போது இந்த விவாகரத்து மறுமணங்களுக்கு அவசியமில்லை. பெண்ணைவிட ஆண் சற்று சுயநலவாதி. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை குறைந்தவன். 'தான்' என்கிற

உணர்வு தலைதூக்கி நிற்பவன். ஆகவே அவன் மனைவியின் குழந்தைகளைத் தன் குழந்தைகளாக பாவித்து நடத்தக் கூடிய மனப் பக்குவம் குறைந்தவனாகவே இருப்பான். ஸ்டெப் மதர் என்பதே இன்னும் மனதார இதய பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படாத மனிதர்கள் இருக்கிறபோது ஸ்டெப் ஃபாதர் என்பது நடைமுறைக்கு எந்த அளவிற்கு ஒத்து வரும் என்பது தெரியவில்லை. முதல் கணவனுக்குப் பிறந்த குழந்தைகளை, அல்லது குழந்தையை இரண்டாவது கணவன் சரியாக நடத்தவில்லை என்றால் அந்தத் தாய் உள்ளம் எப்படித் தவிக்கும் எவ்வாறு வெந்து தணியும். எப்படிப் பார்த்தாலும் மீண்டும் மனதளவில் அதிக பாதிப்பை அடைபவள் பெண் என்பவளே. ஏற்கெனவே பாதிக்கப்பட்டவளுக்கு மீண்டும் இரண்டாவது திருமணத்தினாலும் பாதிப்பு என்கிற பட்சத்தில் மறுமுறையும் தீயில் கை வைப்பது விவேகமல்ல. இதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கிற போது விவாகரத்தான பெண்கள் மறுமணம் செய்து கொள்ளாமல் இருப்பதே சாலச் சிறந்தது என நான் கருதுகிறேன். ஒரு பெண்ணின் எதிர்காலம் என்பது திருமணத்தில்தான் இருக்கிறது என்று நினைக்காமல் எத்தனையோ ஆக்க பூர்வமான பணிகளில் அவள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளலாம் என்று கூறி நான் என்பக்க வாதத்தை முடித்துக் கொள்கிறேன் என்று வந்தமர்ந்தார் குமரகுருபரன்.

அடுத்து நித்யாதரன் பேச எழுந்தபோதே பெண்கள் கைதட்டி வரவேற்றதைப் பார்த்து தாமினி நெஞ்சு குளிர்ந்தாள். 'கடவுளே... இந்த குமரகுருபரனைவிட என் நித்யா இன்னும் ஆழமாகவும், அழுத்தமாகவும். பெண்கள் சார்பாகவும் பேச வேண்டுமே....' என்று ஒரு விநாடி கண்களை மூடி வேண்டிக் கொண்டாள்.

நித்யாதரன் மைக் எதிரில் வந்து நின்ற கம்பீரத்தில் சபை அமைதியாயிற்று. அவனது உயரமும், முக வசீகர



மும், பளிச்சென்ற நிறமும், பிறந்த நாளுக்கெனத் தனியாக அணிந்து வந்திருந்த சஃபாரி சூட்டும் எல்லார் மனதையும் கட்டிப் போட்டது.

'வெரி ஹான்ட்ஸம் கை...' என்று பெண்கள் கிசுகிசுத்தது தாமினியின் காதுகளில் விழுந்தது. அத்தனை அழகும் கம்பீரமும் எனக்குச் சொந்தம். அவன் எனக்குச் சொந்தமானவன்' என்கிற எண்ணத்துடன் அவள் நிமிர்ந்து உட்கார்ந்தபோது ஒரு முறை ஆள்காட்டி விரலால் மைக்கைத் தட்டி சரி பார்த்துக் கொண்ட நித்யா ஆண்மை நிறைந்த தன் கணீரென்ற குரலால் அனைவரையும் மேலும் கட்டிப் போட ஆரம்பித்தான்.

என் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு. சாலமன் பாப்பையா அவர்களுக்கும், தமிழ் நாட்டில் மழைதான் இல்லையே எனத் தன் தமிழால் மழை பொழிய வந்து இடியும், மின்னலுமாகக் கூட்டி பெருமழை பொழிந்து விட்டுப் போன தமிழ் கற்ற வல்லுனர் தமிழாக வாழுகின்ற பெரியவர் திரு குமரகுருபரன் அவர்களுக்கும், இன்றைய பட்டிமன்ற விவாதமே மேடையில் அமர்ந்திருக்கின்ற பெரியவர்களுக்கு இல்லை. நம்மை மாதிரி இளைஞர்களுக்குத்தான் என்பதை எடுத்துக் காட்டுவதற்கென்றே வந்திருக்கிற என் அருமை மாணவ மணிகளுக்கும், இளைய நெஞ்சங்களுக்கும் பணிவான என் மாலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சாலமன் பாப்பையா அவர்களைப் போன்றோ, அல்லது தமிழ்ப் பெரியவர் குமரகுருபரன் போன்றோ நான் தமிழ் கற்றவன் இல்லை. தமிழறிஞன் இல்லை. எங்கள் கல்லூரியில் புதிதாக அறிமுகமாகி இருக்கும் விஸ்காம் எனப்படும் விஷுவல் கம்யூனிகேஷன் துறையில் பாடம் கற்றுத்தர வந்த ஆசிரியன் நான். ஆங்கிலத்தில் பயின்றவன். பள்ளியிலும், கல்லூரியிலும் தமிழை இரண்டாவது மொழியாகக் கற்றிருந்த ஒரே தகுதியின் பொருட்டே இன்று இந்தத் தமிழ் மேதைகளின் எதிரில் நிற்கிறேன். அதுவும

கூட எதிர்பாராத விதமாக இந்த இடத்தில் நான் நிற்கிற நிலைமையும், பேச வேண்டிய நிலைமையும் ஏற்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் சோமுதான் குமரகுருபரனின் தமிழ்ப்புலமைக்கும், எண்ணங்களின் எழுச்சிக்கும் ஏற்றவர். ஆனால் சோமு அவர்களால் இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாததால், சொந்த அலுவல் காரணமாக அவரால் வர இயலாததால் நான் இங்கு பேச அவர் சார்பில் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

வயதிலும், அனுபவங்களிலும், தமிழ்ப் புலமையிலும் என்னைவிடப் பல மடங்கு உயர்ந்த திரு. குமரகுருபரனின் கூற்றை நான் அடியோடு மறுக்கிறேன். அவர் கருத்தின் ஆணிவேரையே அசைக்கிறேன்.

முதலாக அவர் சொன்ன 'பெண்ணை விட ஆண் சற்று சுயநலவாதி. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை குறைந்தவன். 'தான்' என்கிற உணர்வு தலைதூக்கி நிற்பவன்' என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கிறேன். அவர் கூற்றில் சிறிதுகூட உண்மை இல்லை, நியாயமும் இல்லை என்பதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர் தன் தலைமுறை ஆண்களைப் பற்றி சொல்லியிருக்கிறார் என்றே நான் கருதுகிறேன். நான் என் தலைமுறை ஆண்கள், நம் தலைமுறை ஆண்கள் அப்படியல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர் சொன்ன மாதிரி நாம் சுயநலவாதிகளா...? விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாதவர்களா? 'தான்' என்கிற உணர்வு தலைதூக்கி நிற்பவர்களா...? நீங்களே சொல்லுங்கள்...''

''நோ...நோ...'? என்று மாணவர் கூட்டம் குரல் கொடுத்தது. சில மாணவர்கள் எழுந்து நின்று ''நாங்கள் சுயநலவாதிகள் இல்லை.'' என்று கத்தினார்கள்.

''ரொம்ப சந்தோஷம். உட்காருங்கள்.'' என அவர்களைக் கையமர்த்தி உட்கார வைத்தான் நித்யா. ஆரம்பத்



திலேயே கூட்டத்தைத் தன்னுடன் சேர்த்து அரவணைத்து தன் கட்சிக்கு பலம் சேர்க்கிற வித்தை கற்று வைத்திருந்தான். தான் அவர்களில் ஒருவன் என உணரச் செய்கிற தந்திரம் தெரிந்திருந்தான். அவர்கள் தன்னுடன் வரத் தயாரானவர்கள் என்பது தெரிந்ததும் மெல்ல மெல்ல பேச்சின் முக்கிய கட்டத்திற்குள் நுழைய ஆரம்பித்தான். சூடும், வேகமும் பிடிக்க, அழுத்தமும், ஆழமுமாகத் தொடரலானான்.

''...பெண்களின் சார்பாக வாதாடுபவராகத் தெரிந்தாலும், குமரகுருபரன் அவர்கள் உண்மையில் பெண்களுக்கு எதிரான கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார். பெண்களை மட்டுமின்றி 'முதல்' கல்யாணத்திற்கே பெண்கள் வழியின்றித் தவிப்பதாகச் சொல்லி இளைஞர்களான நம்மையும் லேசாகக் குத்திக் காட்டுகிறார். அதை நானும் உங்களோடு சேர்ந்து ஆட்சேபிக்கிறேன். இன்றைய இளைஞர்கள் வெகுவாகவும், வேகமாகவும் இந்த விஷயத்தில் மாறிக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் குமரகுருபரன் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைய கால கட்டத்தில், சமூகச் சூழ்நிலையில் எத்தனையோ இளைஞர்கள் விதவைப் பெண்களுக்கு மறு வாழ்வு கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் என்னால் புள்ளி விவரத்தோடு நிரூபிக்க முடியும். அந்த அளவிற்கு இளைஞர்களின் நெஞ்சில் முற்போக்கு எண்ணமும், கருத்துக்களும் வேரூன்றி இருக்கின்றன.

அதே மாதிரி விதவைப் பெண்களுக்கு வாழ்வு தர முன் வந்திருக்கும் இள நெஞ்சங்கள் விவாகரத்து பெற்ற பெண்களுக்கும் வாழ்வளிக்க முன் வர வேண்டும். விவாகரத்தான பெண் என்றால் ஓரளவு அலட்சியமாகவும் மதிப்பு குறைவாகவும் பார்க்கின்ற நம் பெரியவர்களின் மனப்போக்கு மாற வேண்டும். விவாகரத்து பெற்ற பெண் என்றாலே

தவறு முழுதும் அவள் மீதுதான் இருக்கும். விவாகரத்து அளிக்கப்பட்ட பெண் நல்ல பெண்ணாக இருக்க மாட்டாள் என்கிற மிக மிகத் தவறான அபிப்பிராயம் முதலில் மாற வேண்டும்.

குமரகுருபரன் சொன்ன மாதிரி எத்தனையோ கஷ்டப்பட்டு காத்திருந்து, தேடி வரன் பார்த்து திருமணம் செய்து கொள்கிற பெண் ஏன் விவாகரத்து வாங்கப் போகிறாள்? அதன் பின் தன் நிலை என்ன, சமூகம் தனக்குத் தரப் போகும் அந்தஸ்து என்ன என்பதை நிச்சயமாக அவள் உணர்ந்திருப்பாள். தெரிந்து வைத்துக் கொண்டிருப்பாள். அப்படியும் அவள் விவாகரத்து கோருகிறாள் 'அல்லது பெறச் சம்மதிக்கிறாள் என்றால் அதற்கு என்ன காரணம் என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். அதன் பின்னணியில் ஆழமான, அழுத்தமான, சோகமான காரணமின்றி எந்தப் பெண்ணும் அந்த முடிவிற்கு வரமாட்டாள். இதற்கு மேலும் அந்தக் கணவனுடன் சேர்ந்து வாழ இயலாது என்கிற விளிம்பிற்குத் தள்ளப்பட்ட பின்னரே பெண் விவாகரத்து என்கிற முடிவு எடுக்கிறாள்.

நூற்றில் ஒரு பெண் வேறுவித காரணங்களுக்காக, சுயநலம் அல்லது சுயசந்தோஷம் கருதி விவாகரத்து பெறலாம். ஆனால் மற்ற தொண்ணூற்று ஒன்பது பெண்கள் கணவனது கொடுமை தாங்காமல், குடிகாரக் கணவனுடன் வாழ இயலாமல், தன்னை, தன் குழந்தையை வாழ்விக்கிற வழியும், மனமும் அற்ற கணவனை விட்டுப் பிரிவது தவிர வேறு வழி இன்றியே பிரிகிறார்கள். அடி, உதை வேதனைகளைத் தாங்குகிற சக்தியற்ற காரணத்தினாலேயே விவாகரத்து கோருகிறார்கள். வெளிநாடுகளைப் போல் இன்னமும் இங்கே கணவன் தும்மினால் விவாகரத்து, இருமினால் விவாகரத்து என்கிற நிலைமை வரவில்லை. நம் பெண்கள் பொறுமைசாலிகள். சகிப்புத்தன்மை மிக்கவர்கள். அவர்களே வெகுண்டு எழுந்து விவாகரத்து



கேட்கிறார்கள் என்றால் அவர்களுக்கு அமைந்த வாழ்க்கை சரியில்லை என்பதை நாம் உணரவேண்டும்.

அதை மட்டும் உணர்ந்தால் போதாது. அப்படிப்பட்ட பெண்களுக்கு வாழ்வு தர முன்வர வேண்டும். பெரியவர் குமரகுருபரன் சொன்னார். ஸ்டெப் மதர்களையே ஏற்றுக் கொள்ளாத சமூகம் ஸ்டெப் ஃபாதர்களை ஏற்றுக் கொள்ளாது என்று. ஒன்ஸ் பிட்டன் ட்வைஸ் ஷை என்றார்.

அவருக்கு ஒன்றை சொல்ல ஆசைப்படுகிறேன். 'யுவர் சில்ரன் அண்ட் மை சில்ரன் ஆர் ப்ளேயிங் வித் அவர் சில்ரன்' என்பதை மிக சுலபமாகச் சொல்லக் கற்றுக் கொண்டுவிட்டனர் வெளிநாட்டினர்.

நாம் அந்த அளவுக்குக்கூடச் செல்ல வேண்டாம். அமெரிக்காவில் வேலை என்றதும் விசாவிற்காக யு.எஸ் ஐ எஸ் வாசலில் படுக்கைத்தலையணை தூக்கிக் கொண்டு ஓடத் தயாராக இருக்கிற நாம், நாள் கணக்கில் க்யூவில் நிற்க வெட்கப்படாத நாம், இந்த வாச் இம்போர்ட்டட், இந்த ஷர்ட் இம்போர்ட்டட், என்று பெருமையாகச் சட்டைக் காலரை உயர்த்திக் கொள்கிற நாம் அந்த அளவு வெளிநாட்டு மோகத்திலும், மயக்கத்திலும் இருக்கிற நாம் விவாகரத்து பெற்ற பெண்ணிற்கு மறுவாழ்வு தருகிற விஷயத்தில் மட்டும் பின்தங்கலாமா? தயக்கம் காட்டலாமா? 'யுவர் சில்ரன் அண்ட் மை சில்ரன் ஆர் ப்ளேயிங் வித் அவர் சில்ரன்' என்று சொல்கிற நிலைமை வேண்டும் எனச் சொல்ல வரவில்லை நான். ஆனால் யுவர் சைல்ட் ஈஸ் மை சைல்ட் என்று ஏற்றுக் கொள்கிற பக்குவம் வேண்டும். 'யு ஆர் மைன்' என்று வாழ்வு தரக்கூடிய பரந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் சொல்கிறேன்.

ஆகவே இளைஞர்களே...விவாகரத்து பெற்ற பெண் தப்பான பெண், தவறு முழுதும் அவள் பக்கம்தான்

இருக்கும் என்கிற கருத்திற்கு இடம் கொடுக்காமல் அவளும் பெண்தான். அவளுக்கும் மனசு, ஆசைகள், உணர்வுகள் எல்லாம் இருக்கும் என்கிற மனித நேயத்தோடு தாராள மனப்பான்மையோடு, பெருந்தன்மையோடு விவாகரத்து பெற்ற பெண்களை மணக்க முன்வந்து அவர்களுக்கு வாழ்வு கொடுங்கள் என்று வேண்டிக் கொண்டு இதோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

நித்யாதரன் தன் இடத்தில் போய் அமர்ந்த பத்து நிமிடங்களுக்குப் பின்னரும் கைதட்டல் ஓயவில்லை. எழுந்து நின்ற கூட்டம் உட்காரவில்லை. விவாதமும், வாக்குவாதமுமாக சபை கலகலத்தது. இளைஞர் பட்டாளம் நித்யாதரன் பக்கமும், ஓரளவு அனுபவமும் வயதும் நிறைந்தவர்கள் குமரகுருபரன் பக்கமும் பேசிக் கொண்டிருந்தபோது நடுவரான சாலமன் பாப்பையா எழுவதற்கு முன் சற்று வேகமும், படபடப்புமாக குமரகுருபரன் எழுந்து மைக்கிற்கு வந்தார்.

"தயவு செய்து அமைதியாக இருங்கள். நான் சொல் வதற்குச் சற்று செவிசாயுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

பட்டிமன்ற விதிகளுக்கு முரண்பாடாகவும், மீறியும் அந்த சபை போய்க் கொண்டிருப்பதை உணர்ந்த சாலமன் பாப்பையா செய்வதறியாது தவிக்க குமரகுருபரன் கோபம் நிறைந்த ஆக்ரோஷமான குரலில் கேட்டார்.

"இளைஞர் நித்யாதரன் வாதத்தை நீங்கள் எல்லோரும் ஒட்டு மொத்தமாக ஆதரிக்கிறீர்கள் என்று தெரிகிறது. வெறும் உணர்ச்சி பூர்வமான பேச்சு நடைமுறை வாழ்க்கையாகிவிடாது. நித்யாதரனின் கூற்றை ஒப்புக்கொள்கிற இளைஞர்களே...உங்களை ஒரு கேள்வி கேட்க ஆசைப்படுகிறேன். அவர் சொன்ன மாதிரி, கேட்டுக் கொண்ட மாதிரி உங்களில் எத்தனை பேர்கள் விவாகரத்தான பெண்ணை மணக்க முன் வருகிறீர்கள்.



எத்தனைப் பேர்கள் தீர்மானித்திருக்கிறீர்கள். தயவு செய்து அவர்கள் மட்டும் எழுந்து நின்று இந்தக் கூட்டத் திற்கும், உங்களது நண்பர்களுக்கும் அடையாளம் காட்ட மேடைக்கு வருமாறு அழைக்கிறேன்."

உச்சகட்ட குரலில் அவர் சவால் விட்டதும் சபை இன்னும் அமைதியாயிற்று. ஒருவர்கூட எழுந்திருக்க முன் வரவில்லை. 'இது ஏதடா வம்பு...?' எனப் பேசாமல் இருந்தவர், 'இந்த வீண் தொல்லையில் நாம் ஏன் மாட்டிக் கொள்ள வேண்டும்' என்று ஒட்டு மொத்தமாக அத்தனைப் பேரும் மூச்சுவிடக் கூட மறந்து போனவர்களாக அமைதி யாக உட்கார்ந்திருந்தனர்.

அந்த அமைதியும், ஒருவர்கூட எழுந்திருக்க முன் வராதது கண்டும் தன் வாதம் வெற்றி பெறப் போவதை உணர்ந்த குமரகுருபரன் உதட்டில் அலட்சிய சிரிப்பு ஓட மீண்டும் உரத்த குரலில் கேட்டார்.

"இத்தனை நேரம் கைதட்டி, எழுந்து நின்று ஆர்ப்பாட்டம் செய்தீர்கள். நண்பர் நித்யாதரன் பேசிய பேச்சுக்களை ஆமோதித்தீர்கள். ஆனால் நடைமுறை என்கிறபோது ஒருவர் கூடவா அவர் கருத்தோடு கை குலுக்க முன்வரமாட்டீர்கள்? ஒருவர் கூடவா அவர் கட்சிக்கு வலிமை தர மாட்டீர்கள்?"

அதற்கும் கூட்டத்திடமிருந்து பதில் வராது போகவே நித்யாதரன் பக்கம் திரும்பினார் அவர்.

"நண்பரே...உங்கள் பேச்சுக்கு இருந்த வரவேற்பு உங்கள் கருத்திற்கு இல்லை. கொள்கைக்கு இல்லை. அந்தக் கருத்தையும், கொள்கையும் சொன்ன உங்களுக்கா வது அவற்றில் நம்பிக்கையும், பிடிப்பும் இருக்கிறதா, அல்லது நீங்களும் வெறும் வாய்ச்சொல் வீரர்தானா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்..."

அவர் குரலில் தொனித்த கேலியும், அலட்சியமும் கண்டு எழுந்து நின்றான் நித்யா.

"என்ன கேட்கிறீர்கள் நீங்கள்?"

"அங்கிருந்து பேசினால் சபையினருக்குக் காதில் விழாது. ஆகவே மைக் முன்னால் வருகிறீர்களா...?"

வந்தான்.

மீண்டும் மைக்கில் சபை பார்த்த குமரகுருபரன் கேள்வியை, மட்டும் நித்யாவிடம் வீசினார்.

"நண்பர் நித்யாதரன் அவர்களே... சொன்னதைச் செயலாக்குகிற துணிவும், வல்லமையும் தங்களுக்கு உண்டா...? சொன்ன மாதிரி விவாகரத்து பெற்ற ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு தாங்களே தங்கள் பேச்சுக்கு முன் உதாரணம் வகுத்துத் தருவீர்களா...அல்லது வெறும் மேடைப் பேச்சோடு சரிதானா...?"

அந்தக் கேள்வியைச் சிறிதுகூட எதிர்பார்க்காத நித்யா ஒரு வினாடி ஆடிப் போனான். அவனையும் மீறி அவனது பார்வை தாமினியிடம் போயிற்று. துடிக்கும் உள்ளத்தோடு பார்வையில் அவள் 'வேண்டாம் நித்யா ப்ளீஸ், தயவு செய்து சரி சொல்லி விடாதீர்கள்...! என்று கெஞ்சுவது தெரிந்தது. தவிப்பது தெரிந்தது. இக்கட்டாகத் தான் மாட்டிக்கொண்டு விட்டது புரிய அவன் ஒரு வினாடி தயங்கிப் பேசாதிருந்தான்.

அந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு மிக நிதானமான குரலில் நிலைமையை சமாளித்து சீராக்க முயன்றார் சாலமன் பாப்பைய்யா.

"குமரகுருபரன்... என்ன சார் இது...? இது வெறும் விவாத மேடை. பட்டிமன்ற மேடை தானே தவிர சவாலுக்கு அழைக்கிற போட்டி மேடை இல்லை சார்..."

"பாப்பையா சார். நீங்கள் தயவு செய்து என்னை மன்னிக்கணும். நடுவர் தீர்ப்பை மீறி நான் நடந்து கொள்வதாகக் கருதக்கூடாது. நம் இளைஞர்களுக்கு பேச்சில் இருக்



கிற தீவிரம் செயலில் இல்லை. தாங்கள் சொன்ன கருத்துக்களோடு தாங்களே உடன்படாத போது, நடைமுறையில் செயலாக்க முன் வராதபோது மற்றவர்களுக்கு மேடை ஏறி போதிக்கக் கூடாது சார். அதற்கு இந்த மேடை ஓர் முன் உதாரணமாக இருக்கட்டும் என்று தான் நான் இப்போது வாதிக்கிறேன்.

அவர் சொன்னதில் இருந்த நியாயம் சாலமன் பாப்பைய்யாவையும் பதில் பேச விடாது அடுத்த சமயத்தில் சடாரென்று ஓர் முடிவிற்கு வந்தான் நித்யாதரன். மைக்கைப் பிடித்துக் கொண்டு கணீரென்று உரத்த குரலில் சபதம் மாதிரி சொன்னான்.

"பெரியவர் குமரகுருபரன் அவர்களே... நடுவர் சாலமன் பாப்பைய்யா அவர்களே... இங்கு சாட்சியாக அமர்ந்திருக்கும் இளைஞர்களே... உங்கள் அனைவருக்கும் சொல்கிறேன். உங்கள் அத்தனைப் பேர் முன்னிலையிலும் ஆணையிட்டுச் சொல்கிறேன். என் வாழ்க்கையில் திருமணம் என்று ஒன்று நடந்தால் அது விவாகரத்து பெற்ற ஒரு பெண்ணோடு கூடிய மறுமணமாகத்தான் இருக்கும். என் பேச்சின் படி, நான் சொன்ன கொள்கையின்படி நானே இதற்கு முன் உதாரணமாக இருக்க ஆசைப்படுகிறேன். என் கல்யாணம் என்பது ஒரு விவாகரத்து பெற்ற பெண்ணிற்குத் தருகிற மறுமணமாகத்தான் நடைபெறும். இது சத்தியம், சத்தியம், சத்தியம்..."

கூட்டம் சலசலக்க, 'யூ பிளடி ஃபூல்' என்று சரவணன் குரல் கொடுக்க, நீண்ட நெடும் விம்மலும், கேவலுமாக, அதற்கு மேல் தாங்க இயலாதவளாக, மண்டபத்தை விட்டு வெளியில் ஓடினாள் தாமினி...

அதைப் பார்த்துக் கொண்டிருந்த நித்யாவிற்கு நெஞ்சு வலிக்கத் தொடங்கிற்று. உள்ளுக்குள் விம்மி வடிந்தது. ஐ யம் ஸாரி மினி...என்னால் இந்த நிலைமையில் வேறு

என்ன செய்ய முடியும் மினி... தயவு செய்து என்னை மன்னிச்சுடு மினி...'

அவன் குரல் கேட்காதவாறு மேடை ஏறிய கூட்டம் கை குலுக்கிற்று. ஏதேதோ பாராட்டிற்று. குமரகுருபரனும் அருகில் வந்து முதுகு தட்டி என்னவோ சொல்லி விட்டுப் போனார். சாலமன் பாப்பையா சினேகமாகவும், வருத்தமாகவும் பார்த்தார். ஏதோ சொல்ல வாயெடுத்து பின் பேசாமலே போனார். அன்றைய கூட்டம் அப்படி முடிந்ததில் அவருக்கு எல்லையற்ற வருத்தம் என்பது தெரிந்தது.

கூட்டம் மெதுவாகக் கலையத் தொடங்கிற்று. ஒவ்வொருவராகப் போகக் காத்திருந்து கடைசியில் அவனருகில் போய் கை பற்றிய சரவணனின் கையோடு குரலும் சேர்ந்து நடுங்கிற்று.

''என்ன காரியம் செய்துட்டடா, மடையா...?''

அவனை வெறுமையாய் நிமிர்ந்து பார்த்த நித்யா குரல் கரகரக்கச் சொன்னான்.

''இந்த நிலைமையில் வேறு என்ன செய்ய முடியும் சொல்லு....''

''முதல்ல உன்னை யாரு இந்தப் பட்டிமன்றத்துக்கு ஒப்புக்கச் சொன்னது?''

''இதெல்லாம் வரும். இந்த மாதிரி முடியும்னு யாருக்குத் தெரியும்? யார் எதிர்பார்த்தாங்க இதையெல்லாம்...''

''சரி. அந்தக் கிழவன்தான் ஏதோ ஒரு வேகத்துல சவால் விடறான் என்றால் உடனே நீயும் பதிலுக்கு சத்தியம் செய்து கொடுக்கணுமா...?''

''வேற வழி...நானே சொல்லிட்டு நானே பின்வாங்க முடியுமா?



''நீ செய்த வேலை எப்படி இருக்கு. தெரியுமாடா...? யாரோ ஒருத்தன் சாம்பல் வேணும்னு சித்திரத்தை எரித்தானாம், அந்தக் கதையாக இருக்கு...''

''நான் சித்திரத்தை மட்டும் எரிக்கலை சரவணா. என் ஆத்மாவையுங்கூட சேர்த்து எரிச்சுட்டேன்...'' என்ற நித்யாவின் குரல் தழுதழுத்தது.

''புல்ஷிட்! இந்த மாதிரி சத்தியத்தையெல்லாம் காப்பாத்தணும் என்கிற அவசியமில்லை.''

''நோ. காப்பாத்தியே ஆகணும். இத்தனை பேர் முன்னால், தமிழறிந்த புலவர்கள் முன்னால் செய்து கொடுத்த சத்தியம். அதை ஒரு போதும் என்னால் மீற முடியாது.''

''அப்போ...என்ன செய்யறதாக உத்தேசம்...?''

''விவகாரத்தான ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறதாக தான் உத்தேசம்.''

''அப்படியானால் தாமினி...!'' என்று கேட்க நினைத்து நுனி நாக்கு வரை வந்துவிட்ட வார்த்தைகளை அடக்கிக் கொண்டான் சரவணன். தற்போது தாமினி விஷயத்தில் அவன் மனது வேறு விதமாக வேலை செய்ய ஆரம்பித்தது.

ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தை விட்டு நடந்து வெளியில் வந்து பக்கத்து கார் நிறுத்தும் இடத்திற்குப் போய் காரில் ஏறி காரைக் கிளப்பிய சரவணனைப் பார்த்து குரல் கரகரக்க லேசாகக் கண்கலங்கச் சொன்னான் நித்யா.

''இன்னிக்கு என் பிறந்த நாள் எப்படி முடிஞ்சிருக்கு பார்த்தியா...?''

சரவணனிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை. ஒரு ஆழமான பெருமூச்சு மட்டுமே வெளிவந்தது.

## 5

ஒரு ஆட்டோ பிடித்து வீட்டிற்கு வந்த தாமினி குளிக்கிற சாக்கில் குளியல் அறைக்குள் நுழைந்து கதவு மூடித் தாழிட்டுக் கொண்டாள். வாளியில் நீர் விழுகிற சத்தத்தில் வாய் விட்டுக் கதற ஆரம்பித்தாள்.

"என்ன செய்துட்டீங்க நித்யா...? அந்த மாதிரி ஒரு சத்தியம் செய்து தர உங்க மனசு எப்படித் துணிஞ்சது... நித்யா...?"

தனக்குத்தானே ஏதேதோ சொல்லி குமுறிக் குமுறி அழத் துவங்கினாள்.

"இன்னிக்குக் காலையில் கறுப்பு டிரஸ் போட்டுக்கற போதே நினைச்சேன்... உங்க பிறந்த நாளும் அதுவுமா கறுப்பில் போகவாமான்னு தோணித்து... அதே மாதிரி வருத்தமாகவும் இல்ல இந்த நாள் முடிஞ்சுப் போச்சு... என்னையும் எதிர்ல வச்சுகிட்டு அப்படிச் சொல்ல உங்களுக்கு எப்படி மனசு வந்தது....? வேணாம் நித்யா...! உங்க சத்தியத்தை வாபஸ் வாங்கிடுங்க. நீங்க இல்லாமல் என்னால இருக்க முடியாது. அப்படி ஒரு வாழ்க்கையை நினைச்சுகூட பார்க்க முடியலை நித்யா...ப்ளீஸ் ப்ளீஸ், எனக்கு பதில் சொல்லுங்க..."

உள்ளுக்குள் குமைந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த போது குளியலறைக் கதவைத் தட்டினாள் அம்மா.

"என்னடீ இந்த நேரத்துக்குக் குளிக்கிற. அப்பா வந்துட்டார். பாத்ரூம் காலி இல்லேன்னால் சத்தம் போடுவார். சீக்கிரம் வெளில வாடி..."

பரபரவென்று வாளித் தண்ணீரை அப்படியே உடலில் கவிழ்த்துக் கொண்டாள். அழுதது தெரியாமல் முகம் துடைத்து, நைட் கவுன் போட்டுக் கொண்டாள். தன்னை சாதாரணமாக்கிக் கொள்ள முயன்றவாறு வெளியில்



வந்தாள். நேராகத் தன் அறைக்குப் போய் உட்கார்ந்து படிக்கிற மாதிரி பாவனை செய்தாள்.

ஆனாலும் சாப்பிட வந்தபோது அவளது முகத்தை யும், கண்களையும் பார்த்த அம்மா ரகசியமாகக் கேட்டாள்.

"என்னடீ ஆச்சு...ஏன் என்னவோ மாதிரி இருக்க...?"

"ஒண்ணுமில்லேம்மா..." என்று சொல்லி மழுப்பி னாள். பின்னர் எல்லோரும் தூங்குகிறவரை இதயம் துடிக்கக் காத்திருந்தாள். மணி பதினொன்றானதும் மெல்ல எழுந்து முன் அறைக்கு வந்தாள். எல்லோரும் தூங்குவதை நிச்சயப்படுத்திக் கொண்டபின் சத்தப்படுத் தாமல் தொலைபேசியின் ரிஸீவரை எடுத்து நித்யாவின் எண்களைச் சுழற்றினாள்.

அந்த நேரத்தில் தொலைபேசி அழைத்தால் அது தாமினியாகத்தான் இருக்கும் என்பது நித்யாவிற்கும் தெரியும். என்ன சொல்லி அவளை சமாதானப்படுத்த இயலும் என்பது புரியாமல் இருந்தான். நீண்ட நேரம் மணியடித்து ஓய்ந்து ஒரு வினாடிக்கெல்லாம் மீண்டும் அடிக்க ஆரம்பித்தது. அதற்கு மேலும் பேசாதிருக்க முடியாமல் தொலைபேசியை எடுத்தான்.

"ஹலோ..."

"நான் தான் பேசறேன்..." அவள் குரலில் அழுகை முட்டிக் கொண்டு வருவதை அவனால் உணர முடிந்தது. அவனுக்கும் அழுகை வரும் போலிருந்தது. ஒரு ஆண் அழக்கூடாதென்ற பிடிவாதத்தில் கீழ் உதட்டைக் கடித்து தன்னை அடக்கிக் கொண்டு "சொல்லு மினி..." என்றான். அவன் குரல் அவனுக்கே என்னவோ போல் கேட்டது.

"நான்தான்னால் யாருன்னு இன்னிக்குக் கேட் கலையா...?"

அவன் பேசாதிருந்தான்.

''ஏன் பேச மாட்டேன்றீங்க...? நீங்க செய்தது சரியா...?''

அதற்கும் அவனிடமிருந்து பதில் வராததால் விசும்பிக் கொண்டே கேட்டாள் அவள்.

''நீங்க செய்து கொடுத்த சத்தியம் நிஜமான சத்தியமா நித்யா?''

''பொய்யாகக் கூடச் சத்தியம் செய்ய முடியுமா மினி...?''

''சரி. சத்தியம் பண்ணிக் கொடுத்தது நிஜம்னே வச்சுக் கோங்க. ஆனால் அதைக் காப்பாத்தணும் என்கிற அவசியமில்லையே நித்யா...?''

சத்தியங்களே காப்பாற்றப்படுவதற்குத்தான் மினி...''

மேலும் விம்மினாள் அவள். நீண்ட நெடும் தேவல் தெறிக்கக் கேட்டாள்.

''உங்க மனசுக்குள் என்ன நினைச்சுண்டிருக்கீங்க...? அரிச்சந்திரன்ற நினைப்பா உங்களுக்கு?''

''............''

''அரிச்சந்திரன் சந்திரமதியைக் கைவிட்ட மாதிரி நீங்களும் என்னைக் கைவிட்டுடப் போறீங்களா...?''

''..............''

''பேசுங்க நித்யா. தயவு செய்து பேசுங்க. வாயைத் திறந்து பதில் சொல்லுங்க, ப்ளீஸ்... உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்....''

''என்ன சொல்லணும் மினி...?''

''என்னைப் பற்றி கொஞ்சமாவது நினைச்சுப் பார்த் தீங்களா நித்யா...?''

''அந்த நேரத்துல யாரைப் பற்றி என்னால் நினைச்சுப் பார்க்க முடியும்...? நீயே சொல்லு மினி...?''



''இல்ல நித்யா...அந்தக் குமரகுருபரன் சொன்ன மாதிரி உங்களுக்கு உங்க ஈகோதான் பெரிய விஷயமாக இருந்திருக்கு....''

''நீ இப்போ என்ன சொன்னாலும் நான் கேட்டுக்கத் தயாராக இருக்கேன் மினி...''

''என்னால் நீங்க தப்பு செய்திட்டீங்க நித்யா...''

''இல்லை மினி. நான் ஒரு தப்பும் செய்யலை.''

''முதல்ல அங்கு போய் பேச ஒப்புக்கிட்டதே தப்பு...''

''இப்படியெல்லாம் நடக்கும்னு நான் சத்தியமா எதிர் பார்க்கலை மினி.''

''சரி. எதிர்பார்க்காதது நடந்துடுத்து. குமரகுருபரன் உங்களை எக்கச்சக்கமா மாட்டி விட்டுட்டார்னே வச்சுக் கோங்க. மற்றவங்க மாதிரி நீங்களும் பேசாமல் இருக்க வேண்டியதுதானே...? எதுக்காக ஆவேசப்பட்டு அப்படி ஒரு சத்தியத்தைப் பண்ணணும்...?''

''என்ன மினி சொல்ற...?'' கொஞ்சம் அமைதியா ஆத்திரப்படாம நிதானமாக யோசிச்சுப் பாரு. நான் தான் விவாகரத்தான பெண்களுக்கு வாழ்வு கொடுக் கணும்னு அழுத்தம் திருத்தமாக ஆணித்தரமாகச் சொன் னேன். சொன்ன மாதிரி உங்களால் செய்து காட்ட முடியுமா அல்லது வெறும் மேடைப் பேச்சோடு சரிதானா என்று நூற்றுக்கணக்கானவர் நிறைந்த சபையில் எதிர் கட்சிப் பேச்சாளர் கேட்கிறார் என்றால் முடியாதுன்னு தலை குனியவா சொல்ற...?''

''அப்படிச் சொல்லலை நித்யா...? அந்த போட்டிக்குள் நீங்க நுழைஞ்சிருக்கவே கூடாது.''

''நானாக நுழையலையே மினி... அரிச்சந்திரனை இழுத்த விதி, பஞ்சபாண்டவர்களை சூதாட வைத்த விதி என்னை இன்று பட்டிமன்றத்தில் பேச வைத்து விட்டது.''

''நீங்க சொல்ற மாதிரி எல்லாம் விதின்னு வச்சுக்கோங்க. இப்போ என் கதி என்ன...?''

அவன் அதற்கு பதில் சொல்லவில்லை.

''சொல்லுங்க நித்யா...எனக்கு என்ன வழி...?''

''இதற்கு பதில் சொல்கிற நிலைமையில் நானில்லை மினி...''

''அப்படிச் சொன்னால் எப்படி நித்யா...? என்னை என்ன செய்யச் சொல்றீங்க?''

''என்னை மன்னிச்சு மறந்துடச் சொல்றேன் மினி.''

''நித்யா...'' என்று குமுறினாள் அவள்.

''அது அத்தனை சுலபமான விஷயமா...? என்னால் முடியும்னு நினைக்கிறீர்களா...?''

''முடியணும் மினி. முடிஞ்சே ஆகணும். வேற வழி இல்லை.''

''எப்படி இவ்வளவு கல் நெஞ்சாகப் பேசறீங்க நித்யா...?''

''கல் நெஞ்சு இல்லை மினி. உன்னால் என் மனசைத் திறந்து பார்க்க முடிந்தால் அப்படிப் பேச மாட்டே. அனுமார் மாதிரி காட்டவும் என்னால் முடியாது. முடியும் னால் உள்ளே எரிமலை குமுறுகிற மாதிரி குமுறிக்கிட்டு இருக்கிறது தெரியும்...நீ அழுது வடிகால் தேடறே. என்னால் அதுவும் கூட முடியாது...''

''இப்படியெல்லாம் சொல்லி என்னை சமாதானப் படுத்திட முடியும்னா நினைக்கிறீங்க...?''

''முடியாதுதான். அத்தனை சுலபமாக சமாதானமாகக் கூடிய விஷயமில்லை இது... ஆனால் என்னால் என்ன பண்ண முடியும சொல்லு மினி...? தயவுசெய்து என் மீது கொஞ்சம் இரக்கம் காட்டு மினி...? உன்னை என் இடத்தில் நிறுத்திப் பார்த்துப் பேசு...ப்ளீஸ் உன்னைக் கெஞ்சி கேட்டுக்கறேன்...''



''நித்யா...?''

''உன் மனநிலை எனக்குப் புரியற மாதிரி என்னையும் புரிஞ்சுக்கணும் மினி...''

''என்ன செய்யணும்னு சொல்ல வரீங்க?''

''நமக்கு மட்டுமில்லை மினி. உலகத்தில் எத்தனையோ காதலர்களுக்கு எத்தனையோ விதமான சோகமான பிரிவெல்லாம் ஏற்பட்டிருக்கு. அம்பிகாபதி அமராவதி. ரோமியோ ஜூலியட். லைலா மஜ்னு இவங்களுக்கெல்லாம் ஏற்படாததா மினி...?''

''நித்யா...கடைசியாக நீங்க என்ன சொல்ல முன் வரீங்க...உங்க சத்தியத்தை உங்களால் கைவிட முடியாதா...?''

''எப்படி மினி முடியும்? அப்புறம் என்னால் தலை நிமிர்ந்து நடக்க முடியுமா...? என் ஸ்டூடண்ட்ஸை என்னால் பார்க்க முடியுமா?''

''வேணாம். யாரையும் நாம் பார்க்க வேணாம். இந்த ஊரை விட்டே போயிடலாம்.''

''மி...னி...!'' என்று பதறினான் அவன்.

''ஆமாம் நித்யா. நீங்க இல்லாமல் என்னால் இருக்க முடியாது நித்யா. நீங்களும், நானும் டெல்லி, பம்பாய், கல்கத்தான்னு எங்கேயாவது போய் வாழலாம் நித்யா...''

''இல்லை, மினி. ஐயம் ஸாரி. மனுஷங்களை விட்டுப் போயிடலாம். ஆனால் மனசை எங்கே விட்டுப் போக முடியும்...? அது நம்கூடத்தானே வரும்...?''

''நீங்க சொல்றது எனக்குப் புரியலை.''

''சத்தியம்ன்றது மனுஷங்களுக்கு செய்யறதில்லை மினி. மனசுக்குச் செய்யறது. மனசுக்கு நாமும, நமக்கு மனசும் காவலாக நிற்கச் செய்றக்கிறது.''

''அதே மனசுலதானே நானும் நின்னுண்டிருக்கேன்.''

''இப்போ மட்டுமில்லை. என் மனசைப் பொருத்த வரை எப்பவும் நீதான் இருப்ப மினி. நீ மட்டும்தான் இருப்ப...''

''அப்படின்னால்...''

''புரிஞ்சுக்க மினி. அதுக்கு மேல் விவரிச்சு சொல்கிற சக்தி என்கிட்ட இல்லை.''

''அப்படின்னால்...நம் கல்யாணம் நடக்காதுன்னு சொல்றீங்களா...?''

''......''

''சொல்லுங்க நித்யா...நம் கல்யாணம் நடக்காதா....?''

''நடக்காது மினி.''

''நித்யா...''

''ப்ளீஸ். என்னை மறந்துடு மினி. வேற யாரையாவது கல்யாணம் பண்ணிண்டு சந்தோஷமாக இரு...''

''நித்தி...''

''இதுக்கு மேலும் இதைப் பற்றி பேசி மனசை ரணப் படுத்திக்க வேண்டாம். குத்திப் புண்ணாக்கிக்க வேண்டாம். இனிமேல் நீ என்னைத் தனியாக சந்திக்க வராதே. ஸ்டாஃப் ரூம் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காதே. இனி நான் உனக்கு வெறும் புரொபஸர் மட்டும்தான். மற்ற எல்லா ஸ்டுடண்ட்ஸுக்கும் எப்படியோ அப்படித் தான்...''

''முடியுமா உங்களால்....என்னைப் பார்க்காமல், பேசாமல் இருக்க முடியுமா?''

''முடியுமான்ற கேள்வி இல்லை மினி. முடியணும் என்கிற விடை மட்டும்தான் இப்போ நம்மகிட்ட இருக்கு.''



''டெலிபோன்லயாவது பேசலாமா...இல்லை, அதுவும் கூடாதா...?'' குழந்தையாக விசும்பினாள் அவள்.

''வேண்டாம் மினி ப்ளீஸ். தயவு செய்து வேண்டாம். முற்றுப் புள்ளி வைக்கப்பட்ட விஷயத்தைத் தொடருவதில் அர்த்தமில்லை. இதனால் மனசு இன்னும் சங்கடப்படுமே தவிர சுகப்படப் போவதில்லை. மேலும் மேலும் ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் கஷ்டப்படுத்திட்டிருக்கக் கூடாது. உனக்குன்னு புதுசா ஒரு நல்ல வாழ்க்கை இருக்கு என்கிறபோது அதில் தலையிட்டு கலைக்க நான் விருப்பப்படலே. அதனால் லெட் மீ ஸே குட் நைட் அண்ட் குட் பை டு யு...''

டக் என்று தொலைபேசி ரிஸீவரை வைத்தான் அவன். அதில் அதிர்ந்து போனாள் அவள். அவனது பேச்சையும், செய்கையையும் சிறிதும் எதிர்பார்க்காததால் ஏற்பட்ட ஆத்திரத்திலும், கோபத்திலும் மறுபடியும் அவன் எண்களைச் சுழற்றினாள். எங்கேஜ்ட் சத்தம் வந்தது. விடாமல் மீண்டும் மீண்டும் பலவி அதே எங்கேஜ்ட் சத்தம் வர அவன் ரிஸீவரை எடுத்து கீழே போட்டு விட்டான் என்பதில் புரிந்ததில் இன்னமும் உடைந்து போனாள்.

'இப்படியா...? இப்படிக் கூடவா...? எப்படி முடிகிறது நித்யா உங்களால்...? என்னால் முடியலையே... எப்போதும் முடியாது போலிருக்கே...'

தனக்குள் புலம்பி தலையணையில் முகம் புதைத்துக் கொண்டு மீண்டும் அழ ஆரம்பித்தாள் அவள்...

## 6

ராத்திரி முழுதும் தூக்கம் வராமல் புரண்டு படுத்தான் நித்யா. மனது ஒரு நிலையில் நிற்காமல் தவிப்பதை உணர்ந்தான். தொலைபேசியில் தாமினியிடம் பேசிய போது இருந்த தைரியமும், வீம்பும், பிடிவாதமும் அப்புறம்

இல்லை. உடனே ஓடிப்போய் அவனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. 'மினி என்னால் முடியாது மினி. நீயில்லாத என் வாழ்க்கையை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. வா. நீ சொன்ன மாதிரி எங்கேயாவது ஓடிப்போய் விடலாம்...' என்று அவள் கையைப் பற்றி அழைத்துக்கொண்டு வந்துவிட வேண்டும் போலிருந்தது.

'என்னை மறக்கச் சொல்லி உன்னிடம் சொன்னேனே... என்னால் உன்னை மறக்கவே முடியாது போலிருக்கிறதே... உன்னை மறப்பது சாத்தியமே இல்லாததாகத் தெரிகிறதே...நெஞ்சோடு நெஞ்சாகக் கலந்து, உயிரோடு உயிராக ஒன்றி விட்டவளை மறப்பதா...? மறத்தல் என்பதற்கு அர்த்தம் இருக்கிறதா...நான்தான் நீ—நீதான் நான் என்று ஒன்றாக இணைந்தபின் என்னிலிருந்து உன்னைத் தனியாகப் பிரித்தெடுப்பது எப்படி...? மறப்பது எப்படி...? வேண்டுமானால் உன்னை விட்டு விலகி நிற்கலாம். அதுகூட முடியும் என்று இப்போது தோன்றவில்லையே—இயலாது போலிருக்கிறதே...என்ன செய்யப் போகிறேன் நான்...? ஏன் வந்தது நேற்றைய மாலை. ஒரு மாலைப் பொழுதின் மூன்று மணி நேரம் தன் வாழ்நாளின் மற்றைய பொழுதுகளை சூனியமாக்கும் என்று நினைக்கவில்லையே—நெஞ்சு ரணமாகி ரத்தம் வடிகிறதே...கடவுளே...நான் இப்போது என்ன செய்வேன்...? என்ன செய்ய முடியும் என்னால்...? ஏன் இந்தப் பட்டிமன்றத்தில் பேச ஒப்புக் கொண்டேன். இதைத்தான் விதி என்பதா...?'

விதி தன் வாழ்க்கையில் புரொபசர் சோமுவின் உருவத்தில் புகுந்துவிட்டதை உணர்ந்தான். அமைதியாய், சலனமற்றிருந்த குளத்தில் கல்லெறிந்து கலக்கி வேடிக்கை பார்ப்பதை அறிந்தான். கலங்கல் தெளிவாகி மீண்டும் மனதிற்கு அமைதி ஏற்படுகிறவரை கல்லூரிக்குப் போகாமல் விடுமுறை கோர நினைத்தான். அதற்கு முன் சரவணனைப் பார்த்து எல்லாம் சொல்லிவிட ஆசைப்பட்டான்.



அதற்காகக் காலை வரை காத்திருக்காமல் அப்போதே சரவணனிடம் பேசினால் என்ன என்று தோன்றியது. எழுந்து விளக்கைப் போட்டு தொலைபேசியைப் பார்த்த போது ரிஸீவரை தூக்கிக் கீழே போட்டிருப்பது தெரிந்தது.

'பாவம் மினி எத்தனைதரம் போன் பண்ணி பேச முயற்சி செய்தாளோ...' என்று தோன்றியது.

முதலில் அவளிடம் பேசத் தூண்டிய மனதை அடக்கிக் கொண்டு சரவணனைக் கூப்பிட்டான். நடுராத்திரியில் எதிர்பக்கம் அடித்த டெலிபோன் மணி அதிக சத்தத்தோடு பூதாகாரமாக ஒலிப்பதாகப் பட்டதும் ரிஸீவரை வைத்து விடலாமா என்று நினைத்தான். ஆனால் அதைச் செயலாக்குவதற்கு முன்பே சரவணனின் தூக்கம் கலந்த குரல் கேட்டது.

''ஹலோ...?''

''சரவணா... நான்தான்.''

''நித்யாவா...! என்னடா...?'' —பதறிப் போனான்.

''ஒண்ணுமில்லே...தூங்கிட்டியாடா...?''

''இது என்னடா கேள்வி...? ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு என்ன செய்வாங்க?''

''ஸாரிடா... எழுப்பிட்டேனா...?''

''பரவாயில்லை, சொல்லு.''

''எனக்கு மனசு சரியில்லைடா...''

''பேசாமல் படுத்துத் தூங்குடா. காலையில் கொஞ்சம் தெளிவடையும்.''

''என்னால் தூங்க முடியலைடா...''

''என்ன... செய்யணும் சொல்லு?''

''அந்தப் பட்டிமன்றத்துல நான் கலந்துண்டிருக்கக் கூடாதோன்னு தோணுது.''

''கலந்துண்டாச்சு. எல்லாம் முடிஞ்சு போயாச்சு. இப்போ என்ன செய்ய முடியும்?''

''எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கேனேன்னு தான் வருத்தப்படறேன்.''

''ஏண்டா எதுவும் செய்ய முடியாத நிலைன்னு சொல்ற...?''

''என்ன செய்ய முடியும்னு நினைக்கிற...?''

''பேசாமல் இந்தப் பட்டிமன்றம், ஆவேசப்பட்டு செய்த சத்தியம் எல்லாத்தையும் அடியோடு மறந்து போயிடு.''

''அது எப்படிடா முடியும்?''

''ஏண்டா முடியாது. தேர்தலுக்கு முன்னால் எத்தனைத் தலைவர்கள் தங்கள் தொகுதிகளுக்குப் போய் எத்தனை வாக்குறுதிகளை அள்ளி வீசறாங்க. தேர்தலில் ஜெயிச்சு வந்தப்புறம் அதுல ஒன்னையாவது ஞாபகம் வச்சுக்கறாங்களா?''

''நான் அரசியல்வாதி இல்லையேடா...''

''அரசியல்வாதி இல்லாத மாதிரி அரிச்சந்திரனாகவும் இருக்க முடியாதுடா...'' அதையே தாமினியும் சொன்னது நினைவிற்கு வந்தது.

''என்னடா பேசாமல் இருக்க...?''

''நான் அங்கே வரலாம்னு இருக்கேன்.''

''வாடா... இதுக்கு ஏண்டா போன் பண்ணனும்? நேராக வரவேண்டியது தானே...? நான் கார் எடுத்துண்டு வரட்டுமா...?''

''ம்ஹூம், வேணாம்டா... காலைல வரேன்.''

''அதைச் சொல்லவா இப்போ கூப்பிட்ட?''



''ஸாரிடா. மனசு ரொம்பக் குழம்பிக் கிடந்ததில் உன் கிட்டே பேசலாம்னு தோணித்து...''

''ஓ.கே...நான் உன் ரூமுக்கு வரட்டுமா? இப்பவே பேசலாமா...?''

''இல்லை. காலையில் நானே வரேன்.'' இப்போ படுத்துத் தூங்கு.''

''நீயும் சும்மா மனசைப் போட்டு அலட்டிக்காமல் தூங்கற வழியைப் பாரு. என்ன...?''

''சரிடா...''

''குட்நைட்.''

''குட்நைட்.''

நித்யாவிடம் பேசிய பின்னர் சரவணனின் தூக்கம் முற்றிலுமாகக் கலைந்து போயிற்று. எழுந்து விளக்கைப் போட்டு தன் அறை மூலையில் தனக்கென்று தனியாக வாங்கி வைத்திருந்த சின்ன குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து தண்ணீர் குடித்தான். மீண்டும் வந்து கட்டிலில் சரிந்தபோது தாமினி ஞாபகத்திற்கு வந்தாள். நேற்று காலையில் அவளிடம் கெஞ்சியதும் 'ஐ லவ் யு மினி' சொன்னதும், 'பட், ஐ டோண்ட்' என்று அவள் சட்டென்று மறுத்ததும், நித்யாவைக் காதலிப்பதாகச் சொன்னதும், நேற்று மாலை பட்டிமன்றத்தில் நித்யா சபதம் செய்ததும், கண்ணீர் விட்டவாறு ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தை விட்டு எழுந்து அவள் வெளியில் ஓடியதும், இப்போது தொலைபேசியில் நித்யா புலம்புவதும்...

ஒரு வேளை நித்யாவும் அவளைக் காதலிக்கிறானோ...? தன்னை மாதிரியே அவளுக்காக உருகித் தவிக்கிறானோ...? அதனால்தான் நேற்று சபையில் செய்து கொடுத்த சத்தியம் அவனை பாதிக்கிறதோ. .? இத்தனை தூரம் அவஸ்தை

படுத்துகிறதோ...? ராத்திரி பனிரெண்டு மணிக்குக் கூப்பிட்டுப் புலம்ப வைக்கிறதோ...?

ஆனால் நித்யா தன்னிடம் சொல்லவில்லையே... தாமினியின் பேச்சைக் கூட எடுக்கவில்லையே.... எதுவானா லும் சொல்லி விடுவானே...? என்னிடம் சொல்லாமல் அவனால் இருக்க முடியாதே...?

சட்டென்று அவனுக்குத் தானும் தாமினி விஷயத்தை அவனிடம் சொல்லவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது. எதுவானாலும் முதலில் அவனிடம் சொல்பவன்தானே நானும்...? இதை மட்டும் ஏன் சொல்லவில்லை...? எந்த நிமிடத்தில் தாமினியைக் காதலிப்பதாக உணர்ந்தேனோ அதற்கு மறு நிமிடமே போய் சொல்லியிருக்க வேண் டாமா...? அதுதானே ஆத்மார்த்த சினேகிதத்திற்கு அத்யந்த சினேகிதத்திற்கு அடையாளம். அப்படித்தானே இரண்டு பேருமே இருந்தோம்...? ஒரு வருடமா இரண்டு வருடங்களா...? கிட்டத்தட்ட ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது ஆரம்பித்த சினேகம். பக்கத்து பெஞ்சில் தொடங்கிய நட்பு.

"நித்யா நான் உன் வீடு தாண்டிதானே என் வீட்டுக்குப் போகணும்...? வாடா... கார்ல இறக்கி விட்டுடறேன்..." எனத் துவங்கிய தோழமை...

அதன் பின் இறுகி, உயிருக்கு உயிராகி, அவனது அம்மா அப்பா இரண்டு பேரும் திருப்பதி செல்கிற வழியில் பஸ் விபத்து ஒன்றில் காலமானதும், பதினான்கு வயதுப் பையனாக, உறவினர் என்று யாருமின்றி அழுதுகொண் டிருந்தவனைத் தன் பெற்றோர் துணையுடன் போய் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்தானே...

அன்றிலிருந்து பின்னிப் பிணைந்து ஒருவராக இணைந்து விட்ட ஒற்றுமை...அப்படிப்பட்ட உயிர் நட்பு கூட இந்தக் காதல் என்கிற உணர்வு நுழைகிறபோது எப்படி மாறத் துவங்குகிறது...! நட்புக்கு இலக்கணம் வகுத்த கர்ணன்



துரியோதனன் மாதிரி இருந்தவர்கள் நாங்கள். ஆனால் காதல் வயப்பட ஆரம்பித்ததும் மெல்ல மெல்ல எப்படி மாறத் தொடங்கி விட்டோம்...? ரகசியமே இல்லை என்றிருந்தவர்களுக்கிடையில் இப்போது திரை மாதிரி தாமினியிடம் கொண்ட அபிமானம் விழுந்து விட்டதே... 'பயிர் ஊடாடா நட்பில் பொருள் ஊடாடக் கெடும்' என்பார்கள். எனக்கும் நித்யாவிற்குமிடையில் பொருள் ஊடாடவில்லை. பொருளும் 'ஊடாடா நட்பில் காதல் ஊடாடக் கெடும்' என்பது தான் சரி. இந்த உலகத்தில் பணத்திற்கு எத்தனை வலிமை உண்டோ, பொருளுக்கு எத்தனை வலிமை உண்டோ, பதவிக்கு எத்தனை வலிமை உண்டோ அதே வலிமை காதலுக்கும் உண்டு. பணம், பதவி, பொருள் எல்லாவற்றையும் விட்டுக் கொடுப்பவர்கள் கூட காதலை விட்டுக் கொடுக்கத் துணியமாட்டார்கள். காதலுக்கு அத்தனை சக்தி உண்டு, இடம் உண்டு, பலம் உண்டு மகிமை உண்டு நூறு யானைகளின் பலம் கொண்டது காதல், எதையும் செய்யத் தூண்டுவது காதல், துணிய வைப்பது காதல், பெண் என்பவளுக்கு இத்தனை சக்தியா...? ஒரு மனிதனுக்கு அசுரபலம், தேவ பலம் இரண்டையும் தருபவள் அவள்தானா..? அதனால்தான் அவளை சக்தியின் வடிவம் என்கிறார்களோ...? பராசக்தி, என்றெல்லாம் சொல்கிறார்களோ...?

அதெல்லாம் இருக்கட்டும். நான் இப்போது என்ன செய்யப் போகிறேன்...? என் காதலை இழக்கப் போகி றேனா அல்லது...நிறைவேற்றிக்கொள்ளப் போகிறேனா...?

"மடையா..." என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டான் அவன்.

"உன்னுடையது காதலாடா...? நிஜமாகவே காதல் தானா என்பதை யோசித்துப் பார். காதல் என்பது மனங்கள் ஒருமிப்பது, சங்கமிப்பது ஒருவருக்காக மற்றவர் உருகுவது, தவிப்பது. ஏங்குவது...துடிப்பது. நீ துடித்து, நீ ஏங்கி, நீ தவித்து, நீ மட்டுமே உருகுவது காதலாகி

விடுமா...? அவள் தவிக்க வேண்டாமா? அவள் உருக வேண்டாமா? அவள் நடுக்க வேண்டாமா...?

அவன்தான் சொல்லி விட்டானே... பளீரென்று முகத்தில் அறைகிற மாதிரி தெரிவித்து விட்டானே...

''ஐ லவ் யு மினி...''

''பட், ஐ டோண்ட், நான் உங்களைக் காதலிக்கலை. வேறு யாரையும் என்னால் காதலிக்க முடியாது. பிகாஸ் ஐயம், ஆல்ரெடி இன் லவ் வித் ஸம்படி...''

''யு மீன் நித்யா...?''

''எஸ். யு ஆர் ரைட்.''

ஒளிவு மறைவின்றி, எந்தவிதத் தயக்கமும் இன்றி அவன்தான் வெளிப்படையாக, நேர்முகமாகச் சொல்லி விட்டானே...நித்யாவும் அவனைக் காதலிக்காத பட்சத்தில் அவ்வளவு அழுத்தமாகவும் ஆழமாகவும் சொல்லியிருக்க மாட்டானே...நித்யா தவிக்கிற தவிப்பையும், உருகுகிற உருக்கத்தையும் பார்த்தால் அவளை அவன் காதலிக்கிற ஆழம் தெரிகிறதே... ஆனால் நேற்றைய நிகழ்ச்சிக்குப் பின் அவன் செய்து கொடுத்த சத்தியத்திற்குப் பின் அவனால் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாதே...என்ன செய்யப் போகிறான்...?

ஒன்று அவன் தன் சத்தியத்தைக் கைவிட வேண்டும். அல்லது அவளைக் கைவிட வேண்டும். இவை இரண்டில் எது செய்யப் போகிறான்...?

நித்யாவை அவனுக்குத் தெரியும். அவனால் சத்தியத்தைக் கைவிட முடியாது. தனியாய், மறைவாக ஒரு வாக்கு கொடுத்தாலே அதை நிறைவேற்றுகிறவரை தூங்க மாட்டான்.

''என்னடா இது...இத்தனை சின்ன விஷயத்துக்குப் போய் இப்படி அலட்டிக்கிற...? என்று இவனை கேட்டாலே மறுப்பான்.



''இல்லடா...வாக்கு கொடுக்கக் கூடாது. கொடுத்தால் காப்பாத்தணும்டா...'' என்பான்.

அப்படிப்பட்டவன் அவ்வளவு பெரிய சபையில் செய்து கொடுத்த சத்தியத்தை அலட்சியப்படுத்த மாட்டான்.

''அப்படியானால்... அப்படியானால்... தாமினியை அவன் கல்யாணம் செய்துக் கொள்ளப் போவதில்லை. அவனால் அது முடியாது...

''முடியாது என்கிற பட்சத்தில் நான் என்ன செய்யப் போகிறேன்...? எவ்வாறு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போகிறேன்...? தீர்வு காண முடியுமா முடியாதா...?''

சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்டு யோசித்தான். மிக ஆழமாய் தீவிரமாய் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தான் அவன்.

தாமினியைக் கல்யாணம் செய்து கொண்டால் என்ன...? நித்யா இல்லை என்றாலபின் அவள் வேறு யாரையோ கல்யாணம் செய்து கொள்ளத்தான் போகிறாள். செய்து கொண்டுதான் ஆகவேண்டும். மாட்டேன் என்றாலும் அவள் வீட்டில் விட மாட்டார்கள். அப்படி இருக்கிறபோது அந்த வேறு யாரோ ஒருவன் ஏன் நானாக இருக்கக்கூடாது...? அவளையும் நித்யாவையும் புரிந்து கொண்டிருக்கிற என்னைத் தவிர வேறு யார் இதற்குப் பொருத்தமானவன்...? வேறு யாரால் இதற்குத் தீர்வு காண முடியும்?''

ஆகவே காலையில் எழுந்ததும் முதல் வேலையாக அம்மா, அப்பாவைக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டும். உடனடியாக தாமினி வீட்டிற்குப் பெண் கேட்டு போகச் செய்ய வேண்டும். எப்படியாவது தாமினியின் பெற்றோரை சம்மதிக்க வைக்க வேண்டும். சீக்கிரமே கல்யாணத்தை நடத்திக் கொள்ள வேண்டும்...''

மிகத் தீர்க்கமான அந்த முடிவிற்கு வந்தபின் சிகரெட்டை அணைத்துத் தூக்கிப் போட்டுவிட்டு எந்தவித சலனமும் இல்லாமல் தூங்கப் போனான் அவன்...

## 7

அன்று காலையில் சற்று சீக்கிரமாகவே எழுந்து விட்டான் சரவணன். பல்துலக்கி, சமையல்காரரிடம் காப்பி கொண்டு வரச் சொல்லிக் குடித்தான். அவசரமாகக் குளித்து அழகாகவே டிரஸ் பண்ணிக் கொண்டு கீழே இறங்கிப் போனான். பூஜை அறையில் பூ கட்டிக் கொண்டிருந்த அம்மாவின் எதிரில் போய் நின்றான்.

ஒரு நாளுமில்லாமல் பூஜை அறை வரை தன்னைத் தேடிக் கொண்டு வந்து நின்ற மகனைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனாள் அவள். பாசம் மிகுந்த குழைவான மெல்லிய குரலில் கேட்டாள்.

''என்னப்பா...?''

''அம்மா—நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்மா...'!

''சொல்லுப்பா...''

''இப்படி இங்க நின்னுகிட்டு பேசற விஷயமில்லேம்மா... உட்கார்ந்து பேசலாம்...''

சட்டென்று முகத்தில் பயம் கவ்வ அவனைப் பார்த்தாள் அந்த அம்மாள்.

''ஏம்பா—என்ன விஷயம்...?''

''நல்ல விஷயம்தாம்மா. உங்களைப் பொறுத்தவரை ரொம்ப நல்ல சந்தோஷமான விஷயம்.''

''நல்ல விஷயம்னால் இங்கே பூஜை ரூம்ல சாமி எதிர்லயே சொல்லேப்பா...''



''சரி. சொல்றேன்...'' என கால் விநாடி தயங்கினான்.

''ம்... சொல்லுப்பா... நல்ல விஷயம்ன்ற... சொல்ல என்ன தயக்கம்...?''

''நான் கல்யாணம் பண்ணிக்கிற முடிவிற்கு வந்திருக்கேம்மா. ரொம்ப நல்லப் பொண்ணா அழகான பொண்ணா பார்த்து வச்சிருக்கேன்...''

பளிச்சென்று புன்னகை ஓடிற்று அந்த அம்மாளின் முகத்தில். சொல்ல முடியாத சந்தோஷம் எட்டிப் பார்த்தது. சடாரென்று பூ கட்டுவதை நிறுத்தி விட்டு எழுந்து கொண்டாள். ஓடி வந்து அவனை அணைத்து கழுத்தை வளைத்துத்-தன் உயரத்திற்குக் குனியச் செய்து முன் நெற்றியில் முத்தமிட்டாள்.

''எத்தனை நல்ல செய்தி சொல்லி என் வயத்துல பால் வார்த்திருக்கப்பா...நெஞ்சு குளிர்ந்து போயிருக்கு. இரு உங்கப்பாவைக் கூப்பிடறேன்...'' என பூஜை அறையை விட்டு வெளியில் வந்தாள். ''என்னங்க...என்னங்க...?'' என்று படுக்கை அறையில் இருந்த தன் கணவனை உச்சக் குரலில் அழைத்தாள். 'என்னவோ...' என்கிற பயத்தில் வெளியில் வந்தவரின் அருகில் போய் உற்சாகத்துடன் சொன்னாள்.

''நம்ம சரவணன் கல்யாணம் செய்துக்க சம்மதிச்சுட்டாங்க. பொண்ணுகூட பார்த்துட்டானாம்...''

''அப்படியா...'' என்று அவரும் மகன் அருகில் வந்தார். தோளுக்கு மிஞ்சிய மகனின் கை பற்றி குலுக்கினார்.

''கன்கிராஜுலேஷன்ஸ் சரவணா...ரொம்ப ரொம்ப சந்தோஷப்பா....ஆமாம் பொண்ணு யாரு...?''

''எங்க காலேஜ்ல படிக்கிற பொண்ணு. முதல் வருஷம் விஷுவல் கம்யூனிகேஷன் படிக்கிறா. ரொம்ப அழகா, லட்சணமா, அடக்கமா இருப்பா...''

''அடடே...! நீயே இத்தனை சர்டிபிகேட் கொடுக்கறேன்னால் நிஜமாகவே நல்ல பொண்ணாகத்தான் இருக்கணும். ஆமாம், என்ன பேரு...?''

''தாமினி...''

''என்ன மினி...?''

''தா—மினி...''

''நம்ம ஜாதிக்காரங்களா...?''— சிவகாமியம்மாள் நடுவில் குறுக்கிட்டதும் முகம் களித்தார் பெரியவர்.

''ஆரம்பிச்சுட்டியா உன் ஜாதி விஸ்வாசத்தை...? இந்தக் காலத்துல யாரு சிவகாமி ஜாதி பார்த்துக்கிட்டிருக்காங்க...? நம்ம பையனுக்கு அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கா...ரெண்டு பேரும் மனசால் ஒத்துப் போவாங்களா. சந்தோஷமா குடும்பம் நடத்துவாங்களான்னு பாரு...நான் ஒத்துக்கறேன். அதை விட்டுட்டு...ஏன் வீணான விஷயமெல்லாம் கேட்கிறே...?''

பேசாமல் இருந்தாள் அந்த அம்மாள். சரவணன் தானே பேசத் தொடங்கினான்.

''அம்மா...தாமினி அய்யரு வீட்டுப் பொண்ணுன்னு நினைக்கிறேன். நம்மை மாதிரி வசதியானவங்க இல்லை. எதுவும் செய்ய மாட்டாங்க. நாம்தான் கன்னிகாதானம் செய்துகிட்டு வரணும்...''

''அதுக்கென்னப்பா...ஜாம் ஜாம்னு செய்துக்கலாம். நமக்கு இருக்கிறதே ரெண்டு தலைமுறைக்கு வரும். இதுக்கு மேல் வேற செய்யணுமா...? ஆமாம். எப்போ பொண்ணு பார்க்கப் போகலாம்...?''

''நாளைக்கே...முடிந்தால் பத்து நாளுக்குள் கல்யாணமும் நடந்தாகணும்மா...''



''என்னப்பா அப்படி ஒரு அவசரம்...?'' சந்தேகத்தோடு ஏறிட்டாள் அந்த அம்மாள்.

''அப்படி சந்தேகமாகவெல்லாம் பார்க்காதே. நீ நினைக்கிற மாதிரி எதுவும் நடக்கலைம்மா. அந்த மாதிரி அவசரமெல்லாம் இல்லை...''

''பின்ன, ஏன் அத்தனை அவசரப் படற...? பத்து நாளுக்குள் கல்யாணத்தை நிச்சயம் பண்ணலாம். ஆனால் நடத்த முடியுமாப்பா...?''

''ஏம்மா முடியாது...?''

''சொந்தக்காரங்களைக் கூப்பிடணும். சத்திரம் ஏற்பாடு பண்ணணும். அழைப்பிதழ் அச்சடிக்கணும்...''

''அதெல்லாம் வேணாம்மா...அந்த மாதிரியெல்லாம் கல்யாணம் பண்ணிக்க எனக்குப் பிடிக்கலை. ரொம்ப சிம்பிளா நம் குடும்பம், அவங்க குடும்பம், நித்யா இவங்க மட்டும் போறும். நம் குலதெய்வம் முருகன்றதால் திருத்தணிக்குப் போய் கல்யாணத்தை முடிச்சிட்டு வந்துடலாம்.''

''என்னப்பா இது...?'' என்று அதிர்ந்து போனார் அவனுடைய அப்பா.

''அதுக்கு அவங்க வீட்ல ஒப்புக்கணுமேப்பா...''

''ஒப்புக்குவாங்கப்பா...ஒப்புக்க வைக்கணும். நம் பணம் எல்லா வேலையும் செய்யும்ப்பா...''

''பணம் வேலை செய்யாது கிடக்கட்டும். நீ நம் குடும்பத்துக்கு ஒரே பையன். உன் கல்யாணத்தை ரொம்ப நல்லா நடத்தணும்னு நாங்க நினைச்சுட்டிருக்கோம்...''

''இல்லம்மா...வேணாம். நான் சொன்ன மாதிரி ரொம்ப சாதாரணமாக நடந்தால் போறும். சாயந்திர ரிசப்ஷனை ஓட்டல்ல நடத்திடலாம். அதுக்கு மட்டும் என் காலேஜ்ல அத்தனைப் பேரையும் கூப்பிடப் போறேன்.

நீங்க உங்களுக்கு யாரையெல்லாம் கூப்பிடணும்னு தோணுதோ கூப்பிடுங்க.''

அவன் அதில் உறுதியாக இருப்பது கண்டு பெரியவர் ஒரு முடிவிற்கு வந்தார்.

''சரிப்பா...கல்யாணம் செய்துக்கப் போறவன் நீ... உன் இஷ்டப்படியே செய்துடலாம்.''

அவர் சொல்லி முடிக்கவும் வாசலில் ஸ்கூட்டர் சத்தம் கேட்கவும் சரியாக இருந்தது. நித்யா இறங்கி உள்ளே வந்தான்.

''வா நித்யா...ரொம்ப நல்ல சமாச்சாரம் பேசிட்டிருக்கோம். நீயே வந்திட்ட...'' என முகம் மலர்ந்த அந்த அம்மாளை சுரத்தின்றி பார்த்தான் அவன்.

''சொல்லுங்கம்மா...என்ன விஷயம்?'' என்று வந்து சோபாவில் உட்கார்ந்தான்.

''இரு. முதல்ல இனிப்பு தரணும். நான் போய் சமையற்காரரை செய்யச் சொல்றேன். உன் அப்பா என்ன விஷயம்னு சொல்லுவாரு...''

அந்த அம்மாள் நகர்ந்ததும் பெரியவர் சந்தோஷத்தோடு நித்யாவைப் பார்த்தார்.

''சரவணனும் கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டான்ப்பா...அவனும் தனக்குப் பிடிச்ச பொண்ணைத் தேர்ந்தெடுத்துக்கிட்டான். பொண்ணுகூட உங்க காலேஜ்ல தான் படிக்குதாம். சரவணா...பேர் என்ன சொன்ன... அவனையே கேளுப்பா...?''

அத்தனை சோகத்திற்கிடையிலும் நண்பனின் திருமணச் செய்தி கேட்டு பெரிதாக முகத்தில் புன்னகை படர சரவணன் பக்கம் திரும்பினான் நித்யா.

''வெரிகுட். கன்கிராஜுலேஷன்ஸ்டா சரவணா. ஆமாம். நம்ம காலேஜ் ஸ்டூடண்ட்னு சொன்னாயாமே...



யாரரா அது...? விஸ்காம் ஸ்டூடண்ட்டாகத்தானே இருக்கணும்....?''

''உன் ஸ்டூடண்ட்தான்டா....''

''அதான் யார்னு கேட்டேன்.''

''உன்கிட்ட அடிக்கடி வந்து பேசிகிட்டிருப்பாடா... நேற்று கூட பட்டிமன்றத்துக்கு வந்திருந்தா...''

பகீரென்று அடிவயிறு உள்ளே இழுத்துக் கொள்ள சரவணனை ஏறிட்டான் நித்யா....யார் என்கிற கேள்வியில் புருவங்கள் சுருங்கப் பார்த்தான்.

''தாமினிடா...எப்படி என் சாய்ஸ்...?'' வெள்ளையாகச் சிரித்தான் சரவணன்.

''தா...மி ..னியா...!?''—உள்ளுக்குள் பலமான அடி விழுந்தது நித்யாவிற்கு. ஒரு வினாடி என்ன பேசுவதென்று தெரியாமற் போயிற்று. பேச்சு வராமல் நாக்கு உள்ளே இழுத்துக் கொண்டது. அவனையே பார்த்துக் கொண்டிருந்த சரவணன் கேட்டான்.

''என்ன நித்தி பேசமாட்டேன்ற...? உன்கிட்ட கூட சொல்லலையேன்னு ஆச்சரியமாக இருக்கா...? சர்ப்ரைஸ் ஆக இருக்கட்டுமேன்னுதான் இத்தனை நாள் ரகசியமாக வச்சிட்டிருந்தேன். தாமினி எப்படி இருப்பா எப்படிப் பட்ட பொண்ணுன்னு அப்பாவுக்கு எடுத்துச் சொல்லுடா...''

அதற்குப் பின்னரும் பேச வாய் எழாமல் காயம்பட்ட பார்வையுடன் நித்யா உட்கார்ந்திருக்க பெரியவரே கேட்டார்.

''சொல்லு நித்யா...பொண்ணு நல்லப் பொண்ணு தானா...? உனக்குப் பிடிச்சிருக்கா. நீ சொன்னால் எங்களுக்கு இன்னும் திருப்தியாக இருக்கும்.''

''ம்...தா...மினி....ரொம்ப நல்லப் பொண்ணுப்பா... நேற்று தான் சொல்லலை...? சரவணனுக்கு இன்னும்

அழகான பொண்ணா, நல்லப் பொண்ணா கிடைப்பான்னு. கிடைச்சுட்டா பார்த்தீங்களா....?'' தன்னை சமாளித்துக் கொண்டு பேசினான் நித்யாதரன்.

அப்போதுதான் நினைவிற்கு வந்தவராக சரவணனிடம் சொல்ல ஆரம்பித்தார் பெரியவர். ''சொல்ல மறந்துட்டேனே சரவணா...உன்னை மாதிரியே நித்யாவும் பொண்ணு பார்த்து வச்சிருக்கான். நேற்று காலையில் பொறந்த நாளுக்கு வந்திருந்தப்போ சொன்னான். நான் கூட உனக்கும் சேர்த்து பொண்ணு பார்க்கச் சொல்லேன். ரெண்டு பேர் கல்யாணத்தையும் ஒண்ணா நடத்திடலாம்னு நினைச்சுக்கிட்டிருக்கேன்...''

''அப்படியா...? என்கிட்ட சொல்லவே இல்லையேடா நித்தி...யாருடா அந்த பாக்யசாலி...?'' ஆச்சரியமாக அவன் பக்கம் திரும்பினான் சரவணன்.

''பாக்கியசாலி இல்லை. துர்பாக்கியசாலின்னு சொல்லு...'' அதுதான் பொருத்தமாக இருக்கும்.''

''சீ! என்னடா பேசற...? அபசகுனம் மாதிரி...''

''அபசகுனம்தான் நேற்றே நடந்து போச்சே...'' வெறுப்பும், சலிப்பும், கழிவிரக்கமும் விரக்தியுமாக பதில் சொன்னான் நித்யா. அதைக் கேட்டு சரவணன் மௌனமாய் நின்றிருக்க தவித்துப் போனார் பெரியவர்.

''என்னப்பா நடந்தது? நேற்று காலைல அத்தனை சந்தோஷமா சிரிச்ச முகத்தோட வந்து சொன்ன. இன்னிக்கு இப்படி சோகமா முகத்தைத் தொங்கப் போட்டுக்கிட்டு சொல்ல முடியாத வருத்தத்தோட பேசற...?''

''அதுக்குக் காரணம் இருக்குப்பா...'' என்று ஆரம்பித்து நேற்று மாலை நடந்த பட்டிமன்ற விவரம் முழுதும் சொல்லி முடித்தான் சரவணன். இடையில் குறுக்கிடாமல் கேட்டுக்கொண்ட அவர் தாங்க முடியாதவராக அரற்றினார்.



''என்னப்பா இது...? விஷயம்னு கூப்பிட்டு பேசச் சொல்லி விவகாரத்துல முடிச்சிருக்காங்க. அந்த மாதிரி சவாலுக்கெல்லாம் நீ ஏன் ஒத்துக்கிட்ட? சவால் விட்டவனுக்கு மூளை இருக்கணும், இல்ல உனக்காவது இருந்திருக்கணும். கல்யாணம்ங்கறது ஒருத்தரோட வாழ்க்கைப் பிரச்சினை, எதிர்காலப் பிரச்சினை. அதுல போயா யாரும் விபரீத முடிவு எடுப்பாங்க...?''

''இல்லப்பா... அந்த மாதிரி விபரீதமாகும்னு அவன் நினைச்சுப் பார்க்கலை.''

''சரி நினைச்சுப் பார்க்கலைன்னே வச்சுக்க, கொஞ்சம் முன் யோசனை வேணும்...? உடனே சவால் விட்டவனுக்கு சரின்னு சத்தியமா செய்து கொடுப்பான் ஒருத்தன்...?''

''அந்த சந்தர்ப்பத்துல சத்தியம் செய்யறதைத் தவிர நித்தியாவால் வேற எதுவும் செய்ய முடிஞ்சிருக்காதுப்பா....''

''என்ன பேசற சரவணா...?'' நீ கூட அவனுக்கு ஒத்து பாடற...? விவாகரத்தான பெண்ணுக்கு மறு வாழ்வு கொடுக்கணும்னு அவனவனுக்குத் தானாக சுயமாகத் தோணணும்ப்பா. இப்படி ஸ்டூல் மேல் நிற்கிற சர்க்கஸ் யானை மாதிரி வலுக்கட்டாயப்படுத்தி நிர்ப்பந்திக்கக் கூடாது....''

''வாஸ்தவம்தாம்ப்பா...''

''இப்போ என்கிட்ட ஒத்துக்கிட்டு என்ன பிரயோசனம்? நேற்றிக்கே மேடை ஏறி நித்யாவுக்கு சாதகமா இல்லை நீ இதைச் சொல்லி இருக்கணும்...?''

''தோணலைப்பா...''

''சரி விடு. அந்த சவால்விட்ட பெரிய மனுஷர் எங்கே இருக்கார்னு சொல்லு. நான் போய் பார்த்து பேசிட்டு வரேன்.''

''இல்லப்பா. வேணாம். அதுக்கெல்லாம் இனிமேல் அவசியமில்லை. ஆயிரம் பேருக்கு நடுவில் நான் செய்து

கொடுத்த சத்தியம் சத்தியம்தான். அதிலிருந்து மீற மாட்டேன். யார் என்ன சொன்னாலும் கேட்க மாட்டேன். எனக்குக் கல்யாணம்னு ஒன்னு நடந்தால் அது விவாகரத்தான ஓர் பெண் கூடத்தான் இருக்குமே தவிர வேறு யார் கூடவும் இருக்காது. அதனால் தயவு செய்து இனிமேல் அதைப் பற்றி பேச வேணாம்ப்பா...ப்ளீஸ்...'' —நித்யா கெஞ்சினான்.

''நித்...யா...'' என்று நெஞ்சு கனக்க அவனைப் பார்த்தார் அவர்.

''என்னப்பா சொல்ற...?''

''என்னைப் பற்றின கவலையை விட்டுட்டு சரவணனுடைய கல்யாணத்தைப் பேசி முடிக்கிற வழியைப் பார்ப்போம்ப்பா.''

''உன் கல்யாணம்...?''

''அது நடக்கிற போது நடக்கட்டும்.'' அதற்கு மேல் ஒன்றும் பேசாமல் தலை கவிழ்ந்தார் அவர். அதற்குள் முற்றிலும் தன்னை சமாளித்துக் கொண்டு விட்ட நித்யாதரன் ஒரு ஆழமான பெருமூச்சோடு எழுந்து நின்றான்.

''என்னப்பா பேசாமல் இருக்கீங்க...?''

''சொல்லு...'' —முகம் நிமிர்த்தினார் அவர்.

''கிளம்புங்கப்பா. அம்மாவையும் கிளம்பச் சொல்லுங்க. சரவணா....அப்படியே நல்லாத்தான் இருக்க. புறப்படு.''

''எங்கே நித்தி...?''

''தாமினி வீட்டுக்கு.''

''இன்னிக்கேவா...?''

''ஆமாம்.''

''இப்போதேவா...?''



''சுப காரியம் சீக்கிரம் நடக்கணும்னு சொல்லுவாங்க. நல்ல விஷயத்துக்கு நாள் கடத்தக் கூடாது.''

''நீயும் வரே இல்லை...?''

''நான் வராமலா....?'' என்று புன்னகைக்க முயன்றான் அவன்.

''எதற்கும் பொண்ணு வீட்டுக்குத் தெரியப்படுத்திட்டுப் போகலாம்ப்பா. திடுதிப்புனு போய் நின்றால் நல்லா இருக்காது...''

''நீங்க கவலைப்படாதீங்கப்பா. அவ என் ஸ்டூடண்ட் தானே...? அவங்க வீட்டு டெலிபோன் நம்பர் எனக்குத் தெரியும். நானே போன் பண்ணிச் சொல்லிடறேன்'' என்று தொலைபேசியின் அருகில் போனான் நித்யாதரன்.

தாமினியின் வீட்டு தொலைபேசி எண்களைச் சுழற்றிய போது அவன் கை விரல்கள் அவனையும் மீறி நடுங்க ஆரம்பித்தன....

## 8

தாமினியின் அம்மா மகாலக்ஷ்மி ஆச்சரியமாகத் தன் கணவனைப் பார்த்தாள். நம்ப முடியாதவளாகத் தயங்கித் தயங்கி மிக மெதுவாகக் கேட்டாள்.

''நிஜமாகவே நீங்க அந்தப் பையனுக்குப் பொண்ணைக் கொடுக்கிறதாகத் தீர்மானிச்சுட்டீங்களா...?''

''ஆமாம்'' —அவரிடமிருந்து எப்போதுமே ஒரு வார்த்தை பதில்தான் வரும். அப்போதும் அதுவே வந்தது.

அவர் பக்கத்தில் கட்டில் விளிம்பில் உட்கார்ந்து கொண்டிருந்த அந்த அம்மாள் மீண்டும் மெல்ல பேச்சை கொடுத்தாள்.

"வந்தவங்களைப் பார்த்தால் நம்மளவங்களாகத் தெரியலையே...?"

"அதனால் என்ன...?"

இன்னமும் அதிர்ந்து, 'என்னவாயிற்று இவருக்கு...? சுயநினைவோடுதான் பேசுகிறாரா?' என்கிற சந்தேகம் வர அவரை ஏறிட்டாள்.

"என்ன அப்படிப் பார்க்கற...?"

"இல்ல... வந்து... நீங்க இதுக்கெல்லாம் ஒத்துக்க மாட்டீங்களே... ரொம்பப் பிடிவாதம் பிடிப்பீங்களே சல்வார்கமீஸ் போடக்கூட அத்தனை தயக்கமா உத்தரவு கொடுத்தீங்களே... யார் என்ன சொல்லுவானோ—நம்ம மனுஷா பேசுவானோன்னு பயப்படுவீங்களே... இப்போ ஜாதிவிட்டு கல்யாணம் பண்ண சம்மதம்னு சொல்றீங்களேன்னு யோசிக்கிறேன்..."

மூச்சு விடாமல் அந்த அம்மாள் பேசி முடிக்கிற வரை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார் அவர். உடனே பதில் எதுவும் சொல்லிவிடவில்லை. சிறிது நேரம் மேலே சுழலும் மின்சார விசிறியைப் பார்த்துக் கொண்டிருந் தார். பின்னர் ஏதோ முடிவிற்கு வந்த மாதிரி வழக்கமான தன் கோபம், உறுமல் எதுவுமின்றி நிதானமாகப் பேச ஆரம்பித்தார்.

"நீ கேட்ட கேள்வி ரொம்ப நியாயமான கேள்வி மகாலஷ்மி. நம் சொந்தக்காரர்களை நினைச்சு நீ பயப் படறது எனக்குத் தெரியறது. அவா வந்து பொண்ணு கேட்கிறவரை இதே பயம் எனக்குள்ளும் இருந்தது வாஸ்தவம். ஆனால் ஒரே நிமிஷத்துல சட்டுனு பொறி தட்டின மாதிரி அத்தனைத் தயக்கம், பயம் எல்லாம் விலகிப் போய்தான் அந்தப் பையன் சரவணனுக்குப் பொண்ணு தர சம்மதிச்சேன்...கல்யாணத்தையும் அவங்க இஷ்டம் போல் அதிகக் கூட்டம் இல்லாமல் ஆர்ப்பாட்டம்



இல்லாமல், அமைதியாக திருத்தணியில் வச்சுக்கிறதுக்கும் ஒப்புக் கொண்டேன்..." என்றவர் சற்று நிறுத்தி மறுபடியும் தொடர்ந்தார்.

"திடீர்னு எப்படி இப்படியெல்லாம் மாறினேன்னு யோசிக்கிறயா...? பதினைந்து தேதிக்குள் ஒரு ரூபாய் ரெண்டு ரூபாய்க்கெல்லாம் தடவறதும், மளிகைக் கடைக்காரருக்கும், வீட்டு சொந்தக்காரருக்கும் கடன் சொல்றதும், மாசம் வருகிற ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளத்துல காலம் தள்ள முடியாமல் தவிக்கிறதும்தான் காரணம். வறுமை தவிர வேறு ஒன்றும் பார்க்காத சின்ன வயசிலேர்ந்து நான் பட்ட அனுபவங்கள் காரணம்..."

சொல்லிக்கொண்டேபோன அவரது குரல் கரகரத்தது. முகத்தில் ஒருவித சோகம் கவிழ்ந்து கொண்டது. மனைவி யின் முகம் பாராமல் சாவி கொடுத்து முடுக்கிவிட்டாற் போல் மேலே சொன்னார்.

"—உன் பேர் மகாலஷ்மி, ஆனால் லஷ்மிகரமாக உன்னை வச்சுக்க என்னால் முடியறதா? வெண்கலக் குத்து விளக்காகப் பொண்ணு பிறந்திருக்கா. குந்துமணி தங்கம் இருக்கா உடம்புல. வாங்கிப் போட்டிருக்கேனா...? அடுத்த ஒரு பையன் +1 படிக்கிறான். எல்லார் மாதிரி அவனுக்கு டாக்டருக்குப் படிக்கணும், இன்ஜினீயரிங் படிக் கணும், சார்ட்டட் அக்கௌண்டண்ட் ஆகணும் என்கிற ஆசையெல்லாம் இருக்காதா பாவம்...? வக்கு இருக்கா எனக்கு? அந்தப் பொண்ணுக்கு மட்டும் பளிச்சுனு நகை போட்டுக்கணும், பட்டு உடுத்திப் பார்க்கணும்னு தோணாதா...? வக்கு இருக்கா எனக்கு...? அவங்க வந்து 'உங்க பொண்ணை என் பையனுக்கு ரொம்பப் பிடிச் சிருக்கு. நீங்க எதுவும் செய்ய வேண்டாம். பொண்ணை கொடுக்க சம்மதிச்சால் போறும்னு சொல்றா..." வந்து கேட்டது சாதாரண இடமில்லை. பையனுடைய அப்பா யாருன்னு நினைக்கிற. ஹைகோர்ட் ஜட்ஜ் சுந்தர

லிங்கம்னு இருந்தாரே அவருடைய பேரன். அப்பா தர்மலிங்கம் மட்டும் சாதாரண மனுஷரா...? மெட்ராஸ்லயே பெரிய வக்கீல். வீம்புப் பிடிவாதம் பிடிச்ச வீணா ஜாதி. குலம், கோத்திரமெல்லாம் பார்த்துண்டு இந்த இடத்தை வேணாம்னு சொல்லிட்டேன்னு வச்சுக்க. அதுக்கப்புறம் இந்த மாதிரி ஒரு இடம் அவளுக்குப் பார்த்துத் தர என்னால் முடியுமா...? முடியாது இல்லையா...? அது முடியாத போது அவளுக்கு வர்ற அதிர்ஷ்டத்தை ஏன் தடுக்கணும்... அவளாவது மாசக் கடைசியானால் காசுக்கு என்ன செய்யறதுன்னு கவலைப்படாமல் இருக்கட்டுமே... பச்சைப் பசேல்னு கண்ணுக்குக் குளிர்ச்சியாக வாழட்டுமேன்னுதான் இந்த வரனுக்கு சரின்னு தலையாட்டினேன்.''

அவர் சொன்னதைக் கேட்கக் கேட்க அந்த அம்மாள் கன்னங்களில் வடிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். அதிக சத்தம் வராமல் விசும்பினார். அவள் உணர்ச்சி வசப்பட்டு கண் கலங்குவதைப் பார்த்தவாறே மேலும் பேசினார் அவர்.

''...சொந்தக்கார மனுஷங்களை நினைச்சும் கவலைப் படவேணாம்னு விட்டுட்டேன். குற்றமும், குறையும் கண்டுபிடிக்கிறது தவிர சொந்தக்காரங்க வேற என்ன செய்யறாங்க சொல்லு...? யார் மேல் என்ன சொல்லலாம், முதுகுக்குப் பின்னால் என்ன பேசலாம்னு காத்துண்டிருக்காங்க, யாரால் நமக்கு என்ன உதவின்னு கொஞ்சம் யோசிச்சுப் பாரு. யார் வீட்டுக்கு ஒரு டம்ளர் காபிக்குப் போய் நின்னிருக்கோம். அவசரத் தேவைன்னு நூறு ரூபாய் பணத்துக்கு நூறு தரம் சொந்தக்காரங்களைத் தேடிப் போனேனே...கிடைச்சுதா...? கொடுத்திருக்காங்களா...? உதவி என்று கை நீளாதவங்களுக்கு வாய் மட்டும் நீளுதேன்னு தோணித்து. அவங்களுக்கெல்லாம் பேச என்ன தகுதி இருக்குன்னு பட்டுது. அப்படிப்பட்டவங்களைப் பற்றி எதுக்குக் கவலைப்படணும்னுதான் சரி சொன்னேன்...''



''இதையெல்லாம் உன் பொண்ணுக்கு எடுத்துச் சொல்லு லஷ்மி. நம் நிலைமை அவளுக்கே தெரியும். அப்படி இருக்கற போது, மகா பிடிவாதக்காரனான நானே சரின்னு ஒப்புக்கொள்கிறபோது அவளை வேணாம்னு சொல்லச் சொல்லாதே. வலிய வர்ற அதிர்ஷ்டத்தை தள்ளிவிடச் சொல்லாதே...வாழ்க்கை மற்ற எல்லாத்தையும் விட பணம் ரொம்ப முக்கியம். பணமில்லேன்னால் ஒண்ணுமே இல்லைன்னு நாம் கற்றுண்ட பாடத்தை அவளுக்கும் எடுத்துச் சொல்லு. அவளாவது ரூபாய் நயா பைசாவுக்குத் தடவாமல் சந்தோஷமாக இருக்கணும்னு நான் நினைக்கிறதைச் சொல்லு. என்ன லஷ்மி...சொல்லுவாயா...?''

சரி எனத் தலையாட்டிய அந்த அம்மாள் கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியில் வரவும், அத்தனையும் கேட்டுக் கொண்டு அறை வாசலில் நின்றிருந்த தாமினி அந்தஇடத்தை விட்டு நகரவும் சரியாக இருந்தது.

அப்பா சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த தாமினிக்கு அவை அனைத்தும் நிஜம், வாஸ்தவம் என்று தோன்றினாலும் கல்யாணத்திற்கு சம்மதிக்க முடியும் என்று தோன்றவில்லை. நித்யாவைத் தவிர வேறு யாரையும் தன்னால் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று பட்டது. நித்யாவோ சபையில் சத்தியம் செய்து கொடுத்து விட்டுத் தன்னை மறந்துவிடச் சொல்கிறான். சத்தியத்தை மீற தன்னால் முடியாது என்று பிடிவாதம் பிடிக்கிறான். அப்பாவும் அவளிடம் கேட்காமலே சரவணன் வீட்டாருக்கு சரி சொல்லி அனுப்பி இருக்கிறார். தானே பஞ்சாங்கம் பார்த்து 'அடுத்த திங்கள் கிழமை முகூர்த்த நாள். மாப்பிள்ளை பொண்ணு ரெண்டு பேர் நட்சத்திரத்திற்கும் பொருத்தமாக இருக்கு. ஒன்பது பத்தரை முகூர்த்தம் வச்சுக்கலாம் என்று எண்ணி எட்டாவது நாளில் கல்யாணம் என்றார். முதல் நாள் மாலை திருத்தணி போய்விடலாம் என்றார்.

அதையெல்லாம் கேட்ட அவள் மெல்ல தலை நிமிர்ந்து நித்யாவைப் பார்த்தாள்.

''வேணாம் நித்யா ப்ளீஸ். எப்படியாவது இந்த கல்யாணத்தைத் தடுத்து நிறுத்தி விடுங்களேன்....'' என்பதை பார்வையில் கெஞ்சினாள்.

ஆனால் நித்யா அவள் பக்கம் கூடத் திரும்பவில்லை. வேண்டுமென்றே மனதை இறுக கட்டிப் போட்டான். ஆணியடித்த மாதிரி தடுத்து நிறுத்தினான். ''இனி தாமினி நமக்கு சொந்தமில்லை. நமக்கு சொந்தமில்லாத எதன் மீதும் பார்வையை அலைய விடுவது சரியில்லை. ஆகவே அவள் பக்கம் கூட திரும்பாமல் இருப்பது அவளுக்கும் நல்லது. நமக்கும் நல்லது....'' என்ற நினைப்பில் ஒரு வார்த்தைகூட பேசாமல் காரில் ஏறிக் கொண்டான். திரும்பி வந்த போது தன் அறையில் இறக்கி விடச் சொல்லி இறங்கிக் கொண்டான்.

இன்னதென்று விவரிக்க இயலாத பாரத்தோடு அறை கதவு திறந்து படுக்கையில் விழுந்த அரை மணி நேரத்திற் கெல்லாம் தொலைபேசி ஒலிக்க ரிஸீவரை எடுத்தான்.

''நான்தான்...தாமினி பேசறேன்... நாடார் கடையி லிருந்து போன் பண்றேன்...'' அவனிடமிருந்து பதில் வர வில்லை.

''பேச மாட்டீங்களா...? தயவுசெய்து பேசுங்களேன்... ப்ளீஸ்...?''

''என்ன பேசணும்னு எதிர்பார்க்கற?''

''எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாமே...எப்படி யாவது நிறுத்திவிடுங்களேன்...''

''முட்டாள் மாதிரி பேசினால் எனக்குக் கோபம் வரும். சரவணனை விட நல்லவனாக உனக்கு எங்கே கிடைப்பான் சொல்லு...?''



''நல்லவராக இருக்கலாம். அதுக்காக கல்யாணம் பண்ணிக்க முடியுமா? ''என் மனசுக்குப் பிடிக்க வேணாமா....?''

''நம் மனசுக்குப் பிடிச்சது கிடைக்காது என்கிறபோது கிடைப்பதை விரும்பக் கத்துக்கணும் மினி. அதுதான் புத்திசாலித்தனம்.''

''நான் புத்திசாலியாக இருக்க விரும்பலை. முட்டாளா கவே இருந்துவிட்டுப் போறேன்.''

''நிஜமாகவே நீ முட்டாள்தான். ஏன் மினி உன்கிட்ட நான் ஒன்று கேட்கலாமா...?''

''கேளுங்க...''

''எப்படியும் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது. பண்ணிக்கப் போவதில்லை என்கிறபோது நீ யாரையாவது கல்யாணம் பண்ணிட்டுத்தானே ஆகணும். யாரையோ பண்ணிக்கிறதைவிட சரவணனைப் பண்ணிக் கலாம் இல்லையா...? அவன்கிட்ட என்ன இல்லை... சொல்லு...? அழகு, படிப்பு, பணம், நல்ல குணம் இதுல எது குறைச்சல் அவன் கிட்ட...?''

அந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் தவித்தாள் அவள்.

''என்ன பதிலே இல்லை...?''

''இதப்பாரு மினி. இதற்கு மேலும் நீ என்னை மனசுல வச்சுட்டிருக்கிறதில் அர்த்தமில்லை. அனாவஸ்ய மாக எது எதையோ நினைச்சு உன்னை நீயே குழப்பிக் காதே, இந்த கல்யாணத்துக்கு சரி சொல்றது உனக்கும் நல்லது எல்லோருக்கும் நல்லது. அதனால் உனக்கு நல்லது நினைக்கிறவன்ற நம்பிக்கை இருந்தால், உன் மீது அக்கறை கொண்டவன்னு நினைச்சால், என்மீது இன்னும் உனக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கிற பட்சத்தில் அடுத்த திங்கட்கிழமை திருத்தணியில் கல்யாணப் பெண்ணாய்,

மாலையும் கழுத்துமாகப் பார்க்கிறேன். ஓ.கே. ஆல் தி பெஸ்ட்.''

தொலைபேசி தொடர்பைத் துண்டித்தான் அவன். ஒரு வினாடி வெறுமையாய் பார்த்துக் கொண்டிருந்து விட்டு நாடாரிடம் தொலைபேசிக்கான கட்டணத்தைக் கொடுத்துவிட்டு நடந்தே வீட்டிற்கு வந்தாள். உள்ளே நுழைந்ததும் அம்மாவின் முகம் பளீரென்று சந்தோஷத்தில் மின்னுவதைப் பார்த்தாள்.

''எங்க போன மினி...?''

''எங்கேயுமில்லம்மா. நாடார் கடை வரை போயிருந்தேன்.''

''நீ ஏண்டி போகணும்...? இனிமேல் கடைக்கெல்லாம் நீ போக வேணாம். இன்னும் ஒரு வாரமில்லை கல்யாணத்துக்கு. இப்போ போய் கடைக்கெல்லாம் போகலாமா...?''

அவள் பதில் சொல்லவில்லை. அம்மாவே தொடர்ந்தாள்.

''உன் மாமனாரும், மாமியாரும் இப்போதான் வந்துட்டுப் போறா...''

அதற்குள் அவர்கள் மாமனார் மாமியாராகிவிட்ட அலுப்பில் கேட்டாள் அவள்.

''எதுக்கு...?''

''கல்யாணத்துக்கு வேண்டிய பட்டுப் புடவைகள் நகைகள் எல்லாம் கொண்டு வந்து கொடுத்துட்டுப் போயிருக்கா...'' என்ற மகாலஷ்மியம்மாள் கால் வினாடி தயங்கினாள்.

''சொல்லும்மா...?'' என்று தாமினி கேட்ட பின்னரே மீண்டும் தொடர்ந்தாள்.

''எனக்கு, உங்கப்பாவுக்கு, உன் தம்பிக்கு என்று ஏகமாய் புது டிரஸ்ஸும், புடவைகளும் வந்திருக்கு. வா... வந்து பாரு...''



கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் அம்மா காட்டிய புடவைகள், நகைகள், பட்டு வேஷ்டி, பாண்ட், ஷர்ட்டுகள்...

அம்மாவின் முகம் விகசித்துக் கிடந்த விதம்...ஆசையாய் பட்டுப் புடவைகளைத் தடவிப் பார்த்த விரல்கள்... ஷர்ட்டையும், பாண்ட்டையும், அப்படியே தன் மீது போட்டு கண்ணாடியில் அழகு பார்த்த தம்பி.

ஆழமாய் பெருமூச்சுவிட்டாள் தாமினி. ''ஒரு வீடு வாழ தனி மனிதனும், ஊர் வாழ வீடும், நாடு வாழ ஊரும், பலியாகலாம்'' என்று எப்போதோ படித்த வரிகள் நினைவிற்கு வர அவர்களின் சந்தோஷத்திற்காக தன்னை பலியாக்கிக் கொள்ளத் தயாரானாள். அதற்கு மேல் போராடுவதில் பயனில்லை. இனி நித்யா ஒரு போதும் தன் மனதை மாற்றிக் கொள்ள மாட்டான் என்பதை உணர்ந்து மிக மெல்லிய குரலில் தன் குரல் தனக்கே கேட்காத விதத்தில் ''எப்படி இருக்குடி...பிடிச்சிருக்கா...?'' என்று கேட்ட அம்மாவிற்கு—

''அழகாயிருக்குமா...'' என்று பதில் சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் போய் நுழைந்து கொண்டாள் அவள்...

## 9

முருக பெருமானின் சந்நிதியில் மிக எளிமையாகக் கல்யாணம் நடந்து முடிந்தது. பட்டு வேஷ்டி சரசரக்க, கழுத்தில் கிடந்த ரோஜா மாலையோடு தன் பெற்றோரை நமஸ்கரித்த சரவணன் அதன் பின் தாமினியின் பெற்றோர் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினான். கடைசியில் சற்று தள்ளி நின்றிருந்த நித்யாவின் மீது அவன் பார்வை பதிந்தது. தாமினியின் கை பற்றி அவனருகில் அழைத்துக்

கொண்டு போனவன் அவளைத் திரும்பிப் பார்த்து சொன்னான்.

''இவன் கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்க தாமினி.''

''வேணாம் சரவணா... எதுக்கு இதெல்லாம்...?'' என்று நகர முயன்ற நித்யாவின் கையைப் பற்றி இழுத்து நிறுத்தினான்.

''இன்ஃபாக்ட் நானும் செய்யணும். ஆனால் உன்னை விட ஒரு நாள் பெரியவன்றதால் அவளை மட்டும் செய்யச் சொல்றேன்...'' தட்டமுடியாமல் நின்ற நித்யா தன்னை வணங்கிய தாமினியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்காமல் வாழ்த்தினான்.

''சரவணன் மனசு கோணாமல் நல்லபடி நடந்துக்க மினி—''

சடாரென்று முகம் உயர்த்தினான் சரவணன்.

''என்ன...! என்ன...?! நீ என்னன்னு கூப்பிட்ட...?'' அப்போதுதான் முதல் முறையாகக் கேட்கிற மாதிரி நித்யாவை ஆச்சரியமாகப் பார்த்தான்.

சட்டென்று பயந்து போன நித்யா தயக்கத்தோடு பதிலளித்தான்.

''ஏன்டா...? மினின்னு கூப்பிட்டேன்...''

''ரொம்ப நல்லா இருக்கு. உன் ஸ்டூடண்ட் இல்லையா...? அதனால் செல்லமா ஆசையா பெயரை சுருக்கிக் கூப்பிடற போல இருக்கு...'' என்றவன் அவள் பக்கம் திரும்பினான்.

''நானும் இனிமேல் உன்னை மினின்னே கூப்பிடப் போறேன். கூப்பிடலாம் இல்லையா தாமினி...?''

அவன் வேடிக்கையாகக் கேட்கிறானா, விளையாட்டாகக் கேட்கிறானா அல்லது அன்று தான் சொன்னதை



குத்திக் காட்டக் கேட்கிறானா என்பது புரியாமல் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள் அவள்.

''என்ன பேசாமல் இருக்க...? நித்யா மட்டும்தான் அப்படிக் கூப்பிடலாமா...? நான் கூப்பிடக் கூடாதா...?''

அரண்டு போன நித்யா குழப்பத்தோடு சரவணனைப் பார்த்தான்.

''என்ன சரவணா அப்படி கேட்கற...? உனக்கில்லாத உரிமையா எனக்கு...?''

''இருக்கலாமில்லையா...? நீ தானே முதல் அவளுக்கு...''

சரவணனின் பதில் என்னவோ போலிருக்க தடுமாறிப் போனான் நித்யா.

''நான் முதலா...? என்ன சொல்ற நீ...?''

''நான் சாதாரணமாகச் சொன்ன ஒரு விஷயத்துக்கு நீ ஏன்டா இப்படிப் பதர்ற...? மாதா, பிதா, குரு, தெய்வம்னு சொல்லியிருக்கு. தெய்வமே குருவிற்கு அப்புறம்னுதானேன்னு சொல்லியிருக்கிறப்போ நான் இரண்டாவது தானே...? நீ அவளுக்கு குரு இல்லையா...?''

சரவணனின் புன்னகையைப் பார்த்த பின்னரே நித்யாவிற்கு நிம்மதி ஏற்பட்டது. 'அப்பாடா...' என்றிருந்தது.

திருத்தணியிலிருந்து மூன்று கார்களில் சென்னை திரும்பினர். முதல் காரில் சரவணனும், தாமினியும் ஏறிக் கொள்ள அடுத்து சிவகாமி, தர்மலிங்கத்தோடு நித்யாவும், மூன்றாவது காரில் தாமினியின் குடும்பமும் திரும்பிற்று. அன்று மாலை பெரியதோர் வரவேற்பிற்கு ஏற்பாடு செய்திருந்தார். தர்மலிங்கம் ஐந்து நட்சத்திர ஓட்டலில் விருந்து வைத்தார். கல்லூரியிலிருந்து அத்தனை பேரும் வந்திருந்தனர். சரவணன் தானே நேரில் போய் குமரகுருபரனை அழைத்திருந்ததால் அவர் வந்திருந்தார். அவரிடம் தனியாகப் பேசிய சரவணன் ''உங்களுக்கு

ரொம்ப தாங்க்ஸ் சார். உங்களால் தான் இந்தக் கல்யாணம் நடந்தது'' என்ற போது அவர் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

ஆனால் கூட நின்று கேட்டுக்கொண்டிருந்த தாமினிக்கு சுருக் என்று தைத்தது. 'காலையிலிருந்து ஏன் இவன் இப்படி முள்ளாகக் குத்துகிறான்...? முள் என்பது தெரியாமல் குத்துகிறானா என்பது பிடிபடாமல் தவித்தாள். அதற்கும் அன்றிரவே விடை கிடைத்ததில் அதிர்ந்து போனாள்.

அழகாக அலங்கரிக்கப்பட்ட சரவணனின் நுங்கம்பாக்கம் வீட்டு மாடியில் அவர்களின் முதல் இரவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பூச்சரங்கள் தொங்கிய அந்த அறைக்குள் நுழைந்த தாமினிக்கு சிங்கத்தின் குகைக்குள் நுழைகிற உணர்வு ஏற்பட்டது. 'சீ! என்ன இது...?' என்று தன் மனதை அடக்கிக்கொள்ள முயன்றாள். ஆனால் அவள் நினைத்தது சரிதான் என்று நிரூபிக்க முயல்பவனாக நடந்து கொண்டான் சரவணன். எப்போதும் சிரிப்பும், சந்தோஷமுமாக இருக்கிற அவன் முகம் மாறிப் போயிருந்தது. லேசான எரிச்சலும், கோபமும் தெரிவதாக உணர்ந்த தாமினி என்ன செய்வதென்பது புரியாமல் ஓர் ஓரமாக நின்றாள்.

''ஏன் அங்கேயே நிற்கிற...இங்கே வந்து உட்காரேன்...'' என்று சிடுசிடுத்தான்.

சட்டென்று அவன் காட்டிய இடத்தில் அவன் பக்கத்தில் போய் கட்டிலில் உட்கார்ந்தாள் அவள். ஒரு வினாடி அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவன் அமைதியை வரவழைத்துக் கொள்ள முயன்றவனாகப் பேச்சைத் துவக்கினான்.

''எனக்கு பதிலாக இங்கே நித்யா உட்கார்ந்திருப்பாள். ஆனால் இப்படியா தயங்கி நின்னிருப்ப...!''

சடாரென்று தலையை உயர்த்தினாள் அவள்.



''என்ன அப்படிப் பார்க்கற...? நான் சொன்ன உண்மை சுடுதா... இல்லை, சந்தோஷமாக இருக்கா...!''

குபீரென்று அவள் கண்களில் நீர் நிறைந்து கன்னங்களில் வழியத் துவங்கியதும் அவன் புருவங்கள் சுருங்கின.

''எதுக்கு இப்போ அழற...? நித்யாவைக் கல்யாணம் பண்ணிக்க முடியலையேன்னா...?'' காலையில கல்யாணத்தின் போதும் பார்த்தேன். சாயந்திர ரிசப்ஷன்லேயும் பார்த்தேன். அவன் இருந்த பக்கமே உன் பார்வை போச்சே தவிர என் பக்கம் திரும்பவே இல்லை.''

அவள் கண்களில் கோபம் மின்னலிட்டது.

''என்ன பார்க்கற...?'' பழைய ஞாபகத்துல அவனைப் பார்த்தியா...? இல்லை, அதையே தொடருகிற உத்தேசத்தில் பார்த்தியா...?''

''சரவணன்!'' என்று தாங்க முடியாமல் கத்தினாள் அவள். அவன் எழுந்து நின்று இடுப்பில் கை வைத்துக் கொண்டான்.

''என்ன கத்தற...? உரத்துக் குரல் எழுப்பினால் உண்மை பொய்யாகி விடுமா...?''

''எந்த உண்மையை நீங்க புதுசா கண்டுபிடிச்சுட்டீங்க?''

''நீ நித்யாவைக் காதலிக்கலை?''

''அதை உங்ககிட்ட சொன்னவளே நான்தான்...''

''சொல்லிவிட்ட காரணத்தினாலேயே அது குற்றமில்லைன்னு ஆயிடுமா...?''

''காதலிக்கிறது ஒரு குற்றமா...? சரி. அதைக் குற்றம்னு நினைக்கிற நீங்க என்னை ஏன் வந்து கல்யாணம் பண்ணிட்டீங்க?''

''ஏன் தெரியுமா...? 'நோ' கேட்டு அறியாதவன் நான். ஆசைப்பட்டது எந்தப் பொருளானாலும் அடைஞ்சு

பழக்கப்பட்டவன். நீ எனக்கு நேர சொன்ன. விதியாகப் பார்த்து அதை 'எஸ்'ன்னு சொல்ல வச்சிட்டது பார்த்தியா...?''

''ஸோ...அதுக்காகத்தான் என்னைக் கல்யாணம் பண்ணிங்களா...?''

''அதுக்காக மட்டும்தான்னு சொல்ல முடியாது. நினைச்சது கிடைச்சது. இனிமேல் அதை அனுபவிக்கிறதும், அனுபவிக்காததும் என் இஷ்டம்.''

''இதுல என் இஷ்டம்னு ஒன்னுமே கிடையாதா...?''

''ஏன் இல்லை...? உன் இஷ்டம்ங்கறது நித்யா தானே...? அவனைத் தவிர உன்னால்தான் வேறு யாரையும் நினைச்சுகூடப் பார்க்க முடியாதே...?''

''சரவணன்—நீங்க என்ன ஒரு ஸாடிஸ்ட்டா...?''

''நீ சொன்னதை திருப்பிச் சொன்னால் எனக்கு ஸாடிஸ்ட்டுன்ற பட்டமா...?''

''இதுக்கா என்னைத் தேடி வந்து கல்யாணம் பண்ணினீங்க...?''

''தேடி வந்து கல்யாணம் பண்ணின காரணத்தைத் தான் சொல்லிட்டேனே...''

''இப்போ நான் என்ன செய்யணும்னு நீங்க எதிர் பார்க்கறீங்க...?''

''ஒன்னே ஒன்று செய்தாயானால் போறும்.''

''என்ன...?''

''நீயும் நித்யாவும் எப்படியெல்லாம் பழகினீங்க...? எந்த எல்லைக்குப் போனீங்கன்னு சொன்னால் போறும்.''

''பார்க்க சாதுவா, சாந்தமா தெரிகிற உங்களுக்குள் இத்தனை மிருக உணர்ச்சியா...?''



''மிருக உணர்ச்சின்னு சொல்ற அளவுக்கு நான் இப்போ என்ன பண்ணிட்டேன்...? உன் கையைப் பிடிச்சு இழுத்தேனா, கதறக் கதற கற்பழிச்சேனா...? என்ன செய்தேன்...?''

''ச...ர...வணன்...இப்படியெல்லாம் பேச உங்களுக்கு வெட்கமாக இல்லை...?''

''வெட்கப்பட வேண்டிய நீயே வெட்கப் படாதபோது நான் ஏன் வெட்கப்படணும்?''

''என்ன சொல்றீங்க நீங்க?''

''நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்கு காரணம் சொல்லிட்டேன். நீ ஏன் என்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்ச...? அதுக்கு என்ன காரணம்... சொல்லு...?''

''அது ...அது...வந்து...''

''முடியாது உன்னால் சொல்ல முடியாது. ஏன்னா பேருக்கு என்னைக் கல்யாணம் பண்ணின்டு, ரகசியமா நித்யா கூட உறவு வச்சக்கணும்னு இல்ல நினைச்சுண்டிருக்க....''

'மைகாட், மைகாட்! என்று அரற்றினாள் அவள். இப்படிக் கூட ஒரு மனிதனால் பேச முடியுமா...? பேசுவானா...? அதுவும் கல்யாணமான முதல் நாள் ராத்திரியிலேயா....? ஐயோ...எப்படிப் பேசுகிறான்...எவ்வளவு விஷமாகக் கொட்டுகிறான்...?'

''என்ன தாமினி பேசாமல் இருக்க...? நாம் நினைச்சது இவனுக்கு எப்படித் தெரிஞ்சதுன்னா...?''

''சீ! நீங்க மனுஷனே இல்லை. மிருகம். ரொம்ப ஆபாசமான எண்ணங்கள் கொண்ட மிரு—''

பளாரென்று ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தான் அவன். கண்களும் முகமும் ஜிவுஜிவுத்தன.

''யார் மிருகம்...? யாருக்கு ஆபாசமான எண்ணம்...? உனக்கு. உன் அத்யந்த காதலனுக்கு. அவன் ஏன் ஓடி ஓடி வந்து இந்தக் கல்யாணத்தை முன் நின்னு பண்ணி வச்சான். நீ ஏன் மாட்டேன்னு மறுக்காமல் சரி சொன்னே...? கல்யாணத்துக்குக் கல்யாணம், காதலனுக்குக் காதலன்னு தானே...?''

''ஐயோ...'' என்று காதுகளைப் பொத்திக் கொண்ட தாமினி கண்ணீர் வழிய அவனை ஏறிட்டாள்.

''நீங்க இவ்வளவு வக்கிரம் பிடிச்ச மனுஷனாக இருப்பீங்கன்னு நான் நினைக்கலை. நானும், நித்யாவும் அப்படி திட்டம் போட்டிருக்கோம்னு தெரிஞ்சதில்ல...? உடனே கல்யாணத்தை நிறுத்தி இருக்க வேண்டியது தானே...?''

''எனக்கு உங்க திட்டமே இன்னிக்குக் காலைல உன் கழுத்துல தாலி கட்டினதற்கப்புறம் நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துகிட்ட பார்வையில் இல்ல புரிஞ்சது...''

''எவ்வளவு அபாண்டமா பொய் சொல்றீங்க...? நித்யா என் பக்கம் திரும்பக்கூட இல்லை...''

''ஓஹோ...அவன் உன் பக்கம் திரும்பலைன்னு உனக்கு எப்படி தெரிஞ்சது...? நீ அவனையே பார்த்துகிட்டிருந்த தால்தானே தெரிய வந்தது...?''

மடக்கி மடக்கி கோலத்திலும், தடுக்கிலுமாக நுழைந்து அவன் கேள்வி கேட்டதும் அவளது கோபம் சலிப்பாக மாறியது. நாள் பூராவும் அலைந்ததில் உடம்பும், மனதும் களைத்துக் கிடந்தது. அதற்கு மேலும் அவனிடம் பேசவோ, சண்டை போடவோ, வாக்குவாதம் செய்யவோ சக்தி இல்லாததை உணர்ந்து வருத்தமும் வேதனையும் கலந்த குரலில் சொன்னாள் அவள்.



''உங்களை நினைச்சு நான் ரொம்ப வெட்கப் படறேன் சரவணன். வேதனைப் படறேன். இவ்வளவு உயர்ந்த, நல்ல குடும்பத்தில் பிறந்த உங்களிடம் இத்தனைக் கீழ்த்தரமான உணர்ச்சி இருக்கும்னு நான் நினைக்—''

மீண்டும் அவள் முகத்தில் ஓர் அறை அறைந்தான். அவளது தலைமுடியைப் பற்றி இழுத்து முதுகில், கழுத்தில் என சரமாரியாக விழத் தொடங்கியதும் வலிதாங்காமல் உரத்துக் குரல் எழுப்பினாள் அவள்.

''ஸ்டாப் இட் ஐ ஸே...உங்களுக்கென்ன பைத்தியம் பிடிச்சிடுச்சா...? இல்லை வெறியா...?''

அவன் அடிக்கிற சத்தமும், அவளது கத்தலும் கேட்டு சரவணனின் பெற்றோரும் அன்றிரவு அங்கேயே தங்கிய நித்யாவும் எழுந்து ஓடிவந்தனர். பயந்துபோய் படபட வென்று கதவு தட்டினர். அழுது கொண்டே கதவைத் திறந்த தாமினி புடவைத் தலைப்பை வாயில் பொத்தி அழுகையை அடக்க முயன்றாள். அவளருகில் போய் தோளில் கைபோட்ட சிவகாமி, ''என்னம்மா...என்ன நடந்தது...?'' என்று ஆதரவாகக் கேட்டாள். தாமினியிட மிருந்து பதில் வராமற் போகவே தர்மலிங்கம் மகனின் பக்கம் திரும்பினார்.

''என்னடா சரவணா...என்ன நடந்தது...?''

அவன் பேசாமல் நின்றான்.

''அவளை அடிச்சியாடா...!''

தலைகுனிந்த சரவணன், ''ஆமாம், அடிச்சேன்'' என்றான். பகீரென்றது அவருக்கு.

''உனக்கென்னடா ஆச்சு...? மூளை கலங்கிப் போயிடுச்சா...? கல்யாணம் செய்துக்கிட்ட முதல் நாள் ராத்திரி யாரும் புதுப்பெண்டாட்டியை அடிப்பாங்களா...?

என்னடா இதெல்லாம்...? எதுக்காக அடிச்ச...?''—வயிறு பதறி நெஞ்சு துடிக்கக் கேட்டார்.

குனிந்த தலை நிமிராமலே பதிலளித்தான் அவன்.

''அவளையே கேளுங்கப்பா என்ன விஷயம்னு...?''

''என்னம்மா...?''

''வந்து...வந்து...''

''ஏன் தயங்கித் தடுமாறறே...என்கிட்ட சொன்னதை என்கிட்ட சொன்ன அதே மாதிரி பளிச்சுனு இவங்ககிட்டே-யும் சொல்ல வேண்டியது தானே...?''

''சொல்லும்மா... இனிமேல் நாங்கதான் உனக்கு அப்பா அம்மா எல்லாம். எதுவானாலும் தயங்காமல் பளிச்சினு சொல்லும்மா...''

''நானா...நான் ஒன்றுமே சொல்லலையே மாமா...''

''ஒன்றும் சொல்லலையா...? எத்தனை பொய் சொல்றா பாருங்கப்பா...கழுத்துல் வந்தவ முதல் முதலா என்னைப் பார்த்து என்ன சொன்னா தெரியுமாப்பா...?''

''என்னடா இதெல்லாம்...எனக்கு மனசை என்னவோ செய்யறதுடா...''

''உங்களுக்கே என்னவோ செய்தா எனக்கு இன்னும் என்னவெல்லாம் செய்திருக்கும்னு யோசிச்சுப் பாருங்க...''

''அப்படி என்னதான்டா சொன்னா அவ...?''

''அவ யாரையோ காதலிச்சாளாம். அவனைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு இருந்தாளாம். நடுவில் நான் புகுந்து அவசரப்படுத்தி கல்யாணத்தை முடிச்சுக்கிட்டே-னாம்...அதனால் என்கூட வாழ முடியாதாம். இன்னமும் அவனைத் தான் காதலிக்கிறாளாம். அதனால் அவன் கூடத்தான் வாழ்வாளாம்...''



''ஐயையோ...'' என்று துடித்தாள் தாமினி. ''சத்திய-மாகச் சொல்றேன் மாமா...நான் அப்படியெல்லாம் ஒன்றுமே சொல்லலை...'' என்று கதறித் துவண்டாள்.

''பொய் சொல்றாப்பா. அவ ஒருத்தனைக் காதலிச்சது உண்மையா, பொய்யான்னு கேளுங்கப்பா...''

நெஞ்சு பதற, அடிவயிறு துடிக்க எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நித்யா முதல் முறையாக இடையில் குறுக்கிட்டாள்.

''என்ன சரவணா இதெல்லாம்...? இப்படி எல்லாரை-யும் கட்டி வச்சுப் பேசற பேச்சா இது...? என்ன செய்யற நீ...?''

''நீ சும்மா இரு நித்யா. உனக்குத் தெரியாது. இன்னிக்கு ராத்திரியே எனக்கு இதுக்கு முடிவு தெரிஞ்சா கணும். வெறும் தாலி கட்டிட்டா மட்டும் பெண்டாட்டி-யாகி விட முடியுமா...? கல்யாணத்துக்கு முன், காதலிச்ச அவனை எல்லாம் தாண்ட முடியுமா உன்னால்? எந்த ஆண் தாங்கிக்குவான் சொல்லு...?''

''இல்லை...நான் அந்த மாதிரி ஒரு வார்த்தை சொல்லலை...அவர் தானாகக் கற்பனை பண்ணி சொல்றார்.''

''நானா கற்பனை பண்றேன்... நீ யாரையோ காதலிச்சது உண்மையா இல்லையா...?''

மௌனமாகத் தலை குனிந்தாள் தாமினி.

''பாருங்கப்பா... நீயே பாருடா நித்யா... இவ யாரையோ காதலிச்ச விஷயம் இவ சொல்லாமல் எனக்கு எப்படிடா தெரியும்...?'' பரிதாபமாக அவன் பக்கம் திரும்பினாள் நித்யா.

''என்ன பி...ஸாரி தாமினி இதெல்லாம்...''

''நீங்க அவர் சொல்றதை நம்பறீங்களா...?''

''நித்யாவுக்கு என்னை ரொம்ப நல்லாத் தெரியும். இன்னிக்கு நேற்றிக்கு இல்லை. கிட்டத்தட்ட பதினைந்து...

பதினாறு வருஷ சிநேகம். அதனால் நீ சொல்லி அவன் என்னைத் தெரிஞ்சுக்க வேணாம். நான் என்ன செய்வேன் செய்ய மாட்டேன்னு தெரியும்...''

''ச...ரவணா— வேண்டாண்டா ப்ளீஸ், போறும்டா...''

''இல்ல நித்யா...அவ சொல்லாமல் எனக்கு அவ காதல் விவகாரமெல்லாம் எப்படித் தெரிய வரும்? கல்யாணத்துக்கு முன்னால் தெரிஞ்சிருந்தால்கூட கல்யாணம் வேணாம்னு நிறுத்தி இருப்பேன்...''

''அப்படியே இருந்தாலும் கல்யாணத்துக்கு முன்னால் நடந்ததை நீ இவ்வளவு பெரிசுபடுத்தக் கூடாதுடா...''

''ரொம்ப சுலபமா நீ சொல்லிட்ட...வெறும் காதலோடு மட்டும் நின்றிருந்தால் பரவாயில்லை...''

''சீ! என்ன பேசற சரவணா...? தாமினியை எனக்குத் தெரியும்டா...ரொம்ப நல்ல பொண்ணுடா...''

''நீ வெறும் புரொஃபசர், ஸ்டூண்ட் உறவுல பார்த்து சொல்ற...அவன் காதலனாக இருந்து பார்த்திருக்...''

''சரவணா...ப்ளீஸ் ஸ்டாப் டாக்கிங் லைக் தட். நீ இவ்வளவு சந்தேகப்படறபோது நான் உன்கிட்ட ஒரு உண்மையைச் சொல்லித்தான் ஆகணும். நான் அவளுடைய புரொபசர் மட்டுமில்லை. நீ சந்தேகப்படற அந்தக் காதலனும் நான்தான். நாங்க ரெண்டு பேரும் உயிருக்கு உயிராக நேசிச்சோமே தவிர விரல் நக நுனி கூட மேல பட்டதில்லைடா... நம்புடா...''

அதிர்ந்து போன மாதிரி அப்படியே நின்று போனான் சரவணன். பேச வாய் எழாதவனாகத் தடுமாறினான்.

''நீ...நீ...நீயா அவளுடைய... அவள் உன்னையா...?''

''ஆமாண்டா...நானேதான்.''

''ஏன் என்கிட்ட சொல்லலை...?''



''சொல்ற சந்தர்ப்பம் கிடைக்கலை.''

''பொய். நான் இவளைக் கல்யாணம் செய்துக்க முடிவு பண்ணின அன்னிக்கு காலைல நீ வீட்டுக்கு வந்திருந்தாயே—அப்போவாவது சொல்லியிருக்கலாம் இல்ல...?''

''அப்போ சொல்ல வேண்டிய அவசியமில்லேன்னு பேசாமல் இருந்துட்டேண்டா...''

''அந்த மாதிரி எத்தனையோ விஷயங்களை அவசியமில்லைன்னு மறைக்கலாமில்ல...?''

''ச...ர...வ...ணா...?''

''ப்ளீஸ் நித்யா. தயவு செய்து இந்த இடத்தை விட்டு போயிடுடா...உன்னைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கலை. எனக்கு இப்படி ஒரு துரோகம் செய்வேன்னு நினைக்கலை...''

''சரவணா...''

''இவ்வளவு பெரிய விஷயத்தை மறைச்சு வச்ச நீ வேறு எதை மறைக்கத் துணியமாட்ட...?''

''அபாண்டமா, அநியாயமா பழி சொல்லாத சரவணா...?''

''எது அபாண்டம்? எது அநியாயம்? நீ செய்யலாம். நான் சொல்றது தப்பா...?''

வாயடைத்து நின்றான் நித்யா.

''எனக்கு அவளைக் கல்யாணமும் செய்து வச்சிட்டு நீயும் வந்திட்டு போக நினைச்சிருக்கிற உங்க உத்தேசம் எனக்கு தெரியாதுன்னு நினைச்ச இல்ல...?''

''அடப் பாவி....!''

''யார் பாவி....? நீயா நானா....? இப்படிப்பட்ட உயிர் நண்பன் கிட்டேயிருந்தே உண்மையை மறைச்ச நீ என்ன செய்ய மாட்ட...?''

''சரி. சந்தேகம்ன்றது உன் கண்ணை மறைக்குது. நான் என்ன சொன்னாலும் நீ நல்லபடியாக எடுத்துக்கப் போறதில்லை. அதனால் எது சொல்லியும் உபயோகமில்லை. எப்போ நீ என்னை நல்லவன்னு நினைக்கிறாயோ, நீயே மதிச்சு திருப்பி கூப்பிடுகிறாயோ அப்போ மறுபடியும் இந்த வீட்டுக்கு வரேன். அதுவரை இந்த வீட்டுப்படி மிதிக்க மாட்டேன்.''

சொல்லிவிட்டு வாசல் கதவு திறந்து வெளியேறினான் நித்யா. அவன் போவதைப் பார்த்து ஒன்றும் சொல்ல இயலாமல் சிவகாமியும், தர்மலிங்கமும் மௌனித்திருக்க அதற்கு மேல் தாங்குகிற சக்தியற்று மயங்கிக் கீழே சரிந்தாள் தாமினி.

அதனால் சிறிதும் பாதிக்கப்படாதவனாகத் தன் அறைக்குப் போய் கதவை மூடித் தாழிட்டுக் கொண்டான் சரவணன்.

## 10

அன்றிலிருந்து பத்து நாட்களாக அந்த வீட்டில் மயான அமைதி நிலவிற்று. யாரும் யாருடனும் பேசிக் கொள்ளவில்லை. நெஞ்சுகனம் தாங்காமல் ஒவ்வொருவரும் புலம்பிக் கொண்டிருந்தனர். ஆளுக்கு ஓர் அறையில் அடைந்து கிடந்தனர். சிவகாமியம்மாள் மட்டும் தாங்க இயலாதவளாகக் கணவனைத் தேடிக்கொண்டு போய் கண்ணீர் விட்டு அழுதாள்.

''இருந்திருந்து ஒரே பையனுக்குக் கல்யாணம் செய்தோமே...அவன் தலைவிதி எப்படியாயிடுச்சு பார்த்தீங்களா...?''

''இரு சிவகாமி. அவசரப்படாதே. எங்கேயோ ஏதோ தப்பு நடந்து போயிருக்கு. நமக்குத் தெரிஞ்சு நித்யா



அந்த மாதிரிப் பையனெல்லாம் இல்லை. அந்தப் பொண்ணு வேணும்னாலும் புதுசாக இருக்கலாம். ஆனால் நித்யா அப்படி இல்லையே... சரவணனுக்கே கூட அது தெரியும். ஆன்னாலும் ஏதோ சந்தேகத்துல கோபம் கண்ணை மறைக்கக் கத்தறான். அவனை மாதிரியே நாமும் அவசரப் படலாமா? கொஞ்சம் அமைதியா, நிதானமா எங்கே எது தப்பாச்சுன்னு ஆராய்ந்து பார்க்க வேணாமா...?''

''இனிமே ஆராய்ந்து என்னங்க செய்யப் போறோம். கை தவறி விழுந்த கண்ணாடியாகப் போயிடுச்சு என் மகன் வாழ்க்கை. முன் பின் யோசிக்காமல், தீர விசாரிக்காமல் கல்யாணம் செய்துகிட்டு இப்போ அவஸ்தை படறான். எல்லாம் அந்தப் பொண்ணால் வந்த வினைங்க. பார்க்க எவ்வளவு சாதுவாகத் தெரியுது. ஆனால் உள்ளுக்குள் எத்தனை பெரிய காரியம் செய்திருக்கு பாருங்க...''

''சிவகாமி'' என்று அதட்டினார் அவர்.

''அந்த மாதிரியெல்லாம் தப்பாக யாரைப் பற்றியும் பேசக் கூடாது சிவகாமி. அதிலும் ஒரு பொண்ணைப் பற்றி பேசவே கூடாது. என்ன காரணத்தினாலோ நமக்கே பொண்ணில்லை. வீட்டுக்கு வந்திருக்கிற பெண் பாவத்தைக் கொட்டிக்கிட்டோமானால் ஏழேழு ஜென்மத்துக்கும் பொண் பிறக்காமல் போயிடும்...''

அந்த அம்மாள் பேசாதிருந்தாள். அவரே தொடர்ந்து சொன்னார்.

''...இந்தப் பொண்ணு முகத்தைப் பார்த்தால் பால் வடியுது. குழந்தை மாதிரி தெரியுதே தவிர தப்பாக ஒண்ணும் தெரியலை.''

''நீங்க தப்பு இல்லைன்னு சொல்றீங்க. ஆனால் நித்யா தான் அவளைக் காதலிச்சதை ஒப்புக்கிட்டுப் போயிட்டானே...''

''காதலிச்சிருக்கலாம் சிவகாமி. கல்யாணத்துக்கு முன்னால் எத்தனையோ பேர் இந்த மாதிரி காதல்ன்ற

வலையில் மாட்டிக்கிறாங்க. அதுவும் இந்தக் காலத்துப் பசங்க, ஸ்கூல் படிக்கிற பையன்களும், பொண்ணுங்களும் காதலிக்கிற மாதிரியான சினிமாவெல்லாம் வருது. பார்க்கிறாங்க. அதனால் பாதிக்கப்படறாங்க. இவனைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைக்கிறதெல்லாம் காதலாகிவிட முடியுமா...?''

''அப்போ நீங்க என்னதான் சொல்றீங்க...?''

''எதுக்கும் அவசரப்படக் கூடாதுன்னு சொல்றேன். சரவணன் மாதிரி வாய்க்கு வந்த மாதிரியெல்லாம் உளறக் கூடாதுன்னு சொல்றேன். அப்புறம் அதிலெல்லாம் உண்மை இல்லேன்னு வச்சுக்க. கொட்டின வார்த்தையை அள்ள முடியுமா...? பெண் பாவம் ரொம்பப் பொல்லாதது சிவகாமி.''

அதோடு நிறுத்திக் கொண்டு அந்த அம்மாள் வெளியில் வந்தபோது சரவணன் மாடியிலிருந்து இறங்கி வந்தான்.

''காப்பி குடிச்சியாப்பா...?'' என்று கேட்டாள் அவள். ஆச்சு என்று தலையாட்டினான்.

''இன்னிக்குக் காலேஜுக்குப் போகப் போறியா...?''

''போகலாம்னுதான் இருக்கேன்.''

அவன் பதில் சொல்லிக் கொண்டிருந்தபோதே இரண்டு பைகள் நிறைய புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு ஆட்டோவில் வந்து இறங்கினாள் மகாலஷ்மியம்மாள். ஒரு விநாடி சிவகாமி தயங்க 'அந்த அம்மாவுக்கு எதுவும் தெரிய வேண்டாம்' என்று சரவணன் காட்டிய சைகையில் சுதாரித்துக் கொண்டாள்.

''வாங்கம்மா... உட்காருங்க....'' என்று கூப்பிட்டாள்.

''இதெல்லாம் தாமினியோட காலேஜ் புஸ்தகங்கள். ஒரு வேளை காலேஜ் போனாளானால் அவளுக்குத் தேவையாக இருக்குமோன்னு கொடுத்துட்டுப் போக வந்தேன். கல்யாணத்துக்கு முன்னாலேயே ஏதோ பரீட்சை இருக்குன்னு சொல்லிண்டிருந்தா...''



''உட்காருங்க. தாமினி மேல இருக்கா. கூப்பிடறேன்.''

''இல்லம்மா. வேணாம். நான் அப்புறம் சாவகாசமாக வரேன். ஆட்டோவை நிற்க வச்சிருக்கேன். போய் அவருக்கு சமைச்சுப் போட்டு கடைக்கு அனுப்பணும். தாமினிகிட்டே சொல்லிடுங்கோ. நான் இப்போ போயிட்டு வரேன்.''

புத்தகங்களை டீபாய் மீது அடுக்கிவிட்டு காலிப் பைகளுடன் மகாலஷ்மியம்மாள் அகன்றதும் டீபாயை நெருங்கி புத்தகங்களைக் கையில் எடுத்துப் பார்த்தான் சரவணன். ஒவ்வொரு புத்தகமாகப் பார்த்துக்கொண்டே வந்தபோது நடுவில் மறைத்து வைத்திருந்த டைரி கண்ணில்பட எடுத்துப் புரட்டினான். நெற்றி சுருங்க, புருவங்கள் சுருங்க ஒவ்வொரு பக்கமாகப் படிக்கத் தொடங்கினான்.

பக்கம் பக்கமாக நித்யா, நித்யா, நித்யா... தாமினி நித்யாதரன்.

தாமினி நித்யாதரன்
தாமினி நித்யாதரன்.

தன்னைப் பற்றி அவள் எழுதியிருந்த 'சரவணா... நான் உன்னை வெறுக்கிறேன். என்னை விட்டு விலகிப் போயேன்....' நெஞ்சில் நெருப்புத் துண்டாக விழ, டைரியை எடுத்துக் கொண்டு மிக வேகமாக மாடிக்குப் போனான்.

வெளியில் வர பயந்து, அறைக்குள் என்ன செய்வதென்று புரியாமல் மேற்கூரையை வெறிக்கப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த தாமினியின் முகத்தில் அந்த டைரியை விசிறி எறிந்தான்.

''உன் டைரிதானே இது...?''

எழுந்து நின்றாளே தவிர தாமினி பதில் சொல்லவில்லை.

''உன் கையெழுத்துதானே எல்லாம்...?''

''...........''



16256
3-2-00/90

"பக்கம் பக்கமாக நித்யா, நித்யா, நித்யான்னு எப்படி உருகி இருக்க பாரு. அதே மாதிரி என்னை எந்த அளவுக்கு வெறுத்திருக்கேன்னும் தெரியும். அப்படி வெறுத்தவள் எதுக்காக வாயை மூடிக்கிட்டு கல்யாணம் செய்துக்கிட்ட...' மாட்டேன்னு மறுத்திருக்க வேண்டியதுதானே...?"

மெல்ல தலை உயர்த்தி அவனைப் பார்த்தவள் வேறு வழி இன்றி பதில் சொன்னாள்.

"என் அம்மா அப்பா என் சம்மதம் எதையும் கேட்கலை..."

"அவங்களுக்குத் தெரியுமா உன் காதல் லீலைகள் எல்லாம்?"

"சரவணன், தயவு செய்து கொஞ்சம் நாக்கை அடக்கிப் பேசுங்க..."

"அட...! இப்போ என்னை மிரட்டற அளவுக்குத் துணிஞ்சிட்டியா...?" என்ன நினைச்சுக்கிட்டு என்னை மிரட்டிப் பார்க்கற...? நித்யா சொல்லிட்டுப் போனானா...?"

"அனாவசியமாக அவரை ஏன் இழுக்கறீங்க...?"

"ஓஹோ... அவனைச் சொன்னால் பொத்துக்கிட்டு வருதோ...?"

"ஆமாம். ஒரு அப்பாவி மனுஷன் மீது வேண்டாத பழியெல்லாம் சுமத்தினால் யாருக்கும் கோபம் வரும்...."

"அவனுக்குப் பரிஞ்சுக்கிட்டு என்னை எதிர்த்தா பேசற... எத்தனை தைரியம்டி உனக்கு..." எவ்வளவு அழகா திட்டம் போட்டு காய் நகர்த்தி இருக்கே..." என்று மீண்டும் அவளை இழுத்து அறையலானான்.

அந்த சத்தம் கேட்டு தர்மலிங்கமும், சிவகாமியும் படி யேறி ஓடி வந்தனர். அறை கதவு திறந்திருக்க உள்ளே வந்து சரவணனைத் தடுத்து நிறுத்த முயன்றதில் நாலைந்து அடிகள் தங்கள் மீது விழ, வாங்கிக் கொண்டனர்.



"சரவணா... போதும்டா... அவ சொன்ன மாதிரி நீ மிருகமாகத்தான் மாறிப் போயிருக்க. இல்லைன்னால் ஒரு பொண்ணைக் கை நீட்டி அடிக்க இப்படி துணிவா யாடா...?"

"அப்பா... நீங்களே பாருங்க... இந்த டைரியைப் படிச்சுப் பாருங்க. என் வயித்தெறிச்சலுக்குக் காரணம் புரியும்."

"யார் டைரி இது...?"

"இவளுடையதுதான்."

'அதை ஏன் நீ படிச்ச...?"

"என் கைல கிடைச்சது. அவங்க அம்மா கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போன புஸ்தகங்களுக்கு நடுவில் இது இருந்தது."

"இருந்தால் உடனே எடுத்துப் படிச்சுடறதா...? படிக் கிறதுக்கு முன்னால் அவகிட்ட பர்மிஷன் கேட்டாயா...?" மௌனமாகத் தலைகுனிந்தான் அவன்.

"பார்த்தாயா சரவணா... சந்தேகம் எந்த அளவுக்குக் கீழ்த்தரமாக நடந்துக்க உன்னைத் தூண்டி இருக்கு...?"

"சந்தேகமில்லைப்பா... நிரூபணமாகிவிட்ட உண்மை. இந்த டைரியின் பக்கங்களே சாட்சி. சரவணா நான் உன்னை நெஞ்சார மனமார வெறுக்கிறேன்னு எழுதியவள் எதற்காக என்னைக் கல்யாணம் செய்துண்டாள்னு கேளுங்கப்பா. நீங்க வக்கீல் இல்லையா...? ரெண்டும், ரெண்டும் நாலுன்னு உங்களுக்குப் புரியாதா...?"

"அந்தக் கணக்குலதான் எங்கோ உதைக்குது. எங்கேன்னு கண்டுபிடிச்சுடுவேன். அதுவரை நீ கொஞ்சம் பொறுமையாக இருக்கியா ப்ளீஸ்..."

"அ...ப்பா..." என்று அரண்டு போய் அவரை ஏறிட்டுப் பார்த்தான் அவன். அப்பா எதையோ கண்டு பிடிக்க முயலுவதை உணர்ந்து திடுக்கிட்டான்.

அவனது முக பாவத்தை கவனித்துக் கொண்ட தர்மலிங்கம் நிதானமாகவே பேச்சை ஆரம்பித்தார்.

''முதல்ல அந்த டைரியை அவகிட்ட கொடு.''

''மாட்டேன்ப்பா, இதுதான் என்னுடைய ஒரே சாட்சி.''

''எதுக்கு சாட்சி.''

''இவள் நடத்தை கெட்ட பொண்ணுன்னு நிரு—''

பளாரென்று மகனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார் அவர்.

''சீ! என் பிள்ளைதானடா நீ...?'' என்று குமுறினார்.

கன்னத்தைத் தடவிக் கொண்ட சரவணன் சிறிதுகூட அதற்காகக் கவலைப்படாதவனாகச் சொன்னான்.

''நீங்க எவ்வளவு வேணும்னாலும் என்னை அடிங்க. அதற்காக இவளைப் பற்றின அபிப்பிராயத்தை மாற்றிக்க நான் தயாராக இல்லை.''

''சரி. இப்போ என்ன செய்யச் சொல்ற...?''

''இந்த டைரியை அவளுடைய அம்மா, அப்பாவும் பார்க்கணும்னு ஆசைப்படறேன். நேற்று என்னவோ உத்தமன் மாதிரி சொல்லிட்டுப் போனானே...உங்க தத்துப் பிள்ளை. அவனை நிற்க வச்சு இந்த டைரியை சாட்சியாக வச்சுண்டு கேள்வி கேட்கப் போறேன்.''

''நோ''...அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் தர்மலிங்கம்.

''அந்த மாதிரியெல்லாம் மனுஷங்க உணர்வுகளை அசிங்கப்படுத்த நான் விட மாட்டேன்.''

''என் உணர்வுகளை மட்டும் இவங்க ரெண்டு பேருமாகச் சேர்ந்து புண்படுத்தலாமா...?''



''புண்பட்டதாக நீ நினைத்தால் அதுக்கு என்ன செய்யணுமோ அதைச் செய்...''

''எனக்கு இவ வேணாம்ப்பா...''

''சரி.''

''இவ முகத்தைப் பார்க்கக்கூட நான் பிரியப்படலே.''

''சரி.''

''ஷி இஸ் எ ப்ளடி ச்சீட்...''

''சரவணா எப்ப நீ அவளை வேணாம்னு சொல்லிட்டியோ அதுக்கு மேல் அவளைப் பற்றி பேசற உரிமை உனக்கு இல்லை.''

''நான் பேசலை. எனக்கு டிவோர்ஸ் வாங்கித் தாங்க.''

''சரி.''

''மியூச்சுவல் ஸெட்டில்மெண்ட்டுக்கு ஒத்துக்கறாளா கேளுங்க?''

''ஒத்துக்கலைன்னால்.''

''அடல்ட்ரி கமிட் பண்ணினாள்னு சொல்லி அவ மேல் கேஸ் போடுவேன்.''

''அதை நிரூபிக்கணும். நிரூபிக்கிறது அத்தனை சுலபமில்லை. அதுவும் கல்யாணமான பத்து நாளுக்குள் டைவர்ஸ் கேட்கிறது ஒரு எக்ஸ்ட்ராடினரி கேஸ்.''

''அப்போ என்ன பண்ணலாம்னு நீங்களே சொல்லுங்க?''

''நீ ரொம்ப கொடுமை படுத்தற. தாங்க முடியாத கொடுமையாக இருக்குன்னு சொல்லி க்ருயல்டி கேஸை எக்ஸெப்ஷனா உடனடியாக விசாரத்திற்கு ஏற்பாடு செய்யலாம்.''

''செய்துடுங்கப்பா.''

''குடும்ப கோர்ட்டுலயே கேட்டு வாங்கிடலாம்.''

''சரிப்பா.''

''அதுக்கும் எப்படியும் நாலைந்து மாசமாவது ஆகும்.''

''அவ்வளவு ஆகுமா?''

''கட்டாயம் ஆகும்.''

''உங்களால் சீக்கிரம் வாங்கித் தர முடியாதா?''

''முயற்சி செய்யறேன். அதுவரை இவள் இங்கே இருக்கலாமில்லையா...?''

''இருக்கிறதைப் பத்தி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் என் முகத்துல மட்டும் விழிக்க வேண்டாம்.''

''சரி. இதுல நான் இவளுடைய வக்கீலாக இருந்து நீ ரொம்ப கொடுமைப்படுத்தறதாகச் சொல்லித்தான் அப்ளை பண்ணப்போறேன். இவ சார்புலதான் வாதாடப் போறேன்...''

''என்னப்பா இது...?''

''அப்போதான்டா நீ நினைக்கிற மாதிரி சீக்கிரம் டைவர்ஸ் கிடைக்கும்.''

''அப்போ சரி.''

அவன் அறையைவிட்டு நகர்ந்ததும் சிவகாமி தலையில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

''நம்ம குடும்ப மானம் இப்படியா சந்தி சிரிக்கணும்...? எந்த வேளைல இவ வீட்ல காலடி எடுத்து வச்சாளோ அன்னிக்கே—''

''சிவகாமி...வாயை மூடறியா கொஞ்சம். நீ கீழே போ. நான் இந்தப் பொண்ணுகிட்ட தனியாகப் பேசணும். பேசிட்டு வரேன்.''

''என்ன பேசப் போறீங்க?''



''அது என் கட்சிக்காரரான அவளுக்கும் எனக்கும் இடையே உள்ள விஷயம். உன்கிட்ட சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது...''

''எப்படியோ போங்க...'' என்று அந்த அம்மாள் அகன்றதும் தர்மலிங்கம் அவளை உட்கார வைத்து மெதுவாக, நிதானமாக, அமைதியாக நீண்டநேரம் பேசினார்.

கடைசியாக விவாகரத்து கோரும் பத்திரங்களில் கையெழுத்து வாங்கிக்கொண்டு வெளியில் வந்தபோது அவரையும் மீறி மிக ஆழமான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

## 11

விவாகரத்து பத்திரத்தில் கையெழுத்திட்டு சமர்ப்பிக்கிற வரைதான் தாமினி அந்த வீட்டில் இருந்தாள். அதன்பின் தர்மலிங்கத்திடமும், சிவகாமியிடமும் சொல்லிக் கொண்டு தன் வீட்டிற்கு வந்துவிட்டாள்.

''மாமா...நான் என் வீட்டுக்கே போயிடறேன் மாமா. இங்கே இருக்கிறது கஷ்டமாக இருக்கு. சொந்தமில்லாத இடத்தில் இருக்கிற உறுத்தல் இருந்துகிட்டே இருக்கு...'' என்றாள்.

''சரி. ஜெய்ப்புமா. நானே உன் அப்பாகிட்டேயும், அம்மாகிட்டேயும் சொல்லி விட்டுட்டு வரேன்.'' என்று தானே அழைத்துக்கொண்டு வந்தார் அவர். தாமினியின் அப்பாவைக் கையெடுத்து கும்பிட்டு வேண்டினார்.

''என்னை நீங்க ரொம்ப ரொம்ப மன்னிக்கணும். என் பையன் உங்க பொண்ணு மேல் ஆசைப்படறானே...நல்லா வச்சுப்பான்னு நினைச்சுதான் கல்யாணம் செய்து கொடுத்தேன். ஆனால் முதல் ராத்திரியிலிருந்தே அவன்

உங்க பொண்ணை சரியாக நடத்தலை. மனநோயாளி மாதிரி நடந்துக்கறான். அவளை அடிச்சு உதைச்சு கொடுமைபடுத்தறான். மன்னெண்ணை ஊத்தி பத்த வைக்கப் போயிட்டான். இதுக்குமேல் இவ அங்கே இருந்தால் உயிருக்கு உத்திரவாதமில்லைன்னு கூட்டிக்கிட்டு வந்திட்டேன். உங்க பொண்ணை உங்ககிட்டேயே ஒப்படைச்சுட்டேன்...''

''என்ன...? என்ன...!'' என்று மிகவும் அதிர்ச்சியடைந்துபோய் தர்மலிங்கத்தை ஏறிட்டார் அவர்.

''நிஜமாகவா சொல்றீங்க...? இத்தனை நாளும் அவ சந்தோஷமா நிம்மதியா இருக்கான்னு இல்ல நாங்க நினைச்சுகண்டிருந்தோம்...? புதுசா கல்யாணமானவ... தொந்தரவுபடுத்த வேணாம்னு இல்ல வராமல் இருந்தோம்...''

''நீங்க நினைச்ச மாதிரிதான் இருந்திருக்கணும். ஆனால் எங்கேயோ....ஏதோ தப்பு நடந்து போயிடுச்சு....''

''தப்பு என் பேர்லதான். எங்க குடும்பத்துல இல்லாத விதமா பொண்ணு நன்னா வசதியா இருக்கணுமேன்னு எதையும் விசாரிக்காமல் கல்யாணத்துக்கு ஒத்துண்டேன் பாருங்க...அது என் தப்பு. அதனால்தான் இதுவரை குடும்பத்துலை இல்லாத விதமா என் பொண்ணு என்கிட்டேயே திரும்பி வந்துட்டா போல இருக்கு...''மேல் துண்டால் வாயைப் பொத்திக்கொண்டார் அவர். உடம்பு குலுங்கிற்று. சமையற்கட்டின் நிலைப்படியில் சாய்ந்து நின்ற மகாலஷ்மியம்மாள் அப்படியே நின்று போனாள். அவர்கள் இருவரையும் சில வினாடிகள் குற்ற உணர்வோடு பார்த்துக் கொண்டிருந்த தர்மலிங்கம் அதற்குமேல் தாங்க இயலாதவராக எழுந்து கொண்டார். ''உங்க வருத்தமும், சோகமும் எனக்குப் புரியுது. அதை என்னால் போக்கவோ, குறைக்கவோ முடியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்ல ஆசைப்படறேன். என் பையன் எப்படி நடந்துகிட்



டாலும், அவன் உங்க பொண்ணை விவாகரத்து செய்ய ஏற்பாடு செய்திருந்தாலும் என்னைப் பொறுத்தவரை அவ என் மகளுக்கு சமம்தான். என்னால் அவளுக்கு என்ன உதவியெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையும் செய்ய முடியுமோ அத்தனையும் செய்ய காத்துக்கிட்டிருக்கேன்'' சொல்லி இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி மன்னிப்பு கேட்கிற பாவனையில் கூப்பி விடை பெற்றுக் கொண்டு திரும்பிப் பாராமல் போய் காரில் ஏறிக் கொண்டார் அவர்.

அன்றைய தினத்திலிருந்து அந்த வீட்டில் மயான அமைதி சூழ்ந்து கொண்டது. சிரிப்பு பேச்சு எல்லாமே அடங்கிப் போயிற்று. உள்ளுக்குள் ஒடுங்கிப் போன அவளது அப்பா ஒரு நாள் அவளைக் கூப்பிட்டுச் சொன்னார்.

''காலேஜுக்குப் போம்மா... அந்தப் படிப்புதான் உன் எதிர்காலத்துக்கு உதவப் போறது. எல்லாப் பொண்களுக்குமே இனி படிப்பும், வேலையும்தாம்மா நம்பிக்கை. உனக்கு வந்த மாதிரி கிராதகனாக ஒருத்தன் வந்தான்னால் எதிர்காலத்துக்கு யார் ஆதரவு சொல்லு...?''

மறுநாளே பிரின்ஸ்பாலை சந்தித்து ஓரளவு விஷயத்தை எடுத்துச் சொன்னாள். கிட்டத்தட்ட ஒரு மாத அட்டன்டென்ஸ் போய் விட்டதைத் தெரியப்படுத்தினாள்.

''ஆனாலும் நான் மேனேஜ் பண்ணிடுவேன் பாதர். ப்ளீஸ், எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்க பாதர்'' என்று கெஞ்சினாள்.

அன்பும், கனிவும், கருணையும் பொங்க அவளைப் பார்த்த பிரின்ஸ்பால் மென்மையான வார்த்தைகளில் இதமாகப் பேசினார்.

''போம்மா... கிளாஸ்ல போய் உட்காரு. உன் மனசுல பட்ட ரணத்தையும், வலியையும் கர்த்தர் நீக்கிடுவார்.

படிப்பில் முழு கவனமும் திரும்பினால் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் குறைஞ்சுப் போயிடும்மா...''

வகுப்பில் அவளைச் சிறிதும் எதிர்பார்க்காத நித்யா அதிர்ந்து போனான். 'என்ன ஆயிற்று...? திடீரென்று ஏன் கல்லூரிக்கு வரத் தொடங்கி இருக்கிறாள்...? படிப்பை முடிக்கச் சொல்லி சரவணனே அனுப்பியிருக்கிறானா...? அல்லது.... அல்லது...'

அன்று முழுதும் அவனால் பாடம் நடத்த முடியாமற் போயிற்று. பகல் சாப்பாட்டு நேரத்திற்குப் பின்னர் அனேகமாக அவனுக்கு வகுப்புகள் இருக்காது. ஆகையால் அறைக்காவது போகலாம் என்று கிளம்பிய போது தாமினி வந்து நின்றாள்.

''நான் உங்க கிட்டே கொஞ்சம் பேசணும் நித்யா...''

''என் கிட்டேயா...?'' என்று தயங்கினான் அவன்.

''வேற யார் கிட்ட என்னால் பேச முடியும்...?''

''இல்லை... சரவணன் பார்த்தால் அனாவஸ்யமாக சந்தேகப்படுவான். தப்பாக நினைச்சுப்பான்.''

''இனிமேல் புதுசாக அவர் தப்பாக நினைச்சுக்கவும், சந்தேகப்படவும் என்ன இருக்கு...? எல்லாமே முடிஞ்சுப் போச்சு.''

''அப்படின்னால்...?''

''டைவர்ஸுக்கு அப்ளை பண்ணிட்டார் அவர். கையெழுத்து போட்டு கொடுத்துட்டு நான் என் வீட்டுக்கு வந்துட்டேன்.''

சொல்ல முடியாத வருத்தத்தில் சில வினாடிகள் பேசாமல் இருந்தான் நித்யா. எல்லாவற்றிற்கும் தான் காரணம் என்ற போது நெஞ்சு வலித்தது. அடிபட்ட பார்வையோடு நிமிர்ந்தபோது தாமினியே பேசினாள்.



''அப்பாவுக்கும் இந்த அதிர்ச்சியில் உடம்பு சரியாக இல்லை. அடிக்கடி நெஞ்சு வலின்னு படுத்துக்கிறார். இந்த நிலைமையில் எனக்கு ஆதரவுன்னு யாருமில்லை. அப்பாவுக்கு ஏதாவது ஆகும்னால் நான்...எங்களுக்கு...''

''அப்படி ஒன்னும் ஆகாது மினி. நல்லவங்களை கடவுள் அதிக காலம் சோதிக்கமாட்டார். நான் வேணும்னால் சரவணன் கிட்ட பேசிப் பார்க்கட்டுமா?''

''வேணாம். அடிபட்ட சிங்கம் மாதிரி இருக்கார் அவர். மேலே பாய்ந்து பிடுங்கறதைத் தவிர வேறு ஒன்னும் அவரால் செய்ய முடியாது. நீங்க பேசறதால் இன்னும் அவர் கோபமும், ஆத்திரமும் அதிகமாகுமே தவிர வேறு ஒரு பிரயோசனமும் இருக்கப் போறதில்லை.''

''நம் வாழ்க்கை மட்டும் ஏன் இப்படி ஆயிடுத்து மினி...?''

''நீங்க சொன்ன மாதிரி விதி. வேறு எந்த காரணத்தைச் சொல்ல முடியும்?''

''நான் இப்போ என்ன செய்யணும் மினி?''

''எனக்கு ஆதரவாக இருக்கணும். உதவி செய்யணும். முதல்ல எங்க வீட்டுக்கு வந்து அப்பா கிட்ட பேசணும்.''

''நானா...?''

''வேறு யாரால் எனக்கு இதெல்லாம் செய்யமுடியும் நித்யா...?''

''சரி வரேன்.''

அன்று மாலையே அவன் அவளது வீட்டிற்குப் போனான். அவளது அம்மாவிடம் பேசினான். தம்பியிடம் பேசினான், கடையிலிருந்து திரும்பி வந்த அப்பாவிற்கு ஆறுதல் சொன்னான்.

அவனது கைகளைப் பற்றிக்கொண்டு முதல் முறையாகக் கண்ணீர் விட்டுக் கதறினார் அவர். உடைந்து

போனார். "உங்க சினேகிதன் எப்படிப் பண்ணிட்டான் பார்த்தீங்களா...?" எனக் குமுறினார். பின்னர் கண்களைத் துடைத்துக் கொண்டு ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவராகச் சொன்னார்.

"என் பொண்ணுக்கு இனி எதிர்காலமில்லை. வாழ்க்கை இல்லை. உங்களோடு சம்பந்தப்படுத்தி பேசறதால், சந்தேகப்படறதால் நீங்களும் கை விட்டுட்டால் வேற யாருமில்லை. நீங்களோ அவளைப் புரிஞ்சுக்கலேன்னால், ஆதரவாக இல்லைன்னால் வேற யார் புரிஞ்சுப்பா சொல்லுங்க...!"

நித்யா தலைகுனிந்து மௌனித்திருக்க கைகூப்பி வேண்ட ஆரம்பித்தார் அவர்.

"பதினெட்டு வயசுல ஒரு பெண்ணின் வாழ்க்கை முடிஞ்சுட முடியுமா...? வாழ்க்கையே இனிமேல்தான் ஆரம்பிக்க வேண்டிய வயசு...அந்த வயசுல எல்லாம் முடிஞ்சுப் போச்சுன்னு உட்கார முடியுமா? அது சாத்தியமா...? அவ மனுஷி இல்லையா....?"

"சார்...தயவு செய்து அமைதியாக இருங்க. எதுக்காக இப்படி உணர்ச்சி வசப்படறீங்க...?"

"பெத்த அப்பன் உணர்ச்சி வசப்படாமல் வேறு யார் படுவாங்க. பெத்தவன் கண் கலங்காமல் வேறு யார் கலங்குவாங்க...?"

"இல்லைன்னு சொல்லலை சார்...ஆனால்" அவர் அவனைப் பேசவிடவில்லை. ஆவேசம் வந்த மாதிரி மீண்டும் அவன் கை பற்றினார்.

"நீங்க எனக்கு ஒரு சத்தியம் செய்து தரணும். என்ன ஆனாலும் மினியைக் கைவிடறதில்லைன்னு சொல்லணும்...."

"இதை நான் சொல்லித்தான் நீங்க தெரிஞ்சுக்கணுமா சார்...?"



"இல்லை. எனக்கு வாய்விட்டுச் சொல்லணும், கையடிச்சு சத்தியம் பண்ணணும். விவாகரத்து முடிஞ்சு கையோட இவளைக் கல்யாணம் பண்ணிக்கணும்."

"சா...ர்...!"

"தயவு செய்து சொல்லுங்க. எனக்குள் கொஞ்சம் அமைதியையும், நிம்மதியையும் ஏற்படுத்துங்க..."

"ஓ.கே. சார் செய்யறேன். இதை உங்களுக்காக மட்டுமில்லை. எனக்காகவும் சேர்த்தே சொல்றேன்..."

"இது போதும் எனக்கு. இனிமேல் சாகிறதுக்கு நான் பயப்படமாட்டேன். என் ஸ்தானத்துல நின்னு எல்லாத்தையும் கவனிச்சுக்க, பொறுப்பு ஏத்துக்க மூத்த பையனாக நீங்க வந்து சேர்ந்துட்டீங்க. இனிமேல் எந்த கவலையும் இல்லை."

அவன் கைகளை இழுத்து அவர் தன் கண்களில் ஒற்றிக் கொண்டபோது புறங்கைகளில் சூடாக இரு சொட்டு நீர் தெறிப்பதை உணர்ந்தான் அவன்.

அன்றிலிருந்து தினமும் வரத்துவங்கி அந்த வீட்டில் ஒருவனாகவே மாறி குடும்பத்தோடு இழைந்தும் போனான்...

## 12

குடும்பக் கோர்ட் ஆனாலும் விவாகரத்து கிடைக்க கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் ஆயின. தனிப்பட்ட வழக்காகக் கருதி தர்மலிங்கம் அக்கறை எடுத்துக் கொண்டதன் காரணமாக சீக்கிரம் முடிந்து போயிற்று. விவாகரத்து பெற்றதற்கான அனைத்து பத்திரங்களையும் வாங்கி நேராக தாமினியின் வீட்டிற்கே போய் கொடுத்து விட்டு வந்தார் அவர். அங்கு உட்கார்ந்திருந்த நித்யாவைப் பார்த்து புன்சிரிப்போடு கேட்டார்.

''எம்பா... உனக்கும் சரவணனுக்கும் மனஸ்தாபம் னால் நான் என்ன செய்தேன். அம்மா என்ன செய்தாங்க? எங்களைப் பார்க்கவாவது வரக் கூடாதாப்பா...?''

''இல்லப்பா... வந்து...'' என்று தயங்கினான் அவன்.

''போனதெல்லாம் போகட்டும். இனிமேல் வர்றதெல்லாம் நல்லதாக இருக்கட்டும். தாமினி அவருக்கு மட்டுமில்லை. எனக்கும் பொண்ணுதான். கல்யாணத்துக்கு இன்விடேஷன் தர மறந்துடாதே....''

''அ...ப்பா....'' —என்று உணர்ச்சி வசப்பட்டு அருகில் வந்தவனை இழுத்து தன் மார்போடு அணைத்துக் கொண்டார் தர்மலிங்கம். பின்னர் குரல் கரகரக்கப் பேசினார்.

''இதப் பாரு... நடந்ததெல்லாம் நல்லதுக்கேன்னு எடுத்துக்க. சரவணன் மனசுல சந்தேகப் பேய் நுழைஞ்சு இப்படியெல்லாம் ஆட்டி வைக்கலேன்னால் உன் தாமினி உனக்குக் கிடைச்சிருக்க மாட்டா... சபையில் நீ செய்த சத்தியத்தையும் நிறைவேற்றி இருக்க முடியாது. அதனால் ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் கடவுள் இத்தனை நாடகமாடி இருக்கார்னு புரிஞ்சுக்கிட்டு என் மகனை மன்னிச்சுடுப்பா. அவன் சொன்ன அத்தனை சுடு சொற்களுக்கும் நான் இப்போ மன்னிப்பு கேட்டுக்கறேன்.''

''ஐயோ... என்னப்பா.... இது...? பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க?'' என்று பதறினான் நித்யா.

''தடியால் அடிச்சு தண்ணீரை விலக்கிவிட முடியாது. அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். நான் வரேன். வரட்டுமா... சார்... வரேம்மா தாமினி...''

கார் வரை வந்து நித்யாவும், தாமினியின் அப்பாவும் வழியனுப்பினார்கள். திரும்பி வந்தபோது டிரைவருக்குத் தெரியாமல் அடிக்கடி தன் கண்களைத் துடைத்துக்



கொண்டார் தர்மலிங்கம். உள்ளுக்குள் பொங்கி வந்ததை அடக்க முயன்றார். வீட்டு வாசலில் இறங்கிய போது சிவகாமி வெளியில் கிளம்புவதைப் பார்த்தார்.

''எங்கே சிவகாமி...?''

''கோவிலுக்குங்க. இனிமேலாவது நம் பையன் வாழ்க்கை நல்லா இருக்கணும்னு வேண்டிக்கப் போறேங்க...''

''எந்த கோவிலுக்குப் போற...?''

''கபாலீஸ்வரர் கோவிலுக்குத்தாங்க. சீக்கிரம் வந்துடுவேங்க.''

''பரவாயில்லை சிவகாமி. மெதுவாகவே வா. ஒரு அவசரமும் இல்லை'' என்றவர் அவள் போகக் காத்திருந்தார். கார் கேட்டைவிட்டு அகன்றதும் அதற்கு மேல் தாங்க இயலாதவராகப் படியேறி மாடிக்குப் போனார்.

சரவணனின் அறைக்குள் நுழைந்தபோது மடியில் விவாகரத்து பத்திரங்களை வைத்துக் கொண்டு எங்கோ வெறித்துப் பார்த்தவாறு அவன் உட்கார்ந்திருப்பதை கவனித்தார். உள்ளே போய் கதவை மூடித் தாழிட்டவர் அவனருகில் போய் மெதுவாக ''சரவணா...'' என்று அழைத்தார்.

திடுக்கிட்டுத் திரும்பியவன் சடாரென்று எழுந்து நின்றான்.

''உட்காருப்பா... உட்காரு...'' எனக் கையமர்த்தியவர் தானும் அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். குனிந்து தரையில் விழுந்த பத்திரத்தை எடுத்து தலையணை அடியில் வைத்தார். சில வினாடிகள் மௌனமாக அவன் முகத்தையே பார்த்தவர் சடாரென்று கண் கலங்க, குரல் கரகரக்கக் கேட்டார்.

''எம்பா... உன் திட்டம் பூர்த்தியானதில் உனக்கு திருப்திதானே...?''

''இட்டமா...? என்னப்பா சொல்றீங்க?''— சரவணனின் குரல் தடுமாறியது.

புன்னகை புரிய முயன்று தோற்றுப் போனார் அவர்.

''எல்லோரும் உன் நடிப்புல ஏமாந்து போயிருக்கலாம். நிஜம்னு நம்பியிருக்கலாம். ஆனால் ஒரு புத்திசாலி வக்கீல் ஏமாற மாட்டாம்ப்பா...''

''அ...ப்...பா...!'' —சரவணனின் கண்கள் கலங்க ஆரம்பித்ததில் அவருடைய கண்களும் கலங்கின. குரல் கரகரத்தது.

''கல்யாணமான முதல் நாள் ராத்திரி நீ செய்த அமர்க்களத்தை நானும் நிஜம்னு நம்பினது உண்மை. ஆனால் கூடவே ஒரு சந்தேகமும் இழையோடிச்சு. இந்த மாதிரி உரத்தக்குரல் எழுப்பறவனோ, அசிங்கமாக ஆத்திரப்படறவனோ இல்லையே நீ... அதெல்லாம் உன் சுபாவமில்லையேன்னு தோணித்து அமைதியாக உன்னை கவனிக்க ஆரம்பிச்சேன். கடைசியாக தாமினியின் டைரியைப் படிச்சுப் பார்த்ததற்கு அப்புறம் அமர்க்களம் பண்ணி நீ டைவர்ஸ் வேணும்னு கேட்ட பாரு...அன்னிக்குதான் பளீர்னு புரிஞ்சது. எல்லாமே பிடிபட்டது...''

''அப்பா...நான் அவளை ரொம்ப ரொம்ப...நேசிச்சேன்ப்பா...''

''தெரியும், அந்த அளவு நேசிக்கலேன்னால் இதைச் செய்திருக்க முடியாது...''

''தாமினி மட்டுமில்லேப்பா... நித்யா... அவனை.... நான்...அதற்கு மேலும் கட்டுப்படுத்த இயலாதவனால் அப்பாவின் தோளில் சரிந்து குமுறலானான் அவன்.

''...எப்படிப்பட்டவன்பா அவன்...அவனுடைய நட்பை நான் இழந்துட்டேன்ப்பா...''

''அவனுடையதைவிட உன் நட்புதாம்ப்பா உசத்தியானது. கொஞ்சம் கூட சுயநலமில்லாமல், தன்னைக் கெட்டவனாகக் கொடுமையானவனாகக் காட்டிக்கிட்டு... அவனுடைய சத்தியத்தைக் காப்பாத்தற வச்சு, அவன் காதலிச்சவளையே கை பிடிக்க வச்சு...'' அவரது குரல் அடைத்துக் கொண்டது. மேலே வார்த்தைகள் வராமல் தொண்டையில் சிக்கிக் கொள்ள தடுமாறினார் அவர்.



''அது மட்டுமில்லே சரவணா...ஒரு பொண்ணை தனக்காக இல்லாமல், அவளுக்காகவே நேசிக்க முடியும், அவளுக்காகவே காதலிக்க முடியும்னு காட்டிட்ட பாரு...இதுதான் நிஜமான அன்பு. உண்மையான காதல் ''Love for love sake...'' தலைகுனிந்து மௌனமாக உட்கார்ந்திருந்தான் அவன்.

''உன்னை நினைக்கிறப்போ ரொம்பப் பெருமையா இருக்கு சரவணா....கூடவே அடிவயித்தைப் புரட்டிக்கிட்டு சங்கடமும் வருது. இனிமேல் உன் வாழ்க்கை என்ன ஆகுமோன்னு பயமாக இருக்கு...நீ இப்படிப்பட்ட கொடுமைக்காரன், கட்டின பொண்டாட்டியைக் கல்யாணமான முதல் நாள் ராத்திரியிலிருந்தே அடிச்சு உதைச்சவன்றதும், கொடுமை தாங்க முடியாமல் அந்தப் பொண்ணு விவாகரத்து வாங்கிட்டுப் போயிருச்சு என்பதும் வெளில தெரிஞ்சுச்சுன்னா...திரும்ப உன்னைக் கல்யாணம் பண்ணிக்க எந்தப் பொண்ணு முன் வரும்...? யார் பொண்ணு கொடுப்பாங்க....?''

''வேணாம்ப்பா...எனக்கு இனி கல்யாணமே வேணாம். தாமினியோட நினைவுலயே நான் ஒரு மாமாங்கம் வாழ்ந்துவிடுவேம்ப்பா...''

''முட்டாள். தாமினிக்காக நாங்க உன்னைப் பெறலை. எங்களுக்கு ஒரு மருமகள் வரணும். கண்மூடறதுக்குள் நாங்க பேரன் பேத்திகளைப் பார்க்கணும்,''

''அதை அப்புறம் பார்த்துக்கலாம்ப்பா. நீங்க அடிக்கடி சொல்ற மாதிரி அதுவாக அமையட்டும். அப்போ

அ—8

பார்த்துக்கலாம்'' வந்து...வந்து...நித்யாவைப் பார்த்தீங்களா. எப்படி இருக்கான்? எப்போ கல்யாணமாம்...?''

பதில் சொல்லாமல் தலையை உயர்த்தி அவன் கண்களுக்குள் ஆழமாகப் பார்த்தார் அவர்.

''என்னப்பா அப்படி பார்க்கறீங்க....?''

''அந்தக் கல்யாணத்தைப் பார்க்கணும்போல இருக்கா உனக்கு...?''

''முடியாதேப்பா...''

''ஏன் முடியாது. நான் போய் நித்யாகிட்டேயும்' தாமினி கிட்டேயும் உண்மை முழுவதையும் சொல்லி—',

''அப்பா...'' என்று அலறினான் அவன்.

''அவ்வளவுதான். நான் நடித்த நடிப்பு செய்த காரியம் அத்தனையும் கெட்டுப் போயிடும்.''

''ஏன் சரவணா அப்படிச் சொல்ற...?''

''பின்னே என்னப்பா...? அவங்க ரெண்டு பேரையும் ஒண்ணு சேர்க்க, வாழ வைக்கிறதுக்காகத்தான் நான் நாடகமாடினேன் என்பது தெரிஞ்சால் அவங்களால் நிம்மதியாக வாழ முடியுமாப்பா...? நெஞ்சில் முள் குத்தின மாதிரி அவஸ்தைபட மாட்டாங்களா...? தங்களால் என் வாழ்க்கை வீணாயிட்டதாக நினைத்து உருகிப் போயிட மாட்டாங்களா...? அதுக்கப்புறம் அவங்க வாழ்க்கையில் நிம்மதியும் சந்தோஷமும் எப்படிப்பா இருக்கும்...?''

ஒரு வினாடி கண்களை மூடி அமைதியாக இருந்தார் அவர். உள்ளுக்குள் பொங்கிப் பொங்கி வந்தது. 'இவன் என் மகன்' என்கிற பெருமிதம் தோன்றிற்று. 'இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்...?' என்கிற வரிகள் தானாக மனதிற்குள் வந்தன. நட்பில், தன்னைக் கொடுப்பதில் மகாபாரதக் கர்ணனை மிஞ்ச ஒருவரும் இல்லை என்பார்கள். 'ஆனால் தன் மகன் கர்ணனையும்



மிஞ்சி விட்டான்' என்கிற நினைப்பில் நெஞ்சுக்குள் லேசானதோர் அமைதி படர்ந்தது. மீண்டும் கண்களைத் திறந்த போது கண்ணீர் நிறைந்திருந்ததில் அவனது முகம் தெளிவாகத் தெரியவில்லை. தன் கண்ணீரை அவன் பார்த்துவிடக் கூடாதென்று சடாரென்று எழுந்து கொண்டார்.

''நான் வரேம்ப்பா...'' என்று வேகமாக நடந்து வெளியில் போனார்.

அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்த சரவணன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

''எப்படிப்பட்ட அப்பா அவர்!''

அவரும் படியிறங்கிய தனக்குள் முணுமுணுத்தார்.

''எப்படிப்பட்ட மனுஷன் இவன்!''

(முற்றும்)

# நெஞ்சின் நெருப்பு

வீட்டுப் படியேறி நடையில் செருப்பை உதறி முற்றத்தில் இறங்கி செம்பு நீரால் கால் அலம்பிக் கொண்டே கேட்டாள் கஸ்தூரி.

''அம்மா...பாலா இல்லை...?''

முற்றத்தின் வெளிச்சத்தில் உட்கார்ந்து தோட்டத்தில் பூத்த ஜாதிப் பூக்களைக் கட்டிக் கொண்டிருந்த பவானியம்மாள் அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

''வந்ததும் வராததுமாக ஏண்டி பாலாவைத் தேடறே?''

''ப்ச்சு... சொல்லும்மா...பாலா எங்கே....?''

''முதல்ல நீ என் கேள்விக்கு பதில் சொல்லு. அப்புறமா தான் உனக்கு பதில் சொல்றேன். காலேஜ்லேருந்து வந்த கையோட பாலாவைத் தேடறியே என்ன விஷயம்...?''

''ஒண்ணுமில்லேம்மா. கெமிஸ்ட்ரியில் நிறைய நோட்ஸ் எழுதணும், டயகிராம்ஸ் வரையணும். பாலா இருந்தால் நிமிஷமா வரைஞ்சுத் தந்துடுவானேன்னு கேட்டேன்.''

டக்கென்று அந்த அம்மாளின் விரல்கள் பூ தொடுப்பதை நிறுத்தின. பார்வை சுறுசுறுவென்று உயர்ந்து அவள் முகத்தில் பதிந்தது.

''என்னம்மா அப்படிப் பார்க்கற...?''

''இல்ல... என்ன நினைச்சுண்டிருக்கிங்க நீயும் உங்கப்பாவும்...? ஏதாவது வேலை இருந்தால் பாலாவைத் தேடறீங்க. தெரியாமல்தான் கேட்கறேன். உனக்கும்,



உங்கப்பாவுக்கும் சேவகம் செய்யவா என் அண்ணா பையன் இங்கே வந்திருக்கான்....?''

அம்மாவின் கோபம் அவளுக்கு சந்தோஷமாக இருந்தது. ஆனாலும் வேண்டுமென்றே சீண்டினாள்.

''அதில்லேம்மா...பாலா வீட்ல சும்மாத்தானே இருக்கான்னு...''

''சொல்லமாட்டாயா பின்ன... சும்மாவா இருக்கான்....? ஒரு வருஷமா அவனும் ஒவ்வொரு இடமா ஏறி இறங்கிட்டுத்தான் இருக்கான். அவனுக்கு ஏற்ற நல்ல வேலையா கிடைக்கலை. அதுக்காக அப்பாவும், பொண்ணும் மாறி மாறி அவனை வேலை வாங்கறதா...? அவனை என்ன எதிர்நீச்சல் மாதுன்னா நினைச்சுண்டிருக்கிங்க...?''

அம்மாவின் கோபமும், ரோஷமும் அவளுக்குப் புரிந்தது. பிடித்திருந்தது. உள்ளுக்குள் ரகசியமாக சந்தோஷம் வந்தது. பாலாவை அப்பா வேலை வாங்குகிற போதெல்லாம் அவளுக்கு மனசு வலிக்கும், நெஞ்சு நோகும்.

''பாலா... கொஞ்சம் பாங்க்குக்குப் போயிட்டு வரியாப்பா...''

''பாலா...ராமனாதன் வீடு வரை போய் இந்த பேப்பர்ல கையெழுத்து வாங்கிண்டு வந்துடு. ரொம்ப முக்கியமான பேப்பர். ஜாக்கிரதை.''

''என்ன இன்னிக்கு இன்னும் ஹிண்டு வரலை...? கடைக்காரன் போடலை போலிருக்கு. போய் வாங்கிண்டு வாயேன் பாலா...''

''அப்பா வீட்டில் இருக்கிற வரை பாலாவை ஓடஓட விரட்டிக் கொண்டிருப்பார்.

''பாலா.. செய்யாதே ப்ளீஸ்...'' என்று சொல்ல வேண்டும் போலிருக்கும் இவளுக்கு. ஆனால் பேசாமல்

இருப்பாள். மாறி மாறி அப்பா அவனுக்கு வேலை இடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

இன்று 'தன் அண்ணா பையன்' என்று பரிந்து கொண்டு வரும் அம்மா மட்டும் வேலை சொல்லாமல் இருக்கிறாளா என்ன...? வேலைக்காரியிடம் சொல்ல மறந்ததையெல்லாம் பாலா செய்ய வேண்டும்.

''பாலா...இன்னிக்கு ரேஷன்ல அதிசயமா பாமாயில் தராளாம். கொஞ்சம் வாங்கிண்டு வரியா...? வேலைக்காரி வர்றதுக்குள் தீர்ந்து போயிடும்ப்பா...''

''ஐயயோ...காப்பிப் பொடி தீர்ந்து போயிடுத்தே... நான் கவனிக்கவே இல்லை. கொட்டை தரேன். அஜந்தா எதிர்ல சத்யா காபின்னு இருக்கு. அங்க வறுத்து அரைச்சுண்டு வந்துடு. ஒரு சுற்று அதிகமா வறுக்கச் சொல்லு. அப்போதான் காப்பி கலரா இருக்கும். பில்டர் பொடின்னு சொல்ல மறக்காதே...''

ஒருநாள் போல் காலை ஐந்து மணிக்கெல்லாம் தூங்கிறவனைத் தட்டி எழுப்புவாள். அவனும் தூக்கம் கலைந்த வெறுப்பு, கோபம், அசதி எதுவுமின்றி சாதாரணமாக இருப்பான். ஜமுக்காளத்தில் கால் மடித்து உட்கார்ந்து முகம் சுருக்காமல் கேட்பான்.

''என்ன அத்தை வேணும்...? சொல்லுங்க?''

''வேலைக்காரிகிட்ட பால்கார்டு கொடுக்க மறந்துட்டேன். கொஞ்சம் போய் வாங்கிண்டு வந்துடறியா...?''

''கார்டு கொடுங்க அத்தை...''

சிறிது கூட சலிப்பின்றி எழுந்து போவான். பால் வாங்கி வந்ததும் மறுபடியும் படுத்துக்கொள்ள மாட்டான். ஜமுக்காளத்தையும், போர்வையையும் மடித்து தலைகாணி மீது போட்டு அடுக்கி வைப்பான். கொல்லைப் பக்கம் போவான். பல் துலக்கின கையோடு கிணற்றில் நீர்



மொண்டு குளித்துவிட்டு வருவான். ஒருநாள் கூட அவன் குளியலறையில் குளித்து அவள் பார்த்ததில்லை. காலையில் குளியல் அறை ஒழியாது. அம்மா, அப்பா, அவள், பள்ளிக்கூடம் போகிற அவளது தம்பி திவாகர் என எட்டு மணி வரை குளியலறை ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும்.

ஊரிலிருந்து வந்த முதல் நாலைந்து நாட்கள்தான் பாலா குளியலறையில் குளித்தான். அதற்கே அப்பா அமர்க்களப்படுத்திவிட்டார்.

''நீ வீட்ல சும்மாத்தானே இருக்க...உனக்கென்ன அவசரம். இத்தனைக் காலைல குளிச்சு என்ன செய்யப் போற...?'' என்று காய்ந்தார்.

அதிலிருந்து பாலா குளியலறையில் குளிப்பதை விட்டுவிட்டான். இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டு சடசடவென்று ஜலை உருள கிணற்றடியிலேயே குளிப்பான். மார்கழி மாதக் குளிருக்குக் கூட அவன் குளியலறையோ வெந்நீரோ தேடியதில்லை.

''ஏன் பாலா வெளில குளிக்கற...? ரொம்பக் குளிராக இருக்கே...பாத்ரூம்ல குளிக்கலாமில்லே...?''

இவள் கேட்டதற்குக் கூட சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்.

''இந்தக் குளிரெல்லாம் எனக்கு ரொம்ப சகஜம் கஸ்தூரி...ஊர்ல ஐந்து மணிக்கு எழுந்து காவிரியில் குளிச்சுப் பழக்கம்...பழகினால் எல்லாம் சரியாகப் போயிடும்...''

பளீரென்று வெள்ளையாய் சிரிப்பான். அந்தச் சிரிப்பில்லாமல் அவனைப் பார்க்கவே முடியாது.

குளித்து முடித்து அழகாய் தழையத் தழைய வேஷ்டி கட்டிக் கொள்வான். நெற்றியில் பளிச்சென்று விபூதி பூசிக் கொள்வான். அதன் பின்பு யாரும் சொல்லாமலே பூஜை அறையைத் தானே சுத்தம் செய்ய ஆரம்பிப்பான்.

சுவாமிப் படங்களின் மீதுள்ள பழைய பூக்களையெல்லாம் எடுத்து துடைப்பான். சின்ன வெள்ளி குத்து விளக்கின் திரியை நிமிண்டி எண்ணெய் ஊற்றுவான். அம்மா வந்து விளக்கேற்ற வசதியாக தீப்பெட்டி எடுத்து வைப்பான். பின்னர் சின்ன எவர்சில்வர் பூக்கூடை கொண்டு போய் தெருக்கோடி வீட்டின் சுற்றுச் சுவருக்கு வெளியில் கொட்டிக் கிடக்கும் பவழமல்லிப் பூக்களை ஒன்று கூட நசுங்காமல் பொறுக்கி எடுத்து அந்தப் பூக்கூடையில் போட்டு, கொண்டு வந்து வைப்பான்.

அம்மாவாகக் கூப்பிட்டு காப்பி டம்ளரை நீட்டினால் வாங்கிக் குடிப்பான், இல்லாவிட்டால் எத்தனை நேரமானாலும் கேட்க மாட்டான்.

இவள் எழுந்து பல் துலக்கி காப்பி குடித்தபின் மெதுவாக யாருக்கும் தெரியாமல் அவனைத் தேடிக் கொண்டு போய் கேட்பாள்.

''காப்பி குடிச்சியா பாலா...?''

''நீ குடிச்சியா...?''

''நான் குடிச்சிட்டுத்தான் வரேன். நீ குடிச்சாச்சான்னு கேட்கத்தான் வந்தேன்.''

''இன்னும் இல்லை...''

''ஏன்...?''

''அத்தை தந்ததும் குடிப்பேன்.''

''எப்போ எழுந்த...?''

''வழக்கம் போலத்தான்.''

''அஞ்சு மணிக்கா...?''

''இருக்கும்.''

''இப்போ மணி ஏழாறது பாலா.''

''ஆகட்டுமே. அதனால் என்ன...?''

''ரெண்டு மணி நேரம் காப்பி குடிக்காமல் உன்னால் எப்படி இருக்க முடியறது?''



''இது ஒரு பெரிய கஷ்டமா...? மாயவரத்துல நாங்க ரெண்டு நாள் சாப்பிடாமல் கூட இருந்திருக்கோமே...''

''ரெண்டு நாளும் சாப்பிடாமலா...!''

''ஆமாம்.''

''ஏன் பாலா...?''

''ஏன்னா...சமைச்சிருக்க மாட்டாங்க. வீட்ல அரிசி பருப்பு எதுவும் இருந்திருக்காது.''

''மைகாட்! ரெண்டு நாளும் சாப்பிடாமல் எப்படி காலேஜுக்கு போன...?''

''நடந்து.''

''விளையாடாத பாலா. சீரியஸாகக் கேட்கிறேன்.''

''நானும் சீரியஸாகத்தான் சொல்றேன் கஸ்தூரி.''

''அரிசி பருப்பு வாங்கக் கூட பணமில்லேன்னா எப்படி காலேஜ்ல படிச்ச...?''

''ஸ்காலர்ஷிப் கிடைச்சது.''

''புஸ்தகமெல்லாம் எப்படி வாங்கின?''

''நான் எங்கே புஸ்தகம் வாங்கினேன்?''

''பின்னே?''

''எல்லாம் ஓ.சி.''

''ஓ...சியா...?''

''ம்...காமர்ஸ், அக்கௌண்ட்ஸ், எகனாமிக்ஸ் எல்லா புத்தகமும் பிரெண்ட்ஸ்கிட்டேயிருந்து வாங்கிப்பேன்...''

''அவங்க வாங்கிண்டப்போ உனக்கும் ஒரு செட் புத்தகம் வாங்கித் தந்தாங்களா...?''

''பைத்தியம் கஸ்தூரி நீ...எனக்காகக் காசு செலவழிச்சு யாராச்சும் புஸ்தகம் தருவாங்களா...?''

''பின்ன...புஸ்தகம் எப்படிக் கிடைச்சுது...?''

"மாயவரத்துல எங்க வீட்டு கிட்ட ஒரு ராயர் ஓட்டல் உண்டு. ராயருக்கு என் மேல் தனிப் பிரியம். சாயந்தரம் காலேஜ் விட்டதும் ஓட்டலுக்குப் போய் கல்லாப்பெட்டியில் உட்காருவேன். காசை எண்ணி எடுத்துக் கொண்டு ஒன்பது மணிக்கெல்லாம் ஓட்டலைப் பூட்டிட்டு ராயர் வீட்டுக்குப் போவேன். பணத்தை அவர் கிட்ட ஒப்படைப்பேன், ராயர் மாமி சாப்பிடச் சொல்லுவாங்க. சாப்பிடுவேன். ஓட்டல் வச்சிருக்கிறவங்க வீட்டுல என்ன சாப்பாடுன்னு நினைச்சுட்டிருக்க...வத்தக் குழம்பு, மிளகு ரசம், சுட்ட அப்பளம். இதெல்லாம் இல்லேன்னால் சுக்கா சப்பாத்தி ஒரு கூட்டு. தினமும் தயிர் இருக்கும். தயிர் எப்படி இருக்கும் தெரியுமா...? கத்தியால் வெட்டி எடுக்கலாம் போல் கட்டித் தயிர். தினமும் அந்தத் தயிர் சாதம் சாப்பிட்டதால்தான் என் உடம்பு இவ்வளவு ஸ்ட்ராங்கா இருக்கு..."

"ராயர் வீட்ல சாப்பிட்டு என்ன செய்வ பாலா...?"

"அவரோட சைக்கிளை இரவல் வாங்கிப்பேன்..."

"ராயருக்குப் பொண்ணு உண்டா...?"

"போறதே உனக்குப் புத்தி. ராயருக்குக் குழந்தைகளே கிடையாது. அதனால் என்னை ஸ்வீகாரப் புத்திரன் மாதிரி நடத்தினார்."

"சரி அப்புறம் சொல்லு...?"

"நான் என்ன கதையா சொல்றேன்?"

"கதை மாதிரித்தான் இருக்கு. மேல சொல்லு பாலா..."

"ராயர் வீட்டை விட்டு கிளம்பற போதே மணி ஒன்பதரை ஆயிடும். அதுக்கு மேல் மணி, சிதம்பரம், சம்பத், வேணுன்னு நாலைந்து நல்ல பிரண்ட்ஸ் உண்டு. ஒவ்வொருத்தர் வீட்டுக்கும் போய் புஸ்தகம் கேட்பேன்."

"டேய்...ராத்திரி பத்து மணிக்கு மேல் நீங்களாம் தூங்கத்தானே போறீங்க. அந்த நேரத்துல உங்க புஸ்த



கத்தைத் தாங்கடா. படிச்சிட்டு காலைல கொண்டு வந்து தந்துடறேன்னு கெஞ்சுவேன்."

"தருவாங்களா...?"

"தந்தாங்களே...எதனால் தந்தாங்க தெரியுமா? நான் கொடுத்த வாக்கை மீறினதில்லை. சொன்ன சொல் தவறினதில்லை. சரியா டான்னு மறுநாள் காலைல ஆறு மணிக்கெல்லாம் புஸ்தகங்களைக் கொண்டுபோய் திருப்பித் தந்துடுவேன்."

"எப்போ படிப்ப...?"

"ராத்திரி பத்து மணியிலிருந்து இரண்டு மணிவரை..."

"தூக்கம் வராதா....?"

"நைட்ஷோ பார்க்கிற நேரம்தானே கஸ்தூரி..?"

"தினமும் நைட்ஷோ பார்க்க முடியுமா?"

"தியேட்டர்ல புரொஜெக்டர் ஓட்டறவன் மாட்டேன்னு சொல்ல முடியுமா? தூக்கம் வருதுன்னால் சீட்டைக் கிழிச்சு வீட்டுக்கு அனுப்பிடமாட்டாங்களா?"

"அது சரி. ஆனால் அவன் பகல்ல தூங்குவானே. நீ பகல் நேரமெல்லாம் காலேஜ்ல இல்ல இருப்ப..."

"ராத்திரி ரெண்டு மணியிலிருந்து அஞ்சரை வரை தூங்குவேனே... அது போறாதா...?"

"வெறும் மூணரை மணி நேரத்தூக்கம் எப்படி போறும்?"

"போறும்னு நினைச்சால் எல்லாம் போறும். மனசுதானே காரணம்?"

"அதையேதான் நானும் கேட்கிறேன். போறும்னு எப்படி நினைக்கிறது?"

"அடக்கி இழுத்தால் போறும்னு தோணும்."

"எப்படி அடக்கி இழுக்கிறது...? ஆயிரம் குதிரைகள் பூட்டிய தேர் மாதிரி இல்ல மனசு இருக்கு. ஆயிரம் குதிரை

களும் ஆயிரம் பக்கம், ஆயிரம் வழியில் ஓடறது. அதை எப்படிப் பிடிக்க இழுக்கறது...?''

மென்மையாய் சிரித்தான் அவன்.

''என்ன பாலா சிரிக்கற?''

''இல்ல...எத்தனைப் பெரிய விஷயத்தை எவ்வளவு சுலபமாகக் கேட்கிற நீன்னு நினைச்சேன். அதுக்கு சிரிக்கிறதைத் தவிர வேற என்ன செய்ய முடியும்?''

''பெரிய விஷயம்னு சொல்ற...ஆனால் உனக்கு ரொம்ப சின்ன விஷயமா சாதாரணமானதா கை வந்திருக்கே...அது எப்படி...!''

''தேவை கஸ்தூரி, தேவைன்னு வந்தால் எல்லாம் அடங்கும். வேறுவழி இல்லைன்னு நெருக்கினால் எதுவும் தானே ஒய்ந்து போகும்.''

''இருபத்தைந்து வயசுல பிலாசபி பேசற...?''

''பிலாசபி எப்படி வர்றது...? அனுபவப்பட்டால் பிலாசபி, சைக்காலஜி எல்லாம் தானே வரும்.''

அவனது பேச்சுக்கள் மனதைத் தொடும். மென்மையான பார்வை நெஞ்சை வருடித் தரும். அவனது முகத்தின் இயல்பாகிப் போன கனிவும் சாந்தமும் இதம் கொடுக்கும். அது போன்ற எந்த ஓர் அமைதியான ஆணையும் அதற்கு முன் அவள் சந்தித்ததில்லை. அந்த இருபது வயதில் பார்த்ததில்லை. இவன் முதல் ஆண் முதல் மனிதன். எது முதலோ அது மனதில் பதிந்து போகும். எப்போதும் மாறாததாய் மறையாததாய் மிக அழுத்தமாகப் பதியும். அவனும் அப்படித்தான் அவளது மனதில் பதிந்தான். தன்னை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவளது பார்வையின் அர்த்தம் புரியாமல் மெல்லக் கேட்டான் அவன்.

''என்ன கஸ்தூரி அப்படிப் பார்க்கற...?''



''பிலாசபி, சைக்காலஜி எல்லாம் தெரியறது உனக்கு. இது தெரியலையா பாலா...?''

''எது...?''

''என் பார்வைக்கான அர்த்தம்...?''

''என்ன கஸ்தூரி விளையாடற...?''

''விளையாடல பாலா. நிஜம் சொல்றேன். மனசுக்குள் ஸ்ரீராம ஜெயம் மாதிரி பாலா, பாலான்னு எழுதறதைச் சொல்றேன்.''

''ஐயோ... உளறாத கஸ்தூரி. உங்க அப்பாவுக்குத் தெரிஞ்சால் என்னை ரயிலேற்றி மாயவரத்துக்கு அனுப்பிடுவார்.''

''எதுக்காக அனுப்பணும்? நியாயமாகப் பார்த்தால் அப்பா சந்தோஷப்படணும். நீ யாரு...? எனக்கு மாமா பையன். இன்னும் சொல்லப் போனால் முறை மாப்பிள்ளை...''

''பணம், காசு, பதவி, அந்தஸ்துக்கு முன்னால் முறையாவது, மாப்பிள்ளையாவது...?''

''நான் காசு பணத்தையா கல்யாணம் பண்ணிக்கப் போறேன்...?''

''ஆனால் கல்யாணம் பண்ணிண்டால் காசு, பணம் வேணும் கஸ்தூரி.''

''நம்ம கல்யாணத்துக்குள் வேலை கிடைச்சு நீ சம்பாதிக்க மாட்டாயா என்ன...?''

அவன் முகம் சட்டென்று வாடிற்று.

''என்ன பாலா?''

''நானும் மெட்ராஸ் வந்து ஒரு வருடமாறது. இந்த ஒரு வருஷமாக அலையறேன். நல்லதாக ஒரு வேலை கிடைக்கலேயே கஸ்தூரி... ஒரு மாசம், ரெண்டு மாசம்னு டெம்ப்ரவரியாக எத்தனை வேலை செய்யறது...? இன்னும்

எத்தனை நாளைக்கு நிரந்தரமில்லாமல் இப்படி அலைய முடியும்...?''

''கிடைக்கும் பாலா. உன் உழைப்புக்கும் நல்ல மனசுக்கும் ஏற்றதாக ஏதோ ஒன்னு காத்துக்கிட்டிருக்கு. அதனால்தான் இத்தனையும் தள்ளிப் போறது.''

''இந்த காலத்துக்கு நல்ல மனசு, உழைப்பு எல்லாமே மைனஸ் பாயிண்ட். பணமும், சிபாரிசும்தான் பிளஸ் பாயிண்ட். உங்க அப்பா சிபாரிசு செய்தால் கிடைக்கும். ஆனால் அவர் செய்ய மாட்டேன்றாரே கஸ்தூரி...''

''அவருக்கு அவர் காலை விழுந்து கெஞ்சணும். நீயே சரணாகதின்னு முகஸ்துதி பண்ணணும்...''

''அந்த மாதிரியெல்லாம் என்னால் செய்ய முடியாதே கஸ்தூரி. மனசு இடம் கொடுக்கலையே. அவர் இட்ட வேலையை மறுக்காமல் செய்யறேன். என்னு சொல்றதுக்கு முன்னால் என்னையாக நிற்கிறேன்—''

''அதுவே எனக்குப் பிடிக்கலை பாலா. எல்லாரையும் அடிமைப்படுத்திப் பார்த்தே அவருக்கு வழக்கமாயிடுத்து. நீ பேசாமல் இரு. அவர் என்ன சிபாரிசு செய்யறது. அவர் மனுஷன்தானே...? ஆண்டவனாகப் பார்த்து உனக்கு செய்வான் பாரு...''

''ஆண்டவனும் மனுஷன் மூலமாகத்தானே செய்யணும். அதனால்தானே 'தெய்வம் மனுஷரூபேண'ன்னு சொல்றாங்க...''

''அது சரி, ஆனால் அந்த மனுஷன் எங்கப்பாவாக இருக்க வேணாம்.''

''தப்பு கஸ்தூரி. அப்பாவை நீ அப்படி வெறுக்கக் கூடாது.''

''அவரும் எல்லாரையும் அடிமையாக நடத்தக் கூடாது...''

''எங்கப்பாவைவிட உங்கப்பா மோசமில்லை...''



''அவர் ஓடிப் போனார். இவர் போகலை. அதுதான் வித்தியாசம். இதைவிட அதே தேவலாம்...''

சட்டென்று பேச்சை திசை திருப்பினான் அவன்.

''இன்னும் ஒரு மாசம் பார்க்கப் போறேன். நிரந்தரமான ஒரு நல்ல வேலை கிடைக்கலைன்னு வச்சிக்க... பழைய மாதிரி பார்ட்டைம் வேலை தேடிப்பேன். மினர்வா டுடோரியல் காலேஜ்ல ட்யூடரா கூப்பிடறாங்க. அங்க சேர்ந்து டீச் பண்ணிண்டே ஐ. ஏ. எஸ். படிச்சு எழுதலாம் என்கிற முடிவுக்கு வந்திருக்கேன்...''

''எக்ஸலண்ட் ஐடியா பாலா... எங்கே கை கொடு...''

''இரு கஸ்தூரி. என்னவோ ஐ. ஏ. எஸ். எழுதி பாஸா விட்ட மாதிரி சந்தோஷப்படற...''

''உனக்கென்ன பாலா... எதிலேயே நீ கோல்டு மெடலிஸ்ட். ஐ.ஏ.எஸ்லே ராங்க் ஹோல்டரா வருவே...''

''நீ என்னை விட வேகமா. ரொம்ப சுலபமாக கனவு காணற கஸ்தூரி...''

''உனக்குத் தெரியுமா...? உனக்குத் தெரியாதது என்ன இருக்கு...? மனிதர்களால் மட்டும்தான் கனவு காண முடியும் பாலா. நான் மனுஷி, மிக மிக சாதாரண ஆசைகளோடு கூடிய சாதாரண மனுஷி...''

''அப்படிப்பட்ட சாதாரண மனுஷனாகக்கூட என்னை யாரும் மதிக்கிறதில்லை. ஏற்றுக்கிறதில்லை. வேலையில்லாதவங்க, பணமில்லாதவங்கள்ளாம் நாலுகால் பிராணிக்கும் கீழானவங்க. உன் அப்பாவைக் கேட்டுப் பார். நான் எப்படிப்பட்ட ஜந்துன்னு சொல்லுவார்...''

''அவரை விடு பாலா. நான் உன்னை மதிக்கிறேன். வெறும் மனுஷனாக மட்டுமில்லை. தேவனாகவே மதிக்கிறேன். நீ ரொம்ப ரொம்ப உயர்ந்தவன் பாலா. இந்தக் காலத்துல உன்னை மாதிரி ஒருவனைப் பார்க்கிறது எத்தனைக் கஷ்டம்னு எனக்குத் தெரியும். உன் அருமை எனக்குத் தெரியும்...''

''க...ஸ்...தூ...ரி...''

''எஸ் பாலா...இன்னும் கூட நீ என்னைப் புரிஞ்சுக்கலேன்னா மனசு விட்டுச் சொல்றதைத் தவிர வேற வழி இல்லை. நான் உன்னை நேசிக்கிறேன் பாலா, காதலிக்கிறேன். உன்னைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். இது சத்—''

''கஸ்தூரி...''

''அப்பா கூப்பிடறார் பாலா. நான் உள்ளே போறேன். நீ அஞ்சு நிமிஷம் கழிச்சு வா.''

அப்பாவின் எதிரில் தன்னுடன் பேசுவதற்கே பயப்படுகிற கஸ்தூரி தன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறாளா...?

எப்படி...?

அவனுக்குப் புரியவில்லை.

## 2

பாலா என்கிற பாலகிருஷ்ணன் ரோஜா நிறம். கண்டு விரலால் தொட்டால்கூடச் சிவந்து போவான். அழகான முகம். நல்ல லட்சணம். வெடவெடவென்ற உயரம். கண்களும், மூக்கும், கன்னங்களும் அசப்பில் அரவிந்த் சாமியை நினைவுபடுத்தும். பணத்தின் பளபளப்பும், மினுமினுப்பும் அற்ற அரவிந்த்சாமி. அரவிந்த்சாமியை ஏழை வேடத்தில் பார்த்தால்கூட ஓர் கம்பீரம்தெரியுமே... அதேதான் பாலாவும், அத்தனை ஏழ்மையிலும் கம்பீரமும், களையும் தெரிகிற முகம் அவனுடையது. உருவம் அவனுடையது.

ஆனால் அந்த இருபத்தைந்து வயதிற்கு இருக்க வேண்டிய துள்ளல், துடிப்பு, உற்சாகம், கலகலவென்ற



பேச்சு எதுவும் இல்லாதிருந்தான். உதட்டில் புன்னகை ஓடுமே தவிர அவன் வாய் விட்டுச் சிரித்து யாரும் பார்த்ததில்லை. பாரம் சுமக்கிற வண்டி மாடு மாதிரி கண்களில் கவலை தெரியும். சுமை தெரியும். பாரம் தெரியும்.

அத்தனை சுமையோடு கூடிய குடும்பம்தான் அவனுடையது. அப்பா இல்லை. இல்லை என்றால் செத்துப் போய்விடவில்லை. அவனுக்குப் பத்து வயதும் கடைசி தங்கை கௌசல்யாவிற்கு நான்கு வயதும் இருந்தபோதே ஓடிப் போய் விட்டதாகச் சொன்னார்கள். 'அப்பா சோம்பேறி. உடலுழைத்து சம்பாதிக்கிற திறமையற்றவர். மாதம் பிறந்தால் மளிகைக் கடைக்கும், அரிசி கடைக்காரருக்கும் பதில் சொல்ல முடியாமல் ஓடிவிட்டார்...' என்றார்கள். 'ஏதோ ஒரு பெண்ணுடன் ஓடிப்போய் விட்டதாகச்' சொன்னார்கள். எது உண்மை என்பது அவனுக்குத் தெரியாது. அவனும் கேட்கவில்லை. அம்மாவிடம் கேட்க தைரியம் வரவில்லை. வேறு யாரிடமும் கேட்கப் பிரியப்படவில்லை,

''அப்படிப்பட்ட அப்பா இருந்தால் என்ன போனால் என்ன...? என்று விட்டுவிட்டான். அப்பா போன பின் பாட்டி அம்மாவின் அம்மா அவர்களோடு வந்து சேர்ந்து கொண்டாள். பாட்டி திறமைசாலி. சாமர்த்தியசாலி. பட்டு கத்தறிக்கிற பேச்சில் அவளுடைய சாமர்த்தியம் புலப்படும். அதே சமயம் அந்தப் பேச்சு மென்மையாகவும், அமைதியாகவும் வரும். அந்தத் தன்மையான பேச்சுதான் இவனிடம் வந்திருப்பதாக அத்தனைப் பேரும் சொல்வார்கள். பேச்சு மட்டுமில்லை. நிறம், உயரம், அழகு எல்லாவற்றையும் பாட்டியைக் கொண்டிருப்பதாகச் சொல்வார்கள்.

பாட்டி பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள், தாத்தா சீர்காழி பக்கம் கிராமத்து மணியக்காரராக இருந்தவர். நல்ல செல்வாக்கு. கடல் மாதிரி இரண்டு கட்டு வீடு-

நாலைந்து ஏக்கர் நஞ்சை நிலம். ஒரே சதுரம். நடுவில மோட்டார் போட்டு இறைக்கிற பெரிய கிணறு.

தாத்தா செத்துப் போன பின் பாட்டி தனியாகத்தான் கோலோச்சிக் கொண்டிருந்தாள். அப்பா ஓடிப்போன செய்தி கேட்ட பின்பு மடமடவென்று வீட்டை விற்றாள். நிலத்தை விலை பேசினாள். யாரோ ரெட்டியார் இரண்டையும் வாங்கிக் கொண்டார். இரண்டு கட்டு வீடும், நிலமும் சேர்ந்து லட்ச ரூபாய்க்குப் போயிற்று. நிலம் போனதில் அவனுக்கு வருத்தமில்லை. ஆனால் அந்த வீடு ...?

மழுமழுவென்று அந்தக் கால சிவப்புத் தரை மின்னும். ஒரு தரம் தண்ணீர் போட்டு மெழுகினால் போதும். முகம் பார்த்துக் கொள்ளலாம். தூண்களில் தச்சனின் கை வண்ணம் தெரியும். வாசல் கதவு கோவில் கதவின் கனம் இருக்கும். இரண்டு ஆளாக இழுத்து சாத்தினால்தான் முடியும். பத்து தூண்கள் வர்ணம் பூசிக் கொண்டு புதுசாய் பட்டுப் பாவாடை சட்டை போட்டுக் கொண்ட பெண்களாக நின்ற கல்யாணக் கூடமும், உக்கிராண அறையும், மேல் மச்சுக்களும், முற்றமும், அதில் படர்ந்திருந்த முல்லை, இருவாட்சிக் கொடிகளும், தோட்டமும், கொல்லையும், ஏரி மாதிரி கிணறும், வாழை, கொய்யா, மா, நார்த்தை, சப்போட்டா, ஒரே ஒரு மாதுளை என மரங்களும் குளுகுளு காற்றும் 'வா...வந்து படு' என்று அழைக்கிற நிழலும், சாணம், வைக்கோல் கலந்து வந்த கிராமத்து மண் வாசனையும் இயற்கை அழகும் அதன் ரம்மியமும்...

அவனால் முடியவில்லை. அந்த வீட்டையும், அதன் சூழ்நிலையையும் மறக்கவே முடியவில்லை. அதை இழந்ததை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

''ஏன் பாட்டி அந்த வீட்டை வித்தீங்க? ரொம்ப நல்ல வீடு பாட்டி...''—அழாத குறையாகக் கேட்டான் அவன்.





''விற்காமல் என்ன செய்ய முடியும்? நீ, சந்தர், கல்யாணி, கௌசல்யா, உங்கம்மா நான்னு ஆறு ஜீவன் சாப்பிட வேணாமா...? வீட்டு வாடகை தர வேணாமா? நீங்க நாலு பேரும் படிக்க வேணாமா? பார்த்துண்டே இருக்கிற போது கல்யாணியும், கௌசல்யாவும் பெரிய பெண்ணாக வளர்ந்து நிற்க மாட்டாளா...? அவாளுக்குக் கல்யாணம் பண்ண வேண்டாமா? இத்தனைப் பணத்துக்கும் எங்கே போறது...?''

பாட்டி நார்மடியின் தலைப்பைத் தலையில் இழுத்து விட்டுக் கொண்டே சொன்னாள். அப்போது அந்த வயதில் அவனுக்குப் புரியவில்லை. அவர்கள் படிப்பிற்கும், கல்யாணி, கௌசல்யாவின் கல்யாணத்திற்கும் அந்த வீட்டை ஏன் விற்க வேண்டும் என்பது தெரியவில்லை. பின்னால் கல்லூரியில் சேர்ந்த போது தெரிய வந்த பணத்தின் அருமை. வாழ்க்கைக்குப் பணம் எத்தனை அத்தியாவசியமானது என்பதெல்லாம் தெரிய வந்தது.

தேவை எனத் தாங்களாக முன் வந்து விற்கிற போது பொருட்களின் விலையில் பாதி இறங்குகிற ரகசியம் பிடிபட்டது. அந்த வீடு வெறும் அறுபதாயிரம் ரூபாய்க்குப் போன சோகம் நெஞ்சை அழுத்திற்று. ஒவ்வொரு விடுமுறைக்கும் அவன் அந்த வீட்டிற்குப் போயிருக்கிறான். ஓடி விளையாடி இருக்கிறான். 'ஐஸ் பாய் விளையாட்டில் மூலை முடுக்குகளில் ஒளிந்து கொண்டிருக்கிறான். ஊஞ்சலில் வீசி வீசி ஆடியிருக்கிறான். பரிச்சயமான, மனதை நெருங்கின. மூலை முடுக்குகள் எல்லாம் சிநேகிதப்பட்ட அந்த வீட்டின் இழப்பு அவனுக்குள் பெரிய பாதிப்பாகத் தான் இறங்கிப் போயிருந்தது.

எப்படியாவது அந்த வீட்டைத் திரும்பப்பெற வேண்டுமென்று நினைத்தான். படித்து, பட்டம் பெற்று, பெரிய வேலையாகத் தேடிக் கொண்டபின் முதல் காரியமாக அந்த வீட்டைத் திரும்பி வாங்கியாக வேண்டும். தங்கையின்

கல்யாணமெல்லாம் அப்புறம்தான். அவன் வாழ்க்கையின் முதல் குறிக்கோள் அந்த வீடு. தங்களுக்காக அதை இழந்த பாட்டிக்கு அதை திரும்பப் பெற்று தந்துவிட வேண்டும்.

பாவம் பாட்டி... எத்தனைப் பெரிய மனசு! எவ்வளவு தாராளம்! என்னதான் அம்மா ஒரே பெண் என்றாலும் அந்த அளவுக்கு மனசு வராது. தனக்கு மிஞ்சிதான் தருமம் என்பார்கள். 'நான் என்ன செய்ய முடியும்...? நல்ல இடத்தில்தான் உனக்குக் கல்யாணம் செய்து கொடுத்தேன். ஒரு குறை இல்லாமல் எல்லாமும் செய்துப் போட்டேன். உன் தலையெழுத்து உனக்கு நல்ல வீட்டுக்காரன் கிடைக்கலை. எல்லாத்தையும் விற்று நாசமாக்கினதோடு இல்லாமல் நாலு குழந்தைகளையும் கொடுத்துட்டு ஓடியும் போயிட்டான். அதுக்கு நான் என்னடியம்மா செய்ய முடியும்? வேண்டுமானால் என் கூட வந்து இரு. உன் குழந்தைகளையும் அழைச்சிண்டு வா. சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லை. நான் சாப்பிடுகிற கூழோ கஞ்சியோ நீயும் சாப்பிடு...' என்றுதான் சொல்லியிருப்பார்கள். அதுதான் சகஜம். உலகத்தில் நடக்கிற விஷயம்.

ஆனால் பாட்டி அப்படிச் சொல்லவில்லை. செய்கையிலும் காட்டவில்லை. பரம்பரையாக வந்த பெரிய மனுஷத்தனம் அவ்வாறு அவளைச் செய்யவிடவில்லை. பெண்ணிற்காகவும், பேரன் பேத்திகளுக்காகவும் வீட்டை விற்று...நிலத்தை விற்று...

அந்தப் பெரிய மனசிற்குத் தலைவணங்குகிற விதமாக அவன் செய்யக் கூடியது அந்த வீட்டைத் திரும்பி வாங்கி பாட்டி பெயருக்கு எழுதி வைப்பது. பாட்டி செய்த உதவிகளுக்கெல்லாம் நன்றிக் கடனைத் தீர்ப்பதென்பது இயலாத காரியம். அவன் படித்த படிப்பு-பாட்டியால்; உடம்பில் ஓடுகிற ரத்தம்-பாட்டி போட்ட சாப்பாட்டால். தளதளவென்று இருபத்தைந்து வயது இளைஞனாக வளர்ந்து நிற்கிறான் என்றால் பாட்டியின் தியாகத்தால்.



பதிலுக்குக் கடுகளவு நன்றியாக அவன் செய்யக்கூடியது அந்த வீட்டை பாட்டியின் பெயருக்குத் திருப்புவதுதான். அதற்காகவாவது வேலை கிடைக்க வேண்டும். இதை அவன் தினசரி தியானமாக நினைத்துக் கொண்டிருந்த போதுதான் ஒரு நாள் அதிகாலையில் பாட்டி படுக்கையிலிருந்து எழுந்திருக்காமலே இறந்து போனாள்.

'என்ன இது... மணி ஆறாகியும் பாட்டி எழுந்திருக்கவில்லையே... நாலு மணிக்கெல்லாம் எழுந்திருக்கிறவளாயிற்றே... அவளுக்கு இருப்பு கொள்ளாதே...' என்று அருகில் போய் உடல் தொட்டான். சில்லென்றிருந்தது. முகம் திருப்பினான். மீண்டும் சரிந்தது. கையைத் தூக்கி பார்த்தான். தானாகக் கீழே விழுந்தது.

பாட்டி போனது அப்போதுதான் தெரிய வந்தது. அவனுக்கு அழுகை வரவில்லை. 'எவ்வளவு சுத்த ஆத்மா...' என்கிற ஆச்சரியம்தான் வந்தது. நோய் நொடி எதுவுமின்றி படுக்கையில் விழாமல், இழுத்துக் கொண்டு கிடக்காமல் சட்டென்று போய் விட்டதே... சடாரென்று பொழுது புலருகிற மாதிரி, எப்போது விரிந்தது என்று கண்டுபிடிக்க முடியாமல் பூ மலர்கிற மாதிரியல்லவா சாவு வந்திருக்கிறது... சாவு என்பது இப்படித்தான் வரவேண்டும் என நினைத்துக் கொண்டான். அவன்தான் கொள்ளி வைத்தான். கர்மம் பண்ணினான். பாட்டி பாங்கில் போட்டிருந்த பணத்தில் இருபத்தைந்தாயிரம் எடுத்து தாராளமாக செலவு செய்தான். பாட்டிக்கு மிகவும் பிடித்த வைதிகக் காரியங்களில் ஒரு குறையும் வைக்காமல் செய்தான்.

அப்போது கூட சுந்தர் கேட்டான்.

கையில இருக்கிறதே வெறும் எண்பதாயிரம். அதுல கைங்கரியத்துக்கு இத்தனை செலவு செய்யணுமாடா பாலா...?

திரும்பி தம்பியைப் பார்த்தவன் ஒரே வார்த்தையில் பதில் சொன்னான்.

''இது பாட்டியின் பணம்.''

பதிமூன்றாம் நாள் பாட்டியின் காரியம் முடிந்து காரியத்தில் கலந்து கொள்ள வந்த அத்தையோடு கிளம்பி வேலை தேடி மெட்ராஸ் வந்தவன்தான். அதன் பின் ஊர் பக்கம் திரும்பவில்லை. போன மாதம் பாட்டியின் முதல் திவசத்திற்கென்று ஊருக்குப் போய்விட்டு வந்தான்.

மெட்ராஸ் வந்ததிலிருந்து இன்று வரை அவன் நினைத்த மாதிரி நல்ல வேலையாகக் கிடைக்கவில்லை. அவன் தம்பி சுந்தர்கூட மாயவரத்தில் ஏதோ வேலை தேடிக் கொண்டு விட்டான். கல்யாணியும் கௌசல்யாவும் படிப்பு முடிந்து வீட்டில் இருந்தவாறே தையல், ஜாப் டைப்பிங் என்று சம்பாதிக்கிறார்கள். இவன் தான் இன்னமும் இப்படியே இருக்கிறான்... ஒரு மாதம் இரண்டு மாதம் என தற்காலிக வேலைகளுக்குப் போய்க் கொண் டிருக்கிறான். அதுவும் கூட கடந்த ஒரு மாதமாக இல்லை. வீட்டில் அத்தைக்குப் பால் வாங்குவதும், டி.யு.சி.எஸ். போய் ரேஷன் வாங்குவதும், மாமாவிற்கு பாங்கிற்குப் போவதும், குற்றேவல் செய்வதுமாகப் பொழுது போய்க் கொண்டிருக்கிறது.

இந்த நிலைமையில் கஸ்தூரி வேறு தன் மனதைத் திறந்து காட்டியிருக்கிறாள்.

''என் பாலா... இன்னும் கூட நீ என்னைப் புரிஞ்சுக் கலேன்னா மனசு விட்டுச் சொல்றதைத் தவிர வேற வழி இல்லை. நான் உன்னை நேசிக்கிறேன் பாலா. காதலிக் கிறேன். உன்னைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். இது சத்—''

''கஸ்தூரி.''

மனதிற்குள் சத்தம் போட்டு உரக்கக் கூப்பிட்டுக் கொண்டான்.

''இது என்ன புதுப் பிரச்சினை...?''



''நானும் கஸ்தூரியைக் காதலிக்கிறேன்...?''

அந்தக் கேள்விக்கு 'ஆமாம்' எனவும் இல்லை எனவும், இரண்டு விதமான பதில்கள் தோன்றின. தன் மனது தனக்கே பிடிபடாமல் குழம்பிப் போனான் அவன்...

## 3

சில இடங்களில் சுயம்புவாக விக்கிரகங்கள் தோன்றி மடமடவென்று கோவில்களாக உருவாகிற மாதிரி, மகா விஷ்ணு விஸ்வரூபம் எடுத்த மாதிரி நிறைய விஷயங்கள் திடீரென்று எழுந்து விஸ்வரூபம் எடுக்கின்றன. யாருமே எதிர்பாராத வகையில் திருப்பங்கள் நேர்கின்றன. இவை யெல்லாம் ஏன் ஏற்படுகின்றன, யாரால் நிகழ்கின்றன, எதற்காக உருவாகின்றன என்பதெல்லாம் யாருக்கும் புரியாத பிடிபடாத விஷயங்கள்.

அதே மாதிரி பிடிபடாத வகையில்தான் கஸ்தூரியின் கல்யாணப் பிரச்சினையும் உருவாயிற்று. அவளது அப்பாவால் ஏற்படுத்தப்பட்டது. கல்லூரியில் இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்தவளிடம் ஒரு நாள் சாயந்திரம் வந்து எப்போதும் சொல்கிற அதட்டலான குரலில் சொன்னார் அவர்.

''நாளைக்கு நீ காலேஜுக்குப் போக வேண்டாம்.''

''எப்பா...?'' —அமைதியாகத்தான் கேட்டாள் கஸ்தூரி.

''ஏன் எதுக்குன்ற காரணத்தையெல்லாம் நான் உன் கிட்ட சொல்லிட்டிருக்கணும் என்கிற அவசியமில்லை. மூளைச்சு மூணு இலை விடலை...அதுக்குள்ள என்னையே கேள்வி கேட்கறியா...?''

கஸ்தூரிக்கு ஒன்றும் புரியவில்லை. சமையலறைக்குப் போய் மெதுவாக அம்மாவிடம் கேட்டாள்.

''அப்பா எம்மா நாளைக்கு என்னை காலேஜுக்குப் போக வேணாம்னு சொல்றார்...?

''நாளைக்கு உன்னைப் பொண்ணு பார்க்க வரா ளாம்...''

''என்...ன...?'' —அதிர்ந்து போனாள் அவள்.

அந்த அதிர்ச்சி அம்மாவுக்கு அதிசயமாக இருந்தது.

''என்னடீ இப்படி அதிர்ந்து போற... பொண்ணு பார்க்க வர்றது சாதாரண விஷயம்தானே...?''

''இருக்கலாம்மா... ஆனால் எனக்கு அது சின்ன விஷய மில்லை...''

''பெரிசாக எடுத்துக்க இதுல என்ன இருக்கு...?''

''எனக்கு இருக்கு.''

''என்ன...?''

''எனக்குப் பிடிக்கலை...''

''இன்னும் பொண்ணே பார்க்க வரலை. நீயும் அந்தப் பையனைப் பார்க்கலை. அதுக்கு முன்னால் பிடிக்கலைன் னால் என்ன அர்த்தம்....?''

''பிடிக்கலைன்னால் பிடிக்கலைதான்.''

''பொண்ணு பார்க்கிற சம்பிரதாயம் பிடிக்கலையா. இல்லை அந்த இடம் பிடிக்கலையா... எது பிடிக்கலை...?''

''எதுவுமே பிடிக்கலை...''

''எதுதான் பிடிச்சிருக்கு...?''

''பாலாவைப் பிடிச்சிருக்கு.''

''என்ன..,என்ன,..?''

முதலில் அந்த அம்மாள் ஆச்சரியப்பட்டாள். 'இந்த வீட்டில் இப்படி ஒரு விஷயம் நடந்து கொண்டிருக் கிறதா...?' என்று அதிசயப்பட்டாள். பின்னர் சந்தேகப் பட்டாள். கடைசியாக பயப்பட்டாள்.



''என்னடீ இது... திடீர்னு இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடற...?'' என மிரண்டு போனாள்.

''எம்மா... பாலா அந்நியமா, அசலா....? எனக்கு மாமா பையன்தானே...?''

''இருக்கலாம். ஆனால் அப்பா ஒத்துக்கணுமே...?''

''அப்பா ஒத்துக்காமல் இருக்கக் காரணமே இல்லை யேம்மா...?''

''ஏன்டி இல்லை...? அவனுடைய அப்பா ஓடிப் போயிட்டாரேடி....?''

''பாலாவோட அப்பா உனக்கு அண்ணாம்மா...''

''யார் இல்லைன்னது...?''

''பின்ன...?''

''அண்ணா தப்பு பண்ணினால் அது தப்பு இல்லேன்னு ஆயிடுமா...?''

''அது சரிம்மா...அப்பா ஓடிப் போனதற்கு பிள்ளை என்ன செய்ய முடியும்...? அந்த நிலைமையிலும் படிச்சு முன்னுக்கு வரலையா என்ன...?''

''முன்னுக்கு வந்திருக்கான்னு எப்படி சொல்ல முடியும்? இன்னமும் ஒரு வேலை தேடிக்கலை. நாலு காசு சம்பாதிக்க ஆரம்பிக்கலை...''

''எம்மா... இதே வாயால் அன்னிக்கு நீ என்ன சொன்னே...?''

''என்ன சொன்னேன்...?''

''ஒரு வருஷமா அவனும் ஒவ்வொரு இடமா ஏறி இறங்கிட்டுத்தான் இருக்கான். அவன் மனசுக்குப் பிடிச்ச நல்ல வேலையாகக் கிடைக்கலைன்னு சொல்லலை...?''

''சொன்னேன். இல்லைங்கலை. அப்போ அவனை வெறும் அண்ணா பிள்ளையாக மட்டும் நினைச்சுப் பார்த் தேன்....''

''இப்போ மாப்பிள்ளைன்ற போது நாக்கும் மனசும் மாறிடுமா என்ன...!''

அம்மாவால் பதில் சொல்ல முடியவில்லை. ஒரு வினாடி அமைதியாக இருந்தாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். பின்னர் மெல்ல வாய்த் திறந்தாள்.

''அப்பா சம்மதிச்சு உன் மனசப்படி கல்யாணம் நடந்தால் எனக்கும் இதுல சந்தோஷம்தாண்டி....''

''கல்யாணம் எனக்கும்மா. அப்பாவுக்கு இல்லை...'' என்றாள் அவள் தைரியமாக.

ஆனால் அந்த தைரியம் அப்பாவிடம் பேசுகிற போது இல்லை. அம்மா அன்றிரவே அப்பாவிடம் சொல்லியிருக்க வேண்டும். மறுநாள் காலை பொழுது விடிந்ததும் அப்பா பஞ்சாயத்துத் தலைவர் மாதிரி அவளையும், பாலாவையும் நிற்க வைத்து விசாரித்தார்.

''நேற்று சாயந்திரம் அம்மாகிட்ட என்னவோ சொன்னியாமே... என்ன...? எங்கிட்ட சொல்லு...?''

அவள் தலை குனிந்து நின்றிருந்தாள். கால் கட்டை விரல் தரையில் கோலமிட்டது.

''என்னடி நான் கேட்கிறேன். நீ பாட்டுக்குப் பேசாமல் நிக்கற...? அம்மா சொன்னதெல்லாம் நிஜமா...?''

மெதுவாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னாள்.

''ஆமாம்ப்பா...''

''என்ன ஆமாம்? கால் காசு சம்பாதிக்கத் துப்பில்லை... அதற்குள் காதலா...?''

''காதலெல்லாம் ஒண்ணுமில்லேப்பா...''

''பின்ன, நீ சொல்றதுக்கு என்ன பேரு...?''

''எங்க ரெண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சிருக்குப்பா...''



''பிடிச்சவங்களையெல்லாம் கல்யாணம் பண்ணிக்கணும்னு எழுதியா வச்சிருக்கு?''

''இல்லேப்பா. ஆனால் வெறுமனே பிடிச்சிருந்தால் அந்தப் பிடிப்பு கல்யாணம் வரை போகாது...''

''என்ன சொல்ற நீ....''

''கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு எங்க பிடித்தம் ஆழமாக இருக்குன்னு சொல்ல வரேன்.''

''கொன்னுப்புடுவேன் நாயே... எதிர்த்தா பேசற...?''

''எதிர்த்துப் பேசலைப்பா. மனசுல இருக்கிறதை சொன்னேன்.''

''கண்டதெல்லாம் மனசுல இருக்கக் கூடாது.''

''பாலா கண்டவன் இல்லேப்பா...''

''அவனுக்கு வேலை இல்லை.''

''கிடைச்சுடும்ப்பா...''

''அவனுடைய அப்பா கொஞ்சம்கூட பொறுப்பு இல்லாமல் எல்லாத்தையும் உதறிட்டு ஓடிப்போயிட்டார்.''

''அதுக்கு பாலா என்னப்பா செய்ய முடியும்?''

''அப்பாவோட அதே ரத்தம்தான் பிள்ளையோட உடம்பிலும் ஓடறது. ஜீன், ஜெனிடிக்ஸ் எல்லாத்தையும் பற்றி படிச்சிருப்ப... இல்லைன்னாலும் கேள்விப்பட்டிருப்ப. அப்பா ஓடிப் போன மாதிரி இவனும் ஓட மாட்டான்னு என்ன நிச்சயம்?''

அதுவரை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த பாலாவினால் அதற்கு மேலும் அமைதியாக நின்றுகொண்டிருக்க முடியவில்லை. முகம் சிவந்து உதடுகள் துடித்தன. ஏதோ சொல்ல வாயெடுத்தவனை அடக்கினாள் அவள்.

''இரு பாலா, அவசரப்படாதே'' என்றவள் அப்பாவை ஏறிட்டாள்.

''பாலாவோட அப்பாவின் ரத்தம் பாலா உடம்புல மட்டும் ஓடலைப்பா. அம்மாவும் அவருக்குத் தங்கைதான். அதே ரத்தம்தான் அம்மாவோட உடம்பிலும் ஓடறது. அவர் ஓடிப் போன மாதிரி அம்மா ஓடிப் போயிடலை.''

பளாரென்று அவள் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது.

''ராஸ்கல். யாரை என்ன சொல்றதுன்ற விவஸ்தை இல்லாமலா பேசற...? வேலை தேடி ஒண்ட வந்த நாயெல்லாம் குடும்பத்தை உருப்படவிடாமல் செய்யறதுங்க.''

அதற்கு பதில் சொல்ல பாலா நறுநறுவென்று முன் வந்த போதும் மீண்டும் அவள் தடுத்தாள்.

''அப்பா... நீங்களும் அனாவஸ்ய வார்த்தைகள் பேசாதீங்க. நான் பாலாவைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன். அதுக்கு என்ன சொல்றீங்கன்னு மட்டும் சொல்லுங்க அது போதும்.''

''வெளில போடி நாயே... கல்யாணம் பண்ணிப்பாளாம் கல்யாணம். யாரை மிரட்டற... வீட்டை விட்டு வெளில போய் என்ன வேணும்னாலும் செய்துக்க.''

''பாலா...வாங்க போகலாம்.''

அவன் பயந்தான்.

''என்ன கஸ்தூரி இது...?'' என்று தடுமாறினான்.

''நீங்க ஒரு ஆம்பிளைன்னால் தைரியமாக என்னைக் கூட்டிட்டுப் போய் கல்யாணம் பண்ணிக்குங்க.''

''கஸ்...தூ...ரி...'' என்று சமையல் அறை வாசலில் நின்றிருந்த அம்மா ஓடி வந்தாள்.

''போடி உள்ள...கொலை விழும் இங்கே...பொண்ணை லட்சணமாக வளர்த்திருக்கா... இப்போ கதறிண்டு ஓடி வறா...''

அம்மாவைப் பார்த்து அப்பா உறுமிய உறுமலில் சப்த நாடிகளும் ஒடுங்க அப்படியே நின்று போனாள் அம்மா.



''ஐயம் சாரிம்மா. அப்பா எங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க மாட்டேன்றார். அதனால் வெளியில் போய் கல்யாணம் பண்ணிக்கிறதைத் தவிர எங்களுக்கு வேறு வழி இல்லை. எங்களை ஆசீர்வாதம் பண்ணும்மா...''

''இந்தக் கேடு கெட்ட கல்யாணத்துக்கு ஆசீர்வாதம் வேணுமா...? போடி வெளில...''

''போறேம்ப்பா...ஒரே ஒரு மாற்றுப் புடவை மட்டும் எடுத்துண்டு போறேன்.''

''ஏன்... மாற்றுப் புடவை வாங்கித் தர்ற சக்திகூட துரைக்கு இல்லையோ...? இதையெல்லாம் யோசிக்காமலா காதலிச்சான்...? இதுக்குத்தான் கால் காசுக்குக் கையாலாகாதவன் எல்லாம் காதலிக்கக் கூடாதுன்றது...''

பாலாவின் இருபத்தைந்து வயது ரத்தம் கொதித்தது. இளமை வேகமும், அவமானப்பட்ட உணர்வும் சேர்ந்து முகம் ஜிவுஜிவுத்தது. சட்டென்று அந்த சவாலை ஏற்றுக் கொண்டு ஒரு முடிவிற்கு வந்தவனாகச் சொன்னான் அவன்.

''மாற்றுப் புடவையும் வேணாம். ஒண்ணும் வேணாம். காது, கழுத்து, கைகளில் இருக்கிற நகைகளையெல்லாம் கழற்றிக் கொடுத்துட்டு கிளம்பு கஸ்தூரி.''

அதற்கெனவே காத்துக் கொண்டிருந்தவளாகக் காதுத் தோடு, கழுத்துச் சங்கிலி, கைவளையல்கள் எல்லாவற்றையும் கழற்றி அப்பாவின் காலடியில் வைத்துவிட்டு வெளியேறினாள் அவள்.

## 4

''நீ அப்படிப் பேசி இருக்கக் கூடாது கஸ்தூரி'' என்றான் அவன்.

''நான் என்ன பாலா தப்பா பேசிட்டேன்...?'' என்று கண்களை அகல விரித்து குழந்தையாகக் கேட்டாள் அவள்.

''என்ன இருந்தாலும் அப்பா. பெற்று இத்தனை வருஷம் வளர்த்தவர். அவரை இப்படி ஒரேயடியாகத் தூக்கி எறிஞ்சிருக்கக் கூடாது.''

''நானா எறிஞ்சேன்...? அவர்தான் என்னைத் தூக்கி வெளியில் எறிஞ்சிட்டார்...''

''ப்ச்சு...ஒரே நாளில் நாம் கொஞ்சம்கூட எதிர்பார்க்காததாக எத்தனை நடந்திடுத்து பார்த்தியா...?''

''வருத்தப்படறியா பாலா...?''

''ஒரு வகையில் பார்த்தால் கொஞ்சம் வருத்தம்தான் கஸ்தூரி.''

''எந்த வகையில்...?''

''அத்தையையும், மாமாவையும் எதிர்த்துண்டு இப்படி வந்திருக்க வேணாமோன்னு தோணறது.''

''அவங்களுக்கு நம்மை எதிர்க்கணும் என்கிற வேகம். நமக்கு நம் எண்ணத்தை செயலாக்கிக்கணும் என்கிற வேகம். அவங்க வகையில் அவங்க ஜெயிச்சாங்க. நம்ம வகைக்கு நாம் ஜெயிச்சோம். அவ்வளவுதான்.''

''என்ன கஸ்தூரி இவ்வளவு சாதாரணமா சொல்ற...? அம்மாவையும் அப்பாவையும் விட்டு வந்தது கஷ்டமாக இல்லை.''

''நிஜமாகச் சொல்லணுமா...? இல்லை பொய் சொல்லணுமா...?''

''நீ பொய் சொல்வியா கஸ்தூரி...?''

அதான் கேட்கிறேன். எது சொல்லணும்னு...?''

''எனக்குப் பொய் சொல்றதோ பொய் சொல்றவங்களையோ பிடிக்காது கஸ்தூரி.''

''அப்படின்னா நிஜமே சொல்லிடறேன். என்னா உனக்கு பிடிச்ச மாதிரி நடக்கிறதுதான் எனக்கு முக்கியம்.''

அத்தனை வருத்தத்திலும், கஷ்டத்திலும் அவளைத் திரும்பிப் பார்த்து சிரித்தான் அவன்.



''என்ன சிரிக்கிற பாலா...?''

''உன்கிட்ட எனக்கு எது ரொம்பப் பிடிச்சதுன்னு சொல்லட்டுமா...?''

''சொல்லு...''

''அப்புறம் நீ கோவிச்சுக்கக் கூடாது.''

''கோவமா...? அதுவும் உன் மேலயா...? எப்படி பாலா வரும்...?''

''இதான், இந்த அன்புதான், எனக்காக உருகற பாரு—அந்த உருக்கம்தான் அதுதான் என்னைக் கவர்ந்தது தவிர வேற எதுவுமில்லை கஸ்தூரி. உன் வசதி, பணம் எதுவுமில்லை. பார்த்த உடனே உன் அழகுல விழுந்துட்டேன்னு சொல்ற அளவுக்கு நீ பிரமாதமான அழகி இல்லை...''

''சுமாரான அழகு கூட இல்லைன்றது எனக்குத் தெரியும். உன் அழகுக்கு நான் ஜாகக்குச் சமம்னு தெரியும்.''

''பார்த்தியா...? அதனால்தான் கோவிச்சுக்கக் கூடாதுன்னு ஆரம்பத்திலேயே சொன்னேன்.''

''உண்மையைச் சொன்னால் கோபம்னு அர்த்தமா பாலா...?''

''சரி விடு. இப்போ முதல்ல ஊருக்கு போகணும். அதுக்கு என்ன செய்யலாம்னு யோசிக்கலாம்.''

''என்கிட்ட பணமில்லையே பாலா. நயா பைசா கூட இல்லை...''

''வழிதானே கேட்டேன். உன் கிட்ட பணமா கேட்டேன்...?''

''இப்படியே நேராக நடந்து மவுண்ட்ரோடு போய் கன்னிமாரா பக்கம் திரும்பி மறுபடியும் வலதுபக்கம் திரும்பினால் எக்மோர் ஸ்டேஷன் வரும்.''

''ஐயோ...வழி கேட்டது தப்பு. கொஞ்சம் பேசாமல் இரு...'' என்று யோசித்தவன் சடாரென்று முகம் மலர்ந்தான்.

''என்ன பாலா...?''

''போன மாசம் நான் ஒரு வக்கீல்கிட்ட வேலை செய்தேனே. அவர் பணம் தரலை. ஒண்ணாம் தேதி வரச் சொன்னார். நானும் நடையா நடக்கிறேன். பணம் பெயரலை. இன்னிக்கு நீயும் கூடவா. பணம் கேட்டு வாங்கிண்டு அப்படியே நேரா எக்மோர் போய் ரயில் டிக்கெட் எடுக்கலாம்.''

டிக்கெட் எடுத்தப்புறம் கைல மீதி பணம் இருக்குமா பாலா...?''

''எதுக்குக் கேட்கிற ..?''

''இல்ல...ரொம்பப் பசிக்கிறது. காலையில் எழுந்து காப்பி கூட குடிக்கலை...''

''அவ்வளவுதானே... சாப்பாடே வாங்கித்தரேன் வா...''

சொன்ன மாதிரி வக்கீலைப் பார்த்து பணம் வாங்கிக் கொண்டு அவளை எக்மோர் உடுப்பி ஹோமில் சாப்பிட வைத்தான். தானும் சாப்பிட்டான். அங்கிருந்து ரயில்வே ஸ்டேஷன் வரை நடந்தே போனார்கள். பின்னர் ரயிலேறி மறுநாள் காலை மாயவரம் வந்து இறங்கினார்கள்.

அவர்கள் இரண்டு பேரையும் பார்த்த அவனது அம்மா மிகுந்த சந்தோஷத்தோடு வரவேற்றாள். தங்கைகள் ஓடி வந்து கஸ்தூரியின் கை பற்றினார்கள்.

''ஐய்யோ...கஸ்தூரியா இது...! ஆளே அடையாளம் தெரியலை...?'' என்று வியந்து போனார்கள்.

''ஏய் பேசிண்டே நிற்காதீங்க. கஸ்தூரியைக் குளிக்க விடுங்க. குளிச்சு சாப்பிடட்டும். மற்ற கதையெல்லாம் அப்புறம் பேசிக்கலாம்...''



குளித்து விட்டு வந்த கஸ்தூரிக்கு மாற்றுப் புடவை இல்லாத போதுதான் அம்மாவிற்கு சந்தேகம் வந்தது.

''கல்யாணி...உன் புடவைல ஒண்ணு கொடு...'' என்றாளே தவிர உள்ளுக்குள் மனசு நெருடிற்று.

மெல்ல சாப்பாடு போட்டுக் கொண்டே கேட்டாள்.

''என்னம்மா கஸ்தூரி, பெட்டி படுக்கை எதுவும் கொண்டு வராமல் வந்திருக்கே...?''

கஸ்தூரி பதில் சொல்லாமல் மெதுவாக நிமிர்ந்து பாலாவைப் பார்த்தாள்.

''என்னப்பா பாலா....என்ன விஷயம்?''

பாலா ஒரு வினாடி தயங்கி பின்னர் மடமடவென்று விஷயம் முழுவதையும் சொன்னான். அதைக் கேட்ட அவனது அம்மா முதலில் அரண்டு போனாள்.

''என்னப்பா...இது...? என்று முகத்தில் பயம் கவ்வக் கேட்டாள். ''நாங்க ஒரு தப்பும் பண்ணலையேம்மா, கல்யாணம் பண்ணி வைக்கச் சொல்லி கேட்டோம். மாட்டேனிட்டார் அவ அப்பா. இப்போ உன் கிட்ட வந்திருக்கோம். நீ என்ன சொல்லப் போற...?''

''நான் வேற என்ன சொல்ல முடியும்....? உனக்கும் ரெண்டு தங்கைகள் இருக்கா. நாளைக்கு அவா இப்படி நடந்துண்டா உன் மனசு என்ன பாடுபடும்னு நினைச்சுப் பாரு...''

''அவர் மேல ஒரு தப்பும் இல்லை மாமி. நான்தான் வந்தேன்.''

''நீயே வந்தால் அது இன்னும் தப்பும்மா...பெத்தவங்க நெஞ்சு குமுறும்மா...''

''நான் வேறே எங்கேயும் போயிடலையே மாமி... உங்ககிட்டதானே வந்திருக்கேன்...''

''அது சரிம்மா. என்கிட்ட வந்தாலும் தப்பு தப்பு தானேம்மா...''

''என் மனசுக்குப் பிடிச்சிருக்குன்னு சொன்ன அப்புறமும் அப்பா அப்படி நடந்துக்கலாமா மாமி?''

''எந்த அப்பா, அம்மாவும் பெற்ற குழந்தைகளுக்குத் தப்பு நினைக்க மாட்டாம்மா...''

'அப்படின்னா பாலா அப்பா எப்படி தப்பை நினைச்சார்...?' என்ற கேள்வி நாக்கு நுனி வரை வந்துவிட்டது. அடக்கிக் கொண்டாள் கஸ்தூரி. ஆனால் கண்களில் அந்தக் கேள்வி தெரிய அந்தம்மாவை ஏறிட்டாள்.

காவிரித் தண்ணீர். டக்கென்று புரிந்து கொண்டது.

''நீ என்ன நினைக்கிறேன்றது தெரியறது கஸ்தூரி. நூற்றுல ஒரு அப்பா பாலாவோட அப்பா மாதிரி அமைஞ்சுப் போறதுண்டும்மா...அதுக்காக உலகத்து அப்பாக்கள் எல்லோருமே அப்படித்தான்னு நினைக்கலாமா...?''

தலை கவிழ்ந்தாள் கஸ்தூரி. ஒரு வினாடி பேசாதிருந்த அந்த அம்மாள் ஏதோ நினைத்துக் கொண்ட மாதிரி மறுபடியும் கேட்டாள்.

''ஏண்டா...நீ பாட்டுக்கு அழைச்சுண்டு வந்துட்டியே... அவளுடைய அப்பா போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுத்தால் என்னடா செய்வ...?''

அவன் மிரண்டு அம்மாவைப் பார்த்தான்.

''என்னடா பார்க்கிற...'நகை நட்டுக்கு ஆசைப்பட்டு என் பொண்ணை ஏமாற்றி அழைச்சிண்டு போயிட்டான்னு' அவர் ரிப்போர்ட் பண்ணலாம் இல்லையா...?''

''அவ எங்கேம்மா நகை நட்டெல்லாம் போட்டுண்டு வந்திருக்கா...? நான்தான் எல்லாத்தையும் கழற்றிக் கொடுத்துட்டு வரச் சொன்னேனே...?''

''நீ சொல்ற...ஏம்மா கஸ்தூரி உனக்கென்ன வயசாறது...?''



''பத்தொன்பது முடிஞ்சிடுத்து மாமி...''

''நல்ல காலம் மைனர் இல்லை...எதுவானாலும் நாளைக்கு நான் கிளம்பி மெட்ராஸ் போறேன். உங்க அப்பா அம்மாவை சந்திச்சுப் பேசறேன். அவங்க முன் நின்னுதான் இந்தக் கல்யாணம் நடக்கணும். அதான் ரெண்டு குடும்பத்துக்கும் நல்லது...''

மறுநாள் காலையில் புறப்பட்டுப் போன அந்த அம்மாள் அதற்கும் மறுநாளே திரும்பி வந்தாள். போன ரயிலிலே திரும்பி வந்த மாதிரி வந்து சேர்ந்தாள். வந்தவள் ஒரு வார்த்தை சொல்லவில்லை. தானே புரோகிதரை அழைத்தாள். நல்ல நாள் பார்த்தாள். பத்திரிகை அச்சிட்டாள். ஊர் முழுதும் கூப்பிட்டாள். தன்னால் இயன்ற அளவு செலவழித்து தன் பொண்ணுக்குச் செய்கிற மாதிரி கல்யாணத்தை நடத்தினாள். ஊர் மெச்ச போது.

''எனக்கு இன்னொரு பெண் இருந்திருந்தால் செய்திருக்க மாட்டேனா...?'' என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னாள்.

கல்யாணமான மறுவாரமே பாலா டுடோரியல் காலேஜ் வேலையில் சேர்ந்தான். சின்னதாய் வீடு பார்த்தான். மீண்டும் மாயவரம் வந்து கஸ்தூரியை அழைத்துப் போனான்.

ரயிலேற்ற வந்த அவனது அம்மா ரயில் புறப்பட்ட போது கண் கலங்கச் சொன்னாள்.

''நீயே கதின்னு எல்லாத்தையும் விட்டுட்டு வந்திருக்கிற பொண்ணுடா பாலா...கண் கலங்காமல் பார்த்துக்கோ...''

''கவலைப்படாதேம்மா...நான் பார்த்துக்கறேன்'' என்றான் அவன். அம்மாவின் உருவம் கண்களை விட்டு

மறைகிற வரை கையாட்டினான். பின்பு கஸ்தூரியின் பக்கத்தில் உட்கார்ந்து கேட்டான்.

"நம் வாழ்க்கையின் முதல் பாகம் முடிஞ்சுப் போச்சு இல்ல கஸ்தூரி...?"

"ரெண்டாம் பாகத்தை ஆரம்பிக்கலாம் இல்லையா...?" என்றாள் அவள் சிரித்துக் கொண்டே.

## 5

ஒரு நாவலின் இரண்டாம் பாகம் மாதிரிதான் ஆரம்பித்தது அவர்களின் அடுத்த கட்ட வாழ்க்கை. கல்யாணமான புதிது. இளமை வேகம். அனுபவம் தந்த துடிப்பு. இரவுகள் பகல்களாக மாறின ரசவாத வித்தை. கஸ்தூரி, கஸ்தூரி என்று பாலா சுற்றி வந்த விந்தை. டுடோரியல் கல்லூரி, வீடு தவிர வேறொன்றும் தெரியாதிருந்த வேடிக்கை...

ஆறு மாதங்களாக சந்தோஷமும், சிரிப்புமாக ஒரே வட்டத்தில் சுற்றி வந்த வாழ்க்கை சடாரென்று ஒடித்துத் திருப்பின மாதிரி மாறலாயிற்று. எப்படி ஒரே நாளில் அவனது கல்யாணம் முடிவாயிற்றோ அதே மாதிரி இந்த மாறுதலும் திடீரென்று நிகழத் தொடங்கிற்று.

வழக்கம் போல் கல்லூரி முடிந்து கஸ்தூரிக்கு மல்லிகைப் பூ வாங்கி, வாடின தாமரை இலையில் சுற்றி எடுத்துக் கொண்டு பஸ்ஸுக்காக காத்திருந்தவனின் அருகில் வந்து நின்றது கருநீல மாருதி கார்.

காரிலிருந்து இறங்கியவனைப் பார்த்ததும் "ஏய் வேணு..." என்று முகம் மலர்ந்தான் இவன்.

"பாலா...எப்படிடா இருக்கே...?" என்று வேணு அருகில் வந்து கைபற்றினான்.



3200190

"கொஞ்ச தூரத்தில் வந்தபோதே பார்த்தேன். 'நம்ம பாலா மாதிரி இருக்கேன்னு' நினைச்சு வேகம் குறைச்சு அருகில் வந்து பார்த்தால் நீயேதான். ஆமாம். எப்போ மெட்ராஸ் வந்தே...?"—பழைய சிநேகிதம் மாறாமல் ஆர்வமாக விசாரித்தான் வேணு.

"ஒரு வருஷத்துக்கு மேல் ஆறது."

"என்ன பண்றே...?,'

"டுடோரியல் காலேஜ்ல ட்யூட்டராக இருக்கேன். நீ...?"

"ஷேர் மார்க்கெட் பிஸினஸ். இன்ஃபாக்ட் உன் நினைவு எனக்கு அடிக்கடி வரும். உன்னை மாதிரி நம்பகமான ஒரு புத்திசாலி கிடைத்தால் பிஸினஸை ரொம்ப நல்லா இம்ப்ரூவ் பண்ணலாம்னு நினைச்சுப்பேன். இப்போ நீயே கிடைச்சிட்ட வா...எங்கேயாவது ஒரு நல்ல இடமாகப் பார்த்து உட்கார்ந்து பேசலாம்."

பாலா தயங்கினான்.

"என்னடா தயங்கற...?"

"இல்ல...வீட்ல கஸ்தூரி காத்துண்டிருப்பாளேன்னு யோசிக்கிறேன்."

"யாருடா கஸ்தூரி."

"அத்தை பொண்ணு."

"காதலா...?"

"மண்ணாங்கட்டி. காதல்னால் என்னன்னு தெரியறதுக்கு முன்னாடியே கல்யாணமாயிடுத்து."

"அப்படின்னால் கல்யாணத்துக்கு அப்புறம் காதல்னு சொல்லு..."

பதில் சொல்லாமல் வெறுமனே சிரித்தான் பாலா.

"சரி...நன்னா வசதியா இருக்கே இல்ல...?"

"சர்வீஸுக்குக் குறைச்சல் இல்லை."

"வா, கார்ல ஏறு. எங்கேயாவது ரெஸ்டாரெண்ட் மூலையில் உட்கார்ந்து பேசலாம்,"

"கஸ்தூரிகிட்ட ஒரு வார்த்தை..."

"சீ! வாடா...பேசி முடிச்சு வீட்டுக்குப் போய் என் பொண்டாட்டியையும் கூட்டிண்டு வரேன். நாங்களும் உன் கஸ்தூரியைப் பார்க்கறோம்..."

"உனக்கும் கல்யாணமாயிடுத்தா வேணு...?"

"ஓ.எஸ். இந்த ஏப்ரல் வந்தால் ரெண்டு வருஷம் முடியப் போறது. குட்டியா ஒரு வயசல ஒரே ஒரு பெண் குழந்தை. லவ் மேரேஜ்தான். அவளுடைய அப்பாவுக்கும் ஷேர் மார்க்கெட் பிஸினஸ். நானும் அவளும் இணைந்த மாதிரி எங்க ஷேர் மார்க்கெட் பிஸினஸூம் ஒன்றாக இணைந்துடுத்து."

"வெரி குட்" என்ற பாலா அதற்கு மேலும் தட்ட இயலாதவனாக வேணுவுடன் காரில் ஏறிக் கொண்டான்.

கார் சவாரியின் சுகமும், ஏர்கண்டிஷன் குளிர்ச்சியும், லாவகமாக ஓட்டிய வேணுவின் ஸ்டைலும், பளபளத்த லஃபாரி லூட்டும், மூச்சுக் காற்றுடன் இழைந்த வெளிநாட்டு செண்ட் வாசனையும்....

வாழ்க்கையில் அனுபவிப்பதற்கு எத்தனை இருக்கின்றன என்பதை முதல் முறையாக உணர்ந்தான் பாலா. மூன்றே பாண்ட் ஷர்ட்டுகளை வைத்துக் கொண்டு சில நாட்களில் இஸ்திரி கூட இல்லாமல் போட்டுக் கொண்டு, கசங்கலைக் கையால் நீவி விட்டு, கஸ்தூரி தருகின்ற டிபன் பாக்ஸைத் தூக்கிக் கொண்டு, ஓட்டமும் நடையுமாக பஸ் ஸ்டாப் வந்து, பஸ்ஸுக்குக் காத்து நின்று, கூட்டத்தில் முண்டியடித்து ஏறி, வியர்வையில் கசகசத்து, ஷர்ட், இன்னமும் கசங்கி பழசாய்த் தெரிய...

ஆமையும் முயலும் கதை அவனது நினைவிற்கு வந்தது. படிப்பில் கோல்ட் மெடல் வாங்கி முயலாக முந்தியவன்



நடைமுறை வாழ்க்கையில் ஆமையாகப் பின் தங்கி நிற்கிறான். பி.காம் மூன்று முறைகளுக்கு மேல் எழுதி பெயிலான வேணு இப்போது வெற்றிக் கொடி நாட்டி காரில் வந்து இறங்குகிறான். வாழ்க்கையில் வெற்றி பெற படிப்பு மட்டும் போதாது. இன்னும் ஏதேதோ தேவையாக இருக்கிறது. முக்கியமாய் கை தூக்கி விட ஒரு ஆள் தேவை. ஒரு காட்ஃபாதர் தேவை. அந்த காட்ஃபாதராக வேணு கை நீட்டுவானானால் பிடித்துக் கொண்டு மேலே ஏறினால் என்ன...? தன்னைப் பார்த்ததும் வேணுவே சொன்னானே...

"இன்ஃபாக்ட், உன் நினைவு எனக்கு அடிக்கடி வரும் பாலா. உன்னை மாதிரி நம்பகமான ஒரு புத்திசாலி கிடைத்தால் பிஸினஸை ரொம்ப நல்லா இம்ப்ரூவ் பண்ணலாம்னு நினைச்சுப்பேன்."

வேணு கூப்பிடுகிற பட்சத்தில் அவனுடன் சேர பாலா முடிவு செய்த தருணத்தில் அவன் தோளைத் தொட்டு உலுக்கினான் வேணு.

"இறங்குடா... என்ன யோசனை... ஓட்டல் வந்தாச்சு..."

டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் இருந்த அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலில் இறங்கிய பாலா உள்ளுக்குள் மிரண்டான். ஆனால் அதை காட்டிக் கொள்ளாமல் வேணுவுடன் நடந்தான். திடீரென்று தன் பாண்ட்டும், சட்டையும் நினைவிற்கு வர ஒருவித தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டது. 'இந்த உடையுடன் இங்கு வந்திருக்கிறோமே...' என்று தோன்றிற்று. அந்த நெருடலுடனே மங்கல் வெளிச்சத்தில் ஓர் மூலையில் வேணுவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

வேணுவைப் பார்த்ததும் சிரித்துக் கொண்டே வந்த பேரர் 'குட் ஈவினிங் சார்' சொல்ல பதில் 'குட் ஈவினிங்' இற்குப் பின்னர் வேணு இவனைப் பார்த்தான்.

''என்ன சாப்பிடற பாலா... ஏதாவது ஹாட் டிரிங்க்ஸ்...?''

''என்ன...?''

''ஒரு ஸ்மால் ஆர்டர் பண்ணட்டுமா...? பிளாக் லேபிள்டா...?

''ஓ...நோ...ஐ டோண்ட் டேக் டிரிங்க்ஸ்'' அவசரமாக மறுத்தான் பாலா. அந்த அவசரத்தைப் பார்த்து சிரித்த வேணு விடாமல் கேட்டான்.

''ஓ.கே. விஸ்கி வேணாம், வெறும் பியர் குடியேன்.''

''வேணாம்னா ப்ளீஸ். பழக்கமில்லை.''

வேணு தனக்கு ஒரு ஸ்மால் ஆர்டர் செய்தான். பாலாவிற்கு எலுமிச்சை ஜூஸ் தரச் சொன்னான். இரண்டும் வருகிற வரை பேசாமல் இருந்தான். வந்த பின் சட்டென்று தீவிர பாவனையில் இறங்கினான். விஸ்கியில் சோடா ஊற்றி, நான்கு பெரிய ஐஸ் கட்டிகள் போடச் சொல்லி, கண்ணாடி டம்ளரைத் தூக்கி ''சியர்ஸ்'' சொன்னான்.

பாலாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவையெல்லாம் பழக்கமில்லாததால் ஒரு வினாடி விழித்தான். பேரர் அகன்றதும் மெல்லிய குரலில் வேணு சொல்லிக் கொடுத்தான்.

''எதிராளி சியர்ஸ் சொல்கிற போது நீயும் உன் டம்ளரைத் தூக்கி சியர்ஸ் சொல்லணும் பாலா...''

''என்னுடையது வெறும் லைம் ஜூஸ்தானே வேணு...''.

''எதுவானாலும் சொல்லணும். சியர்ஸ் சொன்ன பின் ஒரு வாயாவது குடிச்சிட்டுத்தான் திரும்பவும் டம்ளரை மேஜை மீது வைக்கணும். இதெல்லாம் மேனர்ஸ் பாலா...''

''சரி...இப்போ சியர்ஸ் சொல்றேன்.''

இருவரும் சியர்ஸ் சொல்லி ஒருமிடறு விழுங்கிய உடனே வேணு ஸூட் பாக்கெட்டிலிருந்து 555 சிகரெட்



பாக்கெட்டை எடுத்து பாலாவிடம் நீட்டினான். மீண்டும் பாலா மறுத்தான்.

''ம்ஹூம். வேணாம்டா... பழக்கமே இல்லை. யாராவது சிகரெட் பிடிச்சால்கூட எனக்கு வயிற்றைப் புரட்டும்...''

''சரியாய்ப் போச்சு போ...உருப்படற மாதிரி எதுவும் கத்துக்கலை நீ...இன்னும் மாயவரத்துல இருந்த அதே அய்யராத்துப் பையனாகத்தான் இருக்கே...''

அது உள்ளுக்குள் சுருக்கென்று தைக்க பாலா அவனைப் பார்த்து சிரிக்க முயன்றான்.

''என் கூட சேர்ந்துட்ட இல்ல...இனிமே மாறிடுவ...'' என்று வாய்விட்டுச் சிரித்த வேணு டக்கென்று விஷயத்திற்கு வந்தான்.

''சரி. வா பிஸினஸ் பேசலாம். நீ என் கூட பார்ட்னராக சேரு. வெறும் ஒர்க்கிங் பார்ட்னர்தான். முதல் எதுவும் போட வேணாம். மூளை உன்னுடையது. பணம் என்னுடையது. லாபத்தில் கால் பங்கு உனக்கு. முக்கால் பங்கு எனக்கு. என்ன...?''

''மூளையா...? எனக்கு ஷேர் மார்க்கெட் பற்றி ஒன்னுமே தெரியாதே...''

''அரை மணி நேரத்துல சொல்லித் தரேன். பி.காம்ல காமர்ஸ்லயும், அக்கௌண்ட்ஸ்லயும் சென்டம் வாங்கின... உன்னால் புரிஞ்சுக்க முடியாதா...?''

''என் காமர்ஸூம், அக்கௌண்ட்ஸூம் உனக்கு பயன் படும்னு சொல்றியா...?''

''நமக்கு பயன்படட்டும்னு சொல்றேன். டுடோரியல் காலேஜ் ஸ்டூடண்ட்ஸைக் கரையேற்றி விடறதுக்கு பதிலா நாம் முதல்ல கரையேற வழி இருக்குன்னு சொல்ல வரேன்.''

''புரியலை...''

''முதல்ல நீ சரி சொல்லு. நான் புரிய வைக்கிறேன்.''

பாலா தயங்கினான்.

''என்ன தயங்குற...? நான் எதுவும் கோல்மால் பண்ணலை. நோட்டு அச்சடிக்கலை. என் கூட சேர்ந்து ஷேர்களின் விலையை மட்டும் ஏற்றி விட்டால் போறும். ஒரு ஷேர் பத்து ரூபாய்ன்னு வச்சுக்க. அதிகப்படி பணம் இருக்கிறவங்க லட்சக்கணக்கில் ஷேர்ல இன்வெஸ்ட் பண்ணி இருப்பாங்க, ஷேர் விலை ஏறுதுன்னு தெரிஞ்சால் விற்பாங்க. பத்து ரூபா ஷேரை நாம் இருபது முப்பதுன்னு ஏற்றி விட்டால் போதும். பாங்க் சேர்மெனனுடைய கடைக்கண் பார்வை நம் மீது விழுந்ததுன்னு வச்சிக்க... லட்சக் கணக்குல சம்பாதிக்கலாம். இடுகிடுன்னு பணக்கார னாயிடலாம். வெறும் பணக்காரனில்லை. கோடீஸ்வரன்.''

''முடியுமா...? பாங்க் சேர்மென் ஒத்துப்பாரா...?''

''என் மூஞ்சிக்கு ஒத்துக்க மாட்டார். என் இங்கிலீஷுக்கு ஒத்துக்க மாட்டார். ஆனால் உன் மூஞ்சிக்கு உன் இங்கிலீஷ் பேசற திறமைக்கு, காமர்ஸ் அறிவுக்கு அக்கௌண்ட்ஸ் மூளைக்கு ஒத்துப்பார். ஒத்துக்க வைக்கணும்னுதான் உன்னைக் கூப்பிடறேன். ஷேர்விலை ஏறதுன்னு தெரிஞ்சதும் விற்க வறவங்களைவிட ரெண்டு மடங்கு வாங்க வருவாங்க...''

''இதுல தப்பு ஒண்ணும் இல்லையே வேணு...?''

''இதுல என்னடா தப்பு...? காய்கறி விற்கிறவங்க விலை ஏற்றி விற்கிறதில்லை...? மளிகைக் கடைக்காரங்க விலை ஏற்றதில்லை. எந்த வியாபாரி விலை ஏற்றி விற்காமல் இருக்கான் சொல்லு...? அதே மாதிரி வியாபாரி தாண்டா நாமும். கொஞ்சம் வித்தியாசமா வியாபாரம் பண்ணப் போறோம்...''

''அவ்வளவுதானா...?''



''வேற என்னன்னு நினைச்ச...?''

''இல்ல...எனக்கு இதைப் பற்றிய நாலெட்ஜ் அதிக மில்லை.''

''அதிகமாக்கிக்கலாம் கவலைப்படாத. அப்போ நாளைக்கே டுடோரியல் காலேஜ் வேலையை விட்டுட்டு என்கிட்ட சேர்ந்துடு.''

''நாளைக்கேவா...?''

''ஏண்டா...நாள் நட்சத்திரம் பார்த்தா இதையெல் லாம் செய்துட்டிருக்க முடியும்? நம்மைப் பொறுத்தவரை எல்லா நாளும் நல்ல நாள்தாண்டா...''

''கஸ்தூரி கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு.''

''அடச்சீ! போடா... இதையெல்லாம் போய் பொம்மனாட்டிங்ககிட்ட சொல்லிண்டு. அவர்களுக்கு என்னடா தெரியும்...? என் பொண்டாட்டியோட அப்பாவே ஷேர் மார்க்கெட் பிஸினஸ்ல இருக்கார். நானும் அதே பிஸினஸ்தான். இருந்தாலும் அவளுக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவளே அப்படின்ற போது உன் பொண்டாட்டிக்கு என்ன புரியப் போறது...?''

''தைரியமாக வேலையை விட்டுடலாம்னு சொல றியா...?''

''நானில்லை...? உன்னை மட்டும் தனியாகவா செய்யச் சொல்றேன்....? நானும் உன் கூடத்தானே இருக்கேன்?''

பேசாதிருந்தான் பாலா.

''இன்னும் ஏண்டா தயங்கறே...? தைரியமாக வாடா...''

''சரி...''

''வெரிகுட்...'' என்று பாலாவின் கைபற்றி அதிவேக மாக குலுக்கினான் வேணு. மீண்டும் இன்னொரு பெக் விஸ்கி குடிச்சான். குல்சா, நான், தந்தூரி பராட்டா,

மட்டர் பன்னீர் என அதுவரை பாலா சாப்பிட்டே அறியாத எது எதையோ ஆர்டர் பண்ணி சாப்பிட வைத்தான். ஐஸ்க்ரீம் வரவழைத்தான். அவர்கள் ஓட்டலை விட்டு கிளம்பியபோது மணி ஒன்பதாகி விட்டது.

அதற்கு மேல் வேணுவின் வீட்டிற்குப் போய் அவனது மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தபோது மணி பத்தாயிற்று. வேணுவின் வீட்டையும், அவர்களின் அந்தஸ்தையும் பார்த்த பாலாவிற்கு அவர்களைத் தன் ஒண்டுக் குடித்தன வீட்டிற்கு அழைத்து வரவே என்னவோ போலிருந்தது.

ஒன்பது மணியானால் அவனிருக்கும் வீட்டு வாசல் விளக்கை வீட்டு சொந்தக்காரர் அணைத்து விடுவார். அதனால் வாசல் இருட்டாகக் கிடந்தது. முன் இரண்டு குடித்தனங்களைக் கடந்து வேணுவையும், அவன் மனைவியையும் வீட்டிற்குள் கூட்டி வருவதற்குள் போதுமென்றாகி விட்டது. அவர்கள் போர்ஷன் வாசலிலேயே கவலையோடு காத்திருந்த கஸ்தூரி அவன் முகம் தெரிந்ததும் பரபரப்போடு கேட்டாள்.

''என்ன பாலா இத்தனை நேரம்...? நான் ரொம்ப பயந்து போ...''

பின்னால் வந்தவர்களைப் பார்த்ததும் பாதியிலேயே நிறுத்தினாள் அவள். அவர்களை உள்ளே அழைத்து வந்து வரவேற்பறை, படுக்கையறை, பூஜையறை எல்லாமாக இருந்த அந்த ஒரே முன் அறையின் கட்டிலில் உட்கார வைத்தான். கஸ்தூரிக்கு அவர்களை அறிமுகப்படுத்தினான்.

''கஸ்தூரி...இவன்தான் வேணு. நான் உன்கிட்ட சொல்லலை, புஸ்தகமெல்லாம் இரவல் வாங்கிப் படிப்பான்னு, அந்த இரவல் கோஷ்டியில் இவனும் ஒருத்தன்.''

''இரவல் வாங்கி படிச்ச இவன் கோல்ட் மெடலிஸ்ட். ஆனால் நான் பி.காமில் மூணு தரம் கோட்டு...''



மிக இயல்பாகச் சொல்லிக் கொண்டே அது போன்ற இடமெல்லாம் சகஜம் மாதிரி வெகு சாதாரணமாக வந்து உட்கார்ந்தான் வேணு. ஆனால் அவன் மனைவி வரக் கூடாத இடத்திற்கு வந்துவிட்டவளாக உணர்வதைப் புரிந்து கொள்ள முடிந்தது. கட்டில் விளிம்பில் மிக லேசாக ஒட்டிக் கொண்டு அவள் போகத் தவிப்பது தெரிந்தது. ஆகவே கஸ்தூரியும் அவளோடு சகஜமாகப் பேசக் கஷ்டப்பட்டாள். நிலைமையை அழகாகச் சமாளித்தான் வேணு. மனைவி பேசாததையெல்லாம் சேர்த்து வைத்து கலகலத்தான். அவர்களை இன்னமும் நெருங்கி வந்தான்.

''இதப் பாரு கஸ்தூரி, இவன் என்னடா எடுத்த எடுப்பில் ஒருமையில் கூப்பிடறானேன்னு நினைக்காதே. இனிமேல் உனக்கு நான்தான் அண்ணன். உனக்கு மட்டுமில்லை. இவனுக்கும்தான் நாளையிலிருந்து இவன் ட்யூட்டர் வேலையை விட்டுவிட்டு என்கூட என் வியாபாரத்தில் பார்ட்னராக சேர்கிறான். இனிமேல் உனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. பாசமலர் சினிமாவில் சிவாஜி சொன்ன மாதிரி சொல்லணும்னால் 'பாலா...இனிமேல் இவ கண்ணுல நான் ஆனந்தக் கண்ணீரைத்தான் பார்க்கணும்'னு சொல்றேன். என்ன கஸ்தூரி...சரியா...?''

கஸ்தூரிக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன பதில் சொல்வது என்பதும் தெரியாததால் பேசாமல் இருந்தாள். வேணு விடாமல் கேட்டான்.

''என்னம்மா பேசாமல் இருக்க...?''

''எனக்கு ஒண்ணும் புரியலை...'' மெதுவாகச் சொன்னாள் கஸ்தூரி.

''புரியும்படி பாலா சொல்வான். நாளைக்கு என்ன கிழமை...? புதனா...? பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காதுன்னு சொல்வாங்க. 12—1½ ராவு காலம். ரெண்டு மணிக்குக் கார் அனுப்பறேன். அதுக்கு முன்னால் நீ

டுடோரியல் காலேஜ் வேலையை ரிஸைன் பண்ணிட்டு வந்துடு என்ன...?''

''சரி...''

''இளம்பலாமா சியாமளா...?''

அவன் மனைவி பதில் பேசாமல் எழுந்து கொண்டாள்.

''எதுவும் சாப்பிடாமலே போறீங்களே...?''— சட்டென்று நினைவு வந்தவளாகக் கேட்டாள் கஸ்தூரி.

''வாயைத் திறந்தால் காக்காய் கொத்தும் அந்த அளவுக்கு சாப்பிட்டுட்டுதான் வரோம். அதுக்கென்ன...?

''ஆ....ஆமாம்.''

அறையை விட்டு வாசலில் தலை தாழ்த்தி வெளியில் வந்த வேணு சட்டென்று நின்று சொன்னான்.

''பை இபை பாலா....நாளைக்கே வீட்டையும் காலி பண்ணிடு. சாமான்களையெல்லாம் ஒழிச்சு வை. ஆபீஸ் ஆட்கள் வந்து எடுத்துப் போவாங்க. ராஜா அண்ணா மலை புரத்துல எங்களுக்கு இன்னொரு வீடு சும்மா பூட்டிக் கிடக்கு. அதை சுத்தப்படுத்தி வைக்கச் சொல்றேன். கஸ்தூரியும், சாமான்களும் முதல்ல போகட்டும். சாயந்திரம் ஆபீஸ் விட்டதும் நீ அங்க போகலாம்.''

அவர்கள் போனதும் கஸ்தூரி கேட்டாள்.

''என்ன பாலா இதெல்லாம்...?''

''ஜீபூம்பா வேலை,''

''அப்படித்தான் இருக்கு.''

பாலா பேசாதிருந்தான்.

''நிஜமாகவே வேலையை விடப் போறிங்களா பாலா...?''

''ஆமாம்.''

''நன்னா யோசனை பண்ணித்தான் செய்யறீங் களா....?''



''ஆமாம்.''

''உங்க சிநேகிதர் கூட சேர்ந்து வியாபாரமா செய்யப் போறீங்க?''

''ஆமாம்.''

''என்ன வியாபாரம்?''

''ஷேர் மார்க்கெட் வியாபாரம்.''

''அப்படின்னா...?''

''சொன்னால் உனக்குப் புரியாது கஸ்தூரி.''

''வேணாம் பாலா. எனக்கென்னவோ பயமாக இருக்கு.''

''ஆரம்பத்துலேயே அஸ்துன்னு சொல்லாதே கஸ்தூரி. இப்படியே வெறும் டுடோரியல் காலேஜ் ட்யூட்டராக இருந்தால் வாழ்க்கையில் எப்போ நாம் வசதி பார்க் கறது...?''

''அதுக்காகத் தேவை இல்லாதது. அனுபவமில் லாததுல எல்லாம் இறங்கணுமா...?''

''முட்டாள்தனமாகப் பேசாத கஸ்தூரி. வாழ்க்கையில் முன்னுக்கு வர்றது தேவை இல்லாததா....? அனுபவம் எப்படி வரும்...? முன்ன பின்ன செத்த அனுபவம் இல்லேன் றதுனால் சாகாமலா இருக்கப் போறோம்?''

''ஐயோ...எதுக்காக இப்படியெல்லாம் பேசணும் பாலா...?''

''பின்ன...? அவன் என் சிநேகிதன். சின்ன வயசு லேர்ந்து ஒண்ணாப் படிச்சவன். அவனும் கூட இருக்கான். எனக்குன்னு தனியாகவா கெடுதல் செய்யப் போறான்...?''

''கெடுதல் செய்வார்னு நான் சொல்லலையே பாலா...''

''பின்ன....?''

''புது வீடு, நல்ல இடம், வியாபாரம் எல்லாம் வரப் போறதுன்னால் மனசு சந்தோஷமில்ல படணும். அதுக்கு பதிலாக ஏன் பயப்படறது கஷ்டப்படறதுன்னு தெரியலை. அதான் சொன்னேன்.''

''நீ எதுவும் சொல்ல வேணாம். வாயை மூடிண்டு இருந்தாலே போறும். செய்யிறவனுக்கு எதுவும் தெரியாது. அடிமுட்டாள்னு நினைச்சுக்க வேணாம்.

''ஐயோ...நான் அப்படி எதுவும்...''

''போறும். மணி பதினொன்னு ஆச்சு. நாளை, காலைல எழுந்து நான் காலேஜ் போகணும்.''

''நீங்கதான் நாளைக்கு ரிஸைன் பண்ணப் போறீங்களே...?''

''போய்தானே அதையும் செய்யணும்.''

''சரி. பாலா—ஆல் தி பெஸ்ட்! எல்லாம் நல்லதாக, நல்லதிற்காகவே நடக்கட்டும். நாளைக் காலைல சீக்கிரம் எழுந்து நான் பூஜை பண்ணிடறேன்.''

''சரி...நீ சாப்பிட்டியா இல்லையா...?''

''ஒன்பது மணி வரை காத்துண்டிருந்தேன். நீங்க வரலை. ரொம்பப் பசிச்சதுன்னு சாப்பிட்டேன்.''

''தட்ஸ் குட். வா படுத்துக்கலாம்.''

விளக்கை அணைத்து அவனுடன் படுத்துக் கொண்டாளே தவிர மனதில் நிம்மதி இல்லாமல் போயிற்று. இனம் புரியாத கவலையும், பயமும் நெஞ்சை என்னவோ செய்தன.

'முருகா காப்பாற்று' என்று வேண்டிக் கொண்டவள் உள்ளூர்குள்ளாகவே கந்த சஷ்டி கவசம் சொல்லத் துவங்கினாள்...

# 6

ஒன்றும் புரியவில்லை பாலாவிற்கு. அவன் எதைச் செய்தாலும் சரியாக வந்தது. எது பேசினாலும் கேட்பவர்களுக்குப் பிடித்தது. அவன் எழுதின்ற கடிதங்கள் மிக அழகாக அமைந்தன. பேசிய ஆங்கிலம் ஸ்ரீனிவாச சாஸ்திரியை மிஞ்சிற்று. போன அத்தனைக் கம்பெனிகளிலும் புகழ்ந்தார்கள். அவன் சொன்னதைக் கேட்டு அவனது வியாபார நுணுக்கத்தை வியந்தார்கள். பாராட்டினார்கள். 'பாலா, பாலா' என்று சுற்றி வந்தார்கள். பாங்க் சேர்மென் ஒரு நாள் மாலையில் கார் போட்டுக் கொண்டு வீடு தேடி ஓடி வந்தார். பாலா குளித்துக் கொண்டிருந்தான். அழைப்பு மணி கேட்டு சமையல் அறையில் இருந்த கஸ்தூரிதான் வந்து கதவைத் திறந்தாள்.

''மிஸ்டர் பாலகிருஷ்ணன் இருக்காரா...?''

''இருக்கார். குளிச்சுண்டு இருக்கார். நீங்க யாரு...?''

''என் பேர் ஹரிஹரன்.—பாங்க் சேர்மென்.''

''வாங்கோ, உள்ள வந்து உட்காருங்கோ...''

''பரவாயில்லை, பாலா வர நேரமாகுமா...?''

''இதோ போய் சொல்றேன்.''

குளியலறைக் கதவைத் தட்டி சொன்ன போது பரபரத்தான் பாலா. பாதி குளித்துக் கொண்டிருந்தவன் அப்படியே துடைத்துக் கொண்டு ஓடி வந்தான். அவசர அவசரமாக உடுத்துக் கொண்டு வெளியில் வந்தான்.

''வாங்க சார்...உள்ள வாங்க சார்...இப்படி வெளியில நிக்கறீங்களே சார்...?''

''பரவாயில்லை, நீங்க என் கூட வரமுடியுமா...! வெளியில் போய் பேசலாம்...?''

''ஓ.எஸ். வித் பிளெஷர் சார். வேணுவையும் கூட கூப்பிட்டுக்கலாமா சார்...?''

''வேணுவா...?'' என்றவர் கால் விநாடி யோசித்தார். பின்னர் சரி எனத் தலையாட்டினார்.

''இதோ சார். ஒரே நிமிஷம், அவனுக்கு போன் பண்ணிச் சொல்லிடறேன். எங்க சார் போறோம்....?''

''ம்...?'' என்று மீண்டும் யோசித்தவர் ''எம்.ஸி.ஸி பாருக்கு வரச் சொல்லுங்க...'' என்றார்.

ஓடிப் போய் வேணுவிற்கு டெலிபோன் செய்து விஷயத்தைச் சொல்லி விட்டு கஸ்தூரியிடம் மெதுவாகப் பேசினான்.

''யாரு தெரியுமா கஸ்தூரி....பாங்க் சேர்மன். இப்படி யெல்லாம் வீடு தேடி வரக் கூடியவரில்லை. வந்திருக்கார்... அதுலேர்ந்து என்னுடைய பெருமையைப் புரிஞ்சுக்க முயற்சி பண்ணு...'' முகம் பிரகாசிக்க உதடுகளில் சிரிப்பு விரியச் சொன்னான் அவன்.

''இன்னிக்கும் ராத்திரி வர நேரமாகுமா?'' —கஸ்தூரி அவன் கேள்வியிலேயே குறியாக இருந்தாள்.

''இது ஒண்ணுதான் உனக்குத் தெரியும். வீட்டுக்காரன் எத்தனை உயரறான், எவ்வளவு பேர் புகழ் சம்பாதிக்கிறான். ஒரு நாளைக்கு எத்தனை பெரிய மனுஷங்களை சந்திக்கிறான் என்கிற எதையும் தெரிஞ்சுக்காதே...திருப்பித் திருப்பி 'ராத்திரி நேரமாகுமா, ராத்திரி நேரமாகுமா'ன்ற ஒரே கேள்வியைக் கேளு.... —சிடுசிடுக்கத் துவங்கினான் அவன். இந்தப் பத்து நாட்களில் அடிக்கடி, அவன் கோபப்படுவதும், சிடுசிடுப்பதும் பழகி விட்டதால் அவள் பேசாதிருந்தாள்.

''சரி... சரி... வந்து கதவைப் போட்டுக்க. வாசல்ல அத்தனைப் பெரிய மனுஷர் காத்துண்டிருக்கார்...'' என மீண்டும் வெளியில் வந்தான்.



''ஸாரி சார்... வேணுவின் லயன் கிடைக்கக் கொஞ்சம் நேரமாயிடுத்து'' இப்போதெல்லாம் மிக சுலபமாக அவன் வாயில் பொய் வந்தது.

''பரவாயில்லை, போகலாமா...?'' என்று காருக்குப் போக கூடவே பின் தொடர்ந்தான் அவன்.

அவர்களுக்கு முன்பாக எம்.ஸி.ஸி. பாரில் காத்துக் கொண்டிருந்தான் வேணு. இவர்களைக் கண்ணாடி வழியாகப் பார்த்து கதவு வரை ஓடி வந்து ஹரிஹரனுக்குக் கை குலுக்கினான்.

''ஹௌவ் ஆர் யு சார்...?''

''ஃபைன் வெரி ஃபைன்'' என்று சிரித்தார் அவர்.

''நைஸ் டு மீட் யு சார்...'' என ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். வேணு கையோடு கொண்டு வந்திருந்த பையைத் திறந்து மூன்று பாட்டில்களை எடுத்து மேஜை மீது வைத்தான் வேணு.

''சார்... உங்களுக்காக ஸ்பெஷலாகக் கொண்டு வந்தேன் சார். இது ஆல் யூஷுவல் பிளாக் லேபிள் சார். இது ஜே அண்ட் பி-ன்னு எக்ஸலெண்ட் ஸ்காட்ச் விஸ்கி சார்....''

''நான் சாப்பிட்டிருக்கேன். ஐ லைக் இட்...''

''வெரி குட். அப்போ இதுவே எடுத்துக்கலாமா சார்...?''

''வேற என்ன இருக்கு?''

''ரெட் வைன் சார்...அப்புறம் கோனியாக்.''

''வேணாம் ஜேபியே எடுக்கலாம்.''

''எக்ஸலெண்ட் சார்.''

வேணு பேரரைக் கூப்பிட்டான். மூன்று டம்ளர்கள் கொண்டு வரச் சொன்னான். மூன்றிலும் விரலளவு விஸ்கி ஊற்றி ஹரிஹரனைப் பார்த்தான்.

''சோடா...ஆர் வாட்டர் சார்...?''

''சோடா....''

சோடா ஊற்றினான்.

''ஐஸ் சார்...?''

''நாலு க்யூப்ஸ்...''

''நானும் நாலு க்யூப்ஸ்தான் சார் போட்டுப்பேன்...'' என்று அதிகமாகச் சிரித்தான். மூன்று டம்ளர்களிலும் நான்கு பெரிய துண்டு ஐஸ் கட்டிகளை மிதக்க விட்டு அவரிடம் ஒன்று தந்து மற்றொன்றை பாலாவிடம் நீட்டிய போது பாலா தயங்கினான் வேணு. 'எடுத்துக் கொள்' என கண்காட்டினான்.

'ஐயோ... வேணாம்டா...' மெதுவாக பாலா அவன் காதை கடிக்க அவன் பாலாவின் பாதத்தைத் தன் பாதத்தால் அழுத்தி ''டோன்ட் பீ ஸில்லி...'' என கடிந்து கொண்டான்.

அதை கவனித்த ஹரிஹரன் கேட்டார்.

''என்ன...? வாட் ஈஸ் தி மேட்டர்?''

வேணு தயங்க பாலா பட்டென்று சொல்வான்.

''இல்ல சார். ஐயம் எ டீ டோட்டலர்....டிரிங்க்ஸ் சிகரெட் எதுவும் தொடறதில்லை...''

''வாட் நான்ஸென்ஸ். என்ன பாலா நீங்க. உங்க கம்பெனி வேணும்னு கூட்டிட்டு வந்தால் இப்படி சொல்றீங்க? ஓ...கமான் வாட் ஈஸ் திஸ்...?'' ஹரிஹரன் சொல்ல வேணு டம்ளரை அவன் கைகளில் திணித்தான். பாலா மீண்டும் தயங்கினான்.

''இல்ல சார்... வந்து இது மட்டும் பழகிக்க வேணாம்னு...''

''ஓ... நோ... எல்லாம் பழகணும். எல்லாத்தையும் பழகிக்கணும். பின்ன வாழ்க்கை எதுக்காக இருக்கு.



அனுபவிக்கணும்ப்பா... அனுபவிக்கத் தெரியணும். இல்லைன்னால் நான் ஏன் உங்களைத் தேடி ஓடி வரப் போறேன்...?''

''ஸ்டாப் பிளாபரிங் பாலா...சேர்மென் அவ்வளவு சொல்றாரில்ல எடுத்துக்க...'' என்ற வேணு.

''சார்... எனி ஸ்மால் ஈட்ஸ் சார்...?'' என்பதை அதி பவ்யமாகக் கேட்டான்.

''காக்டெயில் இட்லி, வடை ஏதாவது கிடைச்சால் சரி. இல்லைன்னால் ஃபிங்கர் சிப்ஸ் போறும்.''

பேரரைக் கூப்பிட்டு அவர் கேட்டதைத் தருவிக்க ஏற்பாடு செய்த பின் மீண்டும் அவர் பக்கம் திரும்பினான்.

''எடுத்துக்குங்க சார்...''

''எடுத்துக்க பாலா...''

அவர்களின் கைகளோடு பாலாவின் கைகளும் விஸ்கி டம்ளரோடு உயர்ந்தது. வாய் சியர்ஸ் சொல்லிற்று. மெல்ல முதல் மிடறு விழுங்கிய போது லேசாய் கசப்பு தெரிந்தது. தொண்டை எரிகிற மாதிரி இருந்தது.

போகப் போக பேச ஆரம்பித்த பின், வியாபார விஷயத்தில் நுழைந்த பின் எதுவும் தெரியவில்லை. தீவிரமாக பேச்சில் இறங்கினான். இன்னும் சரளமாக. சாமர்த்தியமாக, லேசான மனதுடன் பேச விஸ்கி உதவி செய்வதாகத் தோன்றிற்று. அவர்களுடன் இரண்டாம் பெக் கலந்து கொண்டான். வேணு நீட்டிய 555 சிகரெட் பாக்கெட்டிலிருந்து ஒன்று உருவி பற்ற வைத்துக் கொண்டு புகையை உள்ளிழுத்த போது மனது இன்னமும் லேசாவதை உணர்ந்தான். உடம்பு கனமே தெரியாமல் பறக்கிற மாதிரியான மிதப்பு ஏற்பட்டது. அந்த சுகத்தை ரசிக்கத் தொடங்கியவன் அவனையும் அறியாமல் தானாக மூன்றாம் பெக் கலந்து கொண்டான். மற்றொரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

சேர்மனுடன் பேசிய அன்றையை பேச்சு வெற்றியில் முடிய நான்காவது பெக் ஊற்றி வேணு கொடுத்த போது அதையும் மறுக்காமல் வாங்கிக் கொண்ட பாலா தன்னைத் தானே புதுசாய் உணரத் தொடங்கினான்...

## 7

அன்றிரவு ஒரு மணிக்கு மேல் பாலாவைக் கைத் தாங்கலாகப் பற்றி காரிலிருந்து இறக்குவதற்குள் வேணு விற்குப் போதுமென்றாகி விட்டது.

'குடிக்கவே மாட்டேன்னு சொன்னவன் காணாததைக் கண்ட மாதிரி குடிச்சு வச்சிருக்கான் மடையன்' எனத் தனக்குள் திட்டிக் கொண்டான்.

''நம் தலையெழுத்து. இந்த மாதிரிப் பஞ்சைப் பராரி களோடெல்லாம் பழக வேண்டியிருக்கு'' எனவும் சலித்துக் கொண்டான்.

''பார்க்க அழகும், கம்பீரமும், இந்த மூளையும் இல்லைன்னால் இவனையெல்லாம் யார் சீண்டுவார் கள்...?'' எனக் கூடவே சொல்லிக் கொண்டான்.

'வெவெடவென்று ஒல்லியாகத் தெரியறான். ஆனால் எத்தனை கனமாக இருக்கான் பாஸ்டர்ட்' என்றும் திட்டினான்.

கார் சத்தம் கேட்டு வாசல் விளக்கு போட்டு கஸ்தூரி ஒடி வருவதற்குள் வேணுவின் மீதே வாந்தியெடுத்தான் பாலா.

''ஐயோ... என்ன ஆச்சு...?'' என்று பதறி அடி வயிறு கலங்க கஸ்தூரி ஓடி வந்த போது, தன் முக பாவத்தை மாற்றி, வெறுப்பு, அருவருப்பு எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டு புன்சிரிப்பாகச் சிரிக்க முயன்றான் வேணு.



''ஒண்ணுமில்லை. முதல்ல கொஞ்சம் தண்ணி கொண்டு வாங்க...''

தண்ணீர் கொண்டு வர கஸ்தூரி உள்ளே ஓடியதும் பாலாவை ஓங்கி ஓர் அறை அறைந்தான். அதில் கண் விழித்த பாலா வாய் குழறினான்.

''என்...னமா வேணு...'' என்பது மட்டும் கேட்டது.

அதற்குள் கஸ்தூரி செம்பு நிறைய நீர் கொண்டு வந்ததும் பாலாவின் முகத்தில் ஊற்றினான். தன் சட்டை, பாண்ட் இரண்டையும் மீதி நீரில் கழுவிக் கொண்டவன் தரதரவென்று பாலாவை இழுத்து வந்து உள்ளே படுக்க வைத்தான்.

அதைப் பார்த்த கஸ்தூரிக்குக் கண்களில் நீர் மண்டிற்று. அவனிடமிருந்து வீசிய விஸ்கி வாசனையும், சிகரெட் நாற்றமும் சகிக்க முடியாமல் கேட்டாள் அவள்.

''குடிச்சாரா...?''

''பிஸினஸ் பீல்டில இருக்கிறவங்களுக்கு இதெல்லாம் சகஜம் கஸ்தூரி. இதையெல்லாம் பெரிசு படுத்தக் கூடாது. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் எப்படி நடந்துக்கணும்னு என் பொண்டாட்டிகிட்ட கேட்டு தெரிஞ்சுக்க. முதல் தரம் குடிச்சிருக்கான் இல்லையா? அதனால் கொஞ்சம் புரட்டி யிருக்கு. போகப் போக சரியாகிவிடும். ராத்திரி நல்லாத் தூங்கினா காலைல தெளிஞ்சுப் போயிடும்.

'அடப்பாவி' என்று உள்ளுக்குள் சபித்தாள் கஸ்தூரி. 'போகப் போக சரியாகிவிடும்' என்றால் என்ன அர்த்தம் என்பதைக் கேட்க நினைத்தவள் கேட்காமலே விட்டாள்.

''நான் பார்த்துக்கறேன். நீங்க போங்க.'' என்று வேணுவை அனுப்பி கதவைப் போட்டுக் கொண்டு வந்தவள் பாலாவின் காலடியில் உட்கார்ந்து அழுதாள்.

'என் பாலாதானா நீங்க...? பழைய பாலாவா...? வேணாம் பாலா...நமக்கு இந்த வீடு, கார், டெலிபோன் வசதி எதுவும் வேணாம், ஒரு மாசத்துக்குள் ஏதோ மந்திரம் பண்ணின மாதிரி வந்த அத்தனையும் வெறும் மந்திரமாகவே மறைஞ்சு போயிடட்டும். மஞ்சள் கயிற்றோடு இருந்த நான் அப்படியே இருக்கேன். இந்த சங்கிலி, வளையல், தோடு எதுவும் எனக்கு வேணாம். இந்த பீரோ, கட்டில் மெத்தை, சோபா செட், எல்லாத்தையும் இங்கேயே வச்சிட்டு நாம் திரும்பி நம் ஒண்டுக் குடித்தன வீட்டுக்கே போயிடுவோம். எனக்கு என் பாலா வேணும். பழைய பாலா வேணும். பொய் சொல்லத் தெரியாத, கள்ளம் கபடமில்லாத, சூதுவாது அற்ற, வஞ்சகமே அறியாத, யாரையும் ஏமாற்ற நினைக்காத அந்த பாலா வேணும்.

ராத்திரி முழுதும் சொல்லி சொல்லி அழுதாள். அவனது முகத்தில் வியர்த்த போதெல்லாம் துடைத்து விட்டாள்.

அதிகாலையில் மெல்ல அயன்று கண் இழுத்தபோது பாலா எழுந்து கொண்டான். தலை பாரமாகக் கனத்ததால் திரும்ப படுத்துக் கொண்டான். கண்கள் மீது யாரோ இரண்டு ராட்சசர்கள் உட்கார்ந்து அழுத்துவதாகத் தோன்ற இறுக மூடிக் கொண்டான். அப்படியே தூங்கியும் போனான்.

மீண்டும் கண் விழித்த போது பக்கத்தில் உட்கார்ந்திருந்த கஸ்தூரி அவனது முகம் தடவிக் கொடுத்தாள். மெல்ல அவனின் காதருகில் உதடுகளை உரசிக் கிசுகிசுத்தாள்.

''இப்போ எப்படி இருக்கு பாலா...?''

சடாரென்று அந்த கேள்வியில் எழுந்து உட்கார்ந்து கொண்டான் அவன்.

''எப்படி இருக்குன்னா...எதை கேட்கிறே?''



''உடம்பு எப்படி இருக்குன்னு கேட்டேன்.''

''ஏன், என் உடம்புக்கு என்ன...?''

''நேற்று ராத்திரி எந்த நிலைமையில் வீட்டுக்கு வந்தீங்க தெரியுமா...? உங்களை வேறு தாங்க மாட்டாத குறையாகப் பிடிச்சு அழைச்சிண்டு வந்தார். அவர் மேலேயே வாந்தி எடுத்துட்டீங்க...''

''வாந்தி எடுத்தேனா...?''

''உங்க நிலைமையே உங்களுக்குத் தெரியாத அளவுக்குக் குடிக்கலாமா பாலா...?''

''குடிச்சேனா...யார் குடிச்சது...?''

''வெறும் குடி மட்டுமில்லை. இன்னும் கூட உங்ககிட்டே இருந்து சிகரெட் நாற்றம் வர்றது...''

''சும்மா உளறாத கஸ்தூரி. கனவு ஏதாவது கண்டாயா...?''

''உங்களுக்கு நிஜமாகவே நினைவில்லையா...? இல்லை இதெல்லாம் போறாதுன்னு பொய் வேறு சொல்ல ஆரம்பிச்சுட்டீங்களா...?''

''போரடிக்காத கஸ்தூரி. விடு என்னை பல் தேய்ச்சுண்டு வரேன். காபி கொடு...''

''இந்த மாதிரி ஒரு நாள் காலையில் காபி சாப்பிட்டீங்களான்னு கேட்க உங்களைத் தேடிண்டு வந்த போது ஆரம்பிச்சதுதான் நம்ம அன்பு. அதையெல்லாம் மறந்து போயிட்டீங்களா பாலா...பழசெல்லாமே மறந்து போயிடுத்தா...?''

''காலங்கார்த்தால போர் அடிக்காதன்னு சொன்னேனில்ல...போய் காபி கொண்டு வா...''

''இல்லை, மாட்டேன். இன்னிக்கு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் உங்களை இந்த இடத்தை விட்டு நகர விடமாட்டேன்.''

''திடீர்னு என்ன பிரச்சினை வந்தது இப்போ...?''

''என்ன பிரச்சினையா...? நீங்க புதை குழியில் காலை வச்சிருக்கீங்க. முதல்ல உங்களை வெளியில் இழுக்கணும். வலையில் விழுந்த மீன் மாதிரி அகப்பட்டுண்டிருக்கீங்க. அதிலிருந்து மீட்கணும்...''

அதையெல்லாம் கேட்டு அவனுக்குக் கோபம் வந்தது. முகம் ஜிவுஜிவுத்தது. இரவு குடித்ததில் சிவந்திருந்த கண்களில் இன்னமும் சிவப்பு ஏறிற்று.

''என்ன உளற...?'' என்று அதட்டினான் அவன்.

''நான் உளறலை. உண்மை சொல்றேன்.''

''பெரிய அரிச்சந்திரன் இவ...''

''நான் அரிச்சந்திரனோ இல்லையோ... நீங்க அப்படித் தான் இருந்தீங்க...''

''சரி இப்போ அதுக்கு என்ன...?''

''எதுக்காக இப்படியெல்லாம் மாறிட்டு வரீங்க...? உங்களுக்குப் பொருத்தமில்லாத முகமூடியெல்லாம் போட்டுக்கறீங்க...?''

''எந்த முகமூடி... என்ன மாறிட்டேன்?''

''நேற்று ராத்திரி நீங்க குடிக்கலை...? என் தலையில் அடிச்சு சத்தியம் பண்ணி சொல்லுங்க...?''

அவள் தலை மீது கை வைத்து சொன்னான் அவன்.

''இல்லை...''

அதைக் கேட்டு உடம்பும், மனதும் பதற சடாரென்று அவனை விட்டு ஒதுங்கிப் போனாள் அவள்.

''ஐயோ... இப்படி வாய் கூசாமல் பொய் சொல்றீங்களே...?''

''இப்போ எனக்குக் காபி கொடுக்கப் போறியா இல்லையா...?''



''நிச்சயமாக இல்லை. இந்தக் குடி, சிகரெட், பொய், பித்தலாட்டம், பணத்தாசை எல்லாத்தையும் விட்டுட்டு நீங்க என் பழைய பாலாவாக மாறுகிற வரை நான் என் கையால் உங்களுக்கு எதுவும் தரமாட்—''

முடிப்பதற்குள் அவனது கன்னத்தில் விழுந்த அறையில் கண்ணருகில் மின்னலிட்டது. ஒரு வினாடி நிலைகுலைந்து போனாள் அவள்.

''பாலாவா... என் பாலாவா இது...? இல்லாவிட்டால் எக்ஸார்ஸிஸ்ட், ஓமன் மாதிரி ஏதாவது பேய் பிடித்து ஆட்டுகிறதா?''

புரியாமல் பார்த்துக் கொண்டிருந்த போதே உறும ஆரம்பித்தான் அவன்.

வார்த்தைகள் ஏக வசனத்தில் வந்தன.

''யாருடி... பொய், பித்தலாட்டமெல்லாம் பண்றது...? இன்னொரு தரம் சொன்ன பல்லை உதிர்த்துடுவேன் நாயே...''

அவனுக்குள்ளிருந்த ஆக்ரோஷம் வெளியில் வந்தது. மனசு சிறுமை கண்டு பொங்கிற்று.

''ஒரு தரமென்ன... ஓராயிரம் தரம் சொல்வேன். பணம் என்கிற மாயப் பிசாசு உங்க கண்ணை மறைக்கிறது' நீங்க உங்க சிநேகிதர் கூட சேர்ந்து செய்கிற ஒரு காரியம் நல்லதாகத் தெரியலை. ஏதோ மாயாஜாலம் மாதிரி பண்றீங்க. பொய் பித்தலாட்டம் எல்லாம் செய்யறீங்க...''

அவன் உசுப்பி விடப்பட்டான். அவனுக்குள்ளிருந்த மிருகம் மெல்ல முகம் காட்டத் தொடங்கிற்று. பின்னர் கோரைப்பல், நகம் என எல்லாம் வெளியில் வந்தன. அவளை இழுத்துப் போட்டு கை, கால், முகம் பாராமல் அடித்துத் துவைத்தான், ஆத்திரம் தீருகிற வரை காலால் எட்டி உதைத்தான்.

தவறு செய்கிற உறுத்தலும், அதைச் சுட்டிக் காட்டுகிறவர் மீது ஏற்படக் கூடிய கையாலாகாத கோபமும் அவனுக்கு ஏற்பட்டன. உடம்பு, மனமும் ஒய்கிற வரை அடித்தவன் பின்பு உரத்த குரலில் சத்தம் போட்டான்.

''யாரைடி மிரட்டற நாயே...? நீ காப்பி கொடுக்கலைன்னால் குடிக்கவே மாட்டேனா. நீ சாப்பாடு போடலைன்னால் சாப்பிடவே மாட்டேனா...? அப்படியே செத்துப் போயிடுவேன்னா நினைச்சியா...? உன் கண் எதிர்ல ஒஹோன்னு வாழ்ந்து காட்டறேன் பாருடி...''

அப்படியே அதே உடையில் வீட்டை விட்டு வெளியேறினான் அவன். கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையானதை நினைத்து கதறி அழ வேண்டும் போலிருந்ததை அடக்கிக் கொண்டாள் கஸ்தூரி. உள்ளுக்குள் திடத்தையும், தைரியத்தையும் வரவழைத்துக் கொண்டாள். 'எய்தவன் இருக்க அம்பை நோகின்ற கதையாக அல்லவா அவன் செய்கிறான்' என நினைத்துக் கொண்டாள்.

'செய்கின்ற தப்பை சுட்டிக் காட்டினால் எதனால் இவ்வளவு கோபமும் ஆத்திரமும் வருகிறது அவனுக்கு...? என்னவானாலும் சரி. அவன் சாப்பிடாமற் போனாலும் பரவாயில்லை. அவனைத் திருத்துகிற வரை பழைய பாலாவாக ஆக்குகிற வரை தானும் தன் பிடிவாதத்திலிருந்தும் கண்டிப்பிலிருந்தும் இறங்கக் கூடாது என்கிற மிகத் தீர்க்கமான முடிவிற்கு வந்தாள் அவள்.

## 8

அதற்குப் பிறகு கஸ்தூரியிடம் பேசுவதையே நிறுத்தி விட்டான் பாலா. வீட்டிற்கு வருவதும் அனேகமாகக் குறைந்து போயிற்று. வாரத்திற்கு ஒரு முறையோ, இரு முறைகளோ வருவான். அதுவும் ராத்திரி ஒரு மணிக்கும்,



இரண்டு மணிக்கும் வந்து தடதடவென்று கதவை இடிப்பான். அக்கம் பக்கத்து வீடுகளெல்லாம் விழித்துக் கொண்டு சட்சட்டென்று விளக்குகளை எரிய விடுகிற உணர்வு கூட இன்றி குடித்திருப்பான். கஸ்தூரி கதவு திறந்ததும் கட்டிலின் மீது போய் உட்கார்ந்து சிகரெட் பற்ற வைத்துக் கொள்வான்.

''இது என் வீடு. நான் எப்படி வேண்டுமானாலும் இருப்பேன்,'' என்பதை வேண்டுமென்றே உரக்கச் சொல்வான். பீரோவைத் திறந்து கட்டு கட்டாக அடுக்கி வைக்கப்பட்ட பணம் காட்டுவான். ஒவ்வொரு கட்டாக எடுத்து அறை முழுவதும் வீசுவான்.

''ஒரு பைசா சம்பாதிக்கத் துப்பு கெட்ட நாயெல்லாம் குறைக்கிறதுகள்...'' என்பான்.

''கல்யாணத்துக்கு முன்னால் எவளோ சொன்னாளே— எனக்கு சம்பாதிக்கிற வகை தெரியாது. வேலை இல்லை. மாற்றுப் புடவை வாங்கித் தரக் கூட கையாலாகாதுன்னு அவளை இப்போ வந்து பார்க்கச் சொல்லு...'' என்று கஸ்தூரியை வம்புக்கு இழுப்பான்.

எல்லாவற்றிற்கும் கஸ்தூரி பேசாமல் இருப்பாள், சில சமயங்களில் அவன் மீது கோபமும், வெறுப்பும் வரும். பல சமயங்களில் பரிதாபம் தோன்றும். 'என்றோ அப்பா சொன்ன சொற்களினால் ஏற்பட்ட காயம் அவனுக்குள் இன்னும் ஆறாமலிருப்பதைப் புரிந்து கொண்டாள். தன் அப்பாவினால் ஏற்பட்ட காயம், அவனது அப்பாவினால் பட்ட காயம், சமூகத்து மனிதர்கள் உண்டாக்கிய காயம் என அனைத்தும் புரையோடிய பழைய காயங்களுக்கும் இப்போது பணம் என்கிற மருந்து வைத்துக் கட்டி ஆற்ற நினைக்கிற அவனது அவலம் அவளுக்குப் பிடிபட்டது. இது போன்ற சின்ன வயதில் பரிதாபம் பிடிபட்டது. இது போன்று அடிபடுகின்றவர்களின் ரணங்கள் சீக்கிரம் ஆறுவதில்லை. ஆறுவதே கூட இல்லை. அதை நினைக்கிற போதெல்லாம் ஏற்படுகிற வலிக்கும் வேதனைக்கும் அவர்கள் வடிகால்

தேடுகிறார்கள். காயப்படுத்தியவர்களை விட்டு தங்களை நெருங்கி நிற்பவர்களிடம் பழி வாங்குகிற உணர்ச்சியைக் காட்டுகிறார்கள். அவர்களுக்குத் தேவை அன்பும் அனுதாபமுமே தவிர கோபமில்லை, வெறுப்பில்லை.

சட்டென்று பிடிபட்ட அந்த உண்மையில் இறங்கி வந்தாள் கஸ்தூரி. அவனிடம் கோபமும், வெறுப்பும் காட்டி மோதி உடைப்பட்டு நிலைமை இன்னும் மோசமாகுமே தவிர வேறு பலனில்லை என்பதை உணர்ந்து கொண்டாள். அவனிடமுள்ள குற்றங்களையும், குறைகளையும் கண்டு பிடிப்பதைவிட அன்பும், ஆதரவுமாக இருந்து திருத்தி விட முடியும் என்று தோன்றிற்று. அந்த வழியில் சாதிக்க முடியும் என்று பட அதில் இறங்கினாள் அவள்.

அன்றிரவு பாலா வரும் வரை காத்திருந்தாள். அவனுக்குப் பிடித்த வத்தக் குழம்பும், மிளகு சீரக ரசமும் செய்தாள். அப்பளம் சுட்டு டப்பாவில் போட்டு மூடிய போது திடீரென்று ஓர் சந்தேகம் தோன்றிற்று.

''இப்போதைய பாலாவுக்கு வத்தக் குழம்பும், சுட்ட அப்பளமும் பிடிக்குமோ என்னவோ...?''

''முதலில் அவன் சாப்பிட ஒப்புக் கொள்கிறானோ இல்லையோ...? வரட்டும் பார்க்கலாம்...''

அவன் வருகிற வரை உட்காரலாம் என்று வாசல் வராந்தாவில் உட்கார்ந்து கொண்டாள். தெரு அமைதியாக இருந்தது. நல்ல அகலமான தெருக்கள், மரங்களும் செடிகளுமான காம்பவுண்டு சுவரோடு கூடிய கச்சிதமான வீடுகள். நடுத்தரத்திற்கும் சற்று அதிகமான வர்க்கம் இருக்கிற இடம்.

பழைய வீடானால், ஒண்டுக் குடித்தனமாக இருந்ததால் பேச்சுத் துணைக்கு ஆளிருந்தது. பொழுது போயிற்று. இங்கே வந்த பின் அனேகமாக அவளுக்குப் பேச்சே மறந்து போயிற்று. அதிலும் இந்த ஒரு மாதமாக பாலாவும்



பேசுவதை நிறுத்தி விட்டதால் இன்னும் கஷ்டமாக இருந்தது. தொலைபேசியில் பாலாவைக் கேட்டு டெலிபோன் செய்கிறவர்களுக்கு பதில் சொல்வது மட்டுமே அவளது பேச்சுக்களாயின. அக்கம் பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்பதுகூட அவளுக்குத் தெரியாது. அவர்களும் இரவு நேரங்களில் குடித்து விட்டு வந்து பாலா செய்கின்ற அமர்க்களங்களால் அவளோடு பேசுவதைத் தவிர்த்தார்கள்.

அனேகமாக ஓர் தீவு மாதிரி ஆகிப் போனாள் அவள். கிட்டத்தட்ட வாழ்க்கை வெறுமையாகவும் ஆயிற்று. இப்படியே போய்க் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை எனவும் பட்டது. இன்று எப்படியும் பாலாவிடம் பேசி விடுவது என்கிற எண்ணம் தீவிரமடைந்த போது தெருக் கோடியில் அவனது கார் ஹாரன் சத்தம் கேட்டது. இவள் தானாக எழுந்து நின்று கொண்டாள்.

டிரைவர் கேட்டைத் திறந்து, காரை உள்ளே நிறுத்தி அவனுக்குப் பணிவாகக் கதவைத் திறந்துவிட்டு, குட் நைட் சொல்லி, பின் பக்கம் போய் ஓர் ஓரமாக நிறுத்தியிருந்த தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு நகர்ந்த பின்னரே பாலா உள்ளே வந்தான். அவன் முகத்தில் எல்லையற்ற அயர்வும், களைப்பும் தெரிந்தது. ஒரு மாதமாக சரியான சாப்பாடு இல்லாமல் உடல் இளைத்து வாடிப் போயிருந்தான். குரு க்ஷேத்திர யுத்தத்தில் கலந்து கொண்டு வந்தவனைப் போல் அத்தனை அசதியும், தளர்ச்சியுமாக உள்ளே நுழைந்தான். இனியும் சண்டை போட சக்தியற்றவனாகக் காணப்பட்டான்.

அதிசயமாக அன்று சீக்கிரம் வந்ததோடு குடிக்காமலும் வந்திருந்தது அவளுக்கே ஆச்சரியம் தந்தது. ஒரு வேளை தன்னைப் போலவே அவனும் சமாதானக் கொடி காட்டுகிற மனோபாவத்தில் இருக்கலாம் என்று நினைத்து வாசல் கதவைத் தாழிட்டு விட்டு உள்ளே வந்தாள். தானாகப் போய் அவனிடம் பேசலாமா வேண்டாமா எனத் தயங்கினாள். அதற்குத் தழைந்து போவதில்

தவறில்லை. அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்று குறள் சொல்லவில்லையா...?''

அவன் குளித்து உடை மாற்றி மீண்டும் வெளியில் கிளம்பத் தயாரான போது அவள் வெளியில் போக இயலாமல் வாசல் கதவில் சாய்ந்து நின்று கொண்டாள். கதவைத் திறக்க முடியாமல் அவள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு பேசாமல் இருந்தான் அவன்.

அவளாகவே அவனைக் கூப்பிட்டாள்.

''பாலா...''

அவன் பதில் பேசவில்லை. வெற்றுப் பார்வையில் ஏறிட்டான்.

''ஐயம் ஸாரி பாலா...நான் பேசினது, நடந்துண்டது இதெல்லாம் உங்க மனசைப் புண்படுத்தி இருந்தால் மன்னிச்சுடுங்க...''

அதைச் சிறிது கூட எதிர்பார்க்காத அவன் திடுக்கிட்டான்.

''என்ன பாலா அப்படிப் பார்க்கறீங்க? ஏற்கனவே நம் வாழ்க்கையில் ரெண்டு மூணு மாசம் வீண் பிடிவாதத்தாலும், வெறும் கோபத்தாலும் வீணாப் போயிடுத்து. இனி மேலும் வீணாக்க வேணாமனு நினைக்கிறேன்.''

'நிஜமாகவே அவள் கஸ்தூரிதானா... நம்ப முடியவில்லை அவனால்...' அந்த பிரமிப்போடு அப்படியே நின்று கொண்டிருந்தான். அவள் கதவை விட்டு நகர்ந்து மெல்ல அவனருகில் வந்தாள். அவனது கை பற்றினாள். விரல்களோடு தன் விரல்களைக் கோர்த்துக் கொண்டாள். பின்னர் தன் உதட்டிற்குக் கொண்டு போய் முத்த மிட்டாள்.

''ஐயம் வெரி ஸாரி பாலா. நீங்க குடிச்சதும், சிகரெட் பிடிச்சதும் என்னால் தாங்கிக்க முடியலை. அதனால் ஏற்பட்ட கோபத்துலதான் அப்படி நடந்துண்டேன்.''



அதற்கு மேல் அவனாலும் மரம் மாதிரி நிற்க முடியவில்லை. தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டாதிருக்க முடியவில்லை. அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். தன் மார்பில் அவளது முகம் பதிய வைத்துத் தலை வருடிக் கொடுத்தான். பின்னர் மெல்ல பேச ஆரம்பித்தான்.

''நீ இத்தனை தூரம் மன்னிப்பு கேட்டதற்கு அப்புறம் நானும் கேட்கிறதுதான் நியாயம். உன் கிட்ட ரொம்ப முரட்டுத்தனமா, மூர்க்கமா நடந்துண்டுட்டேன். உனக்கும் விட்டுப் பிடிக்கத் தெரியலை கஸ்தூரி, நான் மட்டும் என்ன மனசுக்குப் பிடிச்சா குடிக்கிறேன். பாங்க் சேர்மன் வற்புறுத்தினார்னு ஒரு நாள் குடிச்சேன். குடிச்சா நிறைய பேச வர்றது. தைரியமும், புதுப் புது ஐடியாக்களும் வர்றதுன்னு அதைப் பழக்கப் படுத்திண்டேன். விட்டுடு வேன். விட்டுட்டு நாம் நிம்மதியா, அமைதியா எங்கே யாவது வெளிநாட்டுல போய் வாழலாம் என்ன...?''

'வெளிநாட்டுக்கு எதற்குப் போகணும்?' என்று தோன்றியது கஸ்தூரிக்கு. ஆனால் கேட்கவில்லை.

''இதையெல்லாம் கூடிய சீக்கிரம் விட்டுடுவேன்னு சொன்னீங்களே எப்போ...'' மட்டும் கேட்டாள்.

ஒரு விநாடி யோசித்து விட்டு நிதானமாகச் சொன்னான் அவன்.

''இன்னும் சில மாதங்கள் எல்லாம் செய்துக்கணும் கஸ்தூரி. நீ என் கூட பேசாதிருந்த இந்த ஒரு மாசத்துல நான் என்னவெல்லாம் செய்திருக்கேன் தெரியுமா...? இங்க காந்தி நகர்ல அஞ்சு கிரௌண்ட்ல பெரிய வீடு வாங்கியிருக் கேன். உனக்கு என் வாழ்க்கையின் லட்சியம் தெரியுமில்லே? எங்களுக்காக பாட்டி விற்ற அந்த கிராமத்து வீட்டை வாங்கணும்னு நான் எவ்வளவு துடிச்சிருக்கேன். அதுக்கு ஏற்பாடு பண்ணிட்டேன். அதை அம்மா பேர்ல வாங்கப்

போறேன். உன் பேர்ல இந்த வீட்டையே வாங்கி ரிஜிஸ்ட்ரேஷன் நாளைக்கு வச்சிண்டிருக்கேன். ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசுக்கு நாளைக்கு நீ வரணும். அதை உன்கிட்ட எப்படிச் சொல்றதுன்னு தயங்கிண்டிருந்தேன். நல்ல காலமாக நீயே என்கிட்ட பேசிட்ட...''

''எனக்கு எதுக்குத் தனி வீடு பாலா...? நீங்க இருக்கிற இடத்துலதானே நானும் இருக்கப் போறேன்....''

''இருக்கட்டும் கஸ்தூரி. வீடு மட்டுமில்லை. ஐம்பது லட்ச ரூபாய் பணமும் உன் பேர்ல போட்டிருக்கேன். ஒரு வேளை நானில்லைன்னாலும் நீ கஷ்டப்படக்...''

சட்டென்று அவன் உதட்டைப் பொத்தினாள் கஸ்தூரி. கண் கலங்கப் பேசினாள்...

''இன்னியிலேர்ந்து நமக்கு நல்ல காலம் ஆரம்பமாறதுன்னு நினைச்சுண்டிருக்கேன். அபசகுனம் மாதிரி இப்படியெல்லாம் பேசாதீங்கோ...?''

''நெருப்புன்னு சொன்னால் வாய் வெந்து போயிடாது கஸ்தூரி...'' என்றவன் அவளை இழுத்துத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

வெகு நாட்களுக்குப் பின்னர் பழைய மாதிரி அந்த இரவு சந்தோஷமாக நிம்மதியாக கடந்தது.

## 9

சொன்ன மாதிரி கஸ்தூரி பெயரில் அந்த வீட்டையும், அம்மா பெயரில் பாட்டியின் வீட்டையும் வாங்கி ரிஜிஸ்தர் செய்தான். தம்பியையும், தங்கைகளையும் அம்மாவுடன் சென்னைக்கு வரவழைத்து தனியாக ஓர் வீட்டில் குடியமர்த்தினான். தம்பியின் வியாபாரத்திற்கு ஏற்பாடு செய்து, விவேக் அண்ட் கம்பெனி மாதிரி தவணை முறைக் கடை அமைத்துத் தந்தான். கிட்டத்தட்ட ஐம்பது லட்சத்



திற்கு மேல் அதற்கு முதல் போட்டான். தம்பியையே முழு உரிமையாளனாக்கி முதலாளி நாற்காலியில் உட்கார வைத்தான்.

தங்கைகள் கல்யாணத்திற்கென்று தனித்தனியாக இருவர் பெயரிலும் பத்து லட்ச ரூபாய் டெபாசிட் போட்டுக் கொடுத்தான். அம்மா உயிருடன் இருக்கிற வரை பணத்திற்குக் கஷ்டப்படவே கூடாதென்று கணிசமான தொகையை அவள் பெயரில் ஒதுக்கினான். வீடு, கார், டிரைவர், தொலைபேசி என எல்லா ஏற்பாடுகளையும் விறுவிறுவென்று அவன் செய்ததைப் பார்த்த அம்மா அசந்து போனாள்.

''என்னடா பாலா இது...? இத்தனையும் ஏதோ மாயாஜாலக் கதையில் வர்ற மாதிரி செய்யற...? இதுக்கெல்லாம் பணம் ஏதுடா...?''

''பணமா...?'' என்று சிரித்தான் அவன்.

இந்தியாவின் கோடீஸ்வரர்களில் இப்போ நானும் ஒருத்தன்மா...

''கோடீஸ்வரனா....! எப்படிடா...?''

''எப்படி, ஏதுன்னெல்லாம் கேட்காத. நாம் கஷ்டப்பட்ட போது பாட்டியைத் தவிர வேறு யாரும் நமக்கு உதவி செய்யலை. இந்த சமூகம் நம்மை வேடிக்கை பார்த்தது, சிரிச்சது. அதனால் நாம் இப்போ சௌகரியமா இருக்கிறதை கேள்வி கேட்க அந்த சமூகத்துக்கு உரிமை இல்லை. நம்மை கேள்வி கேட்கிற உரிமை உள்ளவள் பாட்டி மட்டும்தான். அவளுக்கு மட்டுமே நான் பதில் சொல்லக் கடமைப்பட்டவன். அவள் இப்போது உயிரோடு இல்லை. அதனால் வேறு யாருக்கும் நான் பதில் சொல்ல வேணாம். இந்த நிமிஷத்தில் நன்னா இருக்கோமா அனுபவி. பட்ட கஷ்டத்துக்கெல்லாம் சேர்த்து வச்சு அனுபவி. நதியில் குளிக்கிற மாதிரி நினைச்சுக்க. நதி

எங்கே உற்பத்தியாறது, எந்த வழியெல்லாம் ஓடி வர்ற துன்னு கேள்வியா கேட்டுண்டிருக்க...? அந்த மாதிரிதான் இதுவும். கடவுள் நம்மை நல்லபடியா, சந்தோஷமா வைக்கிறாரு...கண்ணை மூடி நன்றி சொல்லிட்டு அனுபவிக் கணும். அதுதான் நம் வேலை."

கேள்வி கேட்ட அம்மா அயர்ந்து போனாள். சில வினாடிகள் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினாள். பின்னர் மெதுவாக வாய்திறந்தாள்.

"என்னவோ பெரிய பேச்செல்லாம் பேசற... எனக்குப் புரியலைப்பா..."

"புரிய வேணாம்மா....நான் வரேன்"

"எப்போ வரே...?"

"தெரியாது."

"என்னடா இது... திரும்பி எப்போ வருவேன்னு கேட்டால் தெரியாதுன்னு பதில் சொல்ற...?"

"நிஜமாகவே தெரியாதும்மா..."

சொல்லிவிட்டு வெளியில் வந்து காரில் ஏறிக்கொண்ட போது உள்ளுக்குள் அத்தனைக் கடமைகளையும் செய்து முடித்த திருப்தி இருந்தது. அமைதி இருந்தது. இனி எப்போது வந்து போலீஸ் தன்னை கைது செய்தாலும் போகத் தயாராக இருந்தான்.

'செய்ததற்கு தண்டனை அனுபவிக்கலாமா... இல்லை, வெளிநாடு போய் விடலாமா...?'

உடனே கஸ்தூரி நினைவிற்கு வந்தாள். 'பாவம் கஸ்தூரி' என்று சொல்லிக் கொண்டான். தன்னை நம்பி எல்லாவற்றையும் விட்டு வந்தவள். அவளை வாழ வைக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. சந்தோஷப் படுத்த வேண்டிய கடமை இருக்கிறது. இத்தனை சொத்துக் கள் சேர்த்தால் மட்டும் போதாது. விட்டுச் செல்ல வாரிசு வேண்டும். தனக்கும் கஸ்தூரிக்கும் ஒரு குழந்தை வேண்டும்.



ஆணில் ஒன்று பெண்ணில் ஒன்று என இரண்டு வேண்டும். ஆகவே போலீசிடம் சிக்கக் கூடாது. வாழ்ந்தாக வேண்டும்... அம்மாவிடம் சொன்ன மாதிரி நாமும் வாழ்க்கையை அனுபவித்தாக வேண்டும்...

டிரைவரிடம் சொல்லி வண்டியை நேராக வீட்டிற்கு விடச் செய்தான். அவசரமாகக் கஸ்தூரியைக் கூப்பிட்டுச் சொன்னான்.

"நாம் உடனே சிங்கப்பூர் போறோம் கஸ்தூரி. நமக்குத் தேவையான துணிமணிகளை எடுத்து வச்சிக்க. துணிமணி கள் கூட வேணாம். வாங்கிக்கலாம். நீ ஒரு வேலை பண்ணு. என் டைரியில் மல்ஹோத்ரான்னு ஒரு டெலிபோன் நம்பர் எழுதியிருப்பேன். அவனுக்கு போன் பண்ணி உடனடியாக இரண்டு ஏர் டிக்கெட், சிங்கப்பூருக்கு வாங்கி அனுப்பச் சொல்லு. ரொம்ப அவசரம். நான் சொன்னேன்னு சொல்லு. அதை வாங்கி எடுத்துண்டு தயாராக இரு. நான் போய் சில காரியங்களைம் பண்ணனும். பண்ணிட்டு வந்துடறேன்."

கஸ்தூரிக்கு அவனது அவசரம் புரியவில்லை.

"திடீர்னு இப்போ என்ன சிங்கப்பூர் பாலா...?"

"கேள்விகள் கேட்காதே கஸ்தூரி. பதில் சொல்ல நேரமில்லை. கிளம்புன்னால் கிளம்பணும். உடனே மல்ஹோத்ராவுக்கு போன் பண்ணி டிக்கெட்டை வாங்கி வச்சுக்கோ, இதோ வந்துடறேன்."

அவள் மல்ஹோத்ராவுடன் பேசிய அரை மணி நேரத்திற்கெல்லாம் ஒருவன் இரண்டு விமான டிக்கெட் களைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனான். கூடவே சின்னதாக ஒரு பிரீஃப் கேஸ் தந்தான். இந்திக் கலந்த தமிழில் மழலையாய் சொன்னான்.

"சாப் இதை பாலாசாப் கிட்டே கொடுக்கச் சொன்னாங்க."

அதை வாங்கி வைத்துக் கொண்டாள். இரு பெரிய சூட்கேஸ்களில் தனக்கும் பாலாவுக்கும் துணிகள் எடுத்து வைத்தாள். குளித்து உடை மாற்றி சுவாமி அறை விளக்கேற்றி 'முருகா எனக்கு எதுவும் புரியலை. காப்பாற்று' என்று வேண்டிக் கொண்டு உள்ளுக்குள் கந்த சஷ்டி கவசம் சொல்லிக் கொண்டே பாலாவிற்காகக் காத்திருந்தாள்.

சாயந்திரம் மணி ஆறு, ஏழு என ஓடி ஒன்பதாயிற்று பாலா வரவில்லை. பத்தாயிற்று. அவனைக் காணோம். 'ஒரு வேளை அந்த வீட்டிற்கு சொல்லிக் கொள்ளப் போயிருக்கலாம்' என நினைத்து அங்கு டெலிபோன் செய்யலாம் என்று எழுந்த போது தொலைபேசி அடித்தது. ஓடிப் போய் எடுத்தாள்.

பாலாதான் பேசினான். குரலில் பதட்டம் தெரிந்தது. பரபரப்பு இருந்தது. ஒரு வித பயம் கூடக் காணப்பட்ட மாதிரி உணர்ந்தாள்.

''ரெடியா கஸ்தூரி...?''

''நான் எப்பவோ ரெடி. உங்களுக்காகக் காத்—''

''டிக்கெட் வந்துடுத்தா?''

''வந்தாச்சு.''

''கூட ஏதாவது கொடுத்தாங்களா?''

''ஒரு பிரீஃப் கேஸ்.''

''அதையும், டிக்கெட்டையும் மட்டும் எடுத்துண்டு உடனே கிளம்பு.''

''ரெண்டு சூட்கேஸில் நமக்குத் துணி—''

''வேணாம். அதையெல்லாம் அங்கேயே வச்சுட்டு உடனே வீட்டை விட்டுக் கிளம்பு. அந்த டிக்கெட்டையும் பிரீஃப்கேஸையும் எடுத்துக்க மறக்காதே...''

''சரி.''



''ஒரு நிமிஷம் கூட தாமதிக்காமல் கிளம்பிடு கஸ்தூரி...''

''ஏன் பாலா—''

''ஷுக். ஏன் எதுக்குன்னெல்லாம் சொல்லிட்டிருக்க நேரமில்லை. உடனே கிளம்பு.''

''சரி கிளம்பறேன். ஆனால் கார்—''

''கார்லயே பிறந்து கார்லயே வளர்ந்தியா கஸ்தூரி. தயவு செய்து ஒரு ஆட்டோ பிடிச்சுண்டு வாயேன்.''

''எங்க இருக்கீங்க''

''கன்னிமாரா வாசல்ல காத்துண்டிருக்கேன். மறக்காமல் பிரீப்கேஸ¬ம், டிக்கெட்டும் எடுத்துக்கோ...''

''சரி...''

தொலைபேசியை வைத்து விட்டு கைப்பையில் டிக்கெட்டுகளைப் போட்டுக் கொண்டு, பிரீப்கேஸையும் எடுத்துக் கொண்டாள். வீட்டைப் பூட்டினாள். தெருக்கோடி வரை நடந்து வந்து ஆட்டோ பிடித்து ''கன்னிமாரா போப்பா...'' என்ற ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் அவள் வீட்டு வாசலில் போலீஸ் ஜீப் வந்து நின்றது. பூட்டை உடைத்து உள்ளே நுழைந்தார்கள் அவர்கள்.

## 10

கன்னிமாரா வாசலில் ஆட்டோவை நிறுத்தி பாலாவைத் தேடினாள் கஸ்தூரி. ஒட்ட வைத்த மீசையும் தாடியும் தலைக் குல்லாவும், தொளதொளத்த வெள்ளை பைஜாமாவும், ஜிப்பாவுமாக லாலாக்கடைக்காரரைப் போலிருந்த ஒருவன் ஆட்டோவில் ஏற முயன்ற போது கஸ்தூரி தடுத்தாள்.

''எய்... யாரு நீ...?''

''நான்தான் கஸ்தூரி...'' மெதுவான குரலில் கேகெத்தான் அவன்.

''பாலா... இது என்ன வேஷ—''

''உஷ்!'' என்று உதட்டில் விரல் வைத்து அதட்டினான் அவன். ஆட்டோக்காரரைச் சுட்டிக் காட்டி பேசாதிருக்குமாறு சைகை செய்தான்.

அவனது உருமாற்றத்தையும், பதட்டத்தையும், முகத்தில் தெரிந்த பயத்தையும் பார்த்த அவளது அடி வயிறு கலங்கிற்று. நெஞ்சு பதறிற்று. மனது துடித்தது. எதுஎதுவோ கேட்க நினைத்து ஒன்றும் கேட்க முடியாமல் பேசாதிருந்தாள்.

சிறிது தூரம் சென்ற ஆட்டோக்காரர் திரும்பிப் பார்த்து கேட்டார்.

''எங்க போகணும்?''

''ஒரு நிமிஷம் இருப்பா...'' என்றவன் ''கஸ்தூரி அந்த டிக்கெட்டை எடு...'' என்று கேட்டு வாங்கிப் பார்த்தான்.

''ராத்திரி பிளைட்... அது வரை எங்கேயாவது தங்கலாம் கஸ்தூரி.''

''அம்மா வீட்டுக்குப் போகலாமா...?''

''வேணாம்'' என்றவன் சிறிது யோசித்தான். ''பக்கத்துல ஏதாவது ஓட்டல் இருந்தால் தங்கிக்கலாம்.''

அருகில் இருந்த ஓட்டல் ஒன்றில் அறை எடுத்துத் தங்கினார்கள். காபி ஆர்டர் பண்ணி குடித்த பின் கட்டில் விளிம்பில் உட்கார்ந்து கொண்ட கஸ்தூரி கேட்டாள்.

''என்ன பாலா..?''

''போலீஸ் என்னை அரெஸ்ட் பண்ண வாரண்ட்டோடு தேடறாங்க கஸ்தூரி.''



''போலீஸா...?'' அடி வயிற்றில் கொக்கி போட்டு இழுத்த மாதிரி வலி ஏற்படக் கேட்டாள்.

''எதுக்கு பாலா...?''

''லட்சம் லட்சமாக சம்பாதிச்சதுக்கு.''

''அதுக்கு ஏன் அரஸ்ட் பண்ணனும்?''

''ஏமாற்றினதுக்கு.''

''யாரை ஏமாற்றினீங்க...?''

''வேணுவை. பாங்க் சேர்மனை...''

''பாலா...'' கழுத்தைப் பற்றிக் கொண்டாள் அவள். கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன.

''எதுக்காக பாலா ஏமாத்தினீங்க? வேணு உங்களுக்கு நல்லதுதானே செய்தார்...?''

''யார் சொன்னது...?''

''நீங்க தானே சொன்னீங்க?''

''அப்படித்தான் நானும் நினைச்சேன். ஆனால் அவன் என்னையே ஏமாற்றப் பார்த்தான். லாபத்துல கால் பங்கு தரேன்னு சொல்லிட்டு நாமம் போடப் பார்த்தான். எல்லாரும் ஏமாந்த மாதிரி நானும் ஏமாறுவேன்னு நினைச்சான். அங்கதான் தப்பு கணக்கு போட்டுட்டான். என் திறமையைக் குறைச்சலாக எடை போட்டுட்டான்.''

''நீங்க என்ன பிஸினஸ் பண்ணினீங்க?''

''இந்த சமயத்திலாவது நான் உன்கிட்ட உண்மை சொல்லணும் கஸ்தூரி. நாங்க பண்ணினது வியாபாரமில்லை. மோசடி. பொது மக்கள் பணத்தை முடிந்த அளவு சுருட்டினோம்...''

''பா...லா...?''

''இல்லைன்னால் ஆறே மாசத்துக்குள் இரண்டரை கோடி ருபாய் எப்படி சம்பாதிச்சிருக்க முடியும்?''

''ஐயோ...எவ்வளவு சுலபமாகச் சொல்றீங்க...? இதுக்கு உங்களுக்கு எப்படி மனசு வந்தது பாஸ்...?''

''முதல் தரம் மட்டும்தான் மனசு தயங்கும் கஸ்தூரி. அப்போ துணிஞ்சு இறங்கிட்டால் சகஜமாயிடும்.''

சிறிது கூட வருத்தப்படாமல் அவன் அதை நியாயப் படுத்துவதை நினைத்து அவளுக்குள் கோபம் பொங்கிற்று. அந்த சமயத்திலும் நிதானத்தை வலுக்கட்டாயமாகக் கடைப் பிடித்தாள் அவள்.

''இதை நியாயப் படுத்தறீங்களே...உங்க மனசாட்சி உங்களை உறுத்தலை...''

''நானில்லேன்னால் யாரோ இதை செய்யத்தான் போறாங்க. நான் மாட்டேன்னு மறுத்துட்டா வேறு வேற யாரையாவது பிடிச்சு காரியத்தை முடிச்சிருப்பான். சமூகத்துல ஒட்டு மொத்தமாக எல்லா மனுஷாளும் நல்லவாளா நாணயமாக இருக்கிற பட்சத்தில் நானும் நல்லவனாக, நாணயமானவனாக இருந்திருப்பேன். பொய் பித்தலாட்டமெல்லாம் தோன்றியே இருக்காது. ஆனால் சமூகம் முழுதும் கெட்டவா இருக்காளே...ஒருத்தரை ஒருத்தர் ஏமாற்ற சமயம் பார்த்துண்டு இருக்காளே... பணம் சம்பாதிக்கிற வெறியில் எதையும் செய்யக் காத்துண்டிருக்காளே...''

அதற்கு மேல் தாங்க இயலாதவளாகக் கொதித்துப் போனாள் கஸ்தூரி.

''திருத்துங்க பாஸ். உங்க தப்புக்கு சமூகம் முழுசையும் குற்றம் சொல்லாதீங்க...உங்க கண்ணால் பார்த்தால் எல்லாருமே அப்படி இருக்கிற மாதிரிதான் தெரியும். பணத்துக்கு ஆசைப்படாமல்-அதுவும் தப்பு வழியில் வர்ற பணம்னால் வேணாம்னு ஒதுங்கி நிற்கிறவா எத்தனையோ பேர் இருக்கா...''

''ஒருத்தர் சொல்லு...ஒரே ஒருத்தரைக் காட்டு எனக்கு.''



''வேற யாரையும் தேடிப் போய்க் காட்ட வேணாம். என்னையே உதாரணம் சொல்ல முடியும்...?''

''ஹா...நீ கூடத்தான் உன் பேரில் விருன்னாக் வாங்கிண்ட....''

''நானா வாங்கிக்கலை. நீங்க வாங்கினீங்க. நான் பேசாமல் இருந்தேன்.''

''ஆமா...இப்போ சொல்லுவ...''

''இப்போ மட்டுமில்லை. அப்பவும் சொல்வேன். இனிமேலும் சொல்லுவேன். எப்படியாவது உங்களைத் திருத்தி நேர்வழிப் படுத்திடணும் என்கிற ஒரே ஆசையில் உங்ககிட்ட பேசி உங்க கூட வந்திருக்கேன் பாருங்க... என்னை செருப்பால் அடிக்கணும்.''

''ஒரு மணி நேரத்துக்கு முன்னால் கன்னிமாரா வான்னால் கார் கேட்டவதான் நீ...''

''அதுக்கு நான் வெட்கப்படறேன். வேதனைப் படறேன். ஆரம்பத்துலயே உங்களை நான் கண்டிச்சிருக்கணும். கண்டிக்கத்தான் செய்தேன். ஆனால் 'ஏதோ ஒரு தாழ்வு மனப்பான்மையில், எப்போதோ வாங்கின அடிகளை மறக்க இப்போ இதையெல்லாம் செய்யறீங்கன்னு மனசு இறங்கி அன்பாக, ஆதரவாகச் சொன்னால் மாறிடுவீங்கன்னு எதிர்பார்த்து தளர்ந்துப் போனேன் பாருங்க அது என் தப்பு. நீங்க மாறவே மாட்டீங்க. பணத்தாசையில் இருந்து மீள மாட்டீங்க. வலையில் விழுந்த மீன் திரும்பவும் தண்ணீருக்குத் திரும்புவது சாத்தியமில்லைன்னு தெரிஞ்சிருந்தால் அன்னிக்கே உங்களை விட்டுப் பிரிஞ்சிருப்பேன்.''

''எனக்கு நேரமில்லை. என்னை நான் காப்பாத்திக்கணும். என்ன சொல்றேன்றதை நேரிடையாகச் சொல்லு.''

''இதை விடவும் நேரிடையாகச் சொல்லணும்னால் சொல்லிடறேன். எனக்குப் பணம் வேணாம். வசதிகள்

வேணாம். உங்க அழகைப் பார்த்து நான் உங்க மேல ஆசைப்படலே. உங்க உழைப்பு, நேர்மை, உண்மையான குணம், நல்ல மனசு இதையெல்லாம் பார்த்து-ஸாரி-இதெல்லாம் இருக்கிறதாக நினைச்சுதான் அப்பா, அம்மா எல்லாரையும் உதறிட்டு உங்க கூட வந்தேன். எப்போ அதெல்லாம் இல்லைன்ற சந்தேகம் என் மனசுல ஏற்பட்டதோ அப்பவே அப்பா அம்மாவை உதறின மாதிரி உங்களையும் உதறி இருக்கணும். ஆனால்... ஆனால்...நான் உங்க மேல் வச்ச ஆழமான அன்பு... அதைச் செய்ய விடலை..."

அவளது குரல் கரகரத்து உடைந்தது. கண்கள் கலங்கி கன்னங்களில் இரண்டொரு முத்துக்கள் வடிந்தன. சட்டென்று சமாளித்துக் கொண்டாள். புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு பேசினாள்.

"பரவாயில்லை. இதுக்கு மேலும் நான் அதைச் செய்யாமல் போனால் உங்க மோசடிக்கு, ஏமாற்று வேலைகளுக்கெல்லாம் உடந்தையாக இருந்ததாகும், அதுக்கு நான் விருப்பப்படலே, அதை என்னால் செய்ய முடியாது. அதனால் நான் கிளம்பறேன். எப்படி வீட்டை விட்டு வந்தேனோ அதே மாதிரியே திரும்பிப் போறேன். இந்தாங்க நீங்க போட்ட சங்கிலி, உங்க வளையல்கள், காதுத் தோடு எல்லாத்தையும் திருப்பித் தரேன்..."

அவள் ஒவ்வொன்றாகக் கழற்றுவதைப் பார்த்துக் கொண்டு செய்வதறியாது நின்றிருந்தான். எல்லாவற்றையும் கழற்றி அப்பாவின் காலடியில் வைத்த அதே மாதிரி அவன் காலடியில் வைத்து விட்டு நிமிர்ந்த போது கேட்டான்.

"இன்னும் ஒன்றை நீ கழட்டலையே?"

"என்னது...?"

"நான் கட்டின திருமாங்கல்யம்."

"அதை கழட்ட மாட்டேன். இன்னமும் நான் உங்களுடையவள்தான். நீங்க என்னுடையவர்தான். என்னிக்



காவது ஒரு நாள் நீங்க செய்த தவற்றையெல்லாம் உணர்ந்து, அதற்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து விட்டு திரும்பவும் என்கிட்ட வருவீங்கன்ற நம்பிக்கை இருக்கு. அதனால் அது என் கிட்டதான் இருக்கும்."

வாயடைத்துப் போய் அவன் நின்றிருக்க கைப்பையைத் திறந்து இரண்டு விமான டிக்கெட்டுகளையும் எடுத்து வைத்தாள்.

"இதோ உங்க டிக்கெட். திரும்பவும் சொல்றேன். நல்லதுதான் உலகத்தில் நிற்கும் பாலா. நம்பிக்கை துரோகமும், ஏமாற்றலும் ஆரம்பத்துல நல்லது செய்யற மாதிரி தெரிஞ்சாலும் கடைசியில் அழிக்கும். அதைத்தான் ராமாயண, மகாபாரதக் காலத்துலேர்ந்து சொல்லிண்டு வரா. சினிமாவிலும் முதல்ல வில்லன் ஜெயிக்கிற மாதிரி காட்டினாலும் கடைசியில் தண்டனை அடையறான், ராவணனும், துரியோதனனும் அப்படித்தான் அழிஞ்சாங்க. இதுக்கு மேல் சொல்ல எனக்குத் தெரியலை. வார்த்தை வரலை. நான் வரேன் பாலா. எங்க இருந்தாலும் எப்படி இருந்தாலும் 'கட்டினவன் உயிருக்கு ஆபத்து வரக் கூடாது'ன்னு நினைக்கிறதுதான் பெண் மனசு. நானும் ஒரு பெண் பாலா. நல்ல குடும்பத்துல பிறந்து, நல்ல விதமாக வளர்ந்த பெண். அதனால் அதையே நினைச்சுண்டு போறேன். வேற எங்கேயும் போக மாட்டேன். எங்க அம்மா, அப்பா கால்ல போய் விழமாட்டேன், உங்கம்மா, தங்கைகள் எல்லாரும் என்னை மாதிரியே நினைச்சால் அவா கூட இருப்பேன், எல்லாரும் உடம்பு உழைச்சு சாப்பிடலாம்னு சொல்லுவேன், இல்லைன்னால் பழைய ஒண்டுக் குடித்தன வீட்ல இருந்து வேலை ஏதாவது தேடிண்டு வாழ்நாளைக் கடத்திடுவேன். வரேன்.

அவன் அயர்ந்து, அதிர்ந்து அவளை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தலை குனிந்து நின்றிருக்க, நிதானமாக நடந்து ஓட்டலை விட்டு வெளியில் வந்து எதிர்பக்கம் போய் பஸ்ஸுக்குக் காத்து நின்றாள் கஸ்தூரி.

முற்றும்